
www.malankaralibrary.com




**வினா விடைகள்**

**10.4.2021**

**தொடர்புக்கு : frmariajohn@gmail.com**

**தனிச்சுற்று**

பாடம் 1 – திருவிவிலியம்

www.malankaralibrary.com

**பயிற்சி வினா விடைகள்**

1. **“இறைவெளிப்பாடும் அதற்கு மனிதன் அளித்துள்ள மறுமொழி வரலாறே விவிலியம் " விளக்குக?**

கடவுளின் சுயவெளிப்படுத்தல் உலக படைப்பிலிருந்தே ஆரம்பமாகிறது. தொடக்கநூல் 1 : 1-19). உலகப் படைப்பிற்குப்பின் கடவுள் உயிரினங்களைப் படைத்தார். படைப்பின் சிகரமாக தமது உருவிலும், சாயலிலும் மனிதனைப் படைத்த கடவுள், மனிதனின் வாயிலாகவே தமது வெளிப்பாட்டைத் தொடர்ந்தார்.

கி .மு.1800-ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஆபிரகாம் வாழ்ந்திருந்தார்கடவுள் மனித . .வரலாற்றில் ஈடுபாடு கொண்டு ஆபிரகாமுக்குத் தம்மையே வெளிப்படுத்தினார் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள் வழியாகவும், யாக்கோபுவின் தலைமுறையினரான இஸ்ரயேல் மக்களின் வரலாறு வழியாகவும் கடவுள் தமது வெளிப்பாட்டைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார்இந்த இறையனுபவங்களை . .இஸ்ரயேல் மக்கள் தங்கள் தலைமுறையினருக்கு வாய்மொழியாக பகிர்ந்தளித்தனர்

உலகப் படைப்பு, மனித படைப்புஆபிரகாமின் அழைப்பு ., இஸ்ரயேலின் உருவாக்கம், இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கானான் நாடு சென்றடைதல் ஆகிய நிகழ்வுகள் விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களிலும் விளக்கப்பட்டுள்ளன.

சுமார் கி .மு.1300-ஆம் ஆண்டில் கானான் நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்களுக்கு, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு கடவுள் அருளிய வெளிப்பாடு மற்றும் அதற்கு இஸ்ரயேல் மக்கள் அளித்த மறுமொழி ஆகியவற்றின் வரலாறும் தான் யோசுவா முதல் மக்கபேயர் வரையிலான நூல்கள் .மு.இவ்வாறு கி .1300-க்கும் கி .மு. 50-க்கும் இடைப்பட்ட காலத்தில் தூய ஆவியின் ஏவுதலால் பல நபர்களால் எழுதப்பட்ட 46 நூல்களின் தொகுப்புதான் பழைய ஏற்பாடு. கானான் நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்கள் மத்தியில் வாய்மொழியாகப் பகிரப்பட்ட இறை அனுபவம் பிற்காலத்தில் எழுத்து வடிவிலாக்கப்பட்டதுஇவ்வாறு இஸ்ரயேல் சமூகம் அனுபவித்த இறை . வெளிப்பாட்டின் வரலாற்றையும், இஸ்ரயேல் மக்கள் அளித்த மறுமொழியின் வரலாற்றையும் இறையனுபவப் பின்னணியில் அவர்கள் எழுதி வைத்தனர்இதுவே . .பழைய ஏற்பாட்டு நூல்களின் தோற்றமாக அமைந்தது

பழைய ஏற்பாட்டில் மறைவானவராக தம்மை வெளிப்படுத்திய கடவுள் புதிய ஏற்பாட்டில் தமது மகன் வாயிலாக, தம்மை முழுமையாக வெளிப்படுத்துவதற்குத் திருவுளம் கொண்டார். அவ்வாறு காலம் நிறைவுற்றபோது இறைமகனான இயேசு கிறிஸ்து மனுவுருவாகி இறைவெளிப்பாட்டிற்குப் புதுப்பொருளை அளித்துள்ளார்.

அவ்வாறு இயேசு மெசியா வாயிலாக தந்தைக் கடவுள் தம்மையே முழுமையாக வெளிப்படுத்தினார். இயேசுவின் பிறப்பு, பணி வாழ்வில் அவர் செய்த அருஞ்செயல்கள், போதனைகள், இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியின் வருகை ஆகிய மீட்பின் நிகழ்வுகளின் வாயிலாக அவர் தந்தைக் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் மனித குலத்திற்கு பகிர்ந்தளித்தார்.

இவ்வாறு உலக படைப்பில் தொடங்கிய இறைவெளிப்பாடு மனித படைப்பு வழியாகத் தொடர்ந்து, ஆபிரகாமின் வரலாறு வாயிலாக முன்னேறி, இஸ்ராயேலின் வரலாறு வாயிலாக கடந்துவந்து, இயேசு கிறிஸ்துவில் நிறைவடைந்துள்ளது. இந்த வெளிப்பாட்டின் அல்லது மீட்புத்திட்டத்தின் வரலாற்றை உலக முடிவு வரை பறைசாற்றுவதற்கு உயிர்த்தெழுந்த இயேசு திருத்தூதர்களை அனுப்பினார்; “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மாற்கு 16:15). இவ்வாறு உலக முடிவு வரை இந்த இறைவெளிப்பாட்டின் அல்லது மீட்புத்திட்டத்தின் வரலாற்றை பறைசாற்றுவதற்குத் திருச்சபை கடமைப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட சிறு சமூகம் இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் தூய ஆவியினால் ஆற்றல் பெற்றது. இயேசு கற்பித்தவை மற்றும் செய்த அருஞ்செயல்கள் இவை பற்றிய செய்திகள் தொடக்க கிறிஸ்தவ சமூகத்தில் வாய்மொழியாக நிலை கொண்டிருந்தன. பின்னர் தொடக்க கிறிஸ்தவ சமூகம்

www.malankaralibrary.com

தங்களது நம்பிக்கைக்கு கி.பி. 50-க்குப் பின் எழுத்துவடிவம் கொடுக்கத் தொடங்கியது. அவ்வாறு நான்கு நற்செய்தி நூல்களும், திருத்தூதர் பணி நூலும், திருத்தூதர் பவுலின் 14 திருமுகங்களும், பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா ஆகிய திருத்தூதர்களின் பொதுத் திருமுகங்களும், திருத்தூதர் யோவானின் வெளிப்பாடு புத்தகமும் கி.பி. 100-ஆம் ஆண்டுக்குள் எழுத்து வடிவம் பெற்றன. தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட இந்த நூல்களைத் திருச்சபை பிற்காலத்தில் அதிகாரப்பூர்வமான நூல்களாக ஏற்றுக்கொண்டது. இவ்வாறு புதிய ஏற்பாட்டில் 27 நூல்கள் உள்ளன என்று திருச்சபை கற்பித்தது.

கடவுள் எவ்வாறு தமது வார்த்தையினாலும் அருஞ்செயலினாலும் தம்மையே மக்களுக்கு வெளிப்படுத்தினார் என்பதை விவிலியம் விளக்குகின்றது. தம்மைப் பற்றிய சில அறிவை வெளிப்படுத்துவது மட்டுமன்றி தம்மையே தாமாக வெளிப்படுத்தித் தமது அன்பை மனிதனுடன் பகிர்ந்து கொள்ளும் கடவுளையே விவிலியத்தில் நாம் காண்கிறோம். இறைவார்த்தை வாயிலாக கடவுளை முழுமையாக நாம் அறிந்து கொள்வதனால் இறைவெளிப்பாட்டிற்கு கடவுள் தேர்ந்த முதன்மையான வழி விவிலியம் ஆகும். **கடவுளின் சுயவெளிப்பாடு அதற்கு மனிதனின் மறுமொழி இதுவே விவிலியத்தின் கருப்பொருள் ஆகும்.**

**2 . திருச்சபைக்கும், திருவிவிலியத்திற்கும் இடையேயான உறவை விளக்குக?**

**கடவுள் முதலில் தம் இனத்தாரை உருவாக்கினார்:** திருவிவிலியமா அல்லது திருச்சபையா எது முதலில் உருவாக்கப்பட்டது என்ற கேள்வி பலரிடமும் ஏற்படலாம். இறை வார்த்தையாகிய விவிலியத்தை ஒரு முழுமையான நூலாக கடவுள் நேரடியாகக் கொடுத்தார் என்று நினைப்பவர்களும் உண்டு.

பழைய ஏற்பாடு எழுதப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே கடவுள் தம்மைத் தாமாகவே வெளிப்படுத்தியும், தமது மக்களான இஸ்ரயேலைத் தேர்ந்தெடுத்தும், அவர்களது வரலாற்றை வழிநடத்தினார். கடவுள் தம்மை வெளிப்படுத்தியது எழுதப்பட்ட ஒரு புத்தகம் வாயிலாக அல்ல. மாறாக, தாம் தேர்ந்தெடுத்த ஒரு மக்கள் சமூகத்தின் வாழ்க்கை மற்றும் அனுபவம் வாயிலாகவே ஆகும். முதலில் இஸ்ரயேல் சமூகமே தேர்ந்தெடுக்கப்பட்டது. அவர்களது இறை அனுபவங்களே பிற்காலத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களாக எழுதப்பட்டன.

இயேசுகிறிஸ்துவின் இறப்பிற்கும், உயிர்ப்பிற்கும் பிறகு பல ஆண்டுகள் கடந்தே புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்டன. தூய ஆவியை அனுப்பி விசுவாசிகளின் சமூகமான திருச்சபையை இயேசு நிறுவினார். நற்செய்தி நூல்கள் எழுதப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே திருத்தூதர்களின் மறையுரைகள், போதனைகள் மற்றும் ஆராதனைகள், அப்பம் பிட்குதல், கிறிஸ்தவ வாழ்வு இவை வாயிலாக, திருச்சபை செழித்து வளர்ந்துகொண்டிருந்தது. கடவுள் தமது புதிய உடன்படிக்கையை, எழுதப்பட்ட ஒரு புத்தகம் வாயிலாக அல்ல, மாறாக விசுவாசிகளின் சமூகமும் இயேசுவின் மறை உடலுமான திருச்சபையின் வாழ்வு, அனுபவம் ஆகியவற்றின் வாயிலாகவே வெளிப்படுத்தினார். ஆகவே புதிய ஏற்பாட்டு நூல்களல்ல; இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட கிறிஸ்தவ சமூகம் அல்லது திருச்சபையே முதலில் தோன்றியது. திருவிவிலியத்தைப் பற்றிய இத்தகைய அறிவு அதன் முக்கியத்துவத்தையோ, புனிதத்தன்மையையோ குறைப்பதில்லை. மாறாக, இவ்வறிவு விவிலியத்தை ஆழமாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றது.

**இறைமக்களே விவிலியம் எழுதினர்:** இறை ஏவுதலால் இறைமக்களே விவிலியத்தை எழுதவும், தொகுக்கவும் செய்தனர். பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தது இஸ்ரயேல் சமூகமே. அது போன்று புதிய ஏற்பாட்டு நூல்களை தொடக்க கிறிஸ்தவ சமூகம் அல்லது தொடக்க திருச்சபைதான் எழுதியது. இஸ்ரயேல் சமூகமும், தொடக்க கிறிஸ்தவ சமூகமும் இஸ்ரயேல் மக்களும் அவர்களுடைய வரலாற்று நிகழ்வுகளின் இறை அனுபவங்களை எழுதி திருவிவிலியமாகத் தொகுத்தனர். திருவிவிலியம் இறைமக்களுக்குரியதாக, இறைமக்களால், இறைமக்களுக்காக எழுதப்பட்ட நூலாகும். இறைநம்பிக்கை

www.malankaralibrary.com

கொள்கின்ற சமூகத்தின் புத்தகம் தான் திருவிவிலியம். இதுவே இறை மக்களின் புனித நூல். ஆதலால் திருவிவிலியத்தை முழுமையாக அறிந்து கொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் நாம் விசுவாசச் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறவேண்டும். திருவிவிலியத்திற்கும் திருச்சபைக்கும் இடையே எப்போதுமே பிரிக்க முடியாத நெருங்கிய உறவு உள்ளது. தூய ஆவியால் வழிநடத்தப்படுகின்ற திருச்சபை சமூகத்தில்தான் இறைவார்த்தையை கேட்கிறோம், அனுபவிக்கிறோம், வாழ்வாக்குகிறோம். திருச்சபையின் அன்புறவில் இணைந்திருந்து திருவிவிலியம் வாசிக்கவும், கற்கவும் செய்யும்போது இந்தப் புனித நூலின் புனிதம் பாதுகாக்கப்படும்.

**திருவிவிலியம் திருச்சபையின் வாழ்வில்:** திருச்சபையையும், திருவிவிலியத்தையும் பிரித்து பார்க்க இயலாது என நாம் புரிந்து கொண்டோம். இயேசுவோடும் அவரது மறை உடலான திருச்சபையோடும் உள்ள நெருக்கமான உறவில் தான் விவிலியத்தை படிக்கவும், விளக்கவும் வேண்டும். திருச்சபையை விட்டு பிரிந்து நின்றுகொண்டு அளிக்கின்ற விவிலியத்தின் விளக்கம் அதன் கருத்தைச் சிதைத்து விடுகிறது. தூய ஆவியின் உதவியினால் மட்டுமே விவிலியத்திற்கு விளக்கம் அளிக்க இயலும். திருச்சபையை ஒதுக்கிவிட்டு தனிப்பட்ட முறையில் அளிக்கும் விவிலிய விளக்கத்தைத் திருச்சபை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய தனிப்பட்ட விவிலிய விளக்கத்திற்கெதிராக இறைமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென திருச்சபை அறிவுறுத்துகின்றது.

திருவிவிலியம் திருச்சபையின் திரு ஏடு என்பதை நாம் அறிந்து கொண்டோம். திருச்சபையின் உயிரும், இதயமும் மறைநூலின் வார்த்தைகளேயாகும். மறைநூலின் வார்த்தைகளைப் பறைசாற்றுவதே திருப்பலியின் அடிப்படை காரணியாகும். திருப்பலியிலுள்ள மன்றாட்டுக்களும், அடையாளங்களும் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. தொடக்கத் திருச்சபை புதிய ஏற்பாட்டைத் தொகுத்த, விசுவாசத்தின் அடிப்படையில் மறைநூல் முழுவதையும் பறைசாற்றி கொண்டிருந்தது. திருச்சபையின் இறையியல் கோட்பாடுகள், நம்பிக்கை அறிக்கை (விசுவாசப் பிரமாணம்), மறை உண்மைகள், திருமுகங்கள் ஆகிய அனைத்தும் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே உருவெடுத்தன. நூற்றாண்டுகளாக உருவெடுத்த கிறிஸ்தவக் கலைகளும், கலைவடிவங்களும் விவிலியத்தின் அடிப்படையில் உருவானவையே. இத்தகைய அழகு கலைகள் விவிலியம் படிக்கத்தெரியாதவர்களுக்கு மிகவும் உதவிகரமாக அமைந்தன. நூற்றாண்டுகளாய் தொடர்ந்த ஆராதனை முறைகள் வாயிலாக திருவிவிலியம் அதன் முழுமையில் விசுவாசிகளுக்கு அனுபவ உணர்வை அளித்துக்கொண்டிருந்தது. ஆராதனை வேளையில் திருவிவிலியத்திற்கு மிகுந்த மரியாதையும், வணக்கமும் செலுத்தப்படுகிறது. திருப்பலியின் இடையே நற்செய்தி வாசிக்கும்போது "இயேசு கிறிஸ்து தாமே நம்முடன் பேசுகிறார்" என இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கற்பிக்கிறது.

திருவிவிலியம் திருச்சபையின் வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்துகின்றது. இறைவார்த்தையின் அடிப்படையில் திருச்சபை தன்னையே ஆய்வு செய்துகொள்கிறது. திருச்சபையின் பறைசாற்றுதலும், கிறிஸ்தவ வாழ்வும், திருவிவிலியத்தால் வளப்படுத்தப்படவும், வழிநடத்தப்படவும் வேண்டுமென இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கற்பிக்கிறது. அதனால் அனைவருக்கும் திருவிவிலியம் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட வேண்டும் எனவும், திருச்சபையின் போதனை, ஆராதனை, வாழ்க்கை இவற்றின் அடிப்படையும் இதயமுமாக திருவிவிலியம் இருக்கவேண்டுமென திருச்சபை கற்பிக்கின்றது.

**3. "திருவிவிலியமும் அறிவியலும் ஒன்றுக்கொன்று பூர்த்திசெய்பவை" - விளக்குக?**

கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், தூய ஆவியின் தூண்டுதல் பெற்றவர்களுமே விவிலிய நூல்களை எழுதினர். ஆன்மீக நூலான திருவிவிலியம் இறை ஏவுதலால் அமையப்பெற்றதால் அதில் சொல்லப்பட்டிருக்கும் ஆன்மீகச்

www.malankaralibrary.com

செய்திகள் முழுவதும் உண்மையானவை எனவும், அவைகளில் தவறு எதுவும் இல்லை எனவும் திருச்சபை கற்பிக்கின்றது. உலகமும் அதிலுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாப் பொருட்களும் கடவுளின் படைப்புதான் எனவும், அவற்றுள் மேலானது மனிதப் படைப்புதான் எனவும் விவிலியத்திலிருந்து நமக்கு புரிந்துகொள்ள இயலும். கடவுளுக்கும், மனிதனுக்கும், உலகிற்கும் இடையேயான உறவுதான் திருவிவிலியத்தின் முதன்மையான கருத்து.

கடவுள் தமது உருவிலும் சாயலிலும் படைத்த மனிதன், கடவுளால் பெற்ற அறிவையும் ஆராயும் திறமையையும் பயன்படுத்தி உலக படைப்புகளின் உள்ளார்ந்த இரகசியங்களைக் கண்டடைவதற்கும், படைப்புப் பொருள்களைப் புரிந்துகொள்வதற்கும் மேற்கொள்கின்ற ஆய்வு முயற்சியே அறிவியல். இந்த தேடல் ஒருவரை இறுதியாக மாபெரும் உண்மையான இறைவனிடத்திற்கே கொண்டு சேர்த்துவிடுகிறது. எனினும், இறைப்படைப்பான பொருள்களின் மறைவான இரகசியங்களைத் தேடுகின்ற மனுக்குலத்தின் பயணம் இன்னும் நெடுந்தொலைவுத் தாண்டிச் செல்லவேண்டியுள்ளது. அறிவியல் உண்மையைத் தேடிக் கொண்டேயிருக்கிறது. அறிவியல் இன்று சரி என்று சொல்பவை நாளை தவறு எனவும் நிரூபிக்கலாம். "முழுமை பெறாத அறிவியல் அறிவு இறைவனிடமிருந்து மனிதனை அகற்றிவிடலாம். ஆனால் அறிவியல் அறிவு பெருகும்போது அது அவனை இறைவனிடத்திற்கே திருப்பி கொண்டுவருகின்றது" எனப் புகழ்பெற்ற ஆங்கிலத் தத்துவ ஞானி பிரான்சிஸ் பேக்கன் (1561 - 1626) கூறியுள்ளார். அறிவியல், மனிதனின் அறியாமையையும், மூடநம்பிக்கையையும் களைந்து இறைவனின் படைப்பான உலகத்தின் விந்தைகளை புரிந்துகொள்வதற்கு அவனுக்கு உதவுகின்றது. அதே நேரத்தில் மதம், மனிதனின் தன்னலத்தையும், அச்சத்தையும் முழுவதுமாக அகற்றி, கடவுளையும், அவரது உன்னதப் படைப்பான மனிதனையும், பிற அனைத்து படைப்புகளையும் அன்பு செய்ய அவனுக்கு உதவுகின்றது.

மாபெரும் உண்மையைத் தேடுகின்ற மதமும், அறிவியலும் கடவுளை நோக்கியே உள்ளன. இவை இரண்டும் மனித நன்மையையே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆன்மீக உண்மைகள் கடவுளின் வெளிப்படுத்தல்களும், அறிவியல் கோட்பாடுகள் விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புகளும் ஆகும். அதனால் அவை ஒன்றுக்கொன்று பூர்த்திசெய்யவும் துணையாயிருக்கவும் வேண்டும். உலக புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகிறார், "மதத்தினுடையவும், அறிவியலினுடையவும் எல்லைகள் தெளிவாக வகுக்கப்பட்டிருப்பினும் அவை இரண்டிற்குமிடையே ஒன்றுக்கொன்று வலுவான உறவுகளும், சார்ந்திருக்கும் தன்மையும் தொடர்ந்து. கொண்டேயிருக்கிறது. மதம் தவிர்த்த அறிவியல் முடமானதும், விஞ்ஞானம் தவிர்த்த மதம் குருடானதுமாகும்."

விவிலிய ஆசிரியர்கள், அவர்கள் வாழ்ந்திருந்த காலகட்டம், அவர்கள் பெற்றிருந்த அறிவு, இவற்றிற்கு உட்பட்டு நின்றே உலகியலும், அறிவியல் சார்ந்ததுமான கருத்துகளை விளக்கியிருக்கின்றனர். அதனால் விவிலிய ஆசிரியர் காலத்து மொழியியல், கலாச்சாரம், அறிவியல் சார்ந்த அறிவு இவற்றின் தாக்கத்தை அவர்களது நூல்களில் காணலாம். எனினும் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் அறிவியல் உத்தேச கொள்கைகளுக்கும் இக்கால அறிவியல் அறிவுக்கும் இடையே முரண்பாடு தென்படலாம். இதனால் விவிலியத்தில் சில தவறுகள் உண்டு எனவும், விவிலியம் அறிவியலோடு இணைந்து போகவில்லை எனவும் ஒருசிலர் வாதிடலாம். ஆனால் விவிலியத்திலுள்ள ஆன்மீக அறிவுக்கும், உலகைப்பற்றிய அறிவியல் அறிவுக்கும் இடையே முரண்பாடு இல்லை எனவும், இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்பவை எனவும் திருச்சபை கற்பிக்கின்றது. தொடக்க நூலின் முதல் அதிகாரம் உலகம் மற்றும் மனித படைப்பைக் கூறிக்கொண்டுதான் ஆரம்பமாகிறது. 1859 -ல் சார்லஸ் டார்வின் என்பவர் பரிணாமக் கொள்கையைத் தோற்றுவித்தார். உயிரற்ற பொருள்களிலிருந்து உயிரின் முதல் கரு உண்டானது எனவும், முதலில் உண்டான ஒரு செல் உயிரி பரிணாமத்தின் வளர்ச்சி அடைந்து பற்பல விதமான பிராணிகள் உண்டாயின எனவும், அவ்வாறு பரிணாமத்தின் வழியாகவே மனிதனும் தோன்றினான் எனவும் பரிணாமக் கொள்கை

www.malankaralibrary.com

கூறுகிறது. இது முழுமையான ஆதாரங்களின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக தெளிவுப்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அல்ல. இது மனிதனின் தோற்றம் குறித்த அறிவியலின் ஒரு அனுமானம் (கணிப்பு) மட்டுமே ஆகும். "உயிர் உயிரிடமிருந்து மட்டுமே உருவாக முடியும்" என்னும் விஞ்ஞானக் கோட்பாடுக்கு (Bio genesis) பொருந்தாததே பரிணாமக் கொள்கை. உயிரின் ஊற்று உயிர் மட்டுமேதான் என்னும் கொள்கையின்படி பூமியில் முதல் உயிர் உருவெடுத்ததே கடவுளிடமிருந்துதான் என திருச்சபை உணர்ந்துள்ளது.

கனடாவிலுள்ள வாக்கில் பல்கலைக்கழகத்தின் தலைவரும் சிறந்த புவியியல் அறிஞருமான 'சர் வில்லியம் டாசன்' பின்வருமாறு கூறியுள்ளார். "திருவிவிலியம் எனக்கு கற்பிப்பதைத் தவிர்த்து மனிதன் கடவுளால் படைக்கப்பட்டான் என்பதையன்றி மனிதனின் தோற்றம் குறித்து எனக்கு வேறு எதுவுமே தெரியாது. அதற்குமேல் எனக்கு எந்த அறிவும் இல்லை. அறிந்தவர் எவரைப்பற்றியும் நான் கேள்விப்படவுமில்லை.

**விவிலியமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்பவை:** விவிலியத்தில் தம்மைத்தாமே வெளிப்படுத்தும் கடவுளைக் குறித்தும், இறை வெளிப்பாட்டிற்கு மனிதன் அளிக்கும் மறுமொழியைக்குறித்தும் எழுதப்பட்டுள்ளது. கி.மு.1300-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்ட காலத்தில் விவிலியம் எழுதப்பட்டது. தூய ஆவியின் சிறப்பான தூண்டுதல் பெற்ற பல்வேறு எழுத்தாளர்கள் இக்காலகட்டத்தில் விவிலியத்தின் 73 நூல்களையும் எழுதினர். இறை ஏவுதலால் எழுதப்பட்டவையாகையால் விவிலியத்தின் செய்திகள் முழுமையான உண்மையும், தவறு ஏற்படாததுமாகும். ஆனால் இதன் செய்திகள் எழுத்தாளரின் ஒத்துழைப்புடன் எழுதப்பட்டன. அதனால் ஒவ்வொரு நூலின் படைப்பிலும் எழுத்தாளரின் மொழியும், எழுத்துநடையும், அறிவும், அன்றைய அறிவியல் அறிவும் தாக்கம் செலுத்தியுள்ளது. ஒருவேளை எழுத்தாளரின் அறிவிலோ, எழுத்து நடையிலோ குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவை எக்காரணத்தாலும் விவிலியத்தின் வழுவாமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தவில்லை. விவிலியம் தருகின்ற அடிப்படைச் செய்தியானது தவறுதலுக்கு அப்பாற்பட்டதாகும்.

விவிலியம் மீட்பு வரலாற்றையும் மீட்புக்கான வழியையும் அக்காலத்தில் வழக்கிலிருந்த உலகைப்பற்றிய கணிப்புகள் மற்றும் எழுத்து வடிவங்களின் உதவியுடன் தெளிவுபடுத்துகின்றது. ஒவ்வொரு காலகட்டத்திலும் அறிவியல் அளிக்கும் புதிய அறிவின் ஒளியில் விவிலியத்தின் சில குறிப்புகள், விளக்கங்களின் முக்கியத்துவம் குறித்து சந்தேகங்கள் ஏற்படலாம். உலகின் வரலாற்றையும், ஆய்வுக்கும் ஆராய்ச்சிக்கும் உட்பட்ட அறிவியல் உண்மைகளையும் கற்பிப்பதல்ல விவிலியத்தின் குறிக்கோள். விவிலியம் ஒரு அறிவியல் நூல் அல்ல. அறிவியலை கற்பிக்கும் நோக்கம் விவிலிய எழுத்தாளர்களுக்கு இல்லை. இறைவெளிப்பாட்டின் அடிப்படையிலான மனித மீட்பைப்பற்றிய செய்தியை பகிர்ந்து அளிப்பது மட்டுமே விவிலிய ஆசிரியரின் குறிக்கோள். ஆய்வுகள், ஆராய்ச்சிகள் வழியாக நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளை மானிட வளர்ச்சிக்காக பகிர்ந்து கொடுப்பதே அறிவியலின் குறிக்கோள். சுருங்கக்கூறின் விவிலியமும், விஞ்ஞானமும் மனித குலத்தின் நன்மையையும், வளர்ச்சியையுமே விரும்புகின்றன. விவிலியமும், விஞ்ஞானமும் மனித வாழ்க்கைக்குத் தேவையான இரு வேறுபட்ட அணுகு முறைகளையே கையாளுகின்றன. இரண்டும் ஒரே குறிக்கோளில் செயல்படுகின்றன. மானிட நன்மை என்ற ஒரே குறிக்கோளில் இரண்டும் ஒன்றிணைகின்றன. மனிதனுக்கு உடலியல் தளம் மட்டுமின்றி ஆன்மீகத்தளமும் உள்ளது என்பதும், விவிலியத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையேயான ஒத்துழைப்பு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் தேவையானது எனவும் திருச்சபை உணர்ந்துள்ளது. அதனால் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைத் திருச்சபை ஒருபோதும் சந்தேகப்பார்வையில் அணுகுவதில்லை. மனிதனின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விஞ்ஞானத்தால் தீர்வுகாண முடிவதில்லை . அவனது மனம், மற்றும் ஆன்மீகம் ஆகிய தளங்களுக்கு மதமும் மத நூல்களும் தேவை. அதனால்

www.malankaralibrary.com

விவிலியமும், விஞ்ஞானமும் இணைந்து செயல்படவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**4. தொடக்கநூல் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்களை எப்படி புரிந்துகொள்வாய்?**

**தொடக்கநூல் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்கள்:** பழைய ஏற்பாட்டில் தொடக்கநூல் முதல் மலாக்கி வரையிலான 46 நூல்களும் வரிசையாக எழுதப்பட்டவையன்று. அதுபோன்று ஒரு நூலில் உள்ள எல்லா அதிகாரங்களும் வரிசையாக ஒரே நேரத்தில் எழுதப்பட்டவையும் அன்று. சுமார் 1300 ஆண்டுகளாகப் பல்வேறு நபர்களால் எழுதப்பட்ட கிறிஸ்துவின் வருகை வரையிலான வெளிப்பாட்டின் வரலாற்றைத் தொகுத்ததுதான் பழைய ஏற்பாடு.

பிரபஞ்சப் படைப்பும், மானிடப் படைப்பும் அடங்கியிருக்கும் விவிலியத்தின் முதல் நூலே தொடக்கநூல். தொடக்கநூலின் முதல் அதிகாரமானது உலகம் மற்றும் மனிதபடைப்பைக் கூறிக்கொண்டுதான் ஆரம்பமாகிறது. ஆனால் முதலில் எழுதப்பட்டவை தொடக்கநூலின் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்களல்ல. குலமுதுவரான ஆபிரகாமின் வரலாறும், எகிப்தில் நடைபெற்ற அடிமைத்தனத்தின் வரலாறும், பாலைவனப் பயணத்தின் அனுபவங்களும் வாய்மொழியாக இஸ்ரயேல் மக்களிடையே பேசப்பட்டு வந்ததை அவர்கள் முதலில் எழுதினர். சுருங்கக்கூறின், தொடக்கநூல் 12-ஆம் அதிகாரம் முதல் கூறப்பட்டுள்ள ஆபிரகாமின் அழைப்பும், அத்துடனான வரலாற்று நிகழ்ச்சிகளுமே விவிலியத்தில் முதலில் எழுதப்பட்டவை.

தொடக்க நூல் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்கள் பிற்காலத்தில் எழுதி சேர்க்கப்பட்டவையாகும். கோடானுகோடி ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்த பிரபஞ்சப் படைப்பைக் குறித்தும், மனிதபடைப்பைக் குறித்ததுமான விவரங்கள் உட்பட்ட தொடக்க நூலின் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்களை வரலாற்றுக்கு முந்தைய வரலாறு' என்று கூறலாம். கானான் நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்கள் இறை அனுபவத்தின் நிறைவில், கடந்து போனவற்றைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினர். தங்களை எகிப்திலிருந்து விடுவித்தக் கடவுள், தங்களை செங்கடலை கடந்துவரச் செய்த கடவுள், தங்களுக்கு மன்னாவையும் காடையையும் அளித்த கடவுள், தங்களுக்குப் பாறையிலிருந்து தண்ணீர் அளித்த கடவுள் - இந்த கடவுளே பிரபஞ்சத்தையும், மனிதனையும் படைத்தார் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்வாறு கோடானுகோடி ஆண்டுகள் பழமையான பிரபஞ்சப்படைப்பைக் குறித்தும், மனித படைப்பைக் குறித்தும், மனிதனின் பாவத்தைக்குறித்தும், கடவுளின் கருணையைக்குறித்தும் தொடக்கநூல் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்களில் அவர்கள் எழுதினர். விவிலியத்தில் ஆபிரகாமின் வரலாறு தொடங்குவதற்கு முன் எழுதப்பட்ட ஒரு முன்னுரையாகவே இந்த 11 அதிகாரங்களையும் அறிந்துகொள்ள முடிகிறது.

கி.மு. 1300-ஆம் ஆண்டுக்குப்பின் இஸ்ரயேல் மக்களுக்கிருந்த அறிவியல் அறிவு, பிற அனுபவங்கள் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டே கோடானு கோடி ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றை அவர்கள் எழுதியுள்ளனர். அதனால் இந்த 11 அதிகாரங்களையும் விவிலியத்தில் பிற வரலாற்று நிகழ்வுகளைப்போன்று கருத்து கொள்வதும் விளக்கம் அளிப்பதும் ஏற்கக்கூடியதல்ல. இங்கே, கடவுள்தான் உலகையும் மனிதனையும் படைத்தார். பாவம் செய்த மனிதனை மீட்டுக்கொண்டார் என்ற உண்மைகளை இஸ்ரயேல் மக்களை உணர்த்துவதே தொடக்க நூலின் முதல் 11 அதிகாரங்களையும் எழுதிய எழுத்தாளரின் இலட்சியமாகும். அன்றைய மனித சமூகம் புரிந்து கொள்ளும் மொழியில் கடவுள்தான் பிரபஞ்சத்தையும், மனிதனையும் படைத்தார் என எழுத்தாளர் விளக்கினார். பிரபஞ்சமும், மனிதனும் படைக்கப்பட்டது எவ்வாறு என்று விளக்குவதல்ல எழுத்தாளரின் நோக்கம். அதற்கு விடை அளிக்க வேண்டியது அறிவியலே. பெருவெடிப்புக் கொள்கையும், பரிணாமக் கொள்கையும் இன்று பரவலாக அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் அவை முழுமையாக ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை. இவ்விரண்டு கோட்பாடுகளையும் திருச்சபை விவிலியத்தின் பின்னணியில் எதிர்க்கவில்லை. காரணம், ஒரு மூலக்கூறின் பேரதிர்விற்கும், உயிரின்

www.malankaralibrary.com

முதல் கரு உருவானதற்கும் பின்னணியில் செயல்பட்டதே கடவுள் தான் எனத் திருச்சபை உணர்ந்துள்ளது. அதனால் அறிவியல் முன்வைக்கின்ற எந்த உண்மையையும் ஏற்றுக் கொள்ள விவிலியத்திற்கும், திருச்சபைக்கும் இயலும்.

**குறு வினா விடைகள்**

1 கிறிஸ்தவ நம்பிக்கையோடு ஒன்றுக்கொன்று இணைந்து செல்வது யாது? திருவிவிலியம்

2 கிறிஸ்தவ நம்பிக்கையை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும் அதன் அனுபவ ஞானத்தை அடைவதற்கும் தேவையானது யாது? திருவிவிலியத்தைப்பற்றிய தெளிவான அறிவு

3 மனிதனின் இறைத்தேடல் எந்த அளவுக்குப் பழமை வாய்ந்தது? மனித வரலாறு

**4** இயற்கை மதங்களிலும், வரலாற்று மதங்களிலும் உள்ள தெய்வீகச் சிந்தனைகள் எவ்வாறு கண்டறியப்பட்டன? மனிதன் இறைத்தேடலின் வாயிலாக

**5** கிறிஸ்தவ மதத்தில் இறை வெளிப்பாட்டின் தனித்தன்மை என்ன? மனிதன் கடவுளைத் தேடிக் கண்டடைவதல்ல. மாறாக, கடவுள் மனிதனைத் தேடி, இறங்கி வந்து, தாமாகத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்

6 விவிலியத்தின் கருப்பொருள் யாது? கடவுளின் சுயவெளிப்பாடும் அதற்கு மனிதனின் மறுமொழியுமே திருவிவிலியம்

7 கடவுளின் சுயவெளிப்படுத்தல் எப்போது ஆரம்பமாகிறது? உலக படைப்பிலிருந்தே

8 ஆபிரகாம் வாழ்ந்திருந்த காலம் யாது? கி.மு. 1800-ஆம் ஆண்டு

9 கடவுள் மனித படைப்பைத் தொடர்ந்து வரலாற்றில் எவ்வாறு தம்மை வெளிப்பாட்டைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார்? ஆபிரகாம், ஈசாக்கு, வழியாக யாக்கோபுவின் தலைமுறையினரான இஸ்ரயேல் மக்களின் வரலாறு வழியாகவும்

10 இஸ்ரயேல் சமூகம் எகிப்தில் அடிமைத்தனத்தில் வாழ்ந்த ஆண்டு காலம் எத்தனை? 430 ஆண்டுகள்

11 மோசேயால் விடுதலை பெற்ற இஸ்ரயேல் மக்கள் கானான் நாடு செல்ல பாலைவனப் பயணம் மேற்கொண்ட ஆண்டுகள் எத்தனை? 40 ஆண்டுகாலம்

12 கானான் நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்களிடையே வாய்மொழியாகப் பகிரப்பட்ட இறை அனுபவம் பிற்காலத்தில் எந்த வடிவம் பெற்றது? எழுத்து வடிவம்

13 பழைய ஏற்பாட்டு நூல்களின் தோற்றம் எவ்வாறு? இஸ்ரயேல் மக்கள், தங்களது இறை வெளிப்பாட்டின் வரலாற்றையும், இஸ்ரயேல் மக்களது மறுமொழியின் வரலாற்றையும் இறையனுபவப் பின்னணியில் எழுதி வைத்தனர். இதுவே பழைய ஏற்பாட்டு நூல்களின் தோற்றமாக அமைந்தது.

14 விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களிலும் காணப்படும் நிகழ்வுகள் யாவை? 1. உலகப் படைப்பு, 2. மனித படைப்பு. 3. ஆபிரகாமின் அழைப்பு, 4. இஸ்ரயேலின் உருவாக்கம், 5. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கானான் நாடு சென்றடைதல் ஆகிய நிகழ்வுகள் விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களிலும் விளக்கப்பட்டுள்ளன.

15 இறைவனின் திருவெளிப்பாடு இஸ்ராயேல் மக்களின் விடுதலைக்குப்பின் எவ்வாறு தொடர்ந்தது? இறைவனின் திருவெளிப்பாடு இஸ்ராயேல் மக்களின் விடுதலைக்குப்பின் கானான் நாட்டில் **நீதித்தலைவர்கள், குருக்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள்** வழியாக தொடர்ந்து கொண்டேயிருந்த்து.

16 இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டை அடைந்த காலம் எது? சுமார் கி.மு. 1300-ஆம் ஆண்டில்

17 பழைய ஏற்பாடு நூல்கள் எவ்வாறு எழுதப்பட்டன? கானான் நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்களுக்கு, கடவுள் அருளிய வெளிப்பாடு மற்றும் அதற்கு இஸ்ரயேல்

www.malankaralibrary.com

மக்கள் அளித்த மறுமொழி ஆகியவற்றின் வரலாறும் தான் யோசுவா முதல் மக்கபேயர் வரையிலான நூல்கள். இவ்வாறு தூய ஆவியின் ஏவுதலால் பல நபர்களால் எழுதப்பட்ட 46 நூல்களின் தொகுப்புதான் பழைய ஏற்பாடு.

18 பழைய ஏற்பாடு நூல்கள் எப்போது எழுதப்பட்டன? கி.மு. 1300-க்கும் கி.மு. 50-க்கும் இடையே

19 பழைய ஏற்பாட்டில் மறைவானவராக தம்மை வெளிப்படுத்திய கடவுள் புதிய ஏற்பாட்டில் தம்மை முழுமையாக யாராக வெளிப்படுத்தினார்? இறைமகனான இயேசு கிறிஸ்துவாக

20 எவ்வாறு இயேசு தந்தைக் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் மனித குலத்திற்கு வெளிப்படுத்தினார்? 1. இயேசுவின் பிறப்பு, 2. அருஞ்செயல்கள், 3. போதனைகள், 4. பாடுகள், 5. சிலுவை மரணம், 6. உயிர்ப்பு, 7. விண்ணேற்றம், 8. தூய ஆவியின் வருகை ஆகிய மீட்பின் நிகழ்வுகளின் வாயிலாக

21 “இறை வெளிப்பாட்டின் நிறைவு அவரே" என இயேசு கற்பித்த போதனைகள் யாவை? 1. "என்னைக் காண்கிறவர் தந்தையைக் காண்கிறார்," 2. "நானும் தந்தையும் ஒருவரே”, 3. “வழியும் உண்மையும் வாழ்வும் நானே” போன்ற படிப்பினைகள் வாயிலாக

22 இறைவெளிப்பாட்டின் நிறைவு யாது? உலக படைப்பில் தொடங்கிய இறைவெளிப்பாடு மனித படைப்பு வழியாக, ஆபிரகாமின் வரலாறு வாயிலாக, இஸ்ராயேலின் வரலாறு வாயிலாக, இயேசு கிறிஸ்துவில் நிறைவடைந்துள்ளது.

23 உலக முடிவு வரை இறைவெளிப்பாட்டின் அல்லது மீட்புத்திட்டத்தின் வரலாற்றை பறைசாற்றுவதற்குத் திருச்சபை எவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது? இறைவெளிப்பாட்டின் அல்லது மீட்புத்திட்டத்தின் வரலாற்றை உலக முடிவு வரை பறைசாற்றுவதற்கு உயிர்த்தெழுந்த இயேசு திருத்தூதர்களை “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மாற்கு 16:15) எனக்கூறி அனுப்பினார்; இவ்வாறு உலக முடிவு வரை இந்த இறைவெளிப்பாட்டின் அல்லது மீட்புத்திட்டத்தின் வரலாற்றை பறைசாற்றுவதற்குத் திருச்சபை கடமைப்பட்டுள்ளது.

24 துவக்க கால கிறிஸ்தவ சமூகம் தங்களது நம்பிக்கைக்கு எப்போது எழுத்துவடிவம் கொடுக்கத் தொடங்கியது? கி.பி. 50-க்குப் பின் கி.பி. 100-ஆம் ஆண்டுக்குள்

25 தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதாக திருச்சபை ஏற்றுக்கொண்ட புதிய ஏற்பாட்டின் 27 நூல்கள் யாவை? 1. நான்கு நற்செய்தி நூல்களும், 2. திருத்தூதர் பணி நூலும், 3. திருத்தூதர் பவுலின் 14 திருமுகங்களும், 4. பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா ஆகிய திருத்தூதர்களின் பொதுத் திருமுகங்களும், 5. திருத்தூதர் யோவானின் திருவெளிப்பாடு புத்தகமும்

26 இறைவெளிப்பாட்டிற்கு கடவுள் தேர்ந்த முதன்மையான வழி யாது? திருவிவிலியம்

27 திருவிவிலியமா அல்லது திருச்சபையா எது முதலில் உருவாக்கப்பட்டது? கடவுள் தம்மை வெளிப்படுத்தியது எழுதப்பட்ட ஒரு புத்தகம் வாயிலாக அல்ல. இஸ்ரயேல் மக்கள் சமூகத்தின் வாழ்க்கை மற்றும் அனுபவம் வாயிலாகவே ஆகும். அவர்களது இறை அனுபவங்களே பிற்காலத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களாக எழுதப்பட்டன. விசுவாசிகளின் சமூகமான திருச்சபையின் வாழ்வு, அனுபவம் வாயிலாகவே புதிய ஏற்பாட்டு நூல்களின் எழுதப்பட்டன. எனவே இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட கிறிஸ்தவ சமூகம் அல்லது திருச்சபையே முதலில் தோன்றியது.

28 **இறை ஏவுதலால்** இறைமக்கள் விவிலியத்தை எழுதவும், தொகுக்கவும் செய்தனர்.

29 பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தது யார்? இஸ்ரயேல் சமூகம்

30 புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தது யார்? துவக்க கிறிஸ்தவ சமூகம் அல்லது ஆதித் திருச்சபை

www.malankaralibrary.com

31 திருவிவிலியம் **இறைமக்களுக்குரியதாக**, **இறைமக்களால், இறைமக்களுக்காக** எழுதப்பட்ட நூலாகும்.

32 திருவிவிலியத்தை முழுமையாக அறிந்து கொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் விசுவாசச் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறவேண்டும்.

33 திருவிவிலியத்தின் புனிதம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது? இயேசுவோடும் அவரது மறை உடலான திருச்சபையோடும் உள்ள நெருக்கமான உறவில் தான் விவிலியத்தை வாசிக்கவும், படிக்கவும், கற்பிக்கவும், விளக்கவும் செய்யும்போது தான் புனித நூலான திருவிவிலியத்தின் புனிதம் பாதுகாக்கப்படும்.

34 இறைமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென திருச்சபை அறிவுறுத்துவது யாது? திருச்சபையோடு அன்றி தனிப்பட்ட முறையில் அளிக்கும் விவிலிய விளக்கத்திற்கெதிராக இறைமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென திருச்சபை அறிவுறுத்துகின்றது.

35 திருச்சபையின் உயிரும், இதயமும் யாவை? மறைநூலின் வார்த்தைகள்

36 திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள திருப்பலியின் பகுதிகள் யாவை? திருப்பலியிலுள்ள மன்றாட்டுக்களும், அடையாளங்களும்

37 திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள திருச்சபையின் மற்று வடிவங்கள் யாவை? திருச்சபையின் இறையியல் கோட்பாடுகள், நம்பிக்கை அறிக்கை (விசுவாசப் பிரமாணம்), மறை உண்மைகள், திருமுகங்கள், நூற்றாண்டுகளாக உருவெடுத்த கிறிஸ்தவக் கலைகளும், கலைவடிவங்களும், நூற்றாண்டுகளாய் தொடர்ந்த ஆராதனை முறைகள்

38 திருப்பலியில் நற்செய்தி வாசகம் பற்றி இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கற்பிப்பது யாது? “இயேசு கிறிஸ்து தாமே நம்முடன் பேசுகிறார்"

39 திருவிவிலியம் பற்றி திருச்சபை கற்பிக்கும் உண்மைகள் யாவை? 1. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், தூய ஆவியின் தூண்டுதல் பெற்றவர்களுமே விவிலிய நூல்களை எழுதினர். 2. ஆன்மீக நூலான திருவிவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்டதால் அதில் உள்ள ஆன்மீகச் செய்திகள் முழுவதும் உண்மையானவை எனவும், அவைகளில் தவறு எதுவும் இல்லை 3. உலகமும் அதிலுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாப் பொருட்களும் கடவுளின் படைப்புதான் எனவும், அவற்றுள் மேலானது மனிதப் படைப்புதான் எனவும் விவிலியத்திலிருந்து நமக்கு புரிந்துகொள்ள இயலும். 4. கடவுளுக்கும், மனிதனுக்கும், உலகிற்கும் இடையேயான உறவுதான் திருவிவிலியத்தின் முதன்மையான கருத்து.

40 அறிவியல் என்பதற்கு திருச்சபையின் பதில் என்ன? கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட மனிதன், கடவுளால் பெற்ற அறிவையும் ஆராயும் திறமையையும் பயன்படுத்தி உலகப் படைப்புகளின் உள்ளார்ந்த இரகசியங்களைக் கண்டடைவதற்கும், படைப்புப் பொருள்களைப் புரிந்துகொள்வதற்கும் மேற்கொள்கின்ற ஆய்வு முயற்சியே அறிவியல் ஆகும். இந்த தேடல் இறுதியாக மாபெரும் உண்மையான இறைவனிடத்திற்கே கொண்டு சேர்த்துவிடுகிறது.

41 "முழுமை பெறாத அறிவியல் அறிவு இறைவனிடமிருந்து மனிதனை அகற்றிவிடலாம். ஆனால் அறிவியல் அறிவு பெருகும்போது அது அவனை இறைவனிடத்திற்கே திருப்பி கொண்டுவருகின்றது” எனக்கூறிய ஆங்கிலத் தத்துவ ஞானி யார்? பிரான்சிஸ் பேக்கன் (1561 - 1626)

42 அறிவியல் எதற்கு உதவுகின்றது? மனிதனின் அறியாமையையும், மூடநம்பிக்கையையும் களைந்து இறைவனின் படைப்பான உலகத்தின் விந்தைகளை புரிந்துகொள்வதற்கு அறிவியல் மனிதனுக்கு உதவுகின்றது.

www.malankaralibrary.com

43 மதம் எதற்கு உதவுகின்றது? மனிதனின் தன்னலத்தையும், அச்சத்தையும் முழுவதுமாக அகற்றி, கடவுளையும், அவரது உன்னதப் படைப்பான மனிதனையும், பிற அனைத்து படைப்புகளையும் அன்பு செய்ய மனிதனுக்கு மதம் உதவுகின்றது.

44 அறிவியலுக்கும் மதத்திற்கும் உள்ள உறவு என்ன? 1. மாபெரும் உண்மையைத் தேடுகின்ற மதமும், அறிவியலும் கடவுளை நோக்கியே உள்ளன. 2. இரண்டும் மனித நன்மையையே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளன. 3. ஆன்மீக உண்மைகள் கடவுளின் வெளிப்பாடுகள் ஆகும், அறிவியல் கோட்பாடுகள் விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புகளும் ஆகும். 4. அவை ஒன்றுக்கொன்று பூர்த்திசெய்யவும் துணையாயிருக்கவும் வேண்டும்.

45 அறிவியலுக்கும் மத்த்திற்கும் உள்ள உறவு பற்றி  உலக புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுவது என்ன? “மதத்தினுடையவும், அறிவியலினுடையவும் எல்லைகள் தெளிவாக வகுக்கப்பட்டிருப்பினும் அவை இரண்டிற்குமிடையே ஒன்றுக்கொன்று வலுவான உறவுகளும், சார்ந்திருக்கும் தன்மையும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மதம் தவிர்த்த அறிவியல் முடமானதும், விஞ்ஞானம் தவிர்த்த மதம் குருடானதுமாகும்”.

46 விவிலிய ஆசிரியர்களின் காலம் அறிவு போன்றவை எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது? விவிலிய ஆசிரியர்களின் வாழ்ந்திருந்த காலம், அவர்கள் பெற்றிருந்த அறிவு, இவற்றிற்கு உட்பட்டு நின்றே உலகியலும், அறிவியல் சார்ந்ததுமான கருத்துகளை விளக்கினர். அதனால் விவிலிய ஆசிரியர் காலத்து மொழியியல், கலாச்சாரம், அறிவியல் சார்ந்த அறிவு இவற்றின் தாக்கத்தை அவர்களது நூல்களில் காணலாம். எனினும் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் அறிவியல் உத்தேச கொள்கைகளுக்கும் இக்கால அறிவியல் அறிவுக்கும் இடையே முரண்பாடு தென்படலாம். இதனால் விவிலியத்தில் சில தவறுகள் உண்டு எனவும், விவிலியம் அறிவியலோடு இணைந்து போகவில்லை எனவும் ஒருசிலர் வாதிடலாம். ஆனால் விவிலியத்திலுள்ள ஆன்மீக அறிவுக்கும், உலகைப்பற்றிய அறிவியல் அறிவுக்கும் இடையே முரண்பாடு இல்லை எனவும், இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்பவை எனவும் திருச்சபை கற்பிக்கின்றது.

47 1859 -ல் சார்லஸ் டார்வின் வெளியிட்ட பரிணாமக் கொள்கை யாது?  உயிரற்ற பொருள்களிலிருந்து உயிரின் முதல் கரு உண்டானது எனவும், முதலில் உண்டான ஒரு செல் உயிரி பரிணாமத்தின் வளர்ச்சி அடைந்து பற்பல விதமான பிராணிகள் உண்டாயின எனவும், அவ்வாறு பரிணாமத்தின் வழியாகவே மனிதனும் தோன்றினான் எனவும் பரிணாமக் கொள்கை கூறுகிறது.

48 டார்வின் வெளியிட்ட பரிணாமக் கொள்கைக்கு திருச்சபையின் பதில் என்ன? டார்வின் வெளியிட்ட பரிணாமக் கொள்கை முழுமையான ஆதாரங்களின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக தெளிவுப்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அல்ல. இது மனிதனின் தோற்றம் குறித்த அறிவியலின் ஒரு அனுமானம் (கணிப்பு) மட்டுமே ஆகும். "உயிர் உயிரிடமிருந்து மட்டுமே உருவாக முடியும்” என்னும் விஞ்ஞானக் கோட்பாடுக்கு (Bio genesis) பொருந்தாததே பரிணாமக் கொள்கை. உயிரின் ஊற்று உயிர் மட்டுமேதான் என்னும் கொள்கையின்படி பூமியில் முதல் உயிர் உருவெடுத்ததே கடவுளிடமிருந்துதான் என திருச்சபை உணர்ந்துள்ளது.

**49** சிறந்த அறிஞரான 'சர் வில்லியம் டாசன்' திருவிவிலியம் பற்றி கூறுவது யாது? “திருவிவிலியம் எனக்கு கற்பிப்பதைத் தவிர்த்து மனிதன் கடவுளால் படைக்கப்பட்டான் என்பதையன்றி மனிதனின் தோற்றம் குறித்து எனக்கு வேறு எதுவுமே தெரியாது. அதற்குமேல் எனக்கு எந்த அறிவும் இல்லை. அறிந்தவர் எவரைப்பற்றியும் நான் கேள்விப்படவுமில்லை“.

**50** "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு ! என் பாதைக்கு ஒளியும் அதுவே!” (திருப்பாடல்கள் 119 : 105).

www.malankaralibrary.com

## பாடம் 2

## தூய மூவொரு கடவுள்

பயிற்சி வினாக்கள்

1. மூவொரு இறைவனைக் குறித்து பழைய ஏற்பாடு சுட்டிக்காட்டும் சான்றுகள் யாவை?

பழைய ஏற்பாட்டில் கடவுள் தம்மை ஒரே கடவுளாகவே வெளிப்படுத்தியுள்ளார். ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள், இஸ்ரயேலின் கடவுள்; என்றழைக்கப்பட்டாலும் கடவுள் ஒருவரே. கடவுள் மோசே வாயிலாக அளித்த பத்து கட்டளைகளில் முதல் கட்டளை இவ்வாறு கூறுகின்றது. "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" (விப. 20:2-3). இஸ்ராயேலின் ஒரே கடவுள் பலபெயர்களில் அறியப்பட்டிருந்தார். ஏல் (கடவுள்), ஏல்ஷித்தாய் (மலைகளின் கடவுள்), ஏல் ஏலியோன் (உன்னதக்கடவுள்) ஏல் பெத்தேல் (பெத்தேலின் கடவுள்), ஏல் ஓலாம் (நிலையான கடவுள்), யாவே (உடன்படிக்கையின் கடவுள்), அதொனாய் (ஆண்டவர், தலைவர்) ஆகிய பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. அதுபோன்றே, கடவுளைச் சிறப்பிக்க பாறை (இச.32 :4), புனிதமானவர் (2அர.19: 22), அரசர் (விப. 15 : 18) ஆகிய பெயர்களும் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டன. நாளடைவில் யாவே அல்லது யெகோவா என்னும் பெயருடன் பிற பெயர்களையும் இணைத்துக் கொண்டனர். எனினும் யாவே என்னும் பெயரே பெரும்பாலும் வழக்கத்திலிருந்து வந்தது.

பழைய ஏற்பாட்டில் ஒரே கடவுளை தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூன்று ஆட்களாக தெளிவுடன் வெளிப்படுத்தியதில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஒரே கடவுள் மூவொரு கடவுளாக இருக்கிறார் என இயேசுவே வெளிப்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் பின்னணியில் பழைய ஏற்பாட்டை ஆராயும்போது தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூன்று ஆட்களைக்குறித்தும் சூசகமான குறிப்புரைகள் சிலவற்றைக் கண்டடையலாம். பழைய ஏற்பாட்டில் கடவுளைத் தந்தையாகக் கருதும் வழக்கம் இருந்து வந்தது. (2 சாமுவேல் 7: 14, திருப்பாடல்கள் 2 : 7,8; 9:27; விடுதலைப் பயணம் 4 : 2; ஏசாயா 1: 2). பழைய ஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் கடவுளின் ஞானம், இறைமகன், மானிடமகன் ஆகிய சொல் வழக்குகளும், மெசியாவைக் குறித்து கூறப்பட்ட இறைவாக்குகளும்; மகனாகிய கடவுளைப் பற்றியதே என திருச்சபை நன்குத் தெளிவடைந்துள்ளது. அதுபோன்றே கடவுளின் ஆன்மா, கடவுளின் ஆவி, கடவுளின் சிறப்பான ஆற்றல் ஆகிய அனைத்தும் தூய ஆவியைக் குறிப்பவையே எனவும் திருச்சபை கற்பிக்கின்றது.

2 "தந்தையாகிய இறைவனை நாங்கள் விசுவசிக்கின்றோம்" என்பதனால் பொருள் கொள்ளவேண்டிய கருத்துக்கள் யாவை?

"கடவுள்" என்னும் சொல்; அவர் அனைத்தையும் கடந்த இயல்புடையவர், உலகின் மேல் முழு அதிகாரம் உடையவர், அதி உன்னதர், மனித அறிவின் எல்லையைக் கடந்தவர் போன்ற சில அனுபவ உணர்வுகளை நமது மனத்தினுள் கொண்டுவருகிறது. எனினும் கடவுளைத் தந்தையே" என அழைக்கும்போது அவருடன் தனிப்பட்ட முறையிலான ஓர் உறவும், அன்பும், அவரருகில் இருப்பதான உணர்வும் நமக்கு ஏற்படுகின்றது. கடவுளை 'தந்தை' எனக் கூறும்போது, "தந்தை தம் உயிரை அளித்தும், தமது படைப்புகளைத் தொடர்ந்து அன்பு செய்தும், பாதுகாத்துப் பராமரித்தும், படைப்புகளின் நலனில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்" என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். "கடவுள் அன்பாயிருக்கிறார்" எனத் திருவிவிலியம் வெளிப்படுத்துகின்றது (1 யோவான் 4 : 9). கடவுளைத் தந்தையே என அழைப்பதன் வாயிலாக கடவுளின் அன்புறவில் நாம் பங்கேற்பதற்கும், அதன் வழியாக கடவுளில் மிகுதியாக தஞ்சமடைவதற்கும், மகனுக்குரிய இயல்பான அன்பையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்த இயல்கிறது.

www.malankaralibrary.com

கடவுளைத் தந்தையே என அழைப்பதனால், கடவுள் ஆணோ பெண்ணோ ஆனவர் அல்ல. கடவுள் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவர். கடவுளின் தந்தைப் பண்பிற்கு எல்லையில்லை. ஊனுடல் உடைய மனிதனின் தந்தைப் பண்பு வரையறுக்கப்பட்டதாகும். ஆண் நபரின் தந்தைப் பண்பு பெண் நபரின் தாய்மைப் பண்பின் உதவியுடன் தான் நிறைவு பெறுகிறது. கடவுளின் தந்தைப் பண்பில் அடங்கியுள்ள நற்குணங்கள் ஆண்களிலும், பெண்களிலும் பிரதிபலிக்கின்றன. தந்தைக் கடவுள் பிறப்பிப்பவர்; மகனாகிய கடவுள் பிறப்பிக்கப்பட்டவர். அதனால் தந்தைக் கடவுளின் நிலையான உள்ளியல்பைப் பெற்றிருப்பவர்தான் மகனாகிய கடவுள். என்றென்றைக்கும் நிலைத்திருப்பவரான தந்தைக் கடவுளில் நிலைத்திருப்பவரான ஒரே மகன்தான் இயேசு கிறிஸ்து. தந்தை எல்லாம் வல்லவர்; அனைத்தையும் படைத்தவரும் அவரே. மகனாகிய கடவுள் தந்தையின் அச்சுப்பதிவாகவும் மாட்சிமையின் சுடரொளியாகவும் உள்ளார். (எபிரேயர் 1:3).

3. “திருப்பலி மூவொரு இறைவனை அர்ப்பணிக்கும் மிகப்பெரும் ஆராதனை” என கூறக்காரணம் யாது?

திருச்சபை மூவொரு கடவுளுக்கு அர்ப்பணிக்கின்ற மிகச் சிறந்த ஆராதனை திருப்பலி. திருச்சபையின் இதயத்துடிப்பும், உயிர் மூச்சும் திருப்பலியே. திருப்பலி திருச்சபையைத் தோற்றுவிக்கவும் வெளிப்படுத்தவும் செய்கிறது. அதனால் திருச்சபையும், திருப்பலியும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத தொடர்பு கொண்டுள்ளன. திருப்பலி அர்ப்பணத்தின் போதுதான் மூவொரு கடவுளோடுள்ள அன்புறவில் திருச்சபை அவளது உண்மையான தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றது. திருச்சபையின் ஆராதனை முறை இயல்பாகவே மூவொரு கடவுள் தன்மை உடையதாகும். தூய மூவொரு கடவுளின் சாயலாகத்தான் திருச்சபை நிலைபெறுகின்றது. தந்தைக் கடவுளின் ஒரே மகன் இயேசு மெசியாவின் பிரசன்னம் தூய ஆவியின் மூலமாக கிடைக்கப்பெற்றபோதுதான் திருச்சபை உருவானது. இக்காரணத்தால் தூய மூவொரு கடவுளுடனான அன்புறவின் திருத்தலம் தான் திருச்சபை. இந்த அன்புறவு உன்னத நிலையை அடைவது திருப்பலி வழியாகவேயாகும். தூய நற்கருணையைப் பெற்றுக்கொள்ளும்போது கிறிஸ்து மற்றும் தூய ஆவியானவர் வழியாக நாம் தந்தைக் கடவுளின் அன்புறவில் மூழ்கிவிடுகிறோம்.

திருச்சபையின் ஆராதனையினுடைய நிறைவுத் தந்தைக் கடவுளே; மீட்பினுடையவும், ஆராதனையினுடையவும் தொடக்கமும் தந்தைக் கடவுளே தான். மகனாகிய கடவுளும், தூய ஆவியாகிய கடவுளும் ஆராதனைக் கொண்டாட்டத்தின் ஒப்பற்ற இன்றியமையா பரிந்துரையாளர்கள். ஒவ்வொரு திருப்பலியும் ஒவ்வொரு பெந்தெக்கோஸ்து ஆக உருவெடுக்கிறது. எனவே தூய ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கான மிகச்சிறந்த வழிதான் தூய நற்கருணைக் கொண்டாட்டம். திருப்பலி நிறைவேற்றிய பின் குருவானவர் விசுவாசிகளை மூவொரு கடவுளின் அருளுக்கும், ஆசீருக்கும் ஒப்புக்கொடுத்து வழியனுப்புகிறார்.

குறு வினா விடைகள்

1. "தந்தை **மகன்** தூய ஆவிக்குப் புகழ்; ஆதி முதல் என்றென்றைக்கும் ஆமென்”
2. "நாங்கள் உமக்கும் உமது ஒரே மகனுக்கும் தூய ஆவிக்கும் இப்பொழுதும் **எப்பொழுதும்** புகழ்ச்சியும் போற்றுதலும் செலுத்துகின்றோம்"
3. தூய திருத்துவம் என்றால் என்ன? மூன்று ஆட்களான ஒரே கடவுள்
4. தந்தையாகிய கடவுளைக் குறித்தும் மகனாகிய கடவுளைக் குறித்தும் தூய ஆவியான கடவுளைக் குறித்தும் மனித குலத்திற்கு வெளிப்படுத்தியவர் யார்? இயேசு கிறிஸ்து
5. "கடவுளை யாரும் **என்றுமே** கண்டதில்லை ” (யோவான் 1: 18)
6. “மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று **விரும்புகிறாரோ** அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்” (மத்தேயு 11:27)

www.malankaralibrary.com

7. பழைய ஏற்பாட்டில் கடவுள் தம்மை ஒரே கடவுளாகவே எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்? ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள், இஸ்ரயேலின் கடவுள்
8. “நானே உன் கடவுளாகிய **ஆண்டவர்**; என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது” (விப. 20:2-3).
9. இஸ்ராயேலின் ஒரே கடவுள் எந்நெந்த பெயர்களில் அறியப்பட்டிருந்தார்? ஏல் (கடவுள்), ஏல்ஷத்தாய் (மலைகளின் கடவுள்), ஏல் ஏலியோன் (உன்னதக்கடவுள்) ஏல் பெத்தேல் (பெத்தேலின் கடவுள்), ஏல் ஓலாம் (நிலையான கடவுள்), யாவே (உடன்படிக்கையின் கடவுள்), அதொனாய் (ஆண்டவர், தலைவர்)
10. ஏல் என்ற சொல்லின் பொருள் என்ன? கடவுள்
11. ஏல்ஷத்தாய் என்ற சொல்லின் பொருள் என்ன? மலைகளின் கடவுள்
12. ஏல் ஏலியோன் என்ற சொல்லின் பொருள் என்ன? உன்னதக்கடவுள்
13. ஏல் பெத்தேல் என்ற சொல்லின் பொருள் என்ன? பெத்தேலின் கடவுள்
14. ஏல் ஓலாம் என்ற சொல்லின் பொருள் என்ன? நிலையான கடவுள்
15. யாவே என்ற சொல்லின் பொருள் என்ன? உடன்படிக்கையின் கடவுள்
16. அதொனாய் என்ற சொல்லின் பொருள் என்ன? ஆண்டவர், தலைவர்
17. கடவுளைச் சிறப்பிக்க பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டச் சொற்கள் யாவை? பாறை (இச.32 :4), புனிதமானவர் (2அர.19: 22), அரசர் (விப. 15 : 18)
18. பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் வழக்கத்திலிருந்த கடவுளின் பெயர் என்ன? யாவே
19. பழைய ஏற்பாட்டில் கடவுளை எவராக கருதும் வழக்கம் இருந்து வந்தது? தந்தையாக
20. பழைய ஏற்பாட்டில் இயேசு மெசியாவைக் குறித்து கூறப்பட்ட சொற்கள் யாவை? கடவுளின் ஞானம், இறைமகன், மானிடமகன்
**21.** பழைய ஏற்பாட்டில் தூய ஆவியைக் குறிப்பிடும் பெயர்கள் யாவை? கடவுளின் ஆன்மா, கடவுளின் ஆவி, கடவுளின் சிறப்பான ஆற்றல்
22. பழைய ஏற்பாட்டில் வெளிப்படுகின்ற ஒரே கடவுள் புதிய ஏற்பாட்டில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்? தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூன்று ஆள்களாக
23. இயேசு, கடவுளை எச்சொல்லால் அழைத்தார்? "ஆபோ”
24. ஆபோ என்பதன் பொருள் என்ன? "தந்தையே"
25. யூத பண்பாட்டில் மக்கள் அன்புடன் தந்தையை அழைக்கப் பயன்படுத்தும் சொல் எது? ஆபோ
26. "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற **துணையாளர்** வருவார். அவரே தந்தையிடமிருந்து **உண்மையை** வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும் போது என்னைப்பற்றி சான்று பகர்வார்." (யோவான் 15 : 26).
27. "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு **துணையாளரை** உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்” (யோவான் 14 : 16).
28. “என் அன்பார்ந்த **மகன்** நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு **குரல்** ஒலித்தது (மாற்கு 1: 9-11).
29. தந்தை தமது குரலொலியினாலும், மகன் தமது பிரசன்னத்தினாலும், தூய ஆவியார் புறாவின் வடிவிலும் எப்போது மூவொரிறைவன் வெளிப்படுத்தப்பட்டார்? இயேசுவின் திருமுழுக்கு வேளையில்

www.malankaralibrary.com

30. “எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் **திருமுழுக்கு** கொடுங்கள்” (மத்தேயு 28 : 19).
31. திருச்சபையின் தொடக்க காலத்தில் அமைந்திருந்த நம்பிக்கை அறிக்கை எது? திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை
32. நான்காம் நூற்றாண்டில் உருவான நம்பிக்கை அறிக்கை எது? நிசேயா திருச்சங்க நம்பிக்கை அறிக்கை
33. திருச்சபையின் நம்பிக்கை அறிக்கையாக அங்கீகரிக்கப்பட்டது எது? நிசேயா திருச்சங்க நம்பிக்கை அறிக்கை
34. "கிறிஸ்தவ நம்பிக்கைக்கு **மூன்று** மறைப்பொருட்கள் (mystery) இல்லை. ஒரே ஒரு **மறைபொருள்** மட்டுமே உள்ளது. அதுவே மூவொரு கடவுள்.
35. நம்பிக்கை அறிக்கையில் "நாங்கள்” என்பதன் பொருள் என்ன? திருச்சபை
36. அனைத்தையும் கடந்த இயல்புடையவர், உலகின் மேல் முழு அதிகாரம் உடையவர், அதி உன்னதர், மனித அறிவின் எல்லையைக் கடந்தவர் என்பனவற்றைக் குறிப்பிடும் ஒரே சொல் எது? "கடவுள்”
37. கடவுளின் அன்புறவில் பங்கேற்கவும், கடவுளில் மிகுதியாக தஞ்சமடைவதற்கும், மகனுக்குரிய இயல்பான அன்பையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்த நாம் கடவுளைத் எவ்வாறு அழைக்கிறோம் தந்தையே
38. மெசியா என்னும் சொல்லின் பொருள் என்ன? அருள்பொழிவு செய்யப்பட்டவர்'
39. ஆண்டவர் என்பதன் கிரேக்க மொழிச் சொல் எது? கிறியோஸ்'
40. யார் வாயிலாக தூய மூவொரு கடவுளின் அன்புறவினுக்குள் கடந்து வருகிறோம்? இயேசு மெசியா
41. திருச்சபையில் நாம் எப்போது தூய மூவொரு கடவுளுடன் முழுமையான அன்புறவில் இணைகிறோம்? தூய நற்கருணை கொண்டாட்டம்
42. திருச்சபையின் தூய ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கான மிகச்சிறந்த வழி எது? தூய நற்கருணைக் கொண்டாட்டம்.
43. 'மறைபொருள்' என்பதன் சுறியானி மொழிச் சொல் எது? "றோசோ”
44. 'மறைபொருள்' என்பதன் கிரேக்க மொழிச் சொல் எது? "மிஸ்தேரியோன்”
45. பவுலடியாரின் திருமுகங்களில் நமது மீட்புக்கான கடவுளின் திட்டத்தை எவ்வாறு அழைக்கிறார்? மறைபொருள்
46. பவுலடியாரின் திருமுகத்தின்படி மறைபொருள் என்பதன் பொருள் என்ன? “இயேசு மெசியா வழியான மீட்பு”
47. திருச்சபை ஒரே மறை உண்மை எது?. மூவொரு கடவுளே.
48. மூவொரு கடவுளாகும் மறைபொருளின் பல்வேறு உண்மைகள் யாவை? மனிதப் பிறவியின் மறைபொருள், மீட்பின் மறைபொருள், திருச்சபையின் மறைபொருள், தூய நற்கருணையின் மறைபொருள்.
49. தூய மூவொரு கடவுளில் உள்ள மூன்று நபர்களுடையவும் ஒன்றிப்பு எதற்கு எதிரானதல்ல? அவர்களது தனித்துவத்திற்கும் (identity) ஆளுமைக்கும் (personality).
50. மூவொரு கடவுளின் மூன்று ஆட்களிடையேயான உட்பிணைப்பு எதற்கு அடையாளம்? ஒன்றிப்பின்
51. மூவொரு கடவுளின் மூன்று ஆள்களுக்குமிடையேயான உட்பிணைப்பை கிரேக்க திருச்சபைத் தந்தையர்கள் எவ்வாறு அழைத்தனர்? "பெரிகோரேசீஸ்”
52. “மூவோரிறைவன் **ஏகனுமாம்**, மூவருமானவர் இலங்குகிறார், தந்தை மகன் தூயாவியுமாம், மெய்யேகபரா நீர் போற்றி ”

53. "மூவோரிறைவனுக்குப் புகழ். **மூவோரிறைவனுக்குப்** புகழ். புகழப்படுபவரும், உண்மையானவரும், தொடக்க முடிவற்றவருமாகிய மூவோரிறைவனை நாங்கள் புகழ்கிறோம். இறைவா எப்போதும் புகழ்ச்சி உமக்கே ஏற்றதாகும்."
54. கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் ஆராதனையின் மையம் என்ன? தூய மூவோரிறைவன்
55. “நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் **கட்டளைகளைக்** கடைபிடிப்பீர்கள். உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்”. (யோவான் 14:15-16).

## பாடம் 3

## இயேசுகிறிஸ்து

பயிற்சி வினாக்கள்

1. மெசியாவைக் குறித்து பழைய ஏற்பாட்டில் கூறப்படும் குறிப்புகள் யாவை?

அரசியல் முறையில் தங்களை விடுவிப்பதற்கு வருகைதரும் மெசியா என்பவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆற்றல் படைத்த ஓர் அரசர் என்றே யூதர்கள் கருதியிருந்தனர். ஆனால் இறைவாக்கினர்கள் முன்மொழிந்த மெசியாவோ அனைத்து மக்களுக்கும் மீட்பளிக்கும் ஒருவராகவே இருப்பார்.

மெசியா பெத்லகேமில் பிறப்பார் என மீக்கா இறைவாக்கினர் தெளிவுபடுத்தியுள்ளார். "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார். அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக்காலமாய் உள்ளதாகும்” (மீக்கா 5 : 2).

வருகைதர இருப்பவரான மெசியா தாவீதின் குலத்திலிருந்துதான் என எசாயா, எரேமியா ஆகிய இறைவாக்கினர்களும் குறிப்பிட்டுள்ளனர். “ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்; அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும்” (எசாயா 11 : 1). மெசியாவைக்குறித்து எரேமியா கீழ்வருமாறு இறைவாக்குரைத்தார். “ஆண்டவர் கூறுவது, இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள "தளிர்” தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார்” (எரேமியா 23:5).

மெசியா ஒரு கன்னியிடமிருந்து பிறப்பார் என எசாயா இறைவாக்குரைத்துள்ளார். "இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் எனப் பெயரிடுவார்” (எசாயா 7 : 14). செக்கரியா தமது இறைவாக்கில் மெசியாவினுடைய வருகையின் காலம் நெருங்கி வந்துவிட்டது என முன்மொழிந்துள்ளார். “மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறார்” (செக்கரியா 9 : 9).

இறைவாக்கினர்களின் நூல்களில் மட்டுமன்று; ஏனைய பழைய ஏற்பாட்டு நூல்களிலும் மெசியாவைக்குறித்துள்ள சான்றுகளைக்காணலாம். யாக்கோபு தனது புதல்வர்களை ஆசீர்வதிக்கின்ற நேரத்தில் யூதாவிடம் கீழ்வருமாறு ஆசி கூறினார். “அரசுரிமை உடையவர் வரும்வரையில், மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில் யூதாவை விட்டுச் செங்கோல் நீங்காது; அவர் மரபை விட்டுக் கொற்றம் மறையாது” (தொடக்க நூல் 49 : 10). இது போன்று திருப்பாடல் 89-ஆம் அதிகாரம் 20 முதல் 38 வரை வசனங்களில் மெசியாவைத் தாவீதின் குடும்பத்தில் தோன்றும் அருள்பொழிவு பெற்றவராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எசாயாவின் இறைவாக்குகளில் காணப்படும் “துன்புறும் ஊழியர்” (எசாயா 40- 50) என்பதும் ஆகாய், செக்கரியா ஆகியோரின் இறைவாக்குகளில் காணப்படும்.

www.malankaralibrary.com

“செருபாபேல்” என்னும் சொல்லாட்சியும் (ஆகாய் 2 : 23, செக்கரியா 4 : 6-10), தானியேலின் இறைவாக்குகளில் காணப்படும் “மானிடமகன்” என்னும் சிந்தனையும் (தானியேல் 8: 1527) மெசியாவைக் குறிப்பவை ஆகும்.

நாசரேத்து கன்னிமரியிடமிருந்து தூய ஆவியின் ஆற்றலால் பெத்லகேமில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்து, பாலஸ்தீனாவில் பணி வாழ்வில் ஈடுபட்ட “நசரேயன்” என்னும் இயேசுவில், இஸ்ரயேலரின் மெசியாவைக் குறித்துள்ள எதிர்பார்ப்புகள் நிறைவேறின. மெசியாவைக் குறித்து கூறப்பட்ட இறைவாக்கினர்களின் இறைவாக்குகள் அனைத்தும் நாசரேத்து இயேசுவில் நிறைவேறின. இவ்வாறு நாசரேத்து இயேசுவை, மெசியா எனவும் அழைக்கத்தொடங்கினர்.

இயேசு என்னும் தனிநபர் “இயேசு மெசியா” எனவும் அறியப்படலானார். “நான் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்” என்னும் இயேசு எழுப்பிய வினாவிற்கு “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என பேதுரு பதிலளித்தார் (மத்தேயு 16 : 16) இயேசுவின் பணி வாழ்வின்போதே பலர் அவரை மெசியா என்று ஏற்றுக்கூறினர். தாம் மெசியா என்ற உண்மையை இயேசு ஒப்புக்கொள்வதாகவும் நற்செய்தி வாயிலாக அறிய முடிகிறது.

எபிரேய மொழியிலுள்ள “மெசியாஹ்” என்னும் சொல்லிலிருந்துதான் “மெசியா” என்னும் சொல் உண்டானது. மெசியா என்னும் சொல்லுக்குக் கிரேக்க மொழியில் கையாளப்படும் வார்த்தைதான் - 'கிறிஸ்தோஸ்' என்பது. கிறிஸ்தோஸ் என்பதிலிருந்துதான் 'கிறிஸ்து' என்னும் சொல் உருவெடுத்தது. அதனால் 'மெசியா' என்ற சொல்லும் ‘கிறிஸ்து' என்ற சொல்லும் ஒரே பொருளிலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இயேசு மெசியா என்னும் சொல்லும் இயேசு கிறிஸ்து என்னும் சொல்லும் ஒரே பொருளையே குறிக்கின்றன.

2 "இயேசு வரலாற்றில் வாழ்ந்த மனிதர்” என்பதற்கான சான்றுகளை எழுதுக?

இயேசு கிறிஸ்து என்பவர் ஒரு கற்பனை மனிதரோ, மனித அனுமானத்தினால் உருவாக்கப்பட்டவரோ அல்ல. மாறாக 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றில் வாழ்ந்த ஒரு தனிமனிதர். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைக் குறித்து அறிந்து கொள்வதற்கு நமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முக்கிய ஆதாரம் விவிலியத்தின் புதிய ஏற்பாடு ஆகும். புதிய ஏற்பாட்டில் குறிப்பாக நற்செய்தி நூல்கள், திருத்தூதர் பணிகள், பவுலடியார், புனித பேதுரு ஆகியோரின் திருமுகங்கள் ஆகியவை சிறப்பிடம் பெறுகின்றன. மேலும், திருச்சபையின் அதிகாரபூர்வமான அங்கீகாரம் பெறாத சில நூல்களிலும் (Apocryphal Books) இயேசுவைப் பற்றிய விளக்கங்களைக் காணலாம். அதுபோன்று கிறிஸ்தவர்களல்லாத வரலாற்றாசிரியர்கள் சிலருடைய நூல்களிலும் இயேசுவைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

3. "இயேசு கிறிஸ்து உண்மை இறைவனும் உண்மை மனிதனும்” என்பதை நிரூபித்துக்காட்டுக?

நாசரேத்தில் கன்னிமரியாவிடமிருந்து பிறந்த இயேசு நிறைவுபெற்ற மனிதனாய் வரலாற்றின் பகுதியானார் என நாம் அறிந்து கொண்டோம். பாவம் தவிர மற்ற அனைத்திலும் அவர் மனிதருக்கு ஒப்பானார். பிற எல்லா மனிதர்களையும் போன்று இயேசுவும் பெண்ணிடமிருந்து பிறந்து குடும்பத்தில் வளர்ந்து, மனித கரங்களினால் வேலைகள் செய்து, மனித புத்தியினால் சிந்தனை செய்து, மனித இதயத்தினால் அன்பு செய்து வாழ்ந்தார். மனித உடலுக்குரிய இயல்புகள் எல்லாம் இயேசுவுக்கும் இருந்தன. மனித இயல்பான சோர்வும், நோயும், பசியும், இயேசுவுக்கும் ஏற்பட்டிருந்தன.

மனிதருக்கு இருக்கக்கூடிய எல்லா உணர்வுகளும், இயேசுவுக்கும் இருந்தன. மகிழ்ச்சி, துக்கம், கோபம் ஆகியவை இயேசுவுக்கும் இருந்தன என்று அவரது வாழ்க்கையின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம். இறுதியாக, சிலுவையில் துன்பம் அனுபவிக்கவும் உடல், உளவேதனையின் ஆழத்திற்கே இறங்கிச்சென்று, எல்லா மனிதரையும் போன்று இயேசு மரணமடையவும் செய்தார். இவற்றிலிருந்து இயேசு உண்மையான மனிதனே என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

www.malankaralibrary.com

இயேசு உண்மையான மனிதர் எனவும் வரலாற்றில் வாழ்ந்தவர் எனவும் கூறும்போது அவர் உண்மையான கடவுளும் ஆனவரே என்னும் உண்மையையும் நாம் மறந்துவிடக்கூடாது. இயேசு நாசரேத்து கன்னிமரியாவிடமிருந்து பிறப்பதற்கு முன்னரே அவர் இறைத்தன்மையில் இருந்தார். தொடக்க காலத்திலேயே தந்தையாகிய கடவுளிடமிருந்து உருவெடுத்த மகனாகிய கடவுள்தான் காலநிறைவில் மரியாவிடமிருந்து பிறந்த இயேசு. ஆக, இயேசு இறைமகனும், மூவொரு கடவுளின் இரண்டாவது ஆளாகிய இறைவாக்கும், இஸ்ரயேல் எதிர்நோக்கியிருந்த மெசியாவும் ஆவார்.

யோவானின் நற்செய்தி இவ்வாறு தொடங்குகிறது. “தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது (யோவான் 1:1). இவ்விதமாக தந்தையிடமிருந்து பிறந்த ஒரே மகன், தந்தையின் வாக்கு ஆகிய மகன், காலநிறைவில் கன்னிமரியாவிடமிருந்து பிறந்து இயேசு என்ற பெயரில் அறியப்பட்டார். வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்” (யோவான் 1: 14, பிலிப்பியர் 2:6).

தூய ஆவியின் மூலமாக உண்டான கன்னியின் கருவுறுதலும், (லூக்கா 1: 35) என் அன்பார்ந்த மகன் நீயே” என இயேசுவின் திருமுழுக்கு நேரத்தில் தந்தைக் கடவுளின் பறைசாற்றுதலும் (லூக்கா 3 : 22) பணிவாழ்வின் போது இயேசு நிகழ்த்திய பலவிதமான அரும் செயல்களும், மரணத்தின் மீதும், இயற்கை சக்திகளின் மீதும் உள்ள இயேசுவின் அதிகாரமும், இயேசுவின் தோற்ற மாற்றமும், "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்ற பேதுருவின் அறிக்கையும், (மத்தேயு 16 : 16) இயேசுவை நோக்கியவாறு "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்ற தோமாவின் விசுவாச அறிக்கையும், (யோவான் 20 : 28), இயேசுவின் உயிர்த்தெழுதலும், அதன்பின் அவர் தந்த காட்சிகளும், இயேசுவின் விண்ணேற்றமும் இயேசு நிறைவான கடவுள் என்பதைத் தெளிவுப்படுத்துகின்றன. தாம், தந்தையாகிய கடவுளின் ஒரே மகன் என்னும் இயேசுவின் தெளிவும், இயேசுவும், தந்தையும் ஒருவரே என்னும் அவரது உணர்வும், தந்தைக்கும் இயேசுவுக்கும் இடையேயான பிரிக்க முடியாத உறவும் இயேசுவின் இறைத் தன்மையைத் தெளிவுபடுத்துகின்றன.

4. இயேசு கிறிஸ்து உலக மீட்பர்' என்பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக?

வானதூதர் நாசரேத்தில் கன்னிமரியிடம் வந்து , "இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு 'இயேசு' என்னும் பெயரிடுவீர்” (லூக்கா 1:31) எனக் கூறினார். இயேசு என்னும் சொல்லின் பொருள் மீட்பர் என்பதே ஆகும். இயேசு பிறந்த நேரத்தில் ஆண்டவரின் தூதர் பின்வருமாறு கூறினார். “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்." (லூக்கா 2 :10-11) இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தபோது இயேசு உலக மீட்பரே என்ற உண்மையை சிமியோன் அறிக்கையிட்டார். “மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன.” (லூக்கா 2 : 31). இவ்வாறு நாசரேத்தின் இயேசு, வருகைதருவதற்கிருந்த மெசியாவாகவும், மீட்பராகவும் அறியப்பட்டார்.

**மீட்பு - பழைய ஏற்பாட்டில்**

மீட்பு என்னும் சொல்லுக்கு எபிரேய மொழியில் "யஷ்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவர். எல்லாவிதமான தடைகளிலிருந்தும், கட்டுகளிலிருந்தும் விடுதலை அடையும் போது அடையக் கூடிய நிம்மதியையும், பாதுகாப்பையும் தான், “யஷ்” என்ற சொல் குறிப்பிடுகிறது. போர்களிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும், மேலாதிக்கங்களிலிருந்தும் விடுதலை அடைவதைக் குறிப்பதற்கு "மீட்பு” என்ற சொல் திருவிவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (திருப்பாடல் 91, எரேமியா 42 : 11, 1சாமுவேல் 9:16). “யாவேதான் மக்களின் மீட்பர்”, “யாவே மீட்பளிக்கிறார்” என்ற கருத்தியல்கள் பழைய ஏற்பாட்டில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இஸ்ரயேலின் விடுதலை ஆண்டவரின் கரங்களிலிருந்து வரும் (ஓசேயா 13

www.malankaralibrary.com

: 4, எரேமியா 3 : 23), கடவுள் தான் மீட்பர் (திருப்பாடல் 18 : 47) என கடவுளைப் பல வகைகளில் மீட்போடு தொடர்புபடுத்துகின்றன.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கடவுள் அவர்களை விடுவித்ததை கடவுளின் மிகப்பெரும் மீட்புச் செயலாக இஸ்ரயேல் மக்கள் கருதினர் (விடுதலைப் 14 :3-4). சுருங்கக் கூறின், பகைவரிடமிருந்தும், வறுமையிலிருந்தும், நோய்களிலிருந்தும் அனைத்துவிதமான அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை அடைவதே 'மீட்பு' என்ற சொல்லுக்கு பழைய ஏற்பாடு கொள்ளும் பொருள் ஆகும் (திருப்பாடல்கள் 3:7; 6:4; 12:6,59:2). பாபிலோனிய அடிமைத்தனத்திற்குபின் இஸ்ரயேலரை மேம்பாடு அடையச்செய்யும் மீட்பரை மக்கள் எதிர்நோக்கிக் காத்திருக்கத் தொடங்கினர் (திருப்பாடல்கள் 14:7,69:35).

அப்போது மீட்பு என்பது மெசியாவை மையப்படுத்தியதாக இருந்தது. வருகைதருபவரான மெசியாவை அல்லது அரசரை மீட்பராக இறைவாக்கினர்கள் முன்னறிவித்தனர். (எரேமியா 23: 5,33:15, செக்கரியா 9 : 9). மெசியா அருளப்போகும் மீட்பு நிலையானதே (எசாயா 51 : 6) எனவும், புதிய இஸ்ரயேலும், புதிய சீயோனுமே (புதிய எருசலேம்) மீட்பு எனவும் எசாயா அறிவுறுத்தினார். சுருங்கக்கூறின், எல்லா தீமைகள், கட்டுகளிலிருந்து விடுதலையும், அதன் மூலம் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, மகிழ்ச்சி, சமாதானம் இவையே மீட்பு என்பதற்குப் பழைய ஏற்பாடு கொண்டிருக்கும் பொருள்.

**மீட்பு - புதிய ஏற்பாட்டில்**

புதிய ஏற்பாட்டில் மீட்பளித்தல், மீட்பு, மீட்பர் ஆகிய சொற்கள் பலமுறை எடுத்தாளப்பட்டுள்ளது. இச்சொற்களின் பயன்பாட்டில் பழைய ஏற்பாட்டின் தாக்கம் தெளிவாகத் தெரிகிறது. சோத்தேர் (Soter) சோத்தேரிய (Soteria) ஆகிய கிரேக்கச் சொற்களிலிருந்துதான் மீட்பர், மீட்பு ஆகிய சொற்கள் உருவெடுத்தன. பரந்த பொருளில் நோக்கினால் மீட்பர், விடுதலையளிப்பவர் என்ற சொற்கள் ஒரே பொருளையேத் தருகின்றன.

வருகைதரும் மெசியா மீட்பராயிருக்கிறார் எனவும் அவர் அனைத்து விதமான கட்டுகளிலிருந்தும் விடுதலை தருவார் எனவும் இஸ்ரயேல் மக்கள் கருதினர். இவ்விதமாக அவர்கள் மீட்பராகிய மெசியாவைக் காத்திருந்தனர். காலநிறைவில் இயேசு கன்னி மரியாவிடமிருந்து பெத்லகேமில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்து, பாலஸ்தீனாவிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பணிவாழ்வை மேற்கொண்டு, ஏராளமான மக்களைப் பாவம், பிணி, மரணம், பேய், பசி, சமூக அடிமைத்தனங்கள் ஆகியவற்றிலிருந்து விடுவித்தார்.

மனிதனின் ஒட்டுமொத்த விடுதலைதான் இயேசு கருதிய மீட்பு. மனிதனின் உடல், மனம், அரசியல், உலகியல், சமூகம், ஆன்மீகம் ஆகிய அனைத்து கட்டுகளிலிருந்தும் விடுதலை அளிப்பதற்காகவே இயேசு மனிதரானார். இயேசு தொழுகைக் கூடத்தில் வைத்து இவ்வாறு அறிவித்தார். ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக்கா 4 : 18-19).

பணிவாழ்வின் இறுதியில் இயேசு தமது பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகியவற்றால் மனிதகுலத்தை முழுமையாக மீட்டார். மனிதகுலம் செய்த தவறுகளுக்காகவும், பாவங்களுக்காவும் பரிகாரம் செய்வதற்காக உண்மை கடவுளும், உண்மை மனிதனுமான இயேசு மண்ணுலகில் இறங்கி வந்தார். உலகின் பாவம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளுகின்ற இறைவனின் செம்மறியான இயேசு பாவ பரிகார பலியாகத் தம்மையே சுயமாக சமர்ப்பணம் செய்தார். இவ்வாறு சிலுவை மரணம் வழியாக பாவ பரிகாரம் செய்த இயேசு மனித குலத்தை மீட்டார். தமது உயிர்ப்பின் வாயிலாக மரணத்தின் மீது வெற்றிகொண்டு மரணம் என்ற கொடுக்கை

www.malankaralibrary.com

அறுத்துவிட்டார். இயேசுவில் நம்பிக்கை கொண்டு, இயேசுவோடு ஈடுபாடு கொண்டு, அவரோடு இணைந்து வாழ்பவர்கள் அனைவரும் இயேசுவைப்போன்று உயிர்ப்பிக்கப்படவும், மரணத்தின் மீது வெற்றி கொள்ளவும் செய்வார்கள் என இயேசு தமது உயிர்ப்பின் வாயிலாக பறைசாற்றியுள்ளார்.

இயேசு அருட்கொடையாக அளித்த மீட்பில் ஒருவர் பங்கு பெறுவது இயேசுவின் மீதுள்ள அவரது நம்பிக்கை வாயிலாகவும், அதிலிருந்து உருவாகும் அவரது மனமாற்றத்தின் வாயிலாகவும் ஆகும். அதற்கு வேண்டிய வெளிப்படையான திருச்சடங்குதான் திருமுழுக்கு. திருமுழுக்கு வழியாக ஒருவர் திருச்சபையின் உறுப்பினராகிறார். இயேசுவின் மீதுள்ள இடைவிடாத ஈடுபாடு மூலமாகவும், நன்மைச் செயல்கள் வழியாகவும், விசுவாசத்திற்கு ஏற்ற செயல்பாடுகளின் வழியாகவும் ஒருவர் இந்த மீட்பில் வளர்ச்சியடைய முடியும். இந்த மீட்பின் முழுமையான அனுபவம் ஒருவருக்குக் கிடைப்பது உலக முடிவில் மட்டுமே. இவ்விதமாக இயேசுவின் கொடையான மீட்பு திருச்சபையின் வாயிலாகவும், திருச்சபையின் அருளடையாளங்கள் வாயிலாகவும் ஒருவர் தனதாக்கிக்கொள்ளவும், மீட்பு அனுபவத்தை வளர்ச்சி அடையச்செய்கிறார்.

இயேசு மனித குலம் அனைத்திற்கும் மீட்பராவார். இயேசுவின் அருள் கொடையான மீட்பு எல்லா மனிதருக்கும் உரியதே. அதனால் பிற மதத்தினர் அவர்களது மதச் சட்டங்களுக்கு ஏற்பவும், மனச்சான்றுக்கு ஏற்பவும் வாழும்போது அவர்களும் இயேசுவின் அருள்கொடையான மீட்பில் மறைமுகமாக பங்காளிகளாகின்றனர். எல்லா மனிதரும் இயேசுவின் மூலமாக மீட்பு பெறுவதனாலேயே இயேசு “உலக மீட்பர்" என்று அறியப்படுகிறார்.

**குறு வினாவிடைகள்**

1. கிறிஸ்தவ மதம் யாரை அடித்தளமாகக் கொண்டது? இயேசு கிறிஸ்து
2. மெசியா என்பது பொருள் என்ன? அருள்பொழிவு செய்யப்பட்டவர்
3. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யாரெல்லாம் எண்ணெய் பூசி அபிஷேகம் செய்யப்பட்டனர்? இறைவாக்கினர்களும், அரசர்களும், குருக்களும்.
4. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எதிர்நோக்கப்பட்ட “மெசியா” என்பவர் யாராக இருப்பார் என்று யூத மக்கள் கருதினர்? இறைவாக்கினரும், அரசரும், குருவுமாக
5. "மெசியா” என்ற சிந்தனைத்தோற்றம் சாமுவேல் ஆகமத்தில் எப்பகுதியில் உள்ளது? 2 சாமு. 7:12-16
6. “மெசியா” மற்றும் “யாவே ஆட்சி” என்னும் கருத்தையும் மையப்படுத்தியுள்ள சிந்தனைகள் எப்போது உருவாயின? கி.மு. 8-ஆம் நூற்றாண்டில்
7. யாவே ஆட்சி அமைகின்ற ஒரு நாள் வரும் என உரைத்த இறைவாக்கினர் யார்? ஆமோஸ்
8. மெசியாவின் ஆட்சிக்கு விளக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சொல் எது`? “யாவே தினம்”
9. தங்களை மீட்க “மெசியா வருவார்" என்ற எதிர்நோக்கு இஸ்ரயேலின் அயல்நாட்டுச் சிறையிருப்பின்போது, வலுவடைந்த காலம் எது? கி.மு. 6-ம் நூற்றாண்டு
10. கால நிறைவில் கடவுளால் அனுப்பப்படுகின்ற ஓர் அரசரை எந்த சொல்லின் மூலம் பழைய ஏற்பாடு உணர்த்துகின்றது? “மெசியா”
11. மெசியா பெத்லகேமில் பிறப்பார் எனக் கூறிய இறைவாக்கினர் யார்? மீக்கா
12. "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், ................................................................ என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார். அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக்காலமாய் உள்ளதாகும்” (மீக்கா 5 : 2). **(இஸ்ரயேலை)**

www.malankaralibrary.com

13. வரவிருக்கும் மெசியா தாவீதின் குலத்திலிருந்து தான் வருவார் என முன்னுரைத்த இறைவாக்கினர்கள் யாவர்? எசாயா, எரேமியா
14. “ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து ………………………………………………….. ஒன்று துளிர்விடும்; அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும்” (எசாயா 11 : 1).(**துளிர்)**
15. “ஆண்டவர் கூறுவது, இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நான் ………………………………………………. ஒரு நீதியுள்ள "தளிர்” தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார்” (எரேமியா 23:5). **(தாவீதுக்கு)**
16. மெசியா ஒரு கன்னியிடமிருந்து பிறப்பார் என இறைவாக்குரைத்தவர் யார்? எசாயா
17. "இதோ, கருவுற்றிருக்கும் அந்த ……………………………………………………….. ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் எனப் பெயரிடுவார்” (எசாயா 7 : 14). (**இளம்பெண்)**
18. மெசியாவினுடைய வருகையின் காலம் நெருங்கி வந்துவிட்டது என முன்மொழிந்த இறைவாக்கினர் யார்? செக்கரியா
19. “மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் ………………………………………………………. உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றி வேந்தர்; எளிமையுள்ளவர்; கழுதையின்மேல், கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறி வருகிறார்” (செக்கரியா 9 : 9). **(அரசர்)**
20. யாக்கோபு தனது புதல்வர்களை ஆசீர்வதிக்கின்ற நேரத்தில் யூதாவிடம் எவ்வாறு ஆசி கூறினார்? “அரசுரிமை உடையவர் வரும்வரையில், மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில் யூதாவை விட்டுச் …………………………………………….. நீங்காது; அவர் மரபை விட்டுக் கொற்றம் மறையாது” (தொடக்க நூல் 49 : 10). (செங்கோல்)
21. மெசியாவைத் தாவீதின் குடும்பத்தில் தோன்றும் அருள்பொழிவு பெற்றவராகத் திருப்பாடல் நூலில் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது? திருப்பாடல் 89: 20 - 38
22. எசாயாவின் இறைவாக்குகளில் காணப்படும் “துன்புறும் ஊழியர்” (எசாயா 40- 50) யாரைக் குறிப்பிடுகிறது? மெசியா
23. ஆகாய் மற்றும் செக்கரியா ஆகியோரின் இறைவாக்குகளில் காணப்படும். “செருபாபேல்” என்னும் சொல்லாட்சி (ஆகாய் 2 : 23, செக்கரியா 4 : 6-10), யாரைக் குறிப்பிடுகிறது? மெசியா
24. தானியேலின் இறைவாக்குகளில் காணப்படும் “மானிடமகன்” என்னும் சிந்தனையும் (தானியேல் 8: 1527) யாரைக் குறிப்பிடுகிறது? மெசியா
25. இயேசு என்னும் தனிநபரை மெசியாவாக எவ்வாறு அழைத்தனர்? “இயேசு மெசியா”
26. பேதுரு எவ்வாறு இயேசுவை மெசியாவாக அறிக்கையிட்டார்? “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என பதிலளித்தார் (மத்தேயு 16 : 16)
27. “மெசியா” என்பதன் எபிரேய மொழிச் சொல் என்ன? “மெசியாஹ்”
28. மெசியா என்பதன் கிரேக்க மொழிச் சொல் என்ன? 'கிறிஸ்தோஸ்'
29. 'கிறிஸ்து' என்னும் சொல் எச்சொல்லிலிருந்து உருவெடுத்தது? கிறிஸ்தோஸ்
30. 'மெசியா' என்ற சொல்லும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்ட சொல் எது? ‘கிறிஸ்து'
31. இயேசு பிறந்த போது உரோமைப் பேரரசர் யார்? அகுஸ்து சீசர்

www.malankaralibrary.com

32. இயேசு பிறந்த போது சிரியா நாட்டில் ஆளுநராய் இருந்தவர் யார்? குரேனியு
33. “ஏரோது அரசரின் காலத்தில் யூதேயாவிலுள்ள ………………………………………………… இயேசு பிறந்தபோது கிழக்கு நாட்டிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்தனர்” (மத்தேயு 2: 1) (**<u>பெத்லகேமில்)</u>**
34. கி.பி. 116-ல் வெளியிட்ட ஆண்டுக் குறிப்பேட்டில் கிறிஸ்துவையும், கிறிஸ்தவர்களையும் பற்றி குறிப்பிட்டவர் யார்? கொர்னேலியுஸ் டாசிற்றஸ்
35. கொர்னேலியுஸ் டாசிற்றஸ் எவ்வாறு கிறிஸ்துவைப் பற்றி விளக்கினார்? "கிறிஸ்துவிலிருந்து தான் கிறிஸ்தவர்கள் தோன்றினர். கிறிஸ்துவோ டைபீரியஸ் என்னும் அரசரின் ஆட்சி காலத்தில் பொந்தியு பிலாத்து என்னும் ஆளுநரிடமிருந்து மரண தண்டனைக்கு ஆளானார். அத்துடன் அந்த இனத்தவர் (கிறிஸ்தவர்கள்) சிறிது காலம் அமைதியாயிருந்தனர். ஆனால் இப்போது யூதாவிலும், உரோமை நகரத்திலும் கூட அவர்கள் நிமிர்ந்து நிற்கின்றனர் (Annals, Books 15.Ch.44).
36. கிறிஸ்துவை புரட்சியாளராக குறிப்பிட்ட கி.பி. 120-ல் வாழ்ந்திருந்த வரலாற்று ஆசிரியர் யார்? சொற்றோணியஸ் டிரான் குலஸ்
37. சொற்றோணியஸ் டிரான் குலஸ் எவ்வாறு கிறிஸ்துவைப் பற்றி விளக்கினார்? கிறிஸ்தூஸ் என்னும் புரட்சியாளர் ஒருவரின் பெயரால் நகரில் கலவரம் ஏற்படுத்தியவர்களைக் குளோடியஸ் பேரரசர் நகரத்திலிருந்து வெளியேற்றினார்"
38. டிராஜன் பேரரசருக்கு அனுப்பிய கடிதத்தில் கிறிஸ்துவையும், கிறிஸ்தவர்களையும் குறித்து புகார் கூறிய பித்தீனியாவின் உரோமை ஆளுநர் யார்? இளையப்பிளீனி (Plinius Minor)
39. யூத குருவாயிருந்த ஜோசப் ப்ளவியஸ் எந்தெந்த நூல்களில் இயேசுவைக் குறித்து எழுதியுள்ளார்? “யூதப்போராட்டம்" “யூதர்களின் பழங்காலச் சிறப்பு”
40. யாருடைய பிறப்பு வரலாற்றை இரண்டாகப் பிரித்தது? இயேசு கிறிஸ்துவின்.
41. இயேசுவை மையமாகக் கொண்டு வரலாறு எவ்வாறு பிரிக்கப்பட்டது? கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின்
42. கிறிஸ்துவுக்குப் பின் என்பதைக் குறிப்பதற்கு மேற்கு நாட்டு மொழிகளில் பயன்படுத்தும் சொல் என்ன? Anno Domini
43. Anno Domini என்பதன் பொருள் என்ன? ஆண்டவரின் ஆண்டு”
44. Anno Domini என்ற இலத்தீன் சொற்களின் சுருக்கம் என்ன? A.D.
45. Anno Domini என்பது தமிழில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.)
46. கிறிஸ்துவுக்கு முன்பு உள்ள காலத்தை ஆங்கிலத்தில் எவ்வாறு எழுதுவர்? B.C. (Before Christ)
47. கிறிஸ்துவுக்கு முன்பு உள்ள காலத்தை இலத்தீன் மொழியில் எவ்வாறு எழுதுவர்? A.C. (Ante Christum)
48. கிறிஸ்துவுக்கு முன்பு உள்ள காலத்தை தமிழில் எவ்வாறு எழுதுவர்? கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.)
49. கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள காலக்கணக்கீட்டு முறையை ஏற்படுத்தியவர் யார்? கி.பி. 6-ம் நூற்றாண்டைய ஸ்கித்தீயாவில் பிறந்த இளைய டயனீசியஸ் (Dionysious Minor)
50. இயேசுவின் மனித உடலுக்குரிய இயல்புகள் யாவை? சோர்வு, நோய், பசி,
51. இயேசு கொண்டிருந்த மனித உணர்வுகள் யாவை? மகிழ்ச்சி, துக்கம், கோபம், சிலுவையில் துன்பம், மரணம்
52. உண்மையான மனிதரும் உண்மையான கடவுளுமானவர் யார்? இயேசு

www.malankaralibrary.com

53. “தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு **கடவுளாயும்** இருந்தது (யோவான் 1:1).

54. இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் முதல் நிகழ்வு என்ன? தூய ஆவியின் மூலமாக உண்டான கன்னியின் கருவுறுதல் (லூக்கா 1: 35)

55. இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் திருமுழுக்கு நிகழ்வு என்ன? என் அன்பார்ந்த மகன் நீயே” என இயேசுவின் திருமுழுக்கு நேரத்தில் தந்தைக் கடவுளின் பறைசாற்றுதல்

56. பணிவாழ்வின் போது இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் என்ன? அரும் செயல்களும், மரணத்தின் மீதும், இயற்கை சக்திகளின் மீதும் உள்ள இயேசுவின் அதிகாரம், இயேசுவின் தோற்றம் மாறுதல்

57. இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் பேதுருவின் அறிக்கை என்ன? "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்”

58. இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் தோமாவின் விசுவாச அறிக்கை என்ன? "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்"

59. இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் அவரது உயிர்ப்பு நிகழ்வுகள் என்ன? இயேசுவின் உயிர்த்தெழுதலும், அவரது காட்சிகளும், இயேசுவின் விண்ணேற்றமும்

60. மலங்கரை திருச்சபையின் கௌமா மன்றாட்டின் தொடக்கத்திலும், திருப்பலி தொடங்கும் போதும் சொல்லுகின்ற "இறைவா நீர் தூயவராகின்றீர்" என்னும் இறை புகழ்ச்சிப்பாடலில் இயேசுவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் சொற்கள் என்ன? கடவுளாகிய இயேசுவின் புனிதம், அவரது ஆற்றல் அல்லது வல்லமை, அவரது மரணமின்மை அல்லது நிலைவாழ்வு

61. "இறைவா நீர் தூயவராகின்றீர்" என்னும் இறை புகழ்ச்சிப்பாடலில் இயேசுவின் இறைத் தன்மையுடன் சேர்த்து மனிதத்தன்மையும் நினைவுகூரப்படுகிற சொற்கள் எவை? எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்

62. “உலகம் முழுவதும் நிறைந்திருக்கின்றவரான நீர் கருப்பையில் வாழ்ந்தீர். உலகப் படைப்பாளராகிய நீர் ……………………………………………….. தவழ்ந்து நடந்தீர். இறை வல்லமையால் அனைத்துப் படைப்புகளையும் காத்தருளுகின்ற நீர் ………………………………………………………… பால் குடித்தீர். இறை வல்லமையால் அனைத்தையும் ஆளுகின்ற நீர் கீழ்த்தரமான …………………………………………………………….. பிறந்தீர்” (**குழந்தையைப்போல், குழந்தையைப்போல், மாட்டுத்தொழுவத்தில்)**

63. இயேசு கிறிஸ்து மனிதரான இறைமகன், மெசியா, தந்தைக் கடவுளின் ஒரே மகனும், வார்த்தையுமான அரசர், மானிட மீட்பர், தந்தைக்கு இணையான கடவுள், மூவொரு கடவுளில் ஒருவர் எனக்குறிப்பிடும் திருப்பலியின் தொடக்க மன்றாட்டு என்ன? “இயல்பிலே இறப்பில்லாதவரும் …” எனத்தொடங்கும் செபம்

64. இயேசு என்னும் சொல்லின் பொருள் என்ன? மீட்பர்

65. “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்." யார் கூறியது ஆண்டவரின் தூதர்

66. இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணித்தபோது இயேசு உலக மீட்பரே என்ற உண்மையை சிமியோன் எவ்வாறு அறிக்கையிட்டார்? “மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன.”

67. மீட்பு என்னும் சொல்லுக்கு இணையான எபிரேய மொழிச் சொல் என்ன? "யஷ்”

www.malankaralibrary.com

68. எல்லாவிதமான தடைகளிலிருந்தும், கட்டுகளிலிருந்தும் விடுதலை அடையும் போது அடையக் கூடிய நிம்மதியையும், பாதுகாப்பையும் குறிப்பிடும் எபிரேயச்சொல் என்ன? “யஷ்”

69. போர்களிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும், மேலாதிக்கங்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் பகைவரிடமிருந்தும், வறுமையிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுதலை அடைவதைக் குறிக்க திருவிவிலியம் பயன்படுத்துகின்ற சொல் எது? "மீட்பு”

70. பழைய ஏற்பாட்டில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ள யாவே பற்றிய கருத்தியல்கள் யாவை? “யாவேதான் மக்களின் மீட்பர்”, “யாவே மீட்பளிக்கிறார்”

71. கடவுளின் மிகப்பெரும் மீட்புச் செயலாக இஸ்ரயேல் மக்கள் கருதுவது எது? எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது

72. மீட்பு யாரை மையப்படுத்தியதாக இருந்தது.? மெசியாவை

73. வருகைதருபவரான மெசியாவை அல்லது அரசரை இறைவாக்கினர்கள் யாராக முன்னறிவித்தனர்? மீட்பராக

74. எல்லா தீமைகள், கட்டுகளிலிருந்து விடுதலையும், அதன் மூலம் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, மகிழ்ச்சி, சமாதானம் என்பதற்குப் பழைய ஏற்பாடு கொண்டிருக்கும் சொல் எது? மீட்பு

75. மீட்பர், மீட்பு ஆகிய சொற்கள் எந்த கிரேக்கச் சொற்களிலிருந்து உருவெடுத்தன? சோத்தேர் (Soter) சோத்தேரிய (Soteria)

76. இயேசு கருதிய மீட்பு என்பது என்ன? மனிதனின் ஒட்டுமொத்த விடுதலை

77. ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு …………………………………………………….. செய்துள்ளார். ………………………………………………………… நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ………………………………………………………………. விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ……………………………………………………………. முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக்கா 4 : 18-19). **(அருள்பொழிவு, ஏழைகளுக்கு, ஒடுக்கப்பட்டோரை, ஆண்டினை)**

78. மனித குலம் அனைத்திற்கும் மீட்பர் யார்? இயேசு

79. "நான் யார்” என்று இயேசு கேட்ட வினாவிற்கு பேதுருவின் மறுமொழி என்ன? “நீர் மெசியா; வாழும் கடவுளின் மகன்”

80. “இனி ………………………………………………....…... நானல்ல; கிறிஸ்துவே ………………………………………………… வாழ்கிறார்” (**வாழ்பவன், என்னுள்)**

## பாடம் 4

## **தூய கன்னிமரியா**

பயிற்சி வினாக்கள்

1. நற்செய்திகளில் தூய மரியன்னைக்கு அளித்திருக்கும் முக்கியத்துவம் குறித்து விளக்குக?

### **நற்செய்திகளில் மரியா**

மரியாவை குறித்து நற்செய்தி நூல்களில் ஒன்பது தருணங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மங்கள வார்த்தை , எலிசபெத்தைச் சந்தித்தல், இயேசு பிறப்பு, இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல், எருசலேம் கோயிலில் இயேசுவை கண்டடைந்தது, கானாவூர் திருமணம், இயேசுவின் பணிவாழ்வின் போது இரண்டு சூழல்கள், (லூக்கா 11 : 27-28, மாற்கு 3 : 31- 36) இயேசு கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டது போன்றவை. இவைதவிர திருத்தூதர் பணிகள் நூலிலும், (1 : 4),

www.malankaralibrary.com

பவுலடியாரின் திருமுகத்திலும் (கலாத்தியர் 4 : 4), திருவெளிப்பாடு நூலிலும் (12 :1-6), மரியாவைக் குறித்து நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்புரைகள் உள்ளன.

**மங்கள வார்த்தை அறிவித்தல் (லூக்கா 1: 26-36]**

பணி ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கும், அதைச் செயல்படுத்துவதற்கும் தம்மைத்தாமே கையளிக்கின்ற உண்மைத்தன்மையுள்ள கன்னிப்பெண் ஒருவரையே நாம் இங்கே கண்டறிகிறோம். சுதந்திரமாகவும், பொறுப்புணர்வோடும் முடிவெடுக்கும் ஓர் இளம்பெண்தான் மரியா. இல்லற வாழ்க்கையில் ஈடுபடுமுன் கருத்தரிக்கக்கூடிய பெண் ஒருவர் எதிர்கொள்ள வேண்டிய விளைவுகள் என்னென்ன என்பவற்றை மரியா நன்கு அறிந்திருந்தார். எனினும் தூதுரைத்த கபரியேல் தூதரிடம் சந்தேகத்திற்கான தெளிவைத் தேடினார். 'உன்னதரான கடவுளின் திட்டம் இது' என அறிந்துகொண்ட மரியா அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கான மனவுறுதியை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டு, நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:38) எனக்கூறித் தம்மைக் கடவுளுக்கே கையளித்தார்.

**எலிசபெத்தைச் சந்திக்கின்ற மரியா (லூக்கா 1:39-55)**

வானதூதர் மரியாவுக்குக் காட்டுகின்ற ஓர் அடையாளம்தான் வயது முதிர்ந்தவரான எலிசபெத்து கருத்தரிக்கும் நிகழ்வு. அந்த அற்புதத்தை நேர் நேராக காண்பதற்கும், கடவுள் தனக்குச்செய்த அரும்பெரும் செயல்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கும் மரியா நாசரேத்திலிருந்து விரைந்து சென்று எலிசபெத்தைச் சந்தித்தார். இருவரும் சொற்களால் விளக்கமுடியாத அளவுக்குப் பெண்மையின் அனுபவ ஞானத்தால் நிறைந்தனர். அதாவது இருவரும் தாய்மை அடையப்போகும் பெருமகிழ்ச்சியில் திளைத்தனர். மரியாவை ஆண்டவரின் தாய்" என முதன்முதலாக அழைத்தது எலிசபெத்து ஆவார். மனிதர்கள் வாழ்க்கையில் எவ்விதத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகின்றனர் என இந்நிகழ்ச்சியிலிருந்து நமக்குப் புரிந்து கொள்ளலாம். கடவுள் அருளிச்செய்தவற்றை விசுவசித்ததனால் மரியா பேறுபெற்றவர் ஆனார். தூய ஆவியால் நிறையப்பெற்ற மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது அவரும் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். இந்த பின்னணியில்தான் மரியா தனது புகழ்ச்சிப்பாடலைப் (Magnificat) (லூக்கா 1: 46-55) பாடினார்.

**இயேசுவின் பிறப்பு (லூக்கா 2 : 12, மத்தேயு 2 : 13-14)**

தாவீதின் வழிமரபினரான யோசேப்பு, தம் பெயரை பதிவு செய்வதற்காக கருவுற்றிருந்த மரியாவுடன் பெத்லகேமுக்குச் சென்றார். அங்கே மரியா இயேசுவைப் பெற்றெடுத்தார். உடல் வருத்தமும், பயணக்களைப்பும், குழந்தையை ஈன்றெடுக்க விடுதியில் இடம் கிடைக்காததுமான அனைத்து இடையூறுகளையும் இறைநம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள அவருக்கு முடிந்தது. இடையர்களும், ஞானிகளும் குழந்தை இயேசுவை வந்து சந்தித்ததையெல்லாம் மரியா தம் உள்ளத்தில் இருத்திசிந்தித்து வந்தார்.

**கோவிலில் சிறுவன் இயேசு (லூக்கா 2: 25-35)**

மானிடப் பிறவியெடுத்த இயேசுவை அவரது பெற்றோர் கோவிலில் அர்ப்பணித்தனர். சிமியோன் இயேசுவைக்குறித்து கூறியவற்றைக் கேட்டு தாயும், தந்தையும் மகிழ்ச்சி கொண்டனர். “உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” (லூக்கா 2 : 35) என இறைவாக்குரைத்ததன்வாயிலாக மரியா தன் எதிர்கால வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டிய சிலுவைத் துன்பங்களைக்குறித்தும் சிமியோன் குறிப்பிட்டுள்ளார்.

**ஆலயத்தில் சிறுவன் இயேசு (லூக்கா 2 : 41-49)**

பாஸ்கா விழாவிற்காக பெற்றோருடன் இயேசுவும் எருசலேமிற்குச் சென்றிருந்தார். விழா முடிந்து திரும்பிச்சென்றபோது இயேசு அவர்களுடன் செல்லவில்லை என்பதை யோசேப்பும், மரியாவும் ஒருநாள் பயணத்திற்குப்பிறகே

www.malankaralibrary.com

அறிந்துகொண்டனர். அவர்கள் மீண்டும் எருசலேமில் தேடி வந்த போது இயேசு கோவிலில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்களுடன் உரையாடலில் ஈடுபட்டிருந்ததைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? (லூக்கா 2 : 49) எனக்கூறி இயேசு அவர்களை இறைநம்பிக்கையில் வளர்ச்சி அடைய செய்தார்.

**" கானாவில் திருமணம் (யோவான் 2 : 1-11]**

திருமண விருந்தில் திராட்சை இரசம் தீர்ந்துபோனபோது, திருமண வீட்டாரின் கலக்கமுற்ற நிலையைக்கண்டு அவர்களுக்கு உதவி செய்ய ஈடுபடுகின்ற இரக்கமுள்ள ஓர் அன்னையைத்தான் தூய மரியாவில் நாம் காண்கிறோம். தமது மாட்சியை வெளிப்படுத்துகின்ற முதல் அரும் அடையாளத்தை இயேசு இத்திருமணத்தின்போது நிகழ்த்தினார். பிற மனிதர்களின் துக்கங்களிலும், துன்பங்களிலும் பங்கேற்கின்ற ஒருவர்தான் மரியா. பிறரது தேவைகளை உணர்ந்துகொள்ளவும் அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளவும் செய்கின்ற நல்ல ஓர் அன்னையைத் தூய மரியாவிடம் நாம் காணமுடியும்.

**சிலுவை அருகில் மரியா (யோவான் 19 : 25-27)**

இயேசுவின் சிலுவைப் பயணத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை மரியா இயேசுவைப் பின் தொடர்ந்தார். “உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்று சிமியோன் இறைவாக்குரைத்ததும் இவ்விதம் நிறைவேறியது. சிலுவையில் கிடந்தவாறே தம் தாயுடன், "அம்மா, இவரே உம் மகன்" எனவும், தான் அன்பு செய்தச் சீடரிடம் “இவரே உம் தாய்” (யோவான் 19 : 26-27) எனவும் கூறிக்கொண்டு தம்மிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவருடையவும் தாயாக மரியாவை இயேசு ஒப்படைத்தார்.

**இயேசுவின் பணி வாழ்வில் (மாற்கு 3 : 31-35)**

தம்மை காண்பதற்காக தாயும் சகோதரர்களும் வந்து நிற்கின்றனரென்று இயேசுவிடம் அறிவித்தபோது "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார்” (மாற்கு 3 : 31-35) என இயேசு தெளிவுபடுத்துகிறார். இரத்த உறவுகளுக்கு அப்பாற்பட்டு இறைநம்பிக்கையிலுள்ள உறவுதான் ஒருவரை இயேசுவுக்கு ஏற்புடையவராக்கும் உறவு. மரியா இயேசுவுக்குப் பிறப்பளிக்கவும், வளர்க்கவும் செய்ததனால் பேறுபெற்றவர் ஆனார் என்பதையும் அத்துடன் அவர் இறைவார்த்தைகளைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்ததனால் மிகப்பெரும் பேறு பெற்றவர் ஆனார் என்பதையும் இயேசு தமது தாயைக்குறித்து சான்று பகர்ந்தார்.

2. மரியா இறை அன்னை என்பதை தெளிவுப்படுத்துக?

**இறை அன்னையாகிய மரியா**

உலக மீட்பரான இயேசுவின் தாய் இறை அன்னையே என்ற நம்பிக்கை அந்தியோக்கியன் சபையில் தொடக்ககாலம் முதலே பிரபலமடைந்திருந்தது. கிரேக்க மொழியில் Theotokos' எனக் கூறப்படும் சொல்லை சுறியானி மொழியில் "யொல்தாஸ் ஆலோஹோ ” எனவும் ஆங்கில மொழியில் Mother of God எனவும் மொழி பெயர்க்கலாம். இதற்கு இணையான இறையன்னை' என்னும் சொல்லை தமிழில் பயன்படுத்துகிறோம். "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்” (லூக்கா 1: 43) என்ற எலிசபெத்தின் அறிக்கையிலேயே, மரியா இறை அன்னைதான் என்னும் நம்பிக்கை விவிலியத்தில் மறைவாயிருப்பதை உணரலாம்.

கடவுளும் மனிதருமான இயேசுகிறிஸ்துவைப்பற்றிய ஆழ்ந்த படிப்பு வளர்ச்சியடைந்ததற்கேற்ப, மரியன்னையைப்பற்றிய ஆய்வும், திருச்சபையின் தொடக்க காலம் முதலே வளர்ந்துவந்தது. இது திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையிலும், நிசேயா நம்பிக்கை அறிக்கையிலும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

www.malankaralibrary.com

இயேசுவின் மனிதப் பிறவியைக்குறித்துச் சொல்லும்போது "தூய ஆவியால் கன்னிமரியாவிடம் உடலெடுத்து மனிதரானார்" என்றே அறிக்கையிடுகிறோம். இதிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு முதலே மரியா இறை அன்னைதான் என்ற உணர்வு கிறிஸ்தவர்களிடையே இருந்து வந்தது என அறிந்துகொள்ளலாம். தாமாக இருப்பவரும், காலங்களுக்கு அப்பாற்பட்டவருமான கடவுளின் தோற்றத்தைக்குறித்து ஒரு வரையறை கூறுவது அல்ல இதன் நோக்கம்.

மாறாக, மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளான மகனாகிய கடவுள் மனித மீட்புக்காக மனிதப் பிறவியெடுத்தபோது மரியா என்ற மனித பெண்ணிடமிருந்து நிறைவான மனிதத்தன்மை பெற்றார் என்ற நம்பிக்கையைத்தான் இறை அன்னை என்று அழைப்பதன் மூலம் நாம் அறிக்கையிடுகிறோம். தொடக்கமும், முடிவுமில்லாத கடவுள் மனிதக் குழந்தையாக மாறுவதற்குத் திருவுள்ளம் கொண்ட போது, மரியா அவரை ஒன்பது மாதம் வயிற்றில் தாங்கிக்கொண்டு உடலியல்போடு பிறவியை அளிக்கவும், சொந்த மகனாக வளர்க்கவும் செய்தார். இறை அன்னை என்று மரியாவை அழைக்கும் போது கிறிஸ்தவர்கள் பொருள் கொள்ளவேண்டியது இதுவே. கி.பி. 431-ல் எபேசுத் திருச்சங்கம் இந்த உண்மையை அறிக்கையிடவும் செய்தது.

ஆண் உறவில்லாமல் தூய ஆவியின் ஆற்றலினாலேயே மரியா இயேசுவைக் கருத்தரித்தார் என்பது நற்செய்திகளில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது (மத்தேயு 1: 8-25). கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், கடவுளின் தாயாக வாய்ப்புப் பெற்றவருமான மரியா அற்புதக் குழந்தைக்குத் தனது கன்னித் தன்மையிலேயே பிறவியை அளித்தார் எனவும், இத்தகைய உன்னத மகிமைக்குக் காரணமானவரான மரியா வாழ்நாளின் இறுதிவரை கன்னியாகவே வாழ்ந்தார் எனவும், ஆதிகாலம் முதல் கிறிஸ்தவர்கள் நம்பியிருந்தனர். இவ்வாறு மரியா நித்திய கன்னியாயிருந்தார் (Perpetual Virginity) என்ற நம்பிக்கை சபையில் வளர்ந்துவந்தது.

இறை அன்னை என்ற வாய்ப்புப் பெறுவதற்கு மரியா தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறித்து சிந்தித்தத் திருச்சபைத் தந்தையர்கள், தொடக்க காலம் முதலே இறை அன்னை ஆவதற்கு கடவுளால் நிச்சயிக்கப்பட்டவராயிருந்தார் எனவும், கடவுள் வந்து வசிக்கவும், கடவுளுக்கு மனித உடலைக் கொடையாக அளிக்கவும், வேண்டியவருமாகையால் பாவக்கறைகளிலிருந்தும், தொடக்க நிலை பாவத்திலிருந்தும் (Original Sin) கடவுள் அவரை பாதுகாத்துவந்தார் எனவும் நம்பிக்கை கொண்டனர். இதனை ஒரு விசுவாச உண்மையாக 1854 டிசம்பர் 8-ஆம் நாள் Iineffabilis Deus என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை" என்பதன் வாயிலாக பாப்பரசர் 9-ஆம் பத்திநாதர் அறிவித்தார்.

புனிதையும், தூயவரும், இறை அன்னையுமான மரியா இவ்வுலக வாழ்வுக்குப்பின் விண்ணேற்பு அடைந்தார் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. இறைமகனுக்கு வசிப்பதற்கு ஏற்றதான ஆலயமாயிருக்கவும், இறைவார்த்தைக்குச் செவிமடுக்கவும், அதற்கேற்றபடி வாழவும் செய்ததனால் பேறுபெற்றவரான மரியா விண்ணகத்திற்கு உடலுடன் எடுக்கப்பட்டார் என்ற உண்மையை ஒரு விசுவாச உண்மையாக 1950 நவம்பர் 1-ஆம் நாள் Munificentissimus Deus என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை வாயிலாக திருத்தந்தை 12 -ஆம் பத்திநாதர் அறிவித்தார்இந்த விசுவாச . மலங்கரை சபை கொண்டாடி (சூனோயோ) உண்மையை விண்ணேற்பு திருநாளாக .வருகிறது

3. மலங்கரை சபையில் தூய மரியா பக்தி' விளக்குக?

கிறிஸ்தவ மதத்தின் தொடக்க காலம் முதல் இந்நாள்வரை அதிகக் கவனத்துடன் படிக்கப்படவும், தியானிக்கப்படவும் செய்திருக்கக்கூடிய ஒருவர்தான் தூய கன்னிமரியா மரியாவைக்குறித்து நமது விசுவாச உண்மையை .'இறை அன்னையாகிய தூய கன்னிமரியா' என்னும் சிறப்புப்பெயர் வழியாகவே வெளிப்படுத்துகிறோம்இயேசு கிறிஸ்துவை மீட்பராக இதயத்தில் இருத்தவும் ., வாயால் அறிக்கையிடவும் செய்கின்ற அனைவருடையவும் அன்னைதான் தூய மரியாசிலுவையில் இறக்கும் நேரத்தில் மீட்பராகிய இயேசு தமது தாய் மரியாவை . அன்பு சீடரிடம் ஒப்படைத்தாரல்லவா? தூய மரியாவோடு உள்ள அன்பை ஆராதனை

www.malankaralibrary.com

வாயிலாகவும், பக்தி முயற்சிகள் வாயிலாகவும், மலங்கரை சபை வெளிப்படுத்துகின்றது.

அருள் நிறைந்த மரியே" என்ற செபம் எல்லா திருச்சடங்குகளிலும் தொடக்க செபமாக சொல்லும்போது மரியாள் பக்தியையும், அவருடைய பரிந்துரையிலுள்ள விசுவாசத்தையும் மலங்கரை சபை வெளிப்படுத்துகிறதுஅருள் நிறைந்தவரும் ., ஆண்டவரை உடன் கொண்டிருப்பவரும், ஆசீர்வதிக்கப்பட்டவரும், மனித இனத்திற்கு அருள் கொடையான உலக மீட்பருக்குப் பிறவியை அளித்தவருமாக திருவாக்குகளில் நாம் காணும் தூய மரியா, பாவிகளான நமக்காக எப்போதும் பரிந்துரையாளராகவே இருக்கிறார் என்ற நம்பிக்கைதான் இந்தச் செபத்தில் மறைந்திருக்கிறது.

அருளடையாளங்களின் அருளடையாளமான திருப்பலியில் மரியாவை நினைவுகூர்ந்து, மீட்புத் திட்டத்தில் அவர் ஏற்றுக்கொண்ட பங்களிப்பு குறித்து தியானிக்கிறோம்பலிப்பொருட்களின் சமர்ப்பணம் முதல் திருப்பலி அர்ப்பணம் . முடிந்து நடத்தப்படுகின்ற புகழ்ச்சி மன்றாட்டுவரை மரியன்னையை இவ்வளவுக்கு அதிகமாக நினைவு கூருகின்ற வேறெந்த ஆராதனை முறையும் இருக்காது என்றே கூற முடியும்.

திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கு தொடங்குவதே, "ஆண்டவரே உம்மை ஈன்றெடுத்த மரியாவும்... எங்களுக்காக உம்மை மன்றாடுவர்" என பறைசாற்றிக்கொண்டேயாகும். நற்கருணை பெற்றுக் கொள்ளுமுன் மீண்டும் மரியன்னையை நினைவுகூரவும் “நின்றாள் மாண்புடன் அரச மகள் ...” (குக்கிலியோன்) என்னும் பாடல் வழியாக அவரது பரிந்துரையை நாம் வேண்டிக் கொள்ளவும் செய்கிறோம்.

வேளை செபங்களில், மீட்புச்செயல்களை நினைவுகூர்வதுடன், இறை அன்னையையும் சிறப்பான முறையில் நாம் நினைவுகூரவும் செய்கிறோம். புதன்கிழமை நடத்தப்படும் செபங்களை மரியாவைக்குறித்துள்ள தியானமாக நாம் கருதலாம். எல்லா நாட்களிலுமுள்ள இரவு மன்றாட்டின் முதல் கௌமா, அன்னை மரியாவை நினைவு கூர்வதாகும். அன்னை மரியா நமக்காக பரிந்துரைக்கிறார் என்னும் நம்பிக்கை நமது செபங்களில் மிகவும் வலுவடைந்து காணப்படுகிறது. மீட்பராகிய மெசியாவின் மனிதப்பிறவியைக்குறித்து கபிரியேல் தூதரிடமிருந்து மரியாவிற்கு அறிவிப்பு கிடைத்தது புதன்கிழமையே என்று நம்புவதால் கிழக்கத்திய சபைகளின் மரபுப்படி புதன்கிழமைகளில் அன்னை மரியாவைச் சிறப்பாக நினைவுகூருகின்றோம்.

திருவழிபாட்டு முறையின் ஆண்டு திட்டத்திலேயே மரியன்னைக்கு மேன்மைதரும் வகையில் திருநாட்களும், நோன்புகளும், நினைவுநாட்களும் வரிசைபடுத்தப்பட்டுள்ளன. மார்ச் 25-ல் மங்கள வார்த்தைத் திருநாளும், செப்டம்பர் 8-ல் தூய மரியாவின் பிறப்புத் திருநாளும், ஆகஸ்டு 15-ல் விண்ணேற்புத் திருநாளும் நாம் கொண்டாடுகிறோம். இவை தவிர நவம்பர் 21-ல் இறை அன்னையின் ஆலய அர்ப்பணித்தலும், டிசம்பர் 26-ல் அன்னையின் புகழ்ச்சியின் திருநாளும், ஜனவரி 15-ல் விதைகளின் பொருட்டு அன்னையின் நினைவும், மேய் 15-ல் கதிர்களின் பொருட்டு அன்னையின் நினைவும் கொண்டாடப்பட்டு இறையன்னையை வணங்குகிறோம்.

அன்னையின் பிறப்புத் திருநாளுக்கு ஆயத்தமாக எட்டு நோன்பும், விண்ணேற்புத் திருநாளுக்கு ஆயத்தமாக பதினைந்து நோன்பும் அனுசரிப்பதன் மூலம் அவரது மேன்மையைத் திருச்சபை தியானிக்கவும் செய்கிறது. மங்கள வார்த்தையின்போது "நான் ஆண்டவரின் அடிமை" எனக்கூறிக்கொண்டு முன்வைத்த சமர்ப்பணமும், தொடர்ந்து கல்வாரிவரை தனது திருமகனை பின்தொடர்ந்து சென்றதும் மரியாவின் விசுவாச வளர்ச்சிக்கான எடுத்துக்காட்டுகளாகும். இறைஅன்னை என்ற உயர்வுநிலை இணையற்றதே எனினும் இறைவார்த்தைக்குச் செவிமடுத்து அதற்கேற்றபடி செயல்படவும் செய்ததனால் தூய மரியா மிகுந்த பேறுடையவரே.

குறு வினா விடைகள்

www.malankaralibrary.com

1. “மனித குலத்தின் மேலுள்ள அன்பின் காரணமாக **<u>கடவுள்</u>** தம் ஒரே மகனை **<u>மண்ணுலகிற்கு</u>** அனுப்பினார்”
2. “இதோ, நான் ஆண்டவரின் அடிமை" யார் யாரிடம் கூறியது? தூய மரியா ஆண்டவரின் தூதரிடம்
3. நற்செய்தி நூல்களில் மரியாவோடு தொடர்பு கொண்ட எத்தனை நிகழ்வுகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன? ஒன்பது
4. மரியாவைக் குறித்து மறைமுகமாக குறிப்புரை கொண்ட திருத்தூதர் பணிகள் நூலின் பகுதி எது? 1 : 4
5. மரியாவைக் குறித்து மறைமுகமாக குறிப்புரை கொண்ட பவுலடியாரின் திருமுக நூலின் பகுதி எது? கலாத்தியர் 4 : 4
6. மரியாவைக் குறித்து மறைமுகமாக திருவெளிப்பாடு நூல் சுட்டும் பகுதி எது? திருவெளிப்பாடு 12 :1-6
7. மரியாவிடம் மங்கள வார்த்தை அறிவித்த விவிலியப் பகுதி எங்குள்ளது? லூக்கா 1: 26-36
8. மரியா எலிசபெத்தைச் சந்தித்த விவிலியப் பகுதி எங்குள்ளது? லூக்கா 1:39-55
9. மரியாவை ஆண்டவரின் தாய்” என முதன்முதலாக அழைத்தவர் யார்? எலிசபெத்து
10. மரியாவின் புகழ்ச்சிப்பாடல் விவிலியப் பகுதி எங்குள்ளது? (லூக்கா 1: 46-55)
11. மரியாவின் புகழ்ச்சிப்பாடலுக்கு இலத்தீன் மொழிச் சொல் என்ன? மாஞ்ஞீபிக்காத்து (Magnificat)
12. தாவீதின் வழிமரபினரான யோசேப்பு, தம் பெயரை பதிவு செய்வதற்காக கருவுற்றிருந்த மரியாவுடன் எவ்வூருக்குச் சென்றார்? பெத்லகேம்
13. இயேசுவை அவரது பெற்றோர் கோவிலில் அர்ப்பணித்த போது சிமியோன் மரியாவிடம் கூறியது என்ன? “உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்”
14. “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? யார் யாரிடம் கூறியது இயேசு தன் பெற்றோரிடம்
15. கானாவில் திருமண நிகழ்வு காணப்படும் விவிலியப் பகுதி எங்குள்ளது? யோவான் 2 : 1-11
16. "அம்மா, இவரே உம் மகன்" யார் யாரிடம் கூறியது? இயேசு மரியாவிடம்
17. “இவரே உம் தாய்” யார் யாரிடம் கூறியது? இயேசு திருத்தூதர் யோவானிடம்
18. "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார்” யார் யாரிடம் கூறியது? இயேசு திருத்தூதர்களிடம்
19. இறை அன்னை என்பதன் கிரேக்க மொழிச் சொல் என்ன? Theotokos'
20. இறை அன்னை என்பதன் சுறியானி மொழிச் சொல் என்ன? "யொல்தாஸ் ஆலோஹோ ”
21. இறை அன்னை என்பதன் ஆங்கில மொழிச் சொல் என்ன? Mother of God
22. "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்” (லூக்கா 1: 43) என யார் யாரிடம் கூறியது? எலிசபெத்து மரியாவிடம்
23. மரியா இறை அன்னைதான் என்ற உணர்வு கிறிஸ்தவர்களிடையே எக்காலம் முதல் துவங்கியது? கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல்
24. மரியாவை இறை அன்னை என்று அறிக்கை வெளியிட்ட திருச்சங்கம் எது? கி.பி. 431-ல் எபேசுத் திருச்சங்கம்

www.malankaralibrary.com

25. மரியாள் தொடக்க நிலை பாவத்திலிருந்து (Original Sin) கடவுள் அவரை பாதுகாத்துவந்தார் என்ற விசுவாச உண்மை எப்போது வெளியிடப்பட்டது? 1854 டிசம்பர் 8-ஆம் நாள்
26. மரியாள் தொடக்க நிலை பாவத்திலிருந்து (Original Sin) விடுபட்டவள் என்பதை வெளியிட்ட திருத்தூதுவ மடல் எது? Iineffabilis Deus என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை”
27. மரியாள் தொடக்க நிலை பாவத்திலிருந்து (Original Sin) விடுபட்டவள் என்பதை வெளியிட்ட திருத்தந்தை யார்? பாப்பரசர் 9-ஆம் பத்திநாதர்
28. மரியா விண்ணகத்திற்கு உடலுடன் எடுக்கப்பட்டார் என்ற உண்மையை ஒரு விசுவாச உண்மையாக எப்போது வெளியிடப்பட்டது? 1950 நவம்பர் 1-ஆம் நாள்
29. மரியா விண்ணகத்திற்கு உடலுடன் எடுக்கப்பட்டார் என்ற உண்மையை வெளியிட்ட திருத்தூதுவ மடல் எது? Munificentissimus Deus என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை
30. மரியா விண்ணகத்திற்கு உடலுடன் எடுக்கப்பட்டார் என்ற உண்மையை வெளியிட்ட திருத்தந்தை யார்? திருத்தந்தை 12 -ஆம் பத்திநாதர்
31. விண்ணேற்பு திருநாளை மலங்கரை சபை எப்பெயரில் கொண்டாடி வருகிறது? சூனோயோ
32. வேளைச் செபங்களில் திருச்சபை எந்நாளில் மரியாவை சிறப்பாக நினைவு கூர்கின்றது? புதன்கிழமை
33. மெசியாவின் பிறப்பைக் குறித்து கபிரியேல் தூதரிடமிருந்து மரியாவிற்கு அறிவிப்பு கிடைத்தது எந்நாளாக கிழக்குத் திருச்சபைகளின் மரபு நம்புகிறது? புதன்கிழமை
34. திருவழிபாட்டு முறையின் ஆண்டு வட்டத்தில் மரியன்னைக்கு மேன்மைதரும் வகையில் உள்ள திருநாட்களும், நினைவுநாட்களும் யாவை? மார்ச் 25-ல் மங்கள வார்த்தைத் திருநாளும், செப்டம்பர் 8-ல் தூய மரியாவின் பிறப்புத் திருநாளும், ஆகஸ்டு 15-ல் விண்ணேற்புத் திருநாளும் நவம்பர் 21-ல் இறை அன்னையின் ஆலய அர்ப்பணித்தலும், டிசம்பர் 26-ல் அன்னையின் புகழ்ச்சியின் திருநாளும், ஜனவரி 15-ல் விதைகளின் பொருட்டு அன்னையின் நினைவும், மேய் 15-ல் கதிர்களின் பொருட்டு அன்னையின் நினைவும்
35. மரியாவின் நினைவாக கடைபிடிக்கப்படும் நோன்புகள் யாவை? அன்னையின் பிறப்புத் திருநாளுக்கு ஆயத்தமாக எட்டு நோன்பும், விண்ணேற்புத் திருநாளுக்கு ஆயத்தமாக பதினைந்து நோன்பும்
36. பழைய ஏற்பாட்டு காலத்தில் மறைவானவராயிருந்த இறைமகன் மரியாவிடம் வந்து வசித்தார் என்பதை உணர்த்துகின்ற அடையாளங்கள் யாவை? வாக்குத்தத்தத்தின் (வாக்குறுதியின்) பேழை, இரண்டாம் விண்ணகம், விண்ணகத்தேர், ஒளிர்கின்ற அரண்மனை, புனிதமான ஆலயம், புதிய ஊற்று, சீனாய் மலையின் மேகம்
37. வாக்குத்தத்த பேழையில் கடவுளின் பிரசன்னத்தைக் காட்சியுற்ற தாவீது அரசர் நடனமாடியது எதனுடன் ஒப்புமைப்படுத்தப்படுகிறது? இயேசுவை வயிற்றில் தாங்கிக்கொண்ட மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது அவரது வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிய நிகழ்வு
38. மரியன்னையின் நிரந்தரக் கன்னித் தன்மையைப் பற்றிக் குறிப்பிடும் போது அடையாளங்கள் யாவை? அடைக்கப்பட்ட வாசல், முத்திரை செய்யப்பட்ட அறிக்கை, பயன்படுத்தப்படாத நிலம், கழித்து விடப்படாத திராட்சைக்கொடி, நீர் வேட்கை கொண்ட நிலம், கிதியோன் கண்ட கம்பளமும், பனி நீரும், எரிந்தும் தீர்ந்து போகாத முட்புதர்
39. “புதிய ஏவாள்” எனவும் "இரண்டாம் ஏவாள்" எனவும் அழைக்கப்படுபவள் யார்? தூய மரியா.

www.malankaralibrary.com

40. “நான் ஆண்டவரின் அடிமை; உம் **சொற்படியே** எனக்கு நிகழட்டும்”
41. “எல்லா தலைமுறையினரும் என்னைப் **பேறுபெற்றவர்** என்பர்”
42. ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் **அடிமையின்** தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக்கா 1: 46-48).

## பாடம் 5

## திருப்பலியின் ஆயத்தத்திருச்சடங்கு

பயிற்சி வினாக்கள்

1. திருப்பலியின் ஆயத்தத் திருச்சடங்கு குறித்து விளக்குக?

மலங்கரைத் திருப்பலி முறையின் முதல் பகுதியான ஆயத்தத் திருச்சடங்கு 'தூயோபோ' என சுறியானியில் அழைக்கப்படுகிறது. திருப்பலியின் தொடக்கம் முதல் பகிரங்க திருச்சடங்கு தொடக்கம் வரையிலான பகுதிகள் ஆயத்தத் திருச்சடங்கில் அடங்கும்.

மலங்கரை திருச்சபையின் திருப்பலி வேளைமன்றாட்டுடன் ஆரம்பமாகும். வேளை மன்றாட்டுத் தொடங்குவதற்கு முன் பீடச்சிறுவர் தூயகத்தினுள்ளே சென்று பலிபீடத்தின் மையப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் சிலுவையின் முன்னிருக்கும் மெழுகுவர்த்தியை எரியச் செய்கின்றனர். இந்தச் சடங்கின் வாயிலாக “ஒளி தோன்றுக” (தொடக்கநூல் 1:3) எனக்கூறி கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்கத் தொடங்கியது நினைவுகூரப்படுகிறது. தொடர்ந்து திரை அகற்றப்படுகிறது. திரையால் தூயகத்தை மறைப்பதற்கு மிகுந்த பொருள் உண்டு. தூயகம் (மத்பஹா) விண்ணுலகினுடையவும், ஆராதனையின் பகுதி இறைமக்கள் நிற்கும் பகுதி (ஹைக்கலா) மண்ணுலகினுடையவும் அடையாளங்களாகும். விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் இடையேயான உறவைக் குறிக்கும் அடையாளம் தான் திரை. வேளைமன்றாட்டின் தொடக்கத்தில் மெழுகுவர்த்தி எரியவிட்டு திரை அகற்றப்படுவதன் மூலம் பிரபஞ்சப்படைப்பின் வாயிலாக கடவுள் தம்மை சுயமாக வெளிப்படுத்துவதையும் வானகம் திறக்கப்படுவதையும் உணர்த்துகிறது. இவ்விதமாக படைப்புச் செயலையும், தொடர்ந்துள்ள கடவுளின் பராமரிப்பையும் நினைவுகூர்ந்து கொண்டே வேளைமன்றாட்டின் வழியாக இறைமக்கள் கடவுளோடு உறவாடுகின்றனர்.

வேளைமன்றாட்டு நடைபெறும் நேரத்தில் குருவானவர் கறுப்பு நிற மேலங்கி அணிந்திருக்கிறார். பாவத்திற்கு மனமுவந்து வருந்தும்படி இறை மக்களைத் தூண்டுகின்ற ஒரு அடையாளமாக கறுப்பு நிற அங்கியைக் குறிப்பிடலாம். திருச்சடங்குகளின் போது குருவானவர் அணிவதற்காக திருச்சபையால் நிச்சயிக்கப்பட்ட ஆடை தான் கறுப்புநிற அங்கி.

வேளை மன்றாட்டுக்குப் பின் குருவானவர் தூயகத்துக்குள் சென்று இறைமக்கள் சமூகத்தோடு தனக்காக மன்றாடும் படி வேண்டிக்கொள்கிறார். உடனே திரையிடப்படுகிறது.

குருவானவரின் தூயகம் பிரவேசிக்கும் நிகழ்வு இஸ்ரயேல் மக்களுக்காக கடவுளின் கட்டளைகள் பெறுவதற்குக் கடவுளின் பிரசன்னத்தால் மாட்சிமை நிறைந்திருக்கும் சீனாய் மலை மீது மோசே ஏறிச் சென்றதை நினைவூட்டுகிறது . மேலும், குருத்துவப் பணியாற்றி வந்த செக்கரியா தூபம் காட்டுவதற்காக ஆலயத்தின் அதித்தூயகத்திற்குள் பிரவேசிப்பதையும் நினைவுபடுத்துகிறது.

குருவானவர் தூயகத்திற்குள் செல்லும்போது திரையிடப்படுவது, இது ஆதிபெற்றோர்களின் பாவத்தையும், தொடர்ந்து வருகின்ற பழைய ஏற்பாட்டுக் காலகட்டத்தையும் குறிப்பிடுவதைக் காட்டுகிறதுஆதிமனிதரின் பாவம் காரணமாக . விண்ணுலகுக்கும், மண்ணுலகுக்கும் இடையேயான உறவு துண்டிக்கப்பட்டதுஅதன் .

www.malankaralibrary.com

காரணமாக கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையேயும், வானத்தூதர்களுக்கும், மனிதனுக்குமிடையேயும் உள்ள உறவும் முற்றிலுமாக அகன்று விட்டது . .திரையிடுவதன் வழியாக இத்தகைய சிந்தனைகளையும் நினைவு படுத்துகிறது மீட்பராகிய மெசியாவை எதிர்நோக்கிக் காத்திருந்த பழைய ஏற்பாட்டுக் காலக்கட்டத்தையும் மறைவாக நடைபெறும் இந்த ஆயத்தத்திருச்சடங்கு அத்துடன் தொடக்ககாலம் முதல் தந்தைக் கடவுளோட .பொருள்படுத்துகிறது ு சோந்து கட்புலனாகாதவராயிருக்கும் மகனாகிய கடவுளையும் இது கருத்தில் கொள்கிறது.

குருவானவர் தூயகத்தில் பிரவேசித்து, இறைமக்களின் மன்றாட்டை வேண்டிக்கொண்டு பலிபீடத்தின் முன் வணங்கி, பலிபீடத்தின் மூலைகளில் முத்தம் செய்கிறார் அதன் பிறகு தர்காவின் மேல் ஏறி நின்று .மெல்கிசதேக்கின் முறைமையிலான திருச்சடங்கையும், ஆரோனின் முறையிலான திருச்சடங்கையும் நிறைவேற்றுகிறார்.

2. "மெல்கிசதேக்கின் முறைமைப்படி என்றென்றும் தலைமைக்குரு இயேசு கிறிஸ்துவே" என்பதைத் தெளிவுப்படுத்துக?

அப்பத்தையும், இரசத்தையும் பலிபீடத்தின் மேல் ஆயத்தம் செய்து வைக்கும் திருச்சடங்குதான் மெல்கிசதேக்கின் முறைசாலேம் அரசரும் ., உன்னத கடவுளின் அர்ச்சகருமான மெல்கிசதேக்கு அப்பமும், திராட்சை இரசமும் கொண்டு வந்து ஆபிரகாமை எதிர்கொண்டு வாழ்த்திய நிகழ்ச்சியை இந்தத் திருச்சடங்கு நினைவு படுத்துகிறது தொடக்க நூல்)14 : 18). எபிரேயர் திருமுகத்தில், மெல்கிசதேக்கின் முறைப்படி என்றென்றும் தலைமைக்குரு .எபி)6:20) என இயேசு சிறப்பிக்கப்பட்டுள்ளார் .சாலேம் என்பது எருசலேமின் பழைய பெயராகும் . மெல்கிசதேக்கு' என்னும் பெயருக்கு முதலாவது பொருள் நீதியின் அரசர்' எனவும், இரண்டாவது பொருள் 'அமைதியின் அரசர்' எனவும் ஆகும் .எபி)7:2). யூத மதத்தில் குருத்துவப் பணி ஏற்படுத்துவதற்கு முன்னரே புற இனத்தவர்களுக்கெல்லாம் பிரதிநிதியாக கடவுள் முன்னிலையில் நிலை கொண்ட குருவானவரே மெல்கிசதேக்குமெல்கிசதேக்கின் முறைப்படி என்றென்றும் தலைமைக் குருவான . இயேசு கிறிஸ்து தமத ு சொந்த இனமான இஸ்ரயேலருக்கு மட்டுமன்றுஅனைத்து . குருத்துவத்தினுடையவும் நிறைவு .மக்களினத்தாருக்கும் தலைமைக் குருவானவரே .இயேசுவே தான் என்பது மெல்கிசதேக்கின் முறைமை பொருள்படுத்துகிறது

குருவானவர் பெரிய அப்பத்தையும், சிறிய அப்பத்தையும் குறிப்பிட்டிருக்கும் செபங்களுடனும், அருள் செயல்களுடனும் திருத்தட்டத்தில் (பீலாசா) .ஒழுங்குபடுத்துகிறார்

தொடர்ந்து திருக்கிண்ணத்தில் (காசா) திராட்சை இரசத்தையும், தண்ணீரையும் கலந்து தயார்படுத்துகிறார். இறைமகனாகிய இயேசுகிறிஸ்துவில் இறைத்தன்மையும், மனிதத் தன்மையும் சரிநிகராக இரண்டறக் கலந்திருப்பதை இது குறிக்கின்றது.

திருப்பலியில் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் குருவானவர் மேலங்கியை மட்டும் அணிந்தே தயார்செய்கிறார். தயார்செய்த பின் அவர் பாவத்திற்கு வருந்துதலின் மன்றாட்டுகளைச் சொல்கின்றார்.

**குறு வினா விடைகள்**

1. கத்தோலிக்க திருச்சபையில் எத்தனை தனித்திருச்சபைகள் உள்ளன? 24
2. மலங்கரை திருச்சபை பயன்படுத்தி வருகிற ஆராதனை முறைக்குப் பெயர் என்ன? அந்தியோக்கியன் சுறியானி ஆராதனை முறை
3. திருப்பலி முறையை முதல் நூற்றாண்டிலேயே தொகுத்திருந்த எருசலேம் சபையின் முதல் தலைவரும் திருத்தூதருமானவர் யார்? மார் யாக்கோபு
4. மார் யாக்கோபின் தக்ஸா எங்கே உருவெடுத்தது? எருசலேமில்

www.malankaralibrary.com

5. மார் யாக்கோபின் ஆராதனை முறையைப் பிற்காலத்தில் எந்த திருச்சபை ஏற்றுக்கொண்டது? அந்தியோக்கியன்
6. மார் யாக்கோபின் நற்கருணை மன்றாட்டை அடிப்படையாகக் கொண்டு எத்தனை நற்கருணை மன்றாட்டுக்கள் அந்தியோக்கியன் சுறியானி மரபில் தோன்றின? எழுபதிற்கும் மேற்பட்ட
7. மலங்கரை கத்தோலிக்க திருச்சபை பயன்படுத்துகின்ற ஆராதனை முறை எது? அந்தியோக்கியன் சுறியானி ஆராதனை முறை
8. திருப்பலி எதனுடன் நெருங்கிய தொடர்பு உடையதாகும்? கடவுளின் மீட்பு வரலாற்றுடன்.
9. திருப்பலி என்பது எதன் கொண்டாட்டம் ஆகும்? மீட்பு வரலாற்றின்
10. கிறிஸ்துவின் மீட்பு நிகழ்வுகளை நினைவு கூர்ந்து திருப்பலியின் துவக்கத்தின் பாடும் பாடல் எது?

    “ஆண்டவரே உம் பிறப்பும் திருமுழுக்கும் பாடுகளும்

    சிலுவை இறப்பும், உயிர்ப்பும் விண்ணேற்றமும் யாவையுமே

    மறை முன்னோர்களையும் நாங்கள்

    வேள்வியில் நினைக்கின்றோம் நாதா"
11. மலங்கரை ஆராதனை முறை திருப்பலி முறையை எத்தனை பகுதிகளாகப் பிரிக்கலாம்? நான்கு. அவை ஆயத்தத் திருச்சடங்கு, இறைவார்த்தை வழிபாடு, பலி அர்ப்பணம், பலிவிருந்து
12. மலங்கரைத் திருப்பலி முறையின் ஆயத்தத் திருச்சடங்கு சுறியானியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது? 'தூயோபோ'
13. ஆயத்தத் திருச்சடங்கில் அடங்கிய பகுதிகள் யாவை? திருப்பலியின் தொடக்கம் முதல் பகிரங்கத் திருச்சடங்கு தொடக்கம் வரை
14. வேளை மன்றாட்டுத் தொடங்குவதற்கு முன் பீடச்சிறுவர் எந்த மெழுகுவர்த்தியை எரியச் செய்கின்றனர்? பலிபீடத்தின் மையப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் சிலுவையின் முன்னிருக்கும் மெழுகுவர்த்தியை
15. பலிபீடத்தின் மையப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் சிலுவையின் முன்னிருக்கும் மெழுகுவர்த்தியை எரியச் செய்கின்ற போது என்ன நினைவுகூரப்படுகிறது? “ஒளி தோன்றுக” (தொடக்கநூல் 1:3) எனக்கூறி கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தல்.
16. தூயகம் (மத்பஹா) எதற்கு அடையாளம்? விண்ணுலகம்
17. இறைமக்கள் நிற்கும் பகுதி (ஹைக்கலா) எதற்கு அடையாளம்? மண்ணுலகம்
18. ஆலயத்தில் விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் இடையேயான உறவைக் குறிக்கும் அடையாளம் எது? திரை.
19. திருச்சடங்குகளின் போது குருவானவர் அணிவதற்காக திருச்சபையால் நிச்சயிக்கப்பட்ட ஆடை எது? கறுப்புநிற அங்கி
20. ஆயத்த திருச்சடங்கின் இரு முக்கிய முறைகள் யாவை? மெல்கிசதேக்கின் முறை மற்றும் ஆரோனின் முறை
21. மெல்கிசதேக்கின் முறை எனப்படுவது எது? அப்பத்தையும், இரசத்தையும் பலிபீடத்தின் மேல் ஆயத்தம் செய்து வைக்கும் திருச்சடங்கு
22. ஆபிரகாமை அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து வாழ்த்திய சாலேம் அரசரும், உன்னத கடவுளின் அர்ச்சகருமானவர் யார்? மெல்கிசதேக்கு,
23. மெல்கிசதேக்கின் முறைப்படி இயேசு என்றென்றும் தலைமைக்குரு என எபிரேயர் திருமுகத்தில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது? எபி. 6:20
24. எருசலேமின் பழைய பெயர் என்ன? சாலேம்
25. மெல்கிசதேக்கு' என்பதன் முதலாவது பொருள் என்ன? நீதியின் அரசர்'

www.malankaralibrary.com

26. மெல்கிசதேக்கு' என்பதன் இரண்டாவது பொருள் என்ன? 'அமைதியின் அரசர்'
27. மெல்கிசதேக்கின் முறைமை குருத்துவத்தின் நிறைவை யாராக பொருள்படுத்துகிறது? இயேசுவே
28. திருக்கிண்ணத்தில் (காசா) திராட்சை இரசத்துடன் கலப்பது என்ன? தண்ணீர்
29. திராட்சை இரசத்துடன் தண்ணீரைக் கலப்பது எதைக் குறிக்கின்றது? இயேசுகிறிஸ்துவில் இறைத்தன்மையும், மனிதத்தன்மையும் சரிநிகராக கலந்திருப்பது.
30. திருப்பலியில் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் குருவானவர் தயார்செய்கின்ற போது அணிந்திருக்கும் ஆடையின் பெயர் என்ன? மேலங்கி
31. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் குருக்கள் திருவுடைகளை அணிந்து கொண்டது எதற்கடையாளம்? கடவுளின் மாட்சிமைக்கும், குருத்துவப் பணி நிறைவேற்றுவதற்காகவும் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய்மையின் அடையாளமாகவே
32. பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சாயலாக விளங்கிய அர்ச்சகரானவர் யார்? ஆரோன்
33. ஆரோனின் முறையில் குருவானவர் திருத்தட்டத்தையும், திருக்கிண்ணத்தையும் சிலுவை வடிவில் பிடித்துக் கொண்டவாறு நினைவு கூர்பவை என்ன? கடவுளின் மீட்பு நிகழ்வுகளை நினைவு கூரவும், ஆதாம், ஏவாள் முதல் இன்று வரையிலான முக்கிய நபர்களை நினைவு கூரவும், இறந்து போனவர்கள் அனைவரையும் நினைவு கூரவும், திருப்பலியை யாருக்காக ஒப்புக்கொடுக்கிறாரோ அவர்களுக்காக மன்றாடவும் செய்கின்றார்.
34. மென்துகிலால் திருத்தட்டத்தையும், திருக்கிண்ணத்தையும் மூடுகின்ற போது முருவானவரின் செபம் என்ன? "மாண்பு மிக்கவரின் சுடரொளியால் வான மண்டலம் நிறைந்துள்ளது. அவரது மகிமை படைப்பு அனைத்திலும் சூழ்ந்து விளங்குகின்றது"
35. மென்துகில் எதைக் குறிக்கின்றது? விண்ணகத்தை மறைத்திருக்கும் ஆகாயவிதானம்
36. மென்துகிலின் மீது தூபம் காட்டப்படுவது யாருடைய தூப அர்ப்பணத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது? ஆரோனின்
37. ஆரோன் தூயகத்தின் தூய இடத்தில் காட்டிய தூப அர்ப்பணம் எதற்கு முன்னடையாளமாகும்? இயேசு கிறிஸ்துவின் கல்வாரி பலியின்
38. திரைக்கு உள்ளே நடைபெறும் மறைவான திருச்சடங்கின் போது நினைவு கூரப்படுபவை என்ன? ஆதிப்பெற்றோர் முதல் ஆபிரகாம் வரை, ஆபிரகாம் முதல் ஆரோன் வரை, ஆரோன் முதல் இயேசு கிறிஸ்து வரையிலான மீட்பு வரலாறு
39. "ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைமாறு செய்வேன்? மீட்பின் **கிண்ணத்தைக்** கையில் எடுத்து, ஆண்டவரது பெயரைத் தொழுவேன்.
40. இதோ! ஆண்டவருடைய மக்கள் அனைவரின் முன்னிலையில் அவருக்கு என் **பொருத்தனைகளை** நிறைவேற்றுவேன்"

## பாடம் 6

## திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடு

பயிற்சி வினாக்கள்

1. திருப்பலியில் தூய கீர்த்தனை குறிப்பெழுதுக

www.malankaralibrary.com

"இறைவா நீர் தூயவராகின்றீர்..." என்று மும்முறை துதிக்கும் தூய கீர்த்தனை, மனித பிறவியெடுத்த இயேசுவிடம் பக்தியையும் ஆராதனையையும் வெளிப்படுத்துகின்ற ஒரு செபமாகும். மலங்கரை ஆராதனை முறையில் இந்த செபம் இயேசுகிறிஸ்துவை முன்னிலைப் படுத்திய துதிபாடலாகும். காரணம், மனிதனாய்ப் பிறந்த இயேசுகிறிஸ்துவின் இறைத்தன்மையிலுள்ள ஒரு நம்பிக்கை அறிக்கையே இது. இறைவாக்கினர் எசாயாவின் திருக்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட “தூயவர், தூயவர், தூயவர்" என்னும் வானதூதர்களின் புகழ்ப்பாடலுக்கும் பதிலுரையாக இறைமக்கள் "எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்” எனக் கூறி வேண்டி நிற்கின்றனர். (எசாயா 6 : 3).

இயேசு கிறிஸ்துவின் கல்லறையடக்கத்தின் போது விண்ணகத் தூதர்களின் பேரணி சொல்லிய இந்தத் துதிப்பாடலைக் கேட்டு நின்ற அரிமத்தியா யோசேப்பும், நிக்கதேமுவும், உடன்நின்றவர்களும், “எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்” என மன்றாடினர் என்பது மரபு.

2. திருப்பலியில் பலி அர்ப்பணம் செய்யும் குருவானவர் கடவுளுடையவும் மனிதருடையவும் பிரதிநிதி என்பதை விளக்குக

மலங்கரை ஆராதனை முறையின் படி பலி அர்ப்பணம் செய்கின்ற குருவானவர் இறைமக்களினுடையவும், கடவுளினுடையவும் இடைநிலையாளராகவே செயல்படுகிறார். இறைமக்கள் நிற்கின்ற திசையில் குரு கிழக்கு திசையைப் பார்த்து நிற்கும் போது மக்களின் பிரதிநிதியாகவே அங்கு நிற்கிறார். மக்களின் பிரதிநிதி என்ற நிலையில் மக்களின் மகிழ்ச்சியையும், துக்கங்களையும், கவலைகளையும், வேண்டுதல்களையும் மக்களுக்காக குரு இறைவனிடத்தில் ஒப்புக் கொடுக்கிறார். ஆனால், குரு மக்களுக்கு நேராக திரும்பும் போது அவர் கடவுளின் பிரதிநிதியாகவே அங்கு நிற்கிறார். இரண்டு தேவைகளுக்காக மட்டுமே குரு திருப்பலிக்கிடையே மக்களுக்கு நேராக திரும்புவது வழக்கம். அதாவது கடவுளுக்கு மக்களோடு ஏதேனும் சொல்வதற்கோ, மக்களுக்கு ஏதேனும் கொடுப்பதற்கோ ஆகும். நற்செய்தி வாசகம், மறையுரை ஆகியவற்றிற்கும், சமாதானம், ஆசீர், நற்கருணை ஆகியவற்றிற்கும் குருவானவர் மக்களுக்கு நேராக திரும்பும் போது அங்கு கடவுளின் பிரதிநிதியாகவே அவர் செயல்படுகிறார்.

3. தூபகலசம் வழ்த்துவதன் பொருளை விளக்குக

மூவொரு இறைவனிலுள்ள புனிதத்தையும், அவரிலுள்ள நமது நம்பிக்கையையும் தூபகலசம் ஆசீர்வதித்தல் வாயிலாக அறிக்கையிடுகிறோம். இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கையும் நினைவு கூருகிறோம். அதே வேளையில் தூய மூவொரு கடவுளின் மாபெரும் வெளிப்பாடு இயேசுவின் திருமுழுக்கு நேரத்தில் அல்லவா நடைபெற்றது. இறைமகன் திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் புறாவின் வடிவில் அவர் மீது வந்து தங்கினார். “என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என வானத்திலிருந்து தந்தைக் கடவுளின் ஒலியும் கேட்டது. தூபக்கலசம் திருச்சபையினுடையவும், உலகினுடையவும் அடையாளமாதலால் அதனை வாழ்த்துகின்ற திருச்சடங்குத் திருச்சபையாகிய இறைமக்கள் சமூகத்தை வாழ்த்துகின்ற திருச்சடங்கே ஆகும். அதுபோன்றே திருச்சபையினுடையவும், உலகினுடையவும் தூய்மைப்படுத்துதலையும் இது குறிக்கிறது. பாவமன்னிப்பு பெற்றுக் கொண்டதற்கு நன்றியறிதலாக மூவொரு கடவுளை போற்றிப் புகழ்ந்து கொண்டும், ஆராதனை செலுத்திக் கொண்டும் தூபகலச வாழ்த்துதலைக் குருவானவர் நடத்துகிறார்.

தூபகலசம் வாழ்த்துதல் ஓர் அடையாளச் செயல். தூபகலசத்தின் நெருப்பு இறை அன்னையில் வாழ்ந்திருந்த நெருப்பாகிய இறை மகனைக் குறிப்பிடுகிறது. தூபகலசத்தின் சங்கிலியிலுள்ள 72 கண்ணிகள் 72 சீடர்களையும், 12 மணிகள் திருத்தூதர்களையும் குறிப்பிடுகின்றன. தூபகலசம் வாழ்த்தும் போது முதல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு "தூயவரான தந்தை தூயவரே" எனவும் இரண்டாவது, மூன்றாவது சங்கிலிகளைப் பிடித்துக்கொண்டு “தூயவராகிய மகன் தூயவரே” எனவும், நான்காவது சங்கிலியைப் பிடித்துக் கொண்டு "தூயவராகிய ஆவியார்

www.malankaralibrary.com

தூயவரே" எனவும் குருவானவர் அறிக்கையிடுகிறார். முதல் சங்கிலி தந்தைக் கடவுளையும் இரண்டும், மூன்றும் சங்கிலிகள் இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மையையும், மனிதத் தன்மையையும், நான்காம் சங்கிலி தூய ஆவியையும் குறிக்கின்றன. தூப கலசம் வாழ்த்தும் போது இறைமக்கள் மூவொரு கடவுளுக்கு ஆராதனையும், மகிமையும் செலுத்தியவாறு 'ஆமென்' எனக் கூறுகின்றனர். தூபகலசம் வாழ்த்திய பின் குருவானவர் இறைமக்கள் மேல் தூபம் காட்டுகின்றார். தொடர்ந்து பீடச்சிறுவன் தூயகத்திற்குள்ளேயும், இறைமக்கள் நிற்கும் மேற்குப் பகுதி வரையிலும் தூபம் காட்டுகிறார். பீடச்சிறுவன் ஆலயம் முழுவதிலும் தூபம் காட்டுவது கடவுளுக்கு அனைவரோடும் உள்ள ஆதரவையும், கடவுளின் கருணையையும் குறிப்பதற்காகவே ஆகும். அதுபோன்று இறைசமூகம் முழுவதும் தூபத்தால் தூய்மைப்படுத்தப்பட்டு திருப்பலியின் முக்கிய பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகிறது. ஆதித்திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு வெளியே செல்வதற்கான அடையாளமாகவும் இது கருதப்படுகிறது. ஆதித்திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இறைவார்த்தை வழிபாடு வரையிலும் மட்டுமே பங்கு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

**குறு வினா விடைகள்**

1. திருப்பலியின் இரண்டாம் பகுதி எது ? இறைவார்த்தை வழிபாடு
2. இறைவார்த்தை வழிபாடு எனப்படுவது யாது? பகிரங்கத் திருச்சடங்கு முதல் விசுவாசப்பிரமாணம் வரையிலான பகுதிகள்
3. திருப்பலியின் துவக்கத்தில் திரை அகற்றப்படுவதன் மனிதர்களின் பாவங்களோடு தொடர்புடைய அர்த்தம் என்ன? திரை அகற்றப்பட்டு தூயகத்தின் வாசல் திறப்பதனால் மனித பாவம் மூலம் அடைக்கப்பட்ட விண்ணகம் திறக்கப்பட்டு, கட்புலனாகாத கடவுள் ஆராதனையில் கூடியிருக்கும் மக்களுக்குக் காட்சியளிக்கிறார்
4. திருப்பலியின் துவக்கத்தில் திரை அகற்றப்படுவதன் ஆதிபாவத்தோடு தொடர்புடைய அர்த்தம் என்ன? ஆதிபாவம் காரணமாக இழந்து போன இறை - மனித உறவையும், விண்ணுலகுக்கும், பூவுலகுக்கும் இடையேயான உறவையும் மீண்டும் புதுப்பிப்பதை
5. திருப்பலியின் துவக்கத்தில் திரை அகற்றப்படுவதன் புதிய ஏற்பாட்டுடன் தொடர்புடைய அர்த்தம் என்ன? பழைய ஏற்பாடு முடிந்து புதிய ஏற்பாடு தொடங்குவது
6. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் நினைவு கூரப்படுவது என்ன? இயேசுவின் பிறப்பு
7. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் பலிபீடத்தைச் சுற்றி வலம் வருவதில் மெழுகுவர்த்தியுடன் முன்னே செல்லும் முக்கியப் பீடச்சிறுவன் யாரைக் குறிக்கிறார்? திருமுழுக்கு யோவானை
8. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் தூயகம் எதைக் குறிப்பிடுகிறது? பெத்லகேம் மாட்டுத் தொழுவம்
9. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் பலிபீடம் எதைக் குறிப்பிடுகிறது? தூய மரியாவின் மடியாக
10. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் அப்பமும் திராட்சை இரசமும் எதைக் குறிப்பிடுகிறது? குழந்தை இயேசுவை
11. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் அப்பமும் திராட்சை இரசமும் மூடியிருக்கும் மென்துகில் எதைக் குறிப்பிடுகிறது? குழந்தை இயேசுவைச் சுற்றியிருக்கும் துணி

www.malankaralibrary.com

12. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கின் இனிமையான பாடல்கள் எதைக் குறிப்பிடுகிறது? வானதூதர்கள் கீர்த்தனை பாடியதைக்
13. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கில் குருவானவர் பலிபீடத்தில் தூபம் காட்டி முத்தம் செய்வது எதைக் குறிப்பிடுகிறது? இடையர்களும், ஞானிகளும் வந்து இயேசுவை வணங்கியதையும், காணிக்கை சமர்ப்பித்ததையும்
14. பகிரங்கத் திருச்சடங்கு எந்தெந்த புனிதர்களின் பரிந்துரையை நாடி ஆரம்பமாகிறது? தூய மரியா மற்றும் திருமுழுக்கு யோவான்
15. "இறைவா நீர் தூயவராகின்றீர்..." என்று மும்முறை துதிக்கும் தூய கீர்த்தனை யாரை மையப்படுத்தியது? இயேசு கிறிஸ்துவை
16. “தூயவர், தூயவர், தூயவர்" என்ற இறைவாக்கினர் எசாயாவின் திருக்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னும் வானதூதர்களின் புகழ்ப்பாடல் காணப்படும் பகுதி யாது? எசாயா 6 : 3
17. “தூயவர், தூயவர், தூயவர்" என்ற தூய கீர்த்தனைக்கு பதிலுரை என்ன? "எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்”
18. “எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்” என்பதைப் பற்றிய மரபு கூறும் சான்று என்ன? இயேசு கிறிஸ்துவின் கல்லறையடக்கத்தின் போது விண்ணகத் தூதர்களின் பேரணி சொல்லிய இந்தத் துதிப்பாடலைக் கேட்டு நின்ற அரிமத்தியா யோசேப்பும், நிக்கதேமுவும், உடன்நின்றவர்களும், “எங்களுக்காக சிலுவையில் அறையுண்டவரே எங்கள் மேல் இரங்கியருளும்” என மன்றாடினர் என்பது மரபு.
19. திருப்பலியின் போது வாசிக்கப்படுகின்ற பழைய ஏற்பாட்டு வாசகங்கள் எத்தனை? நான்கு
20. திருப்பலியின் போது வாசிக்கப்படுகின்ற புதிய ஏற்பாட்டு வாசகங்கள் எத்தனை? மூன்று
21. திருப்பலியின் போது பழைய ஏற்பாட்டு பகுதிகள் எப்போது வாசிக்கப்படுகின்றன? காலை மன்றாட்டிற்குப் பின் ஆயத்தத் திருச்சடங்கு வேளையில்
22. திருப்பலியின் போது பழைய ஏற்பாட்டு வாசகங்கள் சேர்க்கப்பட்டுள்ளதன் அடிப்படைக் கருத்து என்ன? பழைய ஏற்பாட்டில் உரைக்கப்பட்டிருக்கும் இறைவாக்குகளின் இயல்பு புதிய எற்பாட்டின் ஒளியில் அதிகமாக தெளிவடையும்
23. பழைய ஏற்பாட்டு வர்சகங்கள் வாசிப்பதன் நோக்கம் என்ன? மீட்பராகிய மெசியாவை வரவேற்பதற்காக பழைய ஏற்பாட்டுக் காலத்து மக்களை ஆயத்தப்படுத்தியது போன்று இயேசு கிறிஸ்துவை இதயத்தில் வரவேற்பதற்காக திருப்பலியின் போது இறைமக்களை சிறப்பாக ஆயத்தம் செய்வது
24. பழைய ஏற்பாட்டு வாசகங்கள் எப்பகுதியில் நின்று வாசிக்கப்படுகின்றன? ஹைக்கலாவில்
25. திருமுகங்கள் வாசகங்கள் எப்பகுதியில் நின்று வாசிக்கப்படுகின்றன? மத்பஹாவின் ஒருபடி கீழே நின்றவாறு
26. நற்செய்தி வாசகம் எப்பகுதியில் நின்று வாசிக்கப்படுகின்றன? மத்பஹாவில்
27. முதல் வாசகத்திர்காக பயன்படுத்தப்படும் திருவிவிலியப் பகுதிகள் யாவை? திருத்தூதர் பணிகள், திருத்தூதர்களின் பொதுத்திருமுகங்கள், திருவெளிப்பாடு
28. முதல் வாசகத்திற்கு முன் பாடப்படும் பாடல் எது? “மண்ணுலகெல்லாம்..."
29. “மண்ணுலகெல்லாம்..." என்னும் பாடலின் விவிலிய அடிப்படை என்ன? மாற்கு 16 : 15

30. இரண்டாம் வாசகத்திற்கு முன் பாடப்படும் பாடல் எது? “பவுலடியாரின் சொல்லமுதம் ...."
31. “பவுலடியாரின் சொல்லமுதம் ...." என்ற பாடலின் விவிலிய அடிப்படை என்ன? கலாத்தியர் 1: 8
32. நற்செய்தி வாசகத்திற்கு முன் பாடப்பாடும் ‘ஹூலோலோ' என்பதன் மூலச் சொல் எது? ஹாலேலூயா
33. திருப்பலியினிடையே நற்செய்தி வாசிப்பது பற்றிய வத்திக்கான் சங்கத்தின் போதனை என்ன? இயேசு கிறிஸ்துவே பேசுகின்றார்
34. மலங்கரை ஆராதனை முறையின் படி இறைமக்களினுடையவும், கடவுளினுடையவும் இடைநிலையாளராகவே செயல்படுபவர் யார்? பலி அர்ப்பணம் செய்கின்ற குருவானவர்
35. குரு இறைமக்கள் நிற்கின்ற திசையில் கிழக்கு திசையைப் பார்த்து நிற்கும் போது யாராக அங்கு நிற்கிறார்? மக்களின் பிரதிநிதியாக
36. திருப்பலியிடையே குரு மக்களுக்கு நேராக எந்த இரண்டு தேவைகளுக்காக திரும்புகிறார் வழக்கம்? கடவுளுக்கு மக்களோடு ஏதேனும் சொல்வதற்கும், மக்களுக்கு ஏதேனும் கொடுப்பதற்கும்
37. நற்செய்தி வாசகம், மறையுரை, சமாதானம், ஆசீர், நற்கருணை ஆகியவற்றிற்கும் குருவானவர் மக்களுக்கு நேராக திரும்பும் போது யாராக செயல்படுகிறார்? கடவுளின் பிரதிநிதியாக
38. பாவபரிகாரம் மன்றாட்டுகளின் வரிசை முறை என்ன? “ப்றுமியோன் (முன்னுரை) ஹுசோயோ, செதறா, பாவமன்னிப்புக்கான மன்றாட்டு
39. செதறா மன்றாட்டின் இறுதியில் உள்ள பொதுவான பாவமன்னிப்பு மன்றாட்டு எது? “இறைவனிடமிருந்து கடன்களுக்குப் பரிகாரமும், பாவங்களுக்கு மன்னிப்பும் ஈருலகங்களிலும் என்றென்றும் நாம் பெற்றுக் கொள்வோமாக”.
40. தூபகலசம் ஆசீர்வதித்தல் வாயிலாக எதனை அறிக்கையிடுகிறோம்? மூவொரிறைவனின் புனிதத்தையும், அவரோடுள்ள நமது நம்பிக்கையையும்.
41. தூபகலசம் ஆசீர்வதித்தல் வாயிலாக எதனை நினைவு கூருகிறோம்? இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு
42. “என் அன்பார்ந்த ***<u>மைந்தர்</u>*** இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்”
43. தூபக்கலசம் எதற்கடையாளம்? திருச்சபையினுடையவும், உலகினுடையவும்
44. தூபகலசம் வாழ்த்துகின்ற திருச்சடங்கின் பொருள் என்ன? திருச்சபையாகிய இறைமக்கள் சமூகத்தை வாழ்த்துகின்ற திருச்சடங்கு
45. திருப்பலியில் பாவமன்னிப்பு பெற்றுக் கொண்டதற்கு நன்றியறிதலாக மூவொரு கடவுளை போற்றிப் புகழ்ந்து கொண்டும், ஆராதனை செலுத்திக் கொண்டும் குருவானவர் நடத்துகின்ற திருச்சடங்கு எது? தூபகலச வாழ்த்துதல்
46. தூபகலசத்தின் நெருப்பு யாரைக் குறிப்பிடுகிறது? இறை அன்னையில் வாழ்ந்திருந்த நெருப்பாகிய இறை மகன் இயேசு
47. தூபகலசத்தின் சங்கிலியிலுள்ள 72 கண்ணிகள் யாரைக் குறிப்பிடுகின்றன? 72 சீடர்களை
48. தூபகலசத்தின் சங்கிலியிலுள்ள 12 மணிகள் யாரைக் குறிப்பிடுகின்றன? 12 திருத்தூதர்களை
49. தூபகலசம் வாழ்த்தும் போது முதல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு சொல்வது என்ன? "தூயவரான தந்தை தூயவரே"

www.malankaralibrary.com

50. தூபகலசம் வாழ்த்தும் போது இரண்டாவது மற்றும் மூன்றாவது சங்கிலிகளை பிடித்துக்கொண்டு சொல்வது என்ன? “தூயவராகிய மகன் தூயவரே”
51. தூபகலசம் வாழ்த்தும் போது நான்காவது சங்கிலியைப் பிடித்துக்கொண்டு சொல்வது என்ன? "தூயவராகிய ஆவியார் தூயவரே"
52. தூபகலசத்தின் முதல் சங்கிலி யாரைக் குறிப்பிடுகிறது? தந்தைக் கடவுளை
53. தூபகலசத்தின் இரண்டாம், மூன்றாம் சங்கிலிகள் எதனைக் குறிப்பிடுகின்றன? இயேசுவின் இறைத்தன்மையையும், மனிதத் தன்மையையும்,
54. தூபகலசத்தின் நான்காம் சங்கிலி யாரைக் குறிப்பிடுகிறது? தூய ஆவியை
55. தூப கலசம் வாழ்த்திய பின்னர் பீடச்சிறுவன் ஆலயம் முழுவதிலும் தூபம் காட்டுவது எதைக் குறிக்கின்றது? கடவுளுக்கு அனைவரோடும் உள்ள ஆதரவையும், கடவுளின் கருணையையும்.
56. தூப கலசம் வாழ்த்திய பின்னர் பீடச்சிறுவன் ஆலயம் முழுவதிலும் தூபம் காட்டுவதன் அர்த்தம் என்ன? இறைசமூகம் முழுவதும் தூபத்தால் தூய்மைப்படுத்தப்பட்டு திருப்பலியின் முக்கிய பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகிறது.
57. தூப கலசம் வாழ்த்திய பின்னர் பீடச்சிறுவன் ஆலயம் முழுவதிலும் தூபம் காட்டுவது ஆதித்திருச்சபையில் உள்ள நிகழ்வுகளின் தொடர்பு என்ன? திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு வெளியே செல்வதற்கான அடையாளமாகவும்
58. ஆதித்திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளாதவர்கள் திருப்பலியின் எப்பகுதி வரையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்? இறைவார்த்தை வழிபாடு வரை
59. நம்பிக்கை அறிக்கையில் அடங்கியிருப்பவை என்ன? கிறிஸ்தவ விசுவாசத்தின் மறைஉண்மைகள்
60. திருப்பலியில் எந்த நம்பிக்கை அறிக்கை பயன்படுத்தப்படுகிறது? நிசேயா நம்பிக்கை அறிக்கை
61. ஆன்மீக ஆயத்தத்தைக் குறிக்கும் வகையில் நம்பிக்கை அறிக்கையின் போது குருவானவர் செய்யும் செயல் என்ன? கைகளைக் கழுவுதல்
62. 'ஸ்தௌமென்காலோஸ்' என்பதன் பொருள் என்ன? நாம் அனைவரும் கவனமாக நிற்போமாக
63. குறியேலாயிசோன்' என்பதன் பொருள் என்ன? “ஆண்டவரே எங்கள் மேல் இரக்கமாயிரும்"
64. “ஆனால் அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி அவர்கள் **எவ்வாறு** அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது **எவ்வாறு** நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்?
65. அனுப்பப்படாமல் அவர்கள் **எவ்வாறு** அறிவிப்பார்கள்? இதைப் பற்றியே, நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் **எத்துணை** அழகாய் இருக்கின்றன என்று மறைநூலில் எழுதியுள்ளது" (உரோமையர் 10; 14-16)

## பாடம் 7

## திருப்பலி - பலி அர்ப்பணம்

பயிற்சி வினாக்கள்

1. திருப்பலியில் மென்துகில் கொண்டாட்டத்தின் பொருள் யாது?

**சமர்ப்பண மன்றாட்டும் மென்துகில் கொண்டாட்டமும்**

www.malankaralibrary.com

தூய மறைபொருட்கள் உள்ளடங்கியிருக்கும் திருக்கிண்ணத்தையும் திருத்தட்டையம் மூடிவைத்திருக்கும் பட்டுத் துணிதான் மென்துகில். இதற்குப் போர்வை. மம என் பொருள்கள் உள்ளன. யல்தா காலத்தில் விண்மீனின் அடையாளமுள்ளதும் கனகா மற்றும் பெந்தகோஸ்து காலத்தில் புறாவின் அடையாளமுள்ளதும், சிலுவைக் காலத்தில் சிலுவையின் அடையாளமுள்ளதுமான மென்துகில் பயன்படுத்தப்படுகிறது. மென்பதின் மீதுள்ள மன்றாட்டுக்குப் பின் குருவானவர் மென்துகிலை மும்முறை உயர்த்தி அசைத்து கொண்டாடுகிறார். அந்நேரத்தில் பீடச்சிறுவன் இத்திருச்சடங்கின் சிறப்பினைக் (கரிக்க இறைமக்களை அறிவிக்கின்றார்.

மென்துகிலை உயர்த்திக் கொண்டாடுவது விண்ணகம் திறக்கப்படுவதையும், விண்ணாக மறைஉண்மைகள் திருப்பலியின் வாயிலாக மண்ணுலகில் வெளிப்படுவதையும் குறிப்பிடுகிறது இவ்வேளையில் விண்ணுலகும், மண்ணுலகும் ஒன்றிணைகின்றன. நாம் விண்ணக எருசலேமுக்கு ஏறிச்செல்லவும், விண்ணவர் நம்மிடையே இறங்கி வரவும் செய்கின்றனர். இக்காரணத்தினாலேயே மென்துகில் மேலும், கீழுமாக அசைக்கப்படுகிறது. அதனால் மென்துகில் யாக்கோபு பெத்தேலில் கண்ட ஏணியுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது தொடக்க நூல் 28:12). வானதூதர்கள் மண்ணுலகிற்கு இறங்கி வந்ததும், விண்ணுலகிற்கு ஏறிச் சென்றதும் இந்த ஏணியின் வழியாகவே.

மென்துகில் கொண்டாட்ட நேரத்தில் குருவானவர் மெல்லிய குரலில் சொல்லும் செம மூலம் மென்துகிலை இஸ்ரயேல் மக்களுக்குத் தண்ணீரைக் கொடுத்த பாறையுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. (எண்ணிக்கை 20:2-13) பாறையிலிருந்து அளவில்லாமல் தண்ணர் பெருக்கெடுத்து ஓடியது போன்று கிறிஸ்துவாகிய ஆன்மீகப் பாறையிலிருந்து இறை அருளாகிய வாழ்வின் நீர் (எரேமியா 2:13) திருச்சபைக்குள் அளவில்லாமல் ஒழுகிவருகின்றது. இயேசுவின் கல்லறை வைக்கப்பட்டிருந்த பாறைக்கு ஒப்பானதே மென்துகில், இயேசு உயிர்த்தபோது ஏற்பட்ட நிலநடுக்கத்தை மென்துகிலின் அசைவு குறிப்பிடுகிறது. கல்லறை வாயிலில் வைக்கப்பட்டிருந்த பாறை அகன்றபோதுதான் இயேசுவின் உயிர்ப்பு எதார்த்தமானது. மென்துகில் அகற்றும்போது வழிபடுகின்ற சமூகம் தரிசிப்பது உயிர்த்தெழுந்த இயேசுவையேயாகும்.

2 வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடல் நமக்குத் தரும் செய்திகள் யாவை?

**வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடல்**

அடையாளமாக விண்ணகம் திறக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் விண்ணவரும், மண்ணவரும், வானதூதர்களும், மானிடரும், பிரபஞ்சம் முழுவதும் ஒன்றுசேர்ந்து ஆண்டவரை "தூயவர், தூயவர், தூயவர்" எனப்பாடிப்புகழ்கின்றனர்.

வானதூதர்களின் இந்த புகழ்ச்சியின் பாடல் வழியாக மண்ணுலகத் திருச்சபையும், விண்ணகத்தின் வெற்றித்திருச்சபையும் ஒன்றுசேர்ந்து கடவுளைப் புகழ்ந்து பாடுகிறது. நமது இதயங்களை ஆண்டவரிடம் உயர்த்தவும், வானதாதர்களோடு சேர்ந்து கடவுளைப் போற்றி புகழவும் செய்யும் நேரம் முதல் நாம் ஆன்மீகமாக விண்ணகத்துக்கு உயர்த்தப்படவும், நம்மிடம் விண்ணக ஆனந்தம் ஏற்படவும் செய்கிறது. வானதூதர்களுடன் சேர்ந்துள்ள இந்த புகழ்ச்சிப் பாடலின் வழியாக விண்ணக எருசலேமில் நிலையாக கடவுளைப் புகழவதற்கு திருச்சபை நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

"தமது மகிமையால் விண்ணும் மண்ணும் நிறைந்திருக்கும் எல்லாம் வல்ல இறைவன் தூயவர், தூயவர், தூயவர் உன்னதங்களில் ஓசானா. இறைவனாகிய ஆண்டவரின் திருப்பெயரால் வந்தவரும் வரவிருக்கின்றவருமானவர் போற்றப்பெறுக. உன்னதங்களில் புகழ்" என எசாயா இறைவாக்கினர் பெற்றுக் கொண்ட திருக்காட்சியும் (எசா. 6:3, தி.வெ. 4:8) இயேசுவின் எருசலேம் வருகையின்போது இசைக்கப்பட்ட ஓசானா திருப்பாடலும் (மத்தேயு 21:9, லூக். 19:38, திருப்பாடல் 118:26) ஒன்றிணைக்கப்பட்டுள்ள ஒரு பாடலே மேற்குறிப்பிட்ட

www.malankaralibrary.com

புகழ்ச்சிப்பாடல். எசாயா இறைவாக்கினருக்கு விண்ணக அரியணையில் காட்சி அளித்தவர் மகனாகிய கடவுள் ஆவார் என சுறியானி சபைத் தந்தையர்கள் கூறுகின்றனர்.

இந்த இறைப்புகழ்ச்சியின் வாயிலாக திருப்பலியின் விண்ணகத்தன்மை தெளிவுபடுத்தப்படுகிறது. மனிதர்கள் வான தூதர்களுடன் சேர்ந்து விண்ணக அரியணையின் அருகில் நிற்பதையும், விண்ணக அனுபவத்தில் பங்கு பெறுவதையும் இத்திருச்சடங்கு உணர்த்துகின்றது. -

தூயவர் என மும்முறை சொல்லப்பட்டிருப்பதும், இறைவனாகிய ஆண்டவர் என ஒரு முறை சொல்லப்பட்டிருப்பதும் ஒரே கடவுள் மூன்றாக பறைசாற்றப்படுகிறார் என்பதை சுட்டிக்காட்டுவதற்கே ஆகும். இப்புகழ்ச்சியின்போது குருவானவர் அப்பத்தின்மேலம் திராட்சை இரசத்தின் மேலும் கைகளை அசைப்பது, தூய ஆவியார் புறாவின் வடிவில் தூய மறைபொருள்களின்மேல் வந்து குடிகொள்வதைக் குறிப்பதற்காகும். குருவானவர் நடத்துகின்ற மென்குரல் செபத்தில் தூய மூவொரு கடவுளின் ஒவ்வொரு ஆளையம் தனித்தனியாக போற்றிப் புகழவும், இயேசுவின் மீட்புச் செயல்களை நினைவது செய்கின்றார்.

3. பரிந்துரை மன்றாட்டில் நாம் யார் யாரை நினைவுகூர்ந்து மன்றாடுகிறோம்?

**பரிந்துரை வேண்டுதல்**

பரிந்துரை மன்றாட்டினை சுறியானி மொழியில் 'துப்தேன்' என்று அழைப்பர். “அப்படியானால் மீண்டும்” என்பதுவே இதன் பொருள். இந்த மன்றாட்டுகள் தூய ஆவியின் வருகைக்கான மன்றாட்டுகளின் தொடர்ச்சியானதே. தூய ஆவியார் சமர்ப்பணப் பொருட்களில் மட்டுமல்லாமல் இறைமக்களின் அனைத்து தேவைகளிலும் இறங்கி வந்து செயல்பட வேண்டும் என மன்றாடுவதற்குத்தான் மீண்டும்” என்ற சொல் வழங்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தங்களின் பிரசன்னத்தில் நடத்தப்படும் பரிந்துரை மன்றாட்டுகள் மிகுந்தப் பயனளிக்கும் என்பதனாலேயே தூய ஆவியாரின் வருகை தருவதற்கான மன்றாட்டுக்குப்பின் பரிந்துரை மன்றாட்டு ஒழுங்கமைக்கப் பட்டிருக்கிறது.

பீடச் சிறுவர்கள் உரத்த குரலில் சொல்லுகின்ற 6 மன்றாட்டுகளும் குருவானவர் மென் குரலிலும், உரத்த குரலிலும் சொல்லுகின்ற 12 மன்றாட்டுகளும் சேர்ந்து 18 மன்றாட்டுகள் பரிந்துரை மன்றாட்டில் உள்ளன. பரிந்துரை மன்றாட்டுகளில் முதல் மூன்று மன்றாட்டுக்கள் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்காகவும், மீதி மூன்று மன்றாட்டுகள் இறந்து போனவர்களுக்காகவும் உள்ளவையாகும்.

திருச்சபையை வழிநடத்துபவர்களையும், இறைமக்களையும் குறிப்பாக நோயாளிகளையும், துன்புறுவோர்களையும், அநாதைகளையும், தூயருறுவோரையும், ஆட்சித்தலைவர்களையும், தூய இறை அன்னையையும், திருச்சபையில் உண்மை நம்பிக்கையை பறைசாற்றிய திருமறைத் தந்தையர்களையும், இறந்துபோனவர்களையும் இந்த நேரத்தில் தனித்தனியாக நினைவுகூர்ந்து மன்றாடுகின்றோம். இவ்வேளையில் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வேண்டுதல்களையும் இறைவனிடத்தில் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.

திருப்பலியில் தூய மூவொரு கடவுளின் அருளாசியுடன் இப்பகுதி நிறைவடைகிறது. குருவானவர் சமாதான வாழ்த்துதலுடன் பேருன்னதக் கடவுளும் நமது மீட்பருமான இயேசுகிறிஸ்துவின் பெயரில் இறைமக்களை ஆசீர்வதிக்கிறார்.

குறுவினாக்கள்

1. 'அனாஃபொறா' எனப்படும் பகுதி எது? திருப்பலியில் சமாதான மன்றாட்டு முதல் விடைபெறுதல் வரையிலான பகுதி
2. 'அனாஃபொறா' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள்? 'பலி அர்ப்பணம்'
3. குர்பானோ என்னும் சுறியானி சொல்லுக்கும் என்ன பொருள்? 'பலி அர்ப்பணம்'

www.malankaralibrary.com

4. அனாஃபொறா பகுதியில் மெல்லிய மற்றும் உரத்த குரலில் உள்ள மன்றாட்டுகள் எத்தனை? 66
5. அனாஃபொறா பகுதியில் மாற்றத்திற்கு உட்படாத மன்றாட்டுகள் எத்தனை? 33
6. அனாஃபொறா பகுதியில் மாற்றத்திற்கு உட்படாத மன்றாட்டுகள் எதனை குறிக்கின்றன? இயேசுகிறிஸ்துவின் இறைத்தன்மை
7. அனாஃபொறா பகுதியில் மாற்றத்திற்கு உட்படும் மன்றாட்டுகள் எத்தனை? 33
8. அனாஃபொறா பகுதியில் மாற்றத்திற்கு உட்படும் மன்றாட்டுகள் எதனை குறிக்கின்றன? இயேசுகிறிஸ்துவின் மனிதத்தன்மை
9. 33 மன்றாட்டுக்கள் இயேசுவின் வாழ்வோடு எவ்வாறு தொடர்புடையவை? இயேசுகிறிஸ்துவின் 33 ஆண்டு கால பூவுலக வாழ்வு
10. அனாஃபொறாவில் சமாதான மன்றாட்டு முதல் பரிந்துரை மன்றாட்டு வரை உள்ள பகுதிக்கு என்ன பெயர்? பலி அர்ப்பணம்
11. பலிபீடத்தின் முன் பகுதியிலிருக்கும் படிக்கட்டுக்கு என்ன? பெயர் தர்கா
12. சமாதான மன்றாட்டில் குருவானவர் தர்கா படியேறுதல் எதனை நினைவு படுத்துகிறது? இயேசு நற்செய்தியாளர் மாற்குவின் இல்லமான சீயோன் மாளிகையில் பாஸ்கா கொண்டாடச் சென்றதை.
13. தர்க்கா படியேறுதல் எதை உணர்த்துகிறது? அனைத்திலிருந்தும் தாம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும், விண்ணகத்தைப் பற்றி மட்டுமே தமது சிந்தனை என்பதையும்
14. நமது ஆண்டவரின் அரியணையாகிய பலிபீடத்திலிருந்து குருவானவர் யார் வாயிலாக சமாதானம் இறைமக்களுக்கு வழங்குகிறார்? பீடச்சிறுவர்
15. சமாதானம் அளித்தலின் நோக்கம் என்ன? உள் அமைதியையும் ஒப்புரவையும் ஒவ்வொரு மனிதருக்கும் வழங்குகிறது.
16. சமாதான மன்றாட்டுக்குப்பின் தலைவணங்கி நிற்கும் இறைமக்களுக்கு கடவுளின் அருளாசீர் பெற்றுத்தரும் மன்றாட்டை எவ்வாறு அழைப்பர்? இறைமக்கள் மேலுள்ள மன்றாட்டு அல்லது கைவைத்துள்ள மன்றாட்டு
17. தலை வணங்கி நிற்பதன் அடையாளம் என்ன? தெய்வீக ஆராதனையினுடையவும், முழுமையான ஒப்புக்கொடுத்தலினுடையவும்
18. தூய மறைபொருட்கள் உள்ளடங்கியிருக்கும் திருக்கிண்ணத்தையும் திருத்தட்டையம் மூடிவைத்திருக்கும் பட்டுத் துணியின் பெயர் என்ன? மென்துகில்.
19. மென்துகில் என்பதன் அர்த்தங்கள் யாவை? போர்வை. மூடி
20. யல்தா காலத்தின் மென்துகில் எந்த அடையாளத்தைக் கொண்டது? விண்மீன்
21. தனகா மற்றும் பெந்தக்கோஸ்து காலத்தின் மென்துகில் எந்த அடையாளத்தைக் கொண்டது? புறா
22. திருச்சிலுவைக் காலத்தின் மென்துகில் எந்த அடையாளத்தைக் கொண்டது? திருச்சிலுவை
23. மென்துகிலை உயர்த்திக் கொண்டாடுவது எதைக் குறிப்பிடுகிறது? விண்ணகம் திறக்கப்படுவதையும், விண்ணக மறைஉண்மைகள் திருப்பலியின் வாயிலாக மண்ணுலகில் வெளிப்படுவதையும்.
24. மென்துகில் மேலும், கீழுமாக அசைக்கப்படுவதன் பொருள் என்ன? நாம் விண்ணக எருசலேமுக்கு ஏறிச்செல்லவும், விண்ணவர் நம்மிடையே இறங்கி வரவும் செய்கின்றனர்.
25. மென்துகில் யாக்கோபுடன் தொடர்புபடுத்தி எதனுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது? பெத்தேலில் கண்ட ஏணியுடன்

www.malankaralibrary.com

26. மென்துகில் இஸ்ரயேல் மக்களுக்குத் தண்ணீரைக் கொடுத்த பாறையுடன் எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது? பாறையிலிருந்து அளவில்லாமல் தண்ணர் பெருக்கெடுத்து ஒடியது போன்று கிறிஸ்துவாகிய ஆன்மீகப் பாறையிலிருந்து இறை அருளாகிய வாழ்வின் நீர் திருச்சபைக்குள் அளவில்லாமல் ஒழுகிவருகின்றது.
27. மென்துகிலுக்கும் இயேசுவின் கல்லறைக்கும் உள்ள தொடர்பு என்ன? கல்லறையை மூடி வைக்கப்பட்டிருந்த பாறை
28. மென்துகிலின் அசைவு இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வுடன் எவ்வாறு ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளது? இயேசு உயிர்த்தபோது ஏற்பட்ட நிலநடுக்கம்
29. மென்துகில் அகற்றும்போது வழிபடுகின்ற சமூகம் தரிசிப்பது **உயிர்த்தெழுந்த** இயேசுவையேயாகும்.
30. திருப்லியில் குருவானவர் இறைமக்களுக்கு வழங்கும் முதல் அப்போஸ்தலிக்க ஆசீர் எது? "தந்தையாகிய கடவுளின் அன்பும் + ஒரேமகனின் அருளும் + தூய ஆவியின் நட்புறவும் ஆட்கொள்ளுதலும் + என் சகோதரர்களே உங்களனைவரோடும் இருப்பதாக."
31. திருப்லியில் குருவானவர் இறைமக்களுக்கு வழங்கும் முதல் அப்போஸ்தலிக்க ஆசீரின் விவிலிய அடிப்படை என்ன? 2 கொரிந்தியர் 13:14.
32. மூவொரு கடவுளின் பெயரிலுள்ள அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் எதைச் சுட்டிக்காட்டுகிறது? பலி அர்ப்பணம் மூவொரு கடவுளை மையமாகக் கொண்டது
33. “இவ்வேளையில் நமது **அறிவும்**, எண்ணங்களும், **இதயங்களும்**, தந்தையாகிய கடவளின் வலப்பக்கத்தில் மெசியா அரசர் வீற்றிருக்கும் உயருன்னதங்களில் இருப்பதாக”
34. "பயபக்தியுடன் **ஆண்டவரை** நாம் போற்றிப்புகழ்வோமாக"
35. பலி அர்ப்பணத்தின் மற்றொரு அடிப்படைப் பகுதி எது? புகழ்ச்சி அர்ப்பணம்
36. கடவுளுக்கு எப்படிப்பட்ட அர்ப்பணம் செய்வது தகுதியும், நீதியும் ஆனதே? புகழ்ச்சி அர்ப்பணம்
37. திருப்பலியில் வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடலின் போது யார் புகழ்ப்பாக்கள் பாடுகின்றனர்? மண்ணுலகத் திருச்சபையும், விண்ணகத்தின் வெற்றித்திருச்சபையும்
38. "தமது மகிமையால் விண்ணும் மண்ணும் ........................................ என்னும் புகழ்ப்பாவின் விவிலிய அடிப்படைகள் யாவை? எசா. 6:3, தி.வெ. 4:8, மத்தேயு 21:9, லூக். 19:38, திருப்பாடல் 118:26
39. எசாயா இறைவாக்கினருக்கு விண்ணக அரியணையில் காட்சி அளித்தவர் யார்? என சுறியானி திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிடுகின்றனர் மகனாகிய கடவுள்
40. திருப்பலியில் வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடலின் போது தூயவர் என மும்முறை மறைமுகமாக போற்றப்படுபவர் யார்? தூய மூவோரிறைவன்
41. திருப்பலியில் வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடலின் போது குருவானவர் அப்பத்தின் மேலும் திராட்சை இரசத்தின் மேலும் கைகளை அசைப்பது எதைக் குறிக்கின்றது? தூய ஆவியார் புறாவின் வடிவில் தூய மறைபொருள்களின் மேல் வந்து குடிகொள்வது
42. திருப்பலியில் வானதூதர்களின் புகழ்ச்சிப்பாடலின் போது குருவானவரின் மென்குரல் மன்றாட்டின் உள்ளடக்கம் என்ன? தூய மூவோரிறைவனின் ஒவ்வொரு நபரையும் தனித்தனியாக போற்றிப் புகழ்ந்து, மீட்புச் செயல்களை நினைவுகூர்தல்

www.malankaralibrary.com

**43.** நற்கருணை நிறுவு கூற்றுகளின் வழியாக வரலாற்றில் கிறிஸ்துவின் மீட்புச் செயல்களை நினைவுகூர்ந்து அவரது பிரதிநிதியாக மீள்நிகழ்வாக்கம் செய்பவர் யார்? குருவானவர்

44. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது "அப்பம் எடுத்து" என்பது எதைக் குறிக்கின்றது? கன்னியிடமிருந்து இயேசு உடலெடுத்ததை

45. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது“தந்தையாகிய கடவுளே உம்மைக்காட்டி போற்றுதல் செய்தார்” என்பது எதைக் குறிக்கின்றது? தந்தைக் கடவுளின் அனுமதியை வேண்டுவது

46. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது "ஆசீர்வதித்து தூய்மைப்படுத்தி" என்பது எதைக் குறிக்கின்றது? தமது உடலை உலக மக்களுக்காக புனிதப்படுத்தினார் என்பதையும்,

47. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது 'பிட்டு' என்பது எதைக் குறிக்கின்றது? தமது பாடுகளையும், சிலுவை மரணத்தையும், தமது உடல் உலகிற்காக நொறுக்கப்பட்டது

48. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது“திருத்தூதர்களுக்கு வழங்கி" என்பது எதைக் குறிக்கின்றது? இறைமக்களுக்கு கையளித்ததையும் நினைவுப்படுத்துகிறது.

49. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது“எடுத்து, ஆசீர்வதித்து, பிட்டு, கொடுத்தார்” என்னும் சொல்வழக்குகள் எதைக் தெளிவுப்படுத்துகிறது? ஒரு திருச்சடங்கு

50. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது 'உங்களுக்காக' என்பது எதைக் குறிக்கின்றது? இயேசு தமது இரத்தத்தை மனுக்குலம் முழுமைக்காகவும் சிந்தினார்

51. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது “பலருக்காகவும்” என்பது எதைக் குறிக்கின்றது? உலக முடிவு வரையிலான எண்ணற்ற மக்கள் இதிலிருந்து பயன் அடைவார்கள்

52. நற்கருணை நிறுவுக் கூற்றுகளின் போது 'சிந்தப்பட்டு' என்பது எதைக் குறிக்கின்றது? இயேசுவின் கல்வாரி இரத்தம் சிந்துதலையும் சிலுவை மரணத்தையும்

53. இறுதி இரவுணவுக்குப்பின் இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது என்ன? “இதை என் நினைவாகச் செய்யுங்கள்”.

54. இதை என் நினைவாகச் செய்யுங்கள். என்னும் அறைகூவலின் பொருள் என்ன? இயேசுவின் மீட்புச் செயல்களின் முழுமையான நினைவு கொண்டாட்டம்

55. Anamnesis என்றால் என்ன? இயேசுவின் மீட்பு நிகழ்வுகளை திருப்பலியில் நினைவுகூரல்

56. 'இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற மன்றாட்டைச் சொல்லும்போது குருவானவர் செய்வது என்ன? இடப்பக்கத்திலிருந்து கரண்டியை எடுத்து தட்டத்திலும், கிண்ணத்திலும், தபலீத்தாவிலும், நெற்றியிலும் தொட்டு, பின்னர் வலப்பக்கமாக உயர்த்திக் காட்டுகிறார்

57. திருவுடலும், திரு இரத்தமும், தனித்தனியாக வைத்திருக்கும் தட்டத்திலும், கிண்ணத்திலும் கரண்டியினால் தொடுவதன் பொருள் என்ன? இயேசுவின் மரணம்

58. தபலீத்தாவில் கரண்டியினால் தொடுவதன் பொருள் என்ன? இயேசுவின் கல்லறை அடக்கம்

59. கரண்டியினால் நெற்றியில் தொடுவதன் பொருள் என்ன? இயேசுவின் உயிர்த்தெழுதல்

www.malankaralibrary.com

60. திருப்பலியில் கரண்டியை இடப்புறமிருந்து வலப்புறத்திற்கு உயர்த்தி திடீரென தாழ்த்துவதன் பொருள் என்ன? இயேசுவின் இரண்டாம் வருகை
61. திருப்பலியில் கரண்டி எதைக் குறிக்கின்றது? இயேசு
62. திருப்பலியில் கரண்டி வைக்கப்பட்டிருக்கும் மெத்தை அல்லது திண்டு (cushion) எதைக் குறிக்கின்றது? இயேசுவின் அரியணை
63. குருவானவர் கரண்டியும் மெத்தையும் வலப்பக்கத்தில் வைப்பது எதைக் குறிக்கின்றது? இறுதித் தீர்ப்பின்போது கிறிஸ்து தந்தைக் கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பது
64. கிழக்குத் திருச்சபைகளில் அருளடையாளங்கள் யாருடைய வருகையால் நிறைவடைகின்றது? தூய ஆவியார் வருகை
65. தூய மறைபொருள்களின்மேல் குருவானவர் கைகளைக் கொண்டாட்டத்துடன் அசைப்பது எதைக் குறிக்கின்றது? தூய ஆவியார் மகிமையுடன் இறங்கி வரல்
66. தூய மறைபொருள்களின்மேல் குருவானவர் கைகளைக் கொண்டாட்டத்துடன் அசைப்பது தூய ஆவியின் எந்த அடையாளம் போன்றது? புறா பறந்து வருவது
67. திருப்பலியில் தூய ஆவியை அழைக்கும் மன்றாட்டு என்றால் என்ன? அப்பமும், திராட்சை இரசமும் இயேசுவின் திரு உடலும், திரு இரத்தமுமாக நிறைவு பெறுவதற்கு வேண்டி தூய ஆவியோடு மன்றாட்டு
68. திருப்பலியில் தூய ஆவியை அழைக்கும் மன்றாட்டின் போது சிறப்பாக நடைபெறுவது என்ன? தூய ஆவியின் குடிகொள்ளுதலால் அப்பமும், திராட்சை இரசமும் இயேசுவின் திருஉடலும் இரு இரத்தமுமாக மாற்றமடைகின்றன
69. பலிப்பொருட்களின் மீதுள்ள தூய ஆவியின் குடிகொள்ளுதல், கடவுள் பலியை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதன் அடையாளமாக குறிப்பிடும் விவிலிய குறிப்புகள் யாவை? 2 குறிப்பேடு 7:1, 1 அரசர்கள் 18:38
70. பரிந்துரை மன்றாட்டினை சுறியானி மொழியில் எவ்வாறு அழைப்பர்? 'துப்தேன்'.
71. துப்தேன் என்றால் அதன் பொருள் என்ன? “அப்படியானால் மீண்டும்”
72. திருப்பலியில் தூய ஆவியின் வருகைக்கான மன்றாட்டுகளின் தொடர்ச்சியானதாக உள்ளவை என்ன? பரிந்துரை மன்றாட்டுக்கள்
73. தூய ஆவியார் பலிப் பொருட்களில் மட்டுமன்றி இறைமக்களின் தேவைகளிலும் இறங்கி வந்து செயல்பட வேண்டும் என மன்றாடும் பரிந்துரை மன்றாட்டுக்களை எந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும்? மீண்டும்
74. பரிந்துரை மன்றாட்டில் மொத்தம் எத்தனை மன்றாட்டுக்கள் உள்ளன? 18
75. பரிந்துரை மன்றாட்டில் பீடச் சிறுவர்கள் உரத்த குரலில் சொல்லுகின்ற மன்றாட்டுக்கள் எத்தனை? 6
76. பரிந்துரை மன்றாட்டில் குருவானவர் மென் குரலிலும், உரத்த குரலிலும் சொல்லுகின்ற மன்றாட்டுக்கள் எத்தனை? 12
77. பரிந்துரை மன்றாட்டுகளில் முதல் மூன்று மன்றாட்டுக்கள் யாருக்குரியவை? வாழ்வோருக்கு
78. பரிந்துரை மன்றாட்டுகளில் கடைசி மூன்று மன்றாட்டுக்கள் யாருக்குரியவை? இறந்தவர்களுக்கு
79. திருப்பலியில் பலி அர்ப்பணம் பகுதி எதனுடன் நிறைவடைகிறது? இயேசுகிறிஸ்துவின் அருளாசீருடன்
80. "கடவுளே, நான் உமக்குச் செய்த **பொருத்தனைகளை** மறக்கவில்லை; உமக்கு நன்றிப் பலி செலுத்துவேன்" (திருப்பாடல்கள் 56 : 12).

**பாடம் 8**

www.malankaralibrary.com

## திருப்பலி – பலிவிருந்து

**பயிற்சி வினாக்கள்**

1. அப்பம் பிட்குதல் திருச்சடங்கு எதனைக் குறிப்பிடுகிறது? விளக்குக?

திருஉடல் பிட்கப்பட்டு அதனை திருத்தட்டத்தில் ஒழுங்குபடுத்தி வைக்கவும் திரு உடலையும், திரு இரத்தத்தையும் ஒன்றோடொன்று கலந்து வைக்கின்ற மிக முக்கியமான திருச்சடங்கைத் திரைக்குள்ளே குருவானவர் மறைவாக நிறைவேற்றுகிறார். இதனை அப்பம் பிட்குதல் திருச்சடங்கு என்கிறோம். இவ்வேளையில், அன்புடையோரே", "கண்டார் எசாயா செரபுகளை" "நீதிபரன் தந்தாய் பாரும்" இவற்றுள் ஒரு பாடல் இசைக்கப்படுகிறது.

குருவானவர் திருஉடலைக் கையிலெடுத்து, உயர்த்தி, இரண்டாக முறிப்பதன் வாயிலாக வார்த்தையாகிய கடவுள் உண்மையாகவே உடலில் பாடுகளை அனுபவித்தார் என்பதையும் சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பதையும், உடல் அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டார் என்பதையும் நினைவுகூர்கிறோம்.

உலகின் பாவத்தைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) பலியிடப்பட்டதனை அப்பம் முறிப்பது பொருள்படுத்துகிறது. முறிக்கப்பட்ட திருஉடல் திருத்தட்டத்தில் ஒழுங்குபடுத்துவதைப் பழைய ஏற்பாட்டில் தகன பலியின் போது பலியிடப்பட்ட விலங்கை பலிபீடத்தில் ஒழுங்காக வைத்துக்கொள்வதோடு ஒப்பிடலாம்.

உடைக்கப்பட்ட அப்பத்தின் ஒரு பகுதி திரு இரத்தத்தில் தோய்த்து அப்பத்தின் உடைக்கப்பட்ட பகுதியில் நனைப்பதன் மூலம் நொறுக்கப்பட்ட இயேசுவின் உடல் அவரது இரத்தத்தால் நனைந்தது எனவும், அவர் இரத்தம் சிந்தி இறந்தார் எனவும் பொருள் கொள்ள வேண்டும். இறுதியாக மூன்று முறை திருஇரத்தத்தைத் திருஉடலில் தோய்த்து ஒன்று சேர்ப்பது இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பதாகும்.

ஏனெனில் உடலின் உயிர் குருதியில் இணைந்துள்ளது. (லேவியர் 17:11) கிறிஸ்து இறந்தவரிடமிருந்து உயிர்த்தபோது ஆன்மா உடலோடு இணைந்து கொண்டது. இது முதல் இயேசுவின் உடல் உயிர்த்தெழுந்த இயேசுவின் மாட்சிமை பெற்ற உடலாகும். இவ்வாறு அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் வாயிலாக இயேசுவின் பாடுகள், சிலுவைமரணம், உயிர்த்தெழுதல் ஆகிய மீட்பின் மறைஉண்மைகளை குருவானவர் அடையாளத்தின் வாயிலாக நினைவு கூருகிறார்.

கிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகளை அடையாளங்களின் வாயிலாக மறைபொருள் தன்மையில் குருவானவர் நினைவுகூர்கிறார். இந்த மறைபொருள் தன்மையைக் குறிப்பிடுவதற்காகவே திரையால் மறைக்கப்படுகிறது.

கிறிஸ்துவின் சிலுவை மரண நேரத்தில் ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரை பூமியில் எங்குமே இருள் பரவியதன் மூலம் இயற்கையும் கூட இயேசுவின் சிலுவை மரணத்தை நேரில் பார்க்கப் பொறுக்காமல் மறைந்து நின்றதைத் திரையிடுவது குறிப்பிடுகிறது.

2. திருஉடல் திருஇரத்தம் ஆகியவற்றின் கொண்டாட்டம் எதைப் பொருள்படுத்துகிறது?

"தூயவை தூய்மையும், புனிதமும் உடையவர்களுக்கு வழங்கப்படுகின்றது" எனக் கூறிக்கொண்டு தூய மறைபொருள்களை விண்ணகத்திற்கு நேராக உயர்த்திக் கொண்டாடுகின்ற திருச்சடங்குதான் இது. இவ்வாறு திருஉடலும், திரு இரத்தமும் உயர்த்திக் கொண்டாடுவது இயேசுவின் விண்ணேற்றத்தைக் குறிக்கின்றது.

விண்ணேற்ற நேரத்தில் இரண்டு வானதூதர்கள் இரு பக்கங்களிலுமாக தோன்றி காட்சி தந்ததை (திருத்தூதர்பணிகள் 1:10) நினைவுகூரும் வண்ணம் குருவானவரின்

www.malankaralibrary.com

இரு பக்கங்களிலும் மெழுகுவர்த்திகளை ஒளிரவிடுகின்றனர். இவ்வேளையில் இறைமக்கள் தூய நற்கருணை ஆசீரால் தூய்மையாக்கப்படுகின்றனர்.

நற்கருணை விருந்து தூய்மையும், புனிதமும் உடையவர்களுக்காக தயாரிக்கப்படுகிறது. ஆனால் தந்தையும் மகனும் தூய ஆவியும் தவிர வேறு தூயவர் இல்லை என கூறிக்கொண்டு இறைமக்கள் தங்கள் பலவீனத்தை அறிக்கையிடுகின்றனர். இந்த அறிக்கையிடுதல் தூய நற்கருணையாகிய விருந்தில் பங்கேற்பதற்காக இறைமக்களுக்குத் தகுதியளிக்கின்றது.

விண்ணேற்றம் அடைந்ததனால் கிறிஸ்துவின் வரலாற்றுப் பிரசன்னம் நமக்கு இல்லை என்றாலும் எதார்த்தமான ஒரு புதிய பிரசன்னம் தூய ஆவியார் மூலமாக நமக்கு அளிக்கப்பட்டது. இப்புதிய பிரசன்னத்தின் மிக உன்னதமான நிலைதான் தய நற்கருணையிலுள்ள இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம். இறைமகனின் பிரசன்னம் இருக்குமிடத்தில் தந்தையும், மகனும், தூய ஆவியும் குடிகொள்கின்றனர். (யோவான் 14:23)

தந்தையும், மகனும், தூய ஆவியும் நம்முடனே என கூறி திருப்பாத்திரங்களை இரண்டு கைகளிலும் சிலுவை வடிவில் ஏந்தியவாறு குருவானவர் கூறுவதும் இதனாலேயே ஆகும். இவ்விதமாக தூய நற்கருணையிலுள்ள இயேசுவின் பிரசன்னத்தின் வாயிலாக தூய மூவொரு கடவுளின் ஒன்றிணைந்த உயிர்த்துடிப்பான பிரசன்னத்தை குருவானவர் அறிக்கையிடவும், போற்றிப் புகழவும் செய்கின்றார்.

இந்த மூவொரு மறைஉண்மையில் பங்கேற்கும் தகுதி பெறுவதற்கான அழைப்பாகவே இம்மன்றாட்டை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

3. தூய நற்கருணை உட்கொள்ளுதல் குறிப்பு வரைக?

திருப்பலி அருளடையாளமும் பலியும் அன்றி ஒரு பலி விருந்து ஆகும். குருவானவர் கைகளில் திருத்தட்டமும், திருக்கிண்ணமும் ஏந்தியவராய் இறை மக்களுக்கு நேராகத் திரும்பி நின்று நற்கருணை பெற்றுக்கொள்வதற்காக அழைப்பது விண்ணக எருசலேமில் ஆண்டவர் ஆயத்தம் செய்கின்ற மாபெரும் விருந்திற்காக அவர் தமது இரண்டாம் வருகையின் மூலம் மனித இனத்தை அழைத்துக் கொள்வதைக் குறிப்பிடுகின்றது. ஆயத்தமாயிருப்பவர்கள் அனைவரும் இயேசுவோடு சேர்ந்து திருமண மண்டபத்திற்குள் புகுந்து விருந்து சுவைத்து மகிழ்வர்.

ஒவ்வொரு நற்கருணை அனுபவித்தலும் இறை இயேசுவில் இரண்டாம் வருகையின் போது அவருடன் ஒருமித்து அனுபவிக்கும் நிரந்தரமான விருந்தின் முன்சுவையேயாகும். காணாமற்போன மகனுக்காக தந்தை ஆயத்தப்படுத்திய விருந்தாகவும் விண்ணக மணமகன், மணமகளாகிய திருச்சபைக்காக சொந்த உடலையும் இரத்தத்தையும் கொண்டு ஆயத்தம் செய்த திருமண விருந்தாகவும் தூய நற்கருணை உட்கொள்வதை உணர்ந்து கொள்வோம்.

எசாயா இறைவாக்கினர் அவரது பாவமாசுகள் அகற்றப்படுவதற்கும், பாவம் மன்னிக்கப்படுவதற்குமாக செராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அவரது வாயைத் தொட்டார் (எசாயா 6:6-7), அதுபோலவே இயேசுவின் திருஉடலும், திரு இரத்தமுமான நெருப்புத்தழல் பாவமன்னிப்புக்கும் நிலைவாழ்வுக்குமாக விசுவாசிகளுக்கு வழங்கப்படுகின்றது.

நற்கருணை வழங்கிய குருவானவர் மீண்டும் இறைமக்களுக்கு நேராகத் திரும்பி இறுதித் தீர்ப்பைக் குறிப்பிடும் வகையில் திருத்தட்டமும், திருக்கிண்ணம் ஏந்தியிருக்கும் கைகளை இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் பிடித்துக் கொள்கிறார். தீமை செய்தவர்களை இடப்பக்கமாகவும், நன்மை செய்தவர்களை வலப்பக்கமாகவும் இறுதித் தீர்ப்பின் போது மாற்றுவதை இது குறிப்பிடுகிறது.

தீர்ப்பிற்குப்பின் வலப்பக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தன்னுடன் தந்தையின் உறைவிடத்திற்கு (யோவான் 14 : 3) இயேசு அழைத்துச் செல்வதன் அறிகுறியாக குருவானவர் தூய மறைபொருள்களுடன் பலிபீடத்திற்குத் திரும்பிச்

www.malankaralibrary.com

செல்கிறார். அங்கே அனைவரும் சேர்ந்து “இறைவா மண்ணோர் போற்றிடுவர்” என்னும் துதிப்பாடலைப் பாடுகின்றனர்.

**குறு வினாக்கள்**

1. திருப்பலியில் பலிவிருந்து எனப்படும் பகுதி எது? அப்பம் பிட்குதல் திருச்சடங்கு முதல் இறுதி ஆசீர் வழங்குவது வரையிலான பகுதி
2. நற்கருணை மன்றாட்டின் (அனாஃபொறா) இரண்டாம் பகுதி எது? பலிவிருந்து
3. திரு உடலையும், திரு இரத்தத்தையும் ஒன்றோடொன்று கலந்து வைக்கின்ற மிக முக்கியமான திருச்சடங்கிற்குப் பெயர் என்ன? அப்பம் பிட்குதல் திருச்சடங்கு
4. அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் போது பாடப்படும் பாடல்கள் யாவை? “அன்புடையோரே உம் வாசல்", "கண்டார் எசாயா செரபுகளை” “நீதிபரன் தந்தாய் பாரும்”
5. அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் போது குருவானவர் திருஉடலைக் கையிலெடுத்து, உயர்த்தி, இரண்டாக முறிப்பதன் பொருள் என்ன? வார்த்தையாகிய கடவுள் உடலில் பாடுகளை அனுபவித்து, உடல் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்
6. அப்பம் பிட்குதல் திருச்சடங்கைக் குறிக்கும் விவிலியப்பகுதி எது? இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்! (யோவான் 1:29)
7. உடைக்கப்பட்ட அப்பத்தின் ஒரு பகுதி திரு இரத்தத்தில் தோய்த்து அப்பத்தின் உடைக்கப்பட்ட பகுதியில் நனைப்பது எதைக் குறிப்பிடுகிறது? நொறுக்கப்பட்ட இயேசுவின் உடல் இரத்தத்தால் நனைந்தது எனவும், அவர் இரத்தம் சிந்தி இறந்தார் எனவும்
8. மூன்று முறை திருஇரத்தத்தைத் திருஉடலில் தோய்த்து ஒன்று சேர்ப்பது எதைக் குறிக்கின்றது? இயேசுவின் உயிர்த்தெழுதல்
9. உடலின் உயிர் குருதியில் இணைந்துள்ளது என்ற விவிலியப்பகுதி எங்குள்ளது லேவியர் 17:11
10. உயிர்த்தெழுந்த இயேசுவின் உடல் எத்தகையது? மாட்சிமை பெற்ற உடலாகும்.
11. அப்பம் பிட்குதல் திருச்சடங்கில் நினைவுகூரும் மீட்பின் மறைஉண்மைகள் யாவை? இயேசுவின் பாடுகள், சிலுவைமரணம், உயிர்த்தெழுதல்
12. அப்பம் பிட்குதல் திருச்சடங்கில் மறைபொருள் தன்மையைக் குறிப்பிடுவதற்காக செய்யப்படுவது என்ன? தூயகம் திரையால் மறைக்கப்படுகிறது.
13. கிறிஸ்துவின் சிலுவை மரண நேரத்தில் ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரை பூமியில் எங்குமே இருள் பரவியதைக் குறிப்பிட திருப்பலியில் அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் போது செய்யப்படுவது என்ன? தூயகம் திரையால் மறைக்கப்படுவது
14. அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் இறுதியில் திரை அகற்றப்படுவது எதைக் குறிக்கின்றது? சிலுவை மரண வேளையில் எருசலேம் திருக்கோவிலின் திரை மேல்மட்டத்திலிருந்து அடிவரை நடுவே கிழிந்தது
15. அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் இறுதியில் திரை அகற்றுவது எதை சுட்டிக்காட்டுகிறது? பாவத்தால் இழந்துபோன இன்பவனத்தையும், விண்ணகத் தந்தையின் உறைவிடத்தையும், இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்ப்பு வழியாக மனித இனம் மீண்டும் பெற்றுக்கொள்வதை
16. அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் இறுதியில் திரை அகற்றுதலுக்கும் உயிர்ப்புக்கும் உள்ள தொடர்பு என்ன? இயேசுவின் சிலுவை மரணமும், உயிர்ப்பும்

www.malankaralibrary.com

நினைவுகூரப்பட்டு திரை அகற்றுவது விண்ணகம் திறப்பதையும், உயிர்த்தெழுந்த இயேசு தமது திருத்தூதர்களுக்குக் காட்சி அளித்ததையும்

17. ஆண்டவரின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக இறைமக்களாய் மாறியிருக்கும் நாம் ஆன்ம திடனுடன் திருப்பலியில் எச்செபத்தை சொல்லுகிறோம்? “பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே”
18. பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே” என்ற செபத்தை எருசலேமின் புனித கூறிலோஸ் எவ்வாறு வருணிக்கிறார்? ”கிறிஸ்தவத் திருச்சபையின் குடும்ப செபம்”
19. திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்களின் மாபெரும் உரிமையான செபம் எது? “பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே”
20. எதன் மூலம் நாம் கடவுளை தந்தையே என அழைக்க உரிமை பெறுகிறோம்? திருமுழுக்கு
21. தலை வணங்கி நிற்பதன் பொருள் என்ன? கீழ்ப்படிதல்
22. தூய நற்கருணையைப் பெற்றுக்கொள்ள நாம் தகுதியுடையவரல்லர் என்பதை எச்செயலால் காட்டுகிறோம்? தலைகுனிந்து நிற்கிறோம்
23. தூய நற்கருணையை சோதித்தறிந்த பின்னரே உண்ண வேண்டும் என்ற விவிலிய அடிப்படை எது? 1கொரிந்தியர் 11:28
24. அப்பம் பிட்குதல் திருச்சடங்கிற்குப் பின்னர் குருவானவரின் பல சமாதான ஆசீர்வாதங்கள் எதை நினைவூட்டுகிறது? இயேசு உயிர்த்தெழுந்த பின் பலமுறை சீடர்களுக்குக் காட்சியளித்து சமாதான ஆசீர் வழங்கியது.
25. திருப்பலியில் குருவானவரின் மூன்றாவது பேராசீர் எதைக் குறிப்பிடுகின்றது? விண்ணேற்றம் அடைந்தபோத இயேசு சீடர்களை ஒலிவமலைக்கு அழைத்துச் சென்று தமது திருக்கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தது.
26. "தூயவை தூய்மையும், புனிதமும் உடையவர்களுக்கு வழங்கப்படுகின்றது” எனக் கூறிக்கொண்டு தூய மறைபொருள்களை விண்ணகத்திற்கு நேராக உயர்த்திக் கொண்டாடுகின்ற திருச்சடங்கு எதைக் குறிக்கின்றது? இயேசுவின் விண்ணேற்றம்
27. விண்ணேற்ற நேரத்தில் இரண்டு வானதூதர்கள் இரு பக்கங்களிலுமாக தோன்றி காட்சி தந்ததை குறிப்பிடும் விவிலியப் பகுதி எது? திருத்தூதர்பணிகள் 1:10
28. தூய நற்கருணையிலுள்ள இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் வழியாக தந்தையும், மகனும், தூய ஆவியும் குடிகொள்கின்றனர் என்பதன் விவிலிய அடிப்படை எது?. யோவான் 14:23
29. குக்கிலியோன் என்னும் சொல்லின் பொருள் என்ன? 'வட்டம்'
30. குக்கிலியோன் என்னும் சொல்லை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்? வட்டத்தைப் போன்று ஒரு முறை முழுமையாக செபம் சொல்லப்படுகிறது
31. மொத்தம் எத்தனை பெரிய குக்கிலியோன்கள் உள்ளன?. ஐந்து
32. நின்றாள் மாண்புடன் அரசமகள் .... என்ற குக்கிலியோனின் விவிலிய அடிப்படை எது? திருப்பாடல்கள் 45 : 9-11
33. நீதிமான் பனைபோல் செழித்திடுவார் ... என்ற குக்கிலியோனின் விவிலிய அடிப்படை எது? திருப்பாடல்கள் 92:12-14
34. அணிவார் நீதியைக் குருவானவர்கள் ..... என்ற குக்கிலியோனின் விவிலிய அடிப்படை எது? திருப்பாடல்கள் 132 : 9-12
35. மக்கள் மேல் தந்தை இரங்குவதைப்போல்..... என்ற குக்கிலியோனின் விவிலிய அடிப்படை எது? திருப்பாடல்கள் 103 : 13-15

www.malankaralibrary.com

36. உம்மால் பகைவனை வீழ்த்திடுவோம் நாங்கள்... என்ற குக்கிலியோனின் விவிலிய அடிப்படை எது? திருப்பாடல்கள் 45 :5-7
37. இறந்தவர்களோடு வாழ்வோரின் மன்றாட்டுக்களும் நறுமணத் தூபத்துடன் திருப்பலியில் கடவுளின் திருமுன்னிலை செல்லும் என்பதனை அடையாளப்படுத்தும் செயல் எது? தூப அர்ப்பணம்
38. குக்கிலியோன் நிறைவடையும் போது திரையிடப்படுவதன் அர்த்தம் என்ன? ஆண்டவரின் விண்ணேற்றம் முதல் அவர் கட்புலனாகாமல் இருப்பதையும், அவரது இரண்டாம் வருகைக்காக காத்திருப்பதையும்
39. மலங்கரை திருப்பலியின் எத்தகைய ஆசீர் வழங்கும் முறை சிறப்பம்சமாக காணப்படுகிறது? தூய நற்கருணையால் ஆசீர் வழங்கும் முறை
40. தூய நற்கருணையால் ஆசீர் வழங்குவது எதைக் குறிப்பிடுகிறது? விண்ணகம் திறக்கப்பட்டதையும், இயேசு கிறிஸ்துவின் மாட்சிமையுடனான இரண்டாம் வருகையையும்
41. குருவானவர் கொண்டாட்டத்துடன் தூய நற்கருணையால் ஆசீர் வழங்க மேற்குத்திசை நோக்கி வரும் போது ஆலய மணிகள் முழங்கச் செய்வது எதனை நினைவு கூருகின்றது? இயேசுவின் இரண்டாம் வருகையின்போது எக்காள முழக்கம்
42. தூய நற்கருணையால் ஆசீர் வழங்கும் போது இரு பக்கங்களிலும் எரிகின்ற மெழுகுவர்த்திகளுடன் நிற்கும் பீடச்சிறுவர்கள் எதனை சுட்டிக்காட்டுகிறது? ஆண்டவரின் இரண்டாம் வருகையின் போது உடன் வருகின்ற விண்ணகத்தூதர்களை
43. தூய நற்கருணையால் ஆசீர் வழங்கும் போது பீடச்சிறுவர்களின் வெள்ளை நிற ஆடை எதைக் குறிப்பிடுகிறது? புனிதர்களின் மகிமையின் ஆடையாக
44. குருவானவர் கைகளில் திருத்தட்டமும், திருக்கிண்ணமும் ஏந்தியவராய் இறை மக்களை நற்கருணை பெற்றுக்கொள்ள அழைப்பது எதைக் குறிப்பிடுகின்றது? ஆண்டவரின் மாபெரும் விருந்திற்காக அவர் தமது இரண்டாம் வருகையின் மூலம் மனித இனத்தை அழைத்தல்
45. ஒவ்வொரு முறை நற்கருணை அனுபவித்தலும் எதற்கு முன்சுவை? இரண்டாம் வருகையின் போது இறை இயேசுவோடு அனுபவிக்கும் நிரந்தரமான விருந்து
46. காணாமற்போன மகனுக்காக தந்தை ஆயத்தப்படுத்திய விருந்தாக கருதப்படுவது எது? நற்கருணை
47. விண்ணக மணமகன், மணமகளாகிய திருச்சபைக்காக சொந்த உடலாலும் இரத்தத்தாலும் ஆயத்தம் செய்த திருமண விருந்து எது? தூய நற்கருணை
48. யாருடைய பாவங்கள் மன்னிக்கப்பட செராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் அவரது வாயைத் தொட்டார்? எசாயா இறைவாக்கினர்
49. இயேசுவின் திருஉடலும், திரு இரத்தமுமான <u>**நெருப்புத்தழல்**</u> பாவமன்னிப்புக்கும் நிலைவாழ்வுக்குமாக விசுவாசிகளுக்கு வழங்கப்படுகின்றது.
50. நற்கருணை வழங்கிய பின்னர் குருவானவர் இறைமக்களுக்கு நேராகத் திரும்பி திருத்தட்டமும், திருக்கிண்ணம் ஏந்தியிருக்கும் கைகளை இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் பிடித்துக் கொள்வதன் அடையாளம் என்ன? இறுதித் தீர்ப்பைக் குறிப்பிடும் வகையில் தீமை செய்தவர்களை இடப்பக்கமாகவும், நன்மை செய்தவர்களை வலப்பக்கமாகவும்
51. நற்கருணை வழங்கிய பின்னர் நடத்தப்படும் தூய நற்கருணை ஆசீரைத் தொடர்ந்து குருவானவர் தூய மறைபொருள்களுடன் பலிபீடத்திற்குத் திரும்பிச் செல்வது எதைக் குற்ப்பிடுகிறது? இறுதித் தீர்ப்புக்குப்பின் வலப்பக்கமாக

www.malankaralibrary.com

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தன்னுடன் தந்தையின் உறைவிடத்திற்கு இயேசு அழைத்துச் செல்வதன் அறிகுறி

52. திருஉடல் திருஇரத்தத்தை அனுபவிக்கும் வாய்ப்பைத் தந்த இரக்கத்திற்காக குருவானவர் நன்றி செலுத்தும் மன்றாட்டுகளுள் முதல் மன்றாட்டு எது? மீட்பின் திட்டங்களை வகுத்துத் தந்த தந்தைக் கடவுளுக்கான நன்றி அர்ப்பணம்.

**53.** திருஉடல் திருஇரத்தத்தை அனுபவிக்கும் வாய்ப்பைத் தந்த இரக்கத்திற்காக குருவானவர் நன்றி செலுத்தும் மன்றாட்டுகளுள் இரண்டாவது மன்றாட்டு எது? மீட்பின் நிகழ்வுகளை செயல்படுத்திய மகனாகிய கடவுளுக்காக நன்றி வெளிப்படுத்துதல்

54. திருப்பலியில் இறுதி ஆசீர்வாதத்திற்கு முன்னதாக பாடுகின்ற பாடலுக்குப் பெயர் என்ன? ஹூத்தோமா

55. ஹூத்தோமா என்ற சுறியானிச் சொல்லின் பொருள் என்ன? முத்திரை வைத்தல், உறுதிப்படுத்துதல்

56. திருப்பலியில் முத்திரையிடல் திருச்சடங்கின் வழியாக நாம் அறிக்கையிடுவது என்ன? அன்றாட வாழ்க்கையில் நாம் இறைஉறவில் வாழ்ந்து கொள்வோம் என்று நாம் கடவுளுடன் உடன்படிக்கை செய்து கொள்கின்றோம்.

57. திருப்பலியில் இறுதி ஆசீர்வாதத்திற்குப் பின்னர் திரையிடுவது எதனை சுட்டிக்காட்டுகிறது? இவ்வுலகவாழ்வு முடிவுற்றது எனவும், புதிய உலகம் தொடங்கிவிட்டது எனவும்

58. திருப்பலி நிறைவுற்ற பின்னர் குருவானவர் எவ்வாறு பலிபீடத்தை புகழ்ந்து விடைபெறுகிறார்? “ஆண்டவரின் பரிசுத்த பலிபீடமே சமாதானத்தோடு வாழ்க” “தூய்மையானதும் பாவபரிகாரம் அளிப்பதுமான பலிபீடமே சமாதானத்தோடு வாழ்க” “உயிரின் மேசையாகிய பரிசுத்த பலிபீடமே சமாதானத்துடன் வாழ்க”

59. திருப்பலியின் இறுதியாக இறைமக்கள் எவ்வாறு விடைபெற்றுச் செல்கின்றனர்? குருவானவரின் திருக்கரங்களையோ திருச்சிலுவையையோ முத்தம் செய்து

60. “விண்ணிலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் **உணவு** நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்” (யோவான் 6:51).

## பாடம் 9

## இந்தியாவில் பல்வேறு கிறிஸ்தவ திருச்சபைகள்

பயிற்சி வினாக்கள்

1. கூனன்குரிசு சபதத்திற்கான காரணங்கள் யாவை?

கிபி. 1498-ல் வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலமி கேரளாவில் வந்து சந்தா அவரைத் தொடர்ந்து ஏராளமான போர்ச்சுகீசிய வணிகர்களும், மறைப்பணியாளர்களும் இங்கே வருகை தந்தனர். அவர்களும் கிறிஸ்தவர்களே என்பதால் இங்கேயுள்ள கிறிஸ்தவர்கள் அவர்களை சகோதரர்களாய் வரவேற்று, ஆலயங்களில் ஆராதனை மற்றும் திருச்சட நடத்துவதற்கு அனுமதியும் அளித்தனர். ஆனால் போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள் கல்தேய சுறியானி ஆராதனை முறையையோ, கேரள திருச்சபையின் மரபினையோ, பாரசீக திருச்சபையுடனான உறவினையோ தகுந்த முறையில் புரிந்து கொள்ளாமல் செயல்பட்டனர். இலத்தீன் ஆராதனை முறையையும், இலத்தீன் ஆன்மீக வழிபாட்டு முறைகளையும் இங்கே வலுக்கட்டாயமாகப் புகுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர். பாரசீக ஆயர்கள் இங்கே வருவதைத் தடைசெய்தனர். இவ்வாறு மார்த்தோமா கிறிஸ்தவர்களுக்கும், போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களுக்கும் இடையே பிரிவினை ஏற்பட்டது.

கி.பி.1653-ல் நடைபெற்ற கூனன்குரிசு சத்தியம் என்னும் வரலாற்று நிகழ்ச்சியின் வாயிலாக எல்லா மார்த்தோமா கிறிஸ்தவர்களும் ஒருங்கிணைந்து

www.malankaralibrary.com

போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களுக்கு எதிராக சபதம் மேற்கொள்ளவும் அவர்களுடனான உறவைத் துண்டித்துக்கொள்ளவும் செய்தனர்.

2 கூனன்குரிசு சபதத்தினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

கூனன்குரிசு சபதம் நடைபெற்ற தினத்தன்று ஆர்ச்சுடீக்கனாக செயல்பட்டுவந்த பறம்பில் தோமா என்னும் குருவானவரை 12 குருக்கள் சேர்ந்து கைவைப்பு நடத்தி முதலாம் தோமா என்னும் பெயரில் ஆயராகத் திருநிலைப்படுத்தினர். மேலும் நான்கு ஆலோசகர்களையும் நியமித்தனர். ஆனால் அந்த ஆயர் திருநிலைப்பாடு முறையானதல்ல என்று எல்லோரும் உணர்ந்து கொண்டனர்.

1665-ல் சுறியானி கிறிஸ்தவர்களுக்காக மலபாரில் அப்போஸ்தலிக்க ஆட்சி பீடம் (Vicariate) பாப்பரசரின் அனுமதியுடன் நிறுவப்பட்டு, ஜோசப் செபஸ்தியானி என்பவர் முதல் ஆயராக நியமிக்கப்படவும் செய்தார். அவர் முதலாம் தோமாவின் ஆலோசகர்களில் ஒருவராகிய பரம்பில் சாண்டி கத்தனார் என்பவரை ஆயராகத் திருநிலைப்படுத்தினார். இவ்வாறு தன்னாட்டு ஆயர் ஒருவரை நியமித்துக்கொண்டே கூனன் குரிசு சபதம் மூலம் பிரிந்து போனவர்களை அமைதிப்படுத்தித் திரும்ப அழைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தன்னாட்டு ஆயரைப் பெற்றதனால் மொத்தம் 110 கோவில்களில் 64 கோவில்களின் இறைமக்கள் முழுமையாகவும், 20 கோவில்களின் ஒரு பகுதி இறைமக்கள் சாண்டி ஆயரை ஏற்றுக்கொண்டனர். ஆனால் 26 கோவில்களில் இறைமக்கள் மகள் கோமாவை அயராக ஏற்றுக்கொண்டனர். சாண்டி ஆயரை ஏற்றுக்கொண்டவர்கள் கல்தேய சுறியானி ஆராதனை முறையைப் பயன்படுத்தவும், உரோமையுடனும் திருத்தந்தையுடனும் உறவு வைத்துக்கொள்ளவும் செய்தனர். அதனால் இவர்கள் பழைய கூற்றினர் என அறியப்பட்டனர். அவர்களே சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினர் ஆவார்கள்.

முதலாம் மார்தோமா ஆயரை ஏற்றுக்கொள்ளவும், கல்தேய சுறியானி ஆராதனை முறையை புறக்கணிக்கவும், உரோமன் திருச்சபையுடனும் பாப்பரசருடனும் உள்ள உறவை முறித்துக்கொள்ளவும் செய்தவர்கள் புத்தன் கூற்றினர் என அறியப்பட்டனர். கி.பி.451-ல் நடைபெற்ற கல்கதோனியா திருச்சங்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகி நின்ற அந்தியோக்கியாவிலுள்ள யாக்கோபாய திருச்சபையுடன் புத்தன் கூற்றினர்கள் தொடர்பு கொள்ளவும், அந்தியோக்கியன் ஆராதனை முறையை ஏற்றுக்கொள்ளவும் செய்தனர். எனவே புத்தன் கூற்றினர்கள் பிற்காலத்தில் யாக்கோபாய திருச்சபையினர் எனவும் அறியப்பட்டனர். இவ்விதமாக ஒன்றியிருந்த கிறிஸ்தவதிருச்சபை இரண்டாகப் பிளவுபட்டது. தொடர்ந்து புத்தன் கூற்று திருச்சபையில் பிரிவினைகள் பல ஏற்பட்டன. இன்று இந்தியாவில் குறிப்பாக, கேரளாவில் காணப்படும் வெவ்வேறான கிறிஸ்தவ சமூகங்கள் அனைத்தும் 1653-க்குப் பின் தோன்றியவை ஆகும்.

3. இந்தியாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகள் யாவை?

அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையில் 24 தனித்திருச்சபைகள் உள்ளன. இந்தியாவில் கத்தோலிக்க திருச்சபைக்கு மூன்று தனித்திருச்சபைகள் உள்ளன. அவை சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபை, இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை, சீறோ மலங்கரை கத்தோலிக்க திருச்சபை என்பவையே.

**(i) சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபை**

கி.பி.1653 வரையிலும் ஒரே கிறிஸ்தவச் சமூகமாக இருந்து வந்த மார்தோமா கிறிஸ்தவர்களிடையே பிளவு ஏற்பட்ட போது கல்தேய சுறியானி ஆராதனை முறையை ஏற்றுக் கொண்டு அதைப் பின்பற்றவும் உரோமை திருச்சபையுடனான உறவை வலுப்படுத்தவும் செய்த சமூகம் தான் பழைய கூற்றினர் அல்லது சீறோ மலபார் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். தன்னாட்டு ஆயரான சாண்டி ஆயருக்குப் பின் 1665-ல் மீண்டும் வெளிநாட்டைச் சார்ந்த கர்மலித்தா திருச்சபையின் ஆயர்கள் இச்திருச்சபையை ஆட்சி செய்தனர். 1782-ல் தன்னாட்டவரான மார் ஜோசப்

www.malankaralibrary.com

கரியாற்றில் ஆயராகி இரு திருச்சபைகளின் ஒன்றிப்புக்கான முயற்சியில் ஈடுபட்டார். 1887-ல் சீறோ மலபார் திருச்சபையினருக்காக கோட்டயம், திருச்சூர் ஆகிய இடங்களில் தனி ஆட்சி பீடங்கள் (Vicariates) உரோமையிலிருந்து நிறுவப்பட்டன.

இதன் மூலம் சீறோ மலபார் சுறியானி கத்தோலிக்க கிறிஸ்தவர்களை இலத்தீன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடமிருந்து வேறுபடுத்தினர். 1896-ல் மேற்குறிப்பிட்ட இரண்டு ஆட்சி பீடங்களும் திருச்சூர், எர்ணாகுளம், சங்ஙனாசேரி ஆகிய மூன்று மறைமாவட்டங்களாக அமைக்கப்பட்டன. தன்னாட்டு ஆயர்களுக்கு ஆட்சிப் பொறுப்புகள் வழங்கப்பட்டன. 1911-ல் கோட்டயம் மறைமாவட்டம் அமைக்கப்பட்டது. 1923ல் எர்ணாகுளம் மறைமாவட்டத்தை மறைமாநிலமாகவும், திருச்சூர், சங்ஙனாசேரி. கோட்டயம் ஆகியவை சமதகுதியுடைய மறைமாவட்டங்களாக உரோமையிலிருந்து அறிவிக்கப்பட்டன. 1992-ல் சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையை மாமன்ற (Svnod) அமைப்புடைய உயர் பேராயத் திருச்சபையாக (Major Archiepiscopal church) திருத்தந்தையால் உயர்த்தப்பட்டது. பேராயர் மார் வர்க்கி விதயத்தில் இத்திருச்சபையின் தலைவரும், உயர் பேராயருமாக உயர்த்தப்படவும் செய்தார்.

இப்போது இச்திருச்சபையில் 31 மறைமாவட்டங்கள் உள்ளன. இவற்றுள் கேரளாவிற்கு வெளியே கர்நாடகாவில் 3 மறைமாவட்டங்களும், தமிழ்நாட்டில் 3 மறைமாவட்டங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை மறைமாவட்டத்தில் பணியாற்றிய மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகை தான் பதவி உயர்வு பெற்று தற்போதைய சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பேருயர் பேராயராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திருச்சபையில் தற்போது சுமார் 40 இலட்சம் இறைமக்கள் உள்ளன கேரள கத்தோலிக்க கிறிஸ்தவர்களில் மிகப்பெரும் கிறிஸ்தவ சமூகம் இதுவேயாகும்.

**(ii) இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை**

இந்தியாவிலுள்ள இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை புனித பேதுருவினுடையவும். - பவுலினுடையவும் திருத்தாது மரபைக் கொண்ட உரோமைத் திருச்சபையின் ஒரு பாகம் 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள் இந்தியாவில் குறிப்பாக கேரளாவில் வருகைதந்து, நற்செய்தியைப் பறைசாற்றி இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை வளரச்செய்தனர். கொச்சி, கொல்லம், திருவிதாங்கூர். கண்ணூர் ஆகிய இடங்களில் நற்செய்தி பணியாற்றினர். போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களுள் மிக முக்கியமானவா புனித பிரான்சிஸ் சவேரியார். அவர் கேரளாவின் கடலோரம் வழியாக குமரி மாவட்டத்திலும் பின்பு தூத்துக்குடி வரையிலும் நற்செய்தி அறிவித்து ஆயிரக்கணக்கான மக்களை இலத்தீன் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக் கொண்டார்.

கேரளாவில் இலத்தீன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வரலாறு மார்த்தோமா கிறிஸ்தவர்களின் வரலாற்றுடன் தொடர்புடையதாகும். சீறோ மலபார் மற்றும் இலத்தீன் கத்தோலிக்கருடைய அப்போதைய ஆயர்கள் போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களாகவே இருந்தனர். பிற்காலத்தில் இரு தரப்பினருக்காக தனித்தனி மறைமாவட்டங்கள் அமைக்கப்பட்டன. 1886-ல் திருத்தந்தை 13-ஆம் சிங்காராயர் இந்தியாவில் இலத்தீன் திரு ஆட்சிப் பீடம் நிறுவிய போது வராப்புழை கேரளாவில் இலத்தீன் திருச்சபையின் மறைமாநிலமாகவும், கொல்லம் மறைமாவட்டமாகவும் அமைக்கப்பட்டன. -

16-ம் நூற்றாண்டு வரை கேரளாவில் கல்தேய சுறியானி ஆராதனை முறை மட்டுமே இருந்து வந்தது. போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களின் வருகையுடன் கேரளாவிலம். இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் இலத்தீன் ஆராதனை முறையைப் பயன்படுத்தவும், இலத்தீன் கத்தோலிக்க திருச்சபையை நிறுவவும் செய்தனர். உரோமை இலத்தீன் கத்தோலிக்க திருச்சபையின் ஒருபகுதியானதால் இச்திருச்சபையினர் இலத்தீன் கத்தோலிக்கர் எனவம் போக கத்தோலிக்கர் எனவும்

www.malankaralibrary.com

அழைக்கப்படுகின்றனர். இந்தியாவில் எல்லா இடங்களில் இச்திருச்சபையினர் பரவியுள்ளனர்.

**(iii) சீறோ மலங்கரை கத்தோலிக்க திருச்சபை**

கி.பி. 1653-ல் நடைபெற்ற கூனன் குரிசு சபதத்திற்குப் பின் புத்தன் கூற்று பிரிவினர்கம் கத்தோலிக்க திருச்சபையுடனான உறவைப் புறக்கணிக்கவும் அந்தியோக்கியன் யாக்கே திருச்சபையுடன் உறவை ஏற்படுத்திக்கொள்ளவும் செய்தனர். ஆனால் அவர்களை கத்தோலிக்க அன்புறவில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் முதலாம் மார்த்தோமாவின் காலம் முதல் மேற்கொள்ளப்பட்டாலும் எந்த பயனும் அளிக்கவில்லை. முதன் முதலில் புத்தன் கூற்றினருக்கிடையே 1912-ல் ஆர்த்தடாக்ஸ் என்னும் தனி திருச்சபை உருவானது. யாக்கோபாய திருச்சபையுடன் தொடர்ந்து நீதிமன்ற வழக்குகளில் ஈடுபட்டிருந்த ஆர்த்தடாக்ஸ் திருச்சபை கத்தோலிக்க திருச்சபையுடனான மறுஒன்றிப்பு குறித்து சிந்திக்கத் தொடங்கியது.

மலங்கரை திருச்சபையின் பழைமை வாய்ந்த சடங்கு முறைகளையும் மரபுசெல்வத்தையும், அந்தியோக்கியன் சுறியானி ஆராதனை முறையையும் குறையின்றி பாதுகாத்துக்கொண்டு கத்தோலிக்க திருச்சபையுடன் ஒன்றிப்படைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1926 நவம்பர் 1-ல் நடைபெற்ற ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் ஆயர் மன்றம் மறுஒன்றிப்பு முயற்சிக்கான பொறுப்பை பெதனியின் ஆயரான மார் இவானியோசிடம் ஒப்படைத்தது. அவருடைய முயற்சியால் உரோமையிலிருந்து மறுஒன்றிப்புக்கான அனுமதி கிடைக்கப் பெற்ற போது, மறுஒன்றிப்புக்கு ஆர்வம் காட்டிய பல ஆயர்களும் பின் வாங்கி விட்டனர். எனினும் 1653-ல் இழந்து விட்ட கத்தோலிக்க திருச்சபையுடனான உறவை மீண்டும் நிலைநாட்டிட வேண்டுமென்று மார் இவானியோஸ் ஆண்டகை உறுதியாகத் தீர்மானித்தார்.

அதன்படி பேராயர் மார் இவானியோஸ், ஆயர் மார் தெயோபிலோஸ், அருட்தந்தை ஜாண் ஓ.ஐ.சி, திருத்தொண்டர் அலக்ஸியோஸ், கிளிலேத்து, சாக்கோ ஆகிய ஐந்து பேரும் மலங்கரை திருச்சபையின் பிரதிநிதிகளாய் 1930 செப்டம்பர் 20-ல் கொல்லம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைத்து இலத்தீன் கத்தோலிக்க ஆயர் மேதகு பென்சிகர் ஆண்டகை முன்னிலையில் கத்தோலிக்க திருச்சபையோடு மறு ஒன்றிப்படைந்து கொண்டனர். 1932-ல் "கிறிஸ்தோ பாஸ்தோரும் பிரின்சிப்பி" என்னும் திருமடல் வாயிலாக மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்டது. 1653-ல் கத்தோலிக்க திருச்சபையுடனான உறவை இழந்து விட்ட புத்தன் கூற்றினரில் ஒரு பகுதியினர் 1930-ல் கத்தோலிக்க திருச்சபையுடன் மறுஒன்றிப்படைந்தனர். இவர்களே சீறோ மலங்கரை கத்தோலிக்க திருச்சபையினர்.

மறுஒன்றிப்பின் 84 ஆண்டுகள் கடந்து விட்ட சீறோ மலங்கரை திருச்சபை வளர்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. "மிக விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் திருச்சபை என சீரோ மலங்கரை திருச்சபையைக் குறித்து திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் கூறியுள்ளார். 2005 பெப்ரவரி 10-ஆம் நாள் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இச்திருச்சபையை மாமன்ற அமைப்புள்ளதும் (Synod) சுயாட்சி உரிமையும் உள்ள உயர்பேராயத் திருச்சபையாக (Major Archiepiscopal Church) உயர்த்தியுள்ளார். மேலும், இத்திருச்சபையின் தலைவராயிருந்த சிறில் மார் பசேலியோஸ் ஆண்டகையை உயர்பேராயர் ஆகவும் (Major Archbishop), காதோலிக்க பாவா ஆகவும் (Catholicose) உயர்த்தியுள்ளார்.

தற்போது 11 மறைமாவட்ட அமைப்புகள் கொண்ட இச்திருச்சபையில் ஒரு மறையாட்சி வட்டமும், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இறைமக்களும் உள்ளனர். இப்போது மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும், தந்தையுமாயிருப்பவர் மோறான் மோர் பசேலியோஸ் க்ளீமிஸ் காதோலிக்க பாவா ஆவார்கள். இவர் கர்தினால் பொறுப்பிற்கு உயர்த்தப்பட்டது மலங்கரை திருச்சபைக்கு பெருமை சேர்க்கிறது. தற்போது இவருடன் 13 க்கும் மேற்பட்ட ஆயர்கள் இறைபணியாற்றுகின்றனர்.

www.malankaralibrary.com

4. இந்தியாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபைக்குப் புறம்பான திருச்சபைகள் யாவை?

**1. யாக்கோபாய சுறியானி திருச்சபை**

கி.பி. 1653 ல் நடைபெற்ற கூனன் குரிசு சபதத்திற்குப் பின் புத்தன் கூற்று சமூகத்தினர் ஆர்ச் டீக்கன் தோமா என்பவரை முதலாம் மார்த்தோமா என்னும் பெயரில் 12 குருக்கள் சேர்ந்து ஆயராக திருநிலைப்படுத்தினர். ஆனால் தனது ஆயர் பதவி முறையாக அமையப்பெற்றதல்ல எனப் புரிந்து கொண்ட முதலாம் மார்த்தோமா தனது ஆயர் பதவியை முறைப்படுத்துவதற்காக பல நாடுகளிலுள்ள திருச்சபைகளுடன் தொடர்பு கொண்டார். அதன் விளைவாக கி.பி. 1665-ல் எருசலேமிலிருந்து மார்கிரிகோரியோஸ் என்னும் அந்தியோக்கியன் யாக்கோபாய ஆயர் இங்கே வந்து, புத்தன் கூற்று சமூகத்தினரை ஒன்றிணைத்து, அவர்களுக்குத் தலைமையேற்று வழிநடத்தினார். அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையினர் என்பவர்கள் கி.பி.451-ல் நடைபெற்ற கல்கதோனியா திருச்சங்கத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களும் அன்று முதல் கத்தோலிக்க திருச்சபையுடனான உறவைத் துண்டித்துக் கொண்டவர்களும் ஆவார்கள். இவர்களது ஆராதனை முறை கல்தேய சுறியானி ஆராதனை முறையன்று; அந்தியோக்கியன் சுறியானி ஆராதனை முறையே ஆகும்.

1665-ல் மார் கிரிகோரியோசும், பின்னர் வேறு சில அந்தியோக்கியன் ஆயர்களும் இங்கே வருகை தந்தனர்எனினும் புத்தன்கூற்று கிறிஸ்தவர்கள் . பயன்படுத்தி வந்த கல்தேய சுறியானி ஆராதனை முறைக்கு மாற்றம் எதுவும் .செய்யவில்லை1751-க்குப் பின் அந்தியோக்கியன் ஆராதனை முறையைப் பரவலாக பயன்படுத்தத் தொடங்கினர் .1836-ல் மாவேலிக்கரையில் நடைபெற்ற மாமன்றத்திற்குப்பின் அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையுடனான உறவும், அந்தியோக்கியன் ஆராதனை முறையும் இங்கே வலுவடைந்தது .1876-ல் நடைபெற்ற முளந்துருத்தி மாமன்றத்திற்குப்பின் புத்தன்கூற்று கிறிஸ்தவர்கள் அந்தியோக்கியன் ஆராதனை முறையை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கினர்அது . மட்டுமல்லாமல் புத்தன்கூற்று கிறிஸ்தவர்கள் யாக்கோபாயர்கள் என அறியப்படவும் .ஆராதனை முறைகள் வழக்கத்தில் வந்தன

1. பழங்காலத்திலிருந்தே இங்கே நிலவிலிருந்த கல்தாய சுறியானி ஆராதனை முறை .

2. போர்ச்சுகீசியர்கள் கொண்டு வந்த இலத்தீன் ஆராதனை முறை

3. அந்தியோக்கியன் ஆயர்கள் கொண்டு வந்த அந்தியோக்கியன் ஆராதனை முறை .

1911-ல் அந்தியோக்கிய பிதாப்பிதாவாயிருந்த அப்துல்லா (பாத்திரியார்க்கீஸ்) .என்பவர் இங்கே வருகை தந்தார் புத்தன்கூற்று கிறிஸ்தவ ஆயர்கள் அனைவரும் திருச்சபையின் ஆட்சி, சொத்துக்கள் மற்றும் ஆன்மீகம் சார்பான எல்லா அதிகாரங்களையும் அவரது பெயருக்கு எழுதி வழங்க வேண்டுமென கட்டளை பிறப்பித்தார்அப்போது புத்தன் கூற்று கிறிஸ்தவர்களுக்கு தலைவராயிருந்த . வட்டசேரில் மார் திவன்ானாசியோஸ் அதற்கு இணங்கவில்லைஆனால் மற்று . .ஆயர்கள் அப்துல்லாவின் ஆணைப்படியே செய்தனர்

ஆனால் பிதாப்பிதா அப்துல்லா, மார்திவன்னாசியோஸ் ஆயரின் ஆட்சிக்குத் தடை விதித்தார்இவ்வாறு .மார் கூறிலோஸிடம் ஒப்படைக்கவும் செய்தார் . கேரளாவில் யாக்கோபாய திருச்சபை இரண்டாகப் பிளவுப்பட்டது . பிதாப்பிதாவையும், ஆயர் மார் கூறிலோசையும் ஏற்றுக் கொண்டவர்கள் பாவா கட்சியினர் எனவும், வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆயரை ஏற்றுக் கொண்டவர்கள் மெத்றான் .கட்சியினர் எனவும் அறியப்பட்டனர் (ஆயர்) பிற்காலத்தில் பாவா கட்சியினர் யாக்கோபாய திருச்சபையினர் எனவும், ஆயர் கட்சியினர் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினர் எனவும் அழைக்கப்பட்டனர் . அந்தியோக்கியன்பிதாப்பிதாவை முழுமையாக ஏற்றுக் கொள்கின்ற

www.malankaralibrary.com

யாக்கோபாயர்களுக்காக ஒரு காதோலிக்கா பாவாவை பிதாப்பிதா நியமித்தார் . இங்கேயுள்ள யாக்கோபாய திருச்சபையின் ஆட்சிப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்முதலாம் பசேலியோஸ் தோமஸ் என்ற யாக்கோபாய காதோலிக்கா . தற்போது சுமார் .பாவா என்பவரே இத்திருச்சபையின் தலைவர்12 இலட்சம் மக்கள் இச்திருச்சபையில் உள்ளனர் .

### 3. மலங்கரை ஆர்த்தடாக்ஸ் சுறியானி திருச்சபை

மலங்கரை புத்தன் கூற்று சமூகத்தை அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையின் ஆட்சியின் கீழ் கொண்டுவருவதற்காக அந்தியோக்கியன் பிதாப்பிதா முயற்சி மேற்கொண்டேயிருந்தார். ஆனால் புத்தன் கூற்று சமூகத்தை அந்தியோக்கியன் பிதாப்பிதாவின் தலைமையில் விட்டுக்கொடுப்பதற்கோ, திருச்சபையின் உள்ளாட்சியையும் உரிமையையும் இழந்துவிடுவதற்கோ யாக்கோபாயா திருச்சபையின் ஒரு பகுதியினர் விரும்பவில்லை . கி.பி. 1911-ல் அப்துல்லா என்னும் பிதாப்பிதாவிடம் திருச்சபையின் முழுமையான அதிகாரங்களையும், உரிமைகளையும் எழுதி வழங்குவதற்கும் ஆயர் வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் விரும்பவில்லை. அதனால் மார் திவன்னாசியோசுக்குத் தடைவிதிக்கப்பட்டது. அவருக்குப் பதிலாக மார் கூறிலோசுக்குத் தலைமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆயருக்கு விதிக்கப்பட்ட தடையை அகற்றுவதற்கும், ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினருக்காக சுயாட்சி உரிமையுள்ள காதோலிக்கேட் நிறுவுவதற்குமாக அந்தியோக்கியன் திருப்பீடத்தின் முன்னாள் பிதாப்பிதாவாயிருந்த அப்தேத் மிசிகாவை அழைத்து வந்தனர். அதன்படி அவர் 1912-ல் மார் திவன்னாசியோசின் தடையை அகற்றி சுயாட்சி அதிகாரமுடைய காதோலிகேட் அங்கீகாரத்தை நிறுவி, முறிமற்றத்து மார் இவானியோஸ் ஆயரை பசேலியோஸ் பவுலோஸ் என்ற பெயரில் முதல் காதோலிக்க பாவாவாக திருநிலைப்படுத்தினர். இவ்வாறு காதோலிக்கேட் நிறுவப்பட்டதுடன் யாக்கோபாய திருச்சபை பிளவுபடவும் செய்தது. வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆயரையும் காதோலிக்காவையும் ஏற்றுக்கொண்டவர்களை ஆயர் கட்சியினர் அல்லது காதோலிக்கா கட்சியினர் எனவும் பிதாப்பிதாவையும் மார் கூறிலோஸ் ஆயரையும் ஏற்றுக்கொண்டவர்களை பாவா கட்சியினர் எனவும் அழைக்கப்பட்டனர். பாவா கட்சியினர் பிற்காலத்தின் யாக்கோபாய சுறியானி திருச்சபையினர் என பெயர் பெற்றனர்.

கி.பி.1534 முதல் ஆயர் கட்சியானது 'ஆர்த்தடாக்ஸ் திருச்சபை' என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது. அந்தியோக்கியன் பிதாப்பிதாவை ஆன்மீக அதிகாரியாக மட்டுமாக அங்கீகரிக்கும் ஆட்சி அமைப்பை 1934-ல் அமைத்தனர். அதன்பின் நீதிமன்றத் தீர்ப்புகள், இதர வழக்குகள் ஆகியவற்றின் காரணத்தால் அந்தியோக்கியன் பிதாப்பிதாவுடனான உறவை ஆர்த்தடாக்ஸ் திருச்சபை முழுமையாக துண்டித்துக் கொண்டது. 1912-க்குப் பின் ஒருவர்பின் ஒருவராக ஆறு காதோலிக்க பாவாக்கள் இச்திருச்சபையை வழி நடத்தினர். தற்போது ஏழாம் காதோலிக்காவாகிய முதலாம் பசேலியோஸ் மார்தோமா திதிமோஸ் என்பவரே இத்திருச்சபையின் தலைவர். சுமார் 14 இலட்சம் மக்கள் இச்திருச்சபையில் உள்ளனர்.

### 4. மலபார் சுதந்திர சுறியானி திருச்சபை (தொழியூர் திருச்சபை)

புத்தன்கூர் யாக்கோபாய திருச்சபையிலுள்ள காட்டுமங்காட்டு ஆபிரகாம் ரம்பான் என்பவரை மார் கூறிலோஸ் என்ற பெயரில் அந்தியோக்கியன் ஆயரான மார் கிரிகோரியோஸ் 1772-ல் ஆயராக்கினார். ஆனால் யாக்கோபாய திருச்சபையின் தலைவராகிய மார் திவன்னாசியோஸ் இதனை அங்கீகரிக்கவில்லை.

மார் கூறிலோஸ் யாக்கோபாய திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டார். பின்பு மார் கூறிலோஸ் திருச்சூருக்கு அருகிலுள்ள தொழியூர் என்ற இடத்திற்குச் சென்று அங்கே மலபார் சுதந்திர சுறியானி திருச்சபையை (தொழியூர்திருச்சபை) நிறுவினார். இது

www.malankaralibrary.com

மிகச் சிறிய ஒரு திருச்சபை சமூகமாகும். அந்தியோக்கியன் ஆராதனை முறையை இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

### 5. கல்தேய சுறியானி திருச்சபை )Church of the East)

கி .பி.1653-ல் கேரளக் கிறிஸ்தவர்கள் பழைய கூற்றினர் எனவும் புத்தன் கூற்றினர் எனவும் இரண்டாகப் பிரிந்தனர்பழைய கூற்றினர் மேற்கத்திய . அவர்கள் கிழக்கத்திய .மறைபணியாளர்களின் ஆட்சியை விரும்பவில்லை திருச்சபையின் ஆயர்களுக்காக கிழக்கத்திய சுறியானி கத்தோலிக்கா பிதாப்பிதாவுக்குக் கடிதம் அனுப்பினர் அதன் படி .1861-ல் மார் றோக்கோஸ் என்னும் ஆயர் இங்கே வருகை தந்தார்ஆனால் .மக்கள் அவரை வரவேற்றனர் ., மேற்கத்திய மறைப்பணியாளர்களின் நெருக்குதல் காரணமாக 1862-ல் ஆயர் றோக்கோஸ் திரும்பிச் சென்றுவிட்டார் பின்பு .1874-ல் மேலூஸ் என்னும் ஆயர் கேரளாவிற்கு வந்தார் இவருக்கும் மேற்கத்திய மறைப்பணியாளர்கள் நெருக்கடி கொடுத்ததால் . 1882-ல் அவரும் திரும்பிச் சென்றுவிட்டார்பிறகு ஆயர் றோக்கோஸ் ., ஆயர் மேலூஸ் ஆகியோரை ஏற்றுக்கொள்ளவும், கிழக்கத்திய திருச்சபையுடன் நட்புறவு வைத்துக்கொள்ளவும், மேற்கத்திய மறைப் பணியாளர்களின் தலைமையை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்த திருச்சூர் பகுதியிலுள்ள சில குடும்பங்கள் கத்தோலிக்க நட்புறவிலிருந்து மாறிவிட்டனர்அவர்கள் பாரசீக நெஸ்தோறியன் . இவர்கள் சூறாயிகள் எனவும் .திருச்சபையுடன் தொடர்பு கொண்டனர், கிழக்கத்திய கல்தேய சுறியானி திருச்சபையினர் எனவும் பெயர் பெற்றனர்இவர்களின் . இத்திருச்சபையின் .ஆராதனைமுறை கல்தேய சுறியானி முறையே ஆகும் .இப்போதைய தலைவர் மார் எப்ரேம் ஆயர் ஆவார்30,000 மக்கள் இச்திருச்சபையில் உள்ளனர் .

### 6. புரொட்டஸ்டன்ட் திருச்சபைகள் ஐ திருச்சபை.எஸ்.சி -

நற்செய்திப் பணியைக் குறிக்கோளாகக் கொண்டு ஆங்கிளிக்கன் திருச்சபையின் நற்செய்திப் பணியாளர்கள் இங்கிலாந்திலுள்ள புராட்டஸ்டன்ட் ) (திருச்சபை1795-க்குப் பின் இந்தியாவுக்கு வந்தனர்அவர்கள் புத்தன்கூர் சமூகத்தை . எஸ்.எம்.அவர்களுள் சி .புரிந்து கொள்ள முயன்றனர், நற்செய்திப் பணியாளர்கள் )Church of Missionary Society) 1816-ல் ஆலப்புழை என்னும் இடத்தை மையப்படுத்தி செயல்படத் தொடங்கினர்தொடக்கத்தில் இவர்கள் கேணல் மண்ட்றோவின் . .உதவியால் புத்தன்கூற்று கிறிஸ்தவர்களுக்கிடையே செயல்படத் தொடங்கினர் இவர்கள் யாக்கோபாய திருச்சபையினருக்கு ஏராளமான உதவிகள் செய்தனர் . நற்செய்திப் பணியாளர்கள் விரும்பியவாறு யாக்கோபாய .எஸ்.எம்.இவ்விதமாக சி இவ்வாறு புராட்டஸ்டன்ட் .கோவில்களில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு பெற்றனர் சிந்தனைகள் யாக்கோபாயர்களுக்கிடையே பரவினயாக்கோபாயர்களின் . இறைநம்பிக்கை மூடநம்பிக்கையே எனவும் திருப ்பலிக்கான திருப்பலிமுறை நூல் மாற்றி அமைக்க வேண்டுமெனவும் (தக்ஸா), மரியன்னையையும், புனிதர்களையும் புறக்கணிக்க வேண்டுமெனவும், இறந்தவர்களை நினைவுக் கூரக் கூடாது எனவும் சிஅதனால் யாக்கோபாய .எஸ் மறைப்பணியாளர்கள் வற்புறுத்திக் கூறினர்.எம். எஸ் நற்செய்திப் பணியாளர்களுக்கும் இடையேயான உறவில் .எம்.திருச்சபைக்கும் சி .விரிசல் ஏற்பட்டது1836-ல் மாவேலிக்கரையில் நடைபெற்ற யாக்கோபாய திருச்சபையின் மாமன்றத்தில் ஆங்கிளிக்கன் மறைபரப்பாளர்களுடனான எல்லாவித தொடர்புகளையும் முறித்துக் கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

ஆங்கில மறைப்பணியாளர்கள் யாக்கோபாய உறவை முறித்துக்கொண்ட போது யாக்கோபாயர்களில் சுமார் 6000 குடும்பங்களைப் புராட்டஸ்டன்ட் விசுவாசத்திற்கு மாற்றிவிட்டனர். அவர்களை புராட்டஸ்டன்ட் திருச்சபைகளில் சோத்துக் கொண்டனர். பின்னர் வெவ்வேறு புராட்டஸ்டன்ட் திருச்சபைகள் இங்கே வந்து மறைபரப்புப் பணிகள் செய்தனர். புரஸ்பிட்டேரியன், கான்கிரிகேஷனல், ஆங்கிலிளிக்கன், மெதடிஸ்ட் ஆகிய நான்கு புராட்டஸ்டன்ட் திருச்சபைகள் ஒன்றிணைந்து 1947 செப்டம்பர் 27-ல் சி.எஸ்.ஐ (Church of South India) என்ற பெயரில் ஒரே

www.malankaralibrary.com

திருச்சபையினர் ஆயினர். பின்னர் சி.எஸ்.ஐ. திருச்சபையிலிருந்து பிரிந்து 1964-ல் சி.எம்.எஸ் என்னும் ஆங்கிளிக்கன் திருச்சபை உருவானது.

**7. மார்தோமா சுறியானி திருச்சபை**

யாக்கோபாய திருச்சபைக்கும் ஆங்கிளிக்கன் மறைபரப்பாளர்களுக்கும் இடையேயான உறவு முறிந்து போன நிலையிலும், ஆங்கில மறைபரப்பாளர்களின் நவீனத்தன்மையான புராட்டஸ்டன்ட் சிந்தனைகள் யாக்கோபாயர்களிடமிருந்து விட்டுப் போகவில்லை. ஆபிரகாம் மல்பான் இத்தகைய நவீன கருத்துக்களில் ஆர்வம் காட்டினார். தனது கருத்துக்களுக்குத் தலைமையேற்பதற்கு ஆயர் ஒருவர் தேவை எனக் கருதிய ஆபிரகாம் மல்பான், 1841-ல் திருத்தொண்டர் மாத்தன் என்பவரை மேற்கு ஆசியாவிலுள்ள யாக்கோபாய பிதாப்பிதாவிடம் அனுப்பினார். திருத்தொண்டர் மாத்தன் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1842ல் கேரளாவிற்கு அனுப்பப்பட்டார். அவர் ஆயர் மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் என்ற பெயர் பெற்றார்.

சேப்பாட்டு மார் திவன்னாசியோஸ் மலங்கரை யாக்கோபாய பேராயராக ஆட்சி நடத்தும் போதுதான் புராட்டஸ்டன்ட் சிந்தனையுடைய மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் கேரளாவிற்கு வந்தார். இருவருக்குமிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. நீதிமன்ற வமக்கில் வெற்றியடைந்த மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் யாக்கோபாய திருச்சபையை ஆட்சி செய்தார். 1868-ல் ஆபிரகாம் மல்பான் தனது மகன் தோமஸ் என்பவருக்கு ஆயர்பட்டம் அளித்து தோமஸ் மார் அத்தனாசியோஸ் என்ற பெயரில் துணை ஆயராக நியமித்தார்.

மார் திவன்னாசியோசுக்கும் மார் அத்தனாசியோசுக்கும் இடையே பிரச்சினைகள் வந்ததால் பிதாப்பிதா மூன்றாம் பத்றோஸ் கேரளாவிற்கு வந்து 1876-ல் முளந்துருத்தியில் மாமன்றத்தைக் கூட்டினார். மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் ஆயரையும், அவரை ஏற்றுக்கொண்டவர்களையும் திருச்சபையிலிருந்து தடைசெய்தார். அவருக்குப் பதிலாக புலிக்கோட்டில் மார் திவன்னாசியோஸ் ஆயரை மலங்கரை யாக்கோபாய திருச்சபைக்குப் பேராயராக நியமித்தார். நீதிமன்ற வழக்கில் தோல்வியடைந்த தோமஸ் மார் அத்தனாசியோசும் அவரைப் பின்பற்றியவர்களும் 1889-ல் மாராமண் என்ற இடத்தில் வந்து தங்கி “நவீகரண சமூகம்” என்ற பெயரில் புதிய ஒரு திருச்சபையை நிறுவினர். பின்னர் இச்திருச்சபை மார்தோமா திருச்சபை என பெயர் பெற்றது. திருச்சபையின் தலைமை இடம் திருவல்லா என்னும் இடமாகும். இச்திருச்சபையினர் பின்பற்றி வருவது அந்தியோக்கியன் ஆராதனை முறையையும் புராட்டஸ்டன்ட் விசுவாசத்தையும் ஆகும்.

ஆயர் பிலிப்போஸ் மார் கிறிஸோஸ்டம் இத்திருச்சபையின் தலைவர் ஆவார் . சுமார்8 இலட்சம் மக்கள் இச்திருச்சபையில் உள்ளனர் .

**8. லுத்தரன் திருச்சபை**

மார்ட்டின் லூதர் என்பவரின் தலைமையில் ஜெர்மனி நாட்டில் 16-ம் நூற்றாண்டில் புராட்டஸ்டன்ட் புரட்சி ஏற்பட்டதுலூதரின் கருத்துக்களை . .ஏற்றுக்கொண்டவர்கள் லுத்தரன் திருச்சபையினர் என பெயர் பெற்றனர்1706-ல் இந்தியாவிலும் 1911-ல் கேரளாவிலும் லுத்தரன் திருச்சபை நிறுவப்பட்டது .

**9. பாப்டிஸ்ட் திருச்சபைகள்**

ஆங்கிளிக்கன் திருச்சபையில் உருவான மற்றொரு புராட்டஸ்டன்ட் பிரிவு தான் பாப்டிஸ்ட் திருச்சபைகேரளாவிலும் இந்தியாவில் பல இடங்களிலும் இச்திருச்சபை . .சமூகங்கள் உள்ளன

**10. சால்வேஷன் ஆர்மி இரட்சணிய சேனை -**

வில்லியம் பூத் என்னும் மெதடிஸ்ட் குருவானவர் 1865-ல் இரட்சணிய சேனை என்னும் கிறிஸ்தவ சமூகத்தை தொடங்கினார்பிறரன்புப் பணிகள் செய்வதே . வில்லியம் பூத் தனது திருச்சபைக்கு சேனையின் .இத்திருச்சபையின் குறிக்கோள்

www.malankaralibrary.com

.ஒழுங்கு விதிகளின் அடிப்படையிலான ஓர் ஆட்சி அமைப்பையே உருவமைத்தார் ஜெனரல், கேர்ணல், கேப்டன், வீரர்கள் ஆகிய பெயர்களில் இரட்சணிய சேனைப் பணியாளர்கள் அறிப்படுகின்றனர் .1892-ல் இச்சமூகம் கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் செயல்படத் தொடங்கியது .

**11. பிரதரன் சமூகம்**

இங்கிலாந்தில் புராட்டஸ்டன்ட் திருச்சபையிலிருந்து 19-ம் நூற்றாண்டில் உருவானது தான் பிரதரன் சமூகம்பொதுவாக அருளடையாளங் .களையும் குறிப்பாக குருத்துவத்தையும் இவர்கள் புறக்கணிக்கின்றனர்உலக அனுபவங்களிலிருந்து . அதனால் .பிரிந்து வாழ்வதே கிறிஸ்தவக் கடமை என இவர்கள் கருதுகின்றனர் .பிரதரன் சமூகத்தினரை பிரிக்கப்பட்டவர்கள் என்று கூறுகின்றனர்1895 முதல் இவர்கள் கேரளாவிலம் தென்னிந்தியாவிலும் செயல்பட்டு வருகின்றனர் . பெந்தெக்கோஸ்தலிசத்திற்கு முன்னோடியாக உணர்வுக் கூட்டங்களின் பெயரால் .தோன்றியவர்கள் பிரதரன் சமூகம்

பிரதரன் சமூகத்திலிருந்து பிற்காலத்தில் தோன்றியவர்களே பெந்தெக்கோஸ்து சமூகங்கள்ஏ .பெந்தெகோஸ்து சமூகத்தை திருச்சபையாக கருதுவதில்லை .னெனில் ஒரு திருச்சபைக்கான ஒழுங்குமுறைகள் எதுவுமே அவர்களுக்கில்லைஅதனால் . புராட்டஸ்டன்ட் .அவர்கள் பெந்தெக்கோஸ்து சமூகங்கள் என அறியப்படுகின்றனர் கருத்துக்களிலிருந்து20-ம் நூற்றாண்டில் உருவான சுதந்திரக்கிறிஸ்தவ சமூகங்கள் தான் பெந்தெக்கோஸ்துகள்.

**குறு வினா விடைகள்**

1. இந்திய திருச்சபை வரலாற்றில் கேரளாவில் பல கிறிஸ்தவச் திருச்சபைகளாகப் பிளவுபட்டது எப்போது முதல்? கி.பி. 1653 க்குப் பின்னர்
2. புனித தோமையாரிடமிருந்து விசுவாசம் பெற்றுக்கொண்ட தலைமுறையினர் எப்பெயரில் அழைக்கப்படுகிறார்கள்? மார்த்தோமா நஸ்ராணிகள்
3. தொடக்க காலம் முதல் இந்திய கிறிஸ்தவ திருச்சபை எதனுடன் இணைந்து செயல்பட்டது? பாரசீகக் கிறிஸ்தவ திருச்சபையுடன்
4. தொடக்க காலம் முதல் இந்திய கிறிஸ்தவ திருச்சபை பயன்படுத்தி வந்த திருவழிபாட்டு முறை எது? 'கல்தாய சுறியானி ஆராதனை முறை
5. தொடக்க காலம் முதல் இந்திய கிறிஸ்தவ திருச்சபைக்கு ஆன்மீகத் தலைமை கொண்டவர்கள் யாவர்? பாரசீக ஆயர்கள்
6. தொடக்க கால இந்திய திருச்சபையின் ஆட்சி மற்றும் சொத்துக்கள் போன்றவற்றை தலைமையேற்று நடத்தியவர்கள் யாவர்? ஆர்ச்டீக்கன் (அர்க்கதியாக்கோன்)
7. ஒன்றாயிருந்த இந்தியத் திருச்சபையில் 16 -ஆம் நூற்றாண்டில் யாருடைய வருகையால் பிரிவினைகள் உருவெடுத்தன? போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள்
8. கிபி. 1498-ல் இந்தியா வந்தடைந்த போர்ச்சுகீசிய மாலமி யார்? வாஸ்கோடகாமா
9. போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள் எந்த திருவழிபாட்டு மரபை மறுத்தனர்? கல்தேய சுறியானி ஆராதனை முறை
10. போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள் எந்த திருவழிபாட்டை இந்தியாவில் பரப்பினர்? இலத்தீன் ஆராதனை முறை
11. கூனன்குரிசு சத்தியம் அல்லது வளைந்த சிலுவை சபதம் எப்போது நடைபெற்றது? கி.பி.1653-ல்
12. கூனன்குரிசு சத்தியத்திற்கு பின்னர் மார்த்தோமா கிறிஸ்தவர்கள் யாரை 12 குருக்கள் சேர்ந்து கைவைப்பு நடத்தி முதலாம் தோமா என்னும் பெயரில்

www.malankaralibrary.com

ஆயராகத் திருநிலைப்படுத்தினர்? ஆர்ச்சுடீக்கனாக செயல்பட்டுவந்த பறம்பில் தோமா என்னும் குருவானவரை.

13. சுறியானி கிறிஸ்தவர்களுக்காக மலபாரில் அப்போஸ்தலிக்க ஆட்சி பீடம் (Vicariate) திருத்தந்தையால் நிறுவப்பட்டது எப்போது? 1665-ல்
14. 1665-ல் நிறுவப்பட்ட மலபார் அப்போஸ்தலிக்க ஆட்சி பீடத்தின் முதல் ஆயர் யார்? ஆயர் ஜோசப் செபஸ்தியானி
15. ஆயர் ஜோசப் செபஸ்தியானி முதலாம் தோமாவின் ஆலோசகர்களில் ஒருவராகிய எவரை ஆயராக திருநிலைப்படுத்தினார்? பறம்பில் சாண்டி கத்தனார்
16. கூனன் குரிசு சபதத்திற்கு பின்னர் முதல் தன்னாட்டு ஆயராக நியமிக்கப்பட்டவர் யார்? பறம்பில் சாண்டி கத்தனார்
17. பறம்பில் சாண்டி ஆயரை ஏற்றுக்கொண்டவர்கள் எந்த கத்தோலிக்க திருவழிபாட்டு முறையை கடைபிடித்தனர்? கல்தேய சுறியானி ஆராதனை முறை
18. பறம்பில் சாண்டி ஆயரை ஏற்றுக்கொண்டவர்கள் எந்த பெயரைப் பெற்றனர்? பழைய கூற்றினர்
19. பழைய கூற்றினர் என அறியப்பட்டவர்கள் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினர்
20. முதலாம் மார்தோமா ஆயரை ஏற்றுக்கொண்டு திருத்தந்தையோடுள்ள உறவை முறித்துக்கொண்டவர்கள் எவ்வாறு அறியப்பட்டனர்? புத்தன் கூற்றினர்
21. அந்தியோக்கியாவிலுள்ள யாக்கோபாய திருச்சபை எத்திருச்சங்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகினர்? கி.பி.451-ல் நடைபெற்ற கல்கதோனியா (கால்சடோன்)
22. புத்தன் கூற்றினர்கள் அந்தியோக்கியாவிலுள்ள எத்திருச்சபையுடன் கூனன் குரிசு சபதத்திற்கு பின்னர் தொடர்பு கொண்டிருந்தனர்? யாக்கோபாய திருச்சபை
23. புத்தன் கூற்றினர்கள் எத்திருவழிபாட்டு முறையைக் கடைபிடித்தனர்? அந்தியோக்கியன் ஆராதனை முறையை
24. புத்தன் கூற்றினர்கள் பிற்காலத்தில் எப்பெயரால் அறியப்பட்டனர்? யாக்கோபாய திருச்சபையினர்
25. இந்தியாவில் காணப்படும் வெவ்வேறான கிறிஸ்தவ சமூகங்கள் அனைத்தும் எவ்வாண்டுக்குப் பின் தோன்றியவை? 1653
26. அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையில் எத்தனை தனித்திருச்சபைகள் உள்ளன? 24
27. இந்தியாவில் கத்தோலிக்க திருச்சபையின் எத்தனை தனித்திருச்சபைகள் உள்ளன? அவை யாவை? இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபை, , சீறோ மலங்கரை கத்தோலிக்க திருச்சபை
28. தன்னாட்டு ஆயரான பறம்பில் சாண்டி ஆயருக்குப் பின் 1665-ல் மீண்டும் சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தியவர்கள் யாவர்? கர்மலித்தா திருச்சபையின் வெளிநாட்டு ஆயர்கள்
29. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையை 1782 முதல் வழிநடத்திய தன்னாட்டு ஆயர் யார்? மார் ஜோசப் கரியாற்றில்
30. 1887-ல் சீறோ மலபார் திருச்சபையினருக்காக நிறுவப்பட்ட இரு தனி ஆட்சிப் பீடங்கள் (Vicariates) யாவை? கோட்டயம், திருச்சூர்
31. 1896-ல் சீறோ மலபார் திருச்சபையினருக்காக நிறுவப்பட்ட மூன்று மறைமாவட்டங்கள் யாவை? திருச்சூர், எர்ணாகுளம், சங்ஙனாசேரி

www.malankaralibrary.com

32. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபை எப்போது மாமன்ற (Svnod) அமைப்புடைய பேருயர் பேராயத் திருச்சபையாக (Major Archiepiscopal church) உயர்த்தப்பட்டது? 1992
33. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையின் முதல் உயர் பேராயரானவர் யார்? உயர் பேராயர் மார் வர்க்கி விதயத்தில்
34. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினரின் மொத்த மறைமைமாவட்டங்கள் எத்தனை? 31 மறைமாவட்டங்கள்
35. தமிழகத்தில் சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினரின் மறைமாவட்டங்கள் எத்தனை? மூன்று
36. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினரின் தற்போதைய உயர் பேராயர் யார்? மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி
37. சீறோ மலபார் கத்தோலிக்க திருச்சபையினரின் எண்ணிக்கை என்ன? சுமார் 40 இலட்சம்
38. இந்தியாவில் புனித பேதுரு மற்றும் புனித பவுலின் திருத்தாது மரபைக் கொண்ட திருச்சபை எது? இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை
39. இலத்தீன் கத்தோலிக்க திருச்சபை யாரால் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்கள்
40. போர்ச்சுகீசிய மறைப்பணியாளர்களுள் மிக முக்கியமானவர் யார்? புனித பிரான்சிஸ் சவேரியார்.
41. 1886-ல் இந்தியாவில் இலத்தீன் திரு ஆட்சிப் பீடம் நிறுவியவர் யார்? திருத்தந்தை 13-ஆம் சிங்காராயர்
42. முதலில் புத்தன் கூற்றினரிடையே 1912-ல் உருவான தனித் திருச்சபை எது? ஆர்த்தடாக்ஸ் திருச்சபை
43. 1926 நவம்பர் 1-ல் நடைபெற்ற ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் ஆயர் மன்றம் மறுஒன்றிப்புக்கான பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தது? பெதனியின் ஆயரான மார் இவானியோசிடம்
44. பேராயர் மார் இவானியோஸுடன் மறுஒன்றிப்படைந்த மற்று நால்வர் யாவர்? ஆயர் மார் தெயோபிலோஸ், அருட்தந்தை ஜாண் ஓ.ஐ.சி, திருத்தொண்டர் அலக்ஸியோஸ், கிளிலேத்து சாக்கோ
45. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் முதல் மறு ஒன்றிப்பு எங்கே எப்போது நடைபெற்றது? 1930 செப்டம்பர் 20-ல் கொல்லம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில்
46. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் முதல் மறு ஒன்றிப்பு யார் முன்னிலையில் வைத்து நடைபெற்றது? கொல்லம் ஆயர் மேதகு பென்சிகர் ஆண்டகை
47. 1932-ல் மலங்கரை கத்தோலிக்க திரு ஆட்சி பீடம் நிறுவப்பட்ட திருத்தூதுவ மடல் எது? "கிறிஸ்தோ பாஸ்தோரும் பிரின்சிப்பி"
48. 1930-ல் கத்தோலிக்க திருச்சபையுடன் மறுஒன்றிப்படைந்தவர்கள் யாவர்? மலங்கரை சிறியன் கத்தோலிக்க திருச்சபையினர்.
49. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையைக் குறித்து திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் கூறிய வார்த்தைகள் யாவை? "மிக விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் திருச்சபை
50. 2005 பெப்ரவரி 10-ஆம் நாள் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையை மாமன்றம் அமைப்புள்ளதும் (Synod) சுயாட்சி உரிமையும் உள்ள உயர்பேராயத் திருச்சபையாக (Major Archiepiscopal Church) உயர்த்தியவர் யார்? திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்

www.malankaralibrary.com

51. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் முதல் உயர்பேராயர் (Major Archbishop), யார்? சிறில் மார் பசேலியோஸ் ஆண்டகை
52. உயர்பேராயர் அல்லது மேஜர் ஆர்ச்சு பிஷப்பு என்பதற்கு கிழக்குத் திருச்சபைகள் பயன்படுத்தும் சொல் எது? காதோலிக்கோஸ் (Catholicose)
53. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தற்போது எத்தனை மறைமாவட்ட ஆட்சி அமைப்புகள் உள்ளன? 13
54. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தற்போதைய உயர் பேராயர் யார்? மோறான் மோர் பசேலியோஸ் க்ளீமிஸ் காதோலிக்க பாவா
55. முறையான ஆயர்ப்பட்டம் பெறாமல் ஆயரான புத்தன்கூற்றினரின் முதல் ஆயர் யார்? முதலாம் மார்த்தோமா
56. கி.பி. 1665-ல் எருசலேமிலிருந்து வந்து புத்தன் கூற்று சமூகத்தினரை வழிநடத்திய அந்தியோக்கியன் யாக்கோபாய ஆயர் யார்? ஆயர் மார் கிரிகோரியோஸ்
57. அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையினர் என்பவர்கள் யாவர்? கி.பி.451-ல் கல்கதோனியா திருச்சங்கத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாமல் கத்தோலிக்க திருச்சபையுடனான உறவைத் துண்டித்துக் கொண்டவர்கள்
58. யாக்கோபாய திருச்சபையினரின் ஆராதனை முறை எது? அந்தியோக்கியன் சுறியானி ஆராதனை முறை
59. எப்போது முதல் அந்தியோக்கியன் ஆராதனை முறை இந்தியாவில் பயன்படுத்தத் தொடங்கினர்? 1751-க்குப் பின்னர்
60. அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையுடனான உறவும், அந்தியோக்கியன் ஆராதனை முறையும் எப்போது முதல் இந்தியாவில் வலுவடைந்தது?. 1836-ல் மாவேலிக்கரையில் நடைபெற்ற மாமன்றத்திற்குப்பின்னர்
61. புத்தன்கூற்று கிறிஸ்தவர்கள் அந்தியோக்கியன் ஆராதனை முறையை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கியது எப்போது? 1876-ல் நடைபெற்ற முளந்துருத்தி மாமன்றத்திற்குப் பின்னர்
62. 1911-ல் இந்தியா வருகை தந்த அந்தியோக்கிய பிதாப்பிதா யார்? பிதாப்பிதா அப்துல்லா
63. புத்தன்கூற்று கிறிஸ்தவ ஆயர்கள் அனைவரும் திருச்சபையின் ஆட்சி, சொத்துக்கள் மற்றும் ஆன்மீகம் சார்பான எல்லா அதிகாரங்களையும் அவரது பெயருக்கு எழுதி வழங்க வேண்டுமென கட்டளை பிறப்பித்த அந்தியோக்கிய பிதாப்பிதா? பிதாப்பிதா அப்துல்லா
64. பிதாப்பிதா அப்துல்லாவுக்கு இணங்காததால் திருச்சபையிலிருந்து தடை செய்யப்பட்ட ஆயர் யார்? ஆயர் வட்டசேரில் மார் திவன்னாசியோஸ்
65. பிதாப்பிதா அப்துல்லாவுக்கு இணங்கியதால் மலங்கரை திருச்சபையின் தலைமைப் பொறுப்பை பெற்றுக் கொண்டவர் யார்? ஆயர் மார் கூறிலோஸ்
66. பிதாப்பிதாவையும், ஆயர் மார் கூறிலோசையும் ஏற்றுக் கொண்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பாவா கட்சியினர்
67. வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆயரை ஏற்றுக் கொண்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? மெத்றான் (ஆயர்) கட்சியினர்
68. பாவா கட்சியினர் எப்பெயரை பெற்றுக் கொண்டனர்? யாக்கோபாய திருச்சபையினர்
69. ஆயர் கட்சியினர் எப்பெயரை பெற்றுக் கொண்டனர்? ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினர்
70. யாக்கோபாயர்களுக்காக முதல் காதோலிக்கோஸ் யார்? காதோலிக்கோஸ் முதலாம் பசேலியோஸ் தோமஸ்
**71.** யாக்கோபாய திருச்சபையில் எத்தனை விசுவாசிகள் உள்ளனர்? சுமார் 12 இலட்சம்

www.malankaralibrary.com

72. வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆயருக்கு விதிக்கப்பட்ட தடையை அகற்றிய அந்தியோக்கிய ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினருக்காக சுயாட்சி உரிமையுள்ள காதோலிக்கேட் நிறுவ உதவிய அந்தியோக்கியன் திருப்பீடத்தின் முன்னாள் பிதாப்பிதாவாயிருந்தவர் யார்? பிதாப்பிதா அப்தேத் மிசிகா
73. ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினரின் முதல் காதோலிக்கோஸ் யார்? பசேலியோஸ் பவுலோஸ் காதோலிக்கோஸ்
74. ஆயர்க் கட்சியினர் 'ஆர்த்தடாக்ஸ் திருச்சபை' என்ற பெயரை எப்போது பெற்றுக் கொண்டனர்? கி.பி.1934
75. மலங்கரை ஆர்த்தடோக்ஸ் திருச்சபையினர் மொத்தம் எத்தனை? சுமார் 14 இலட்சம்
76. மலபார் சுதந்திர சுறியானி திருச்சபையின் மறுபெயர் என்ன? தொழியூர் திருச்சபை
77. 1772-ல் அந்தியோக்கியன் ஆயரான மார் கிரிகோரியோஸ் காட்டுமங்காட்டு ஆபிரகாம் ரம்பானை எப்பெயரில் ஆயராக்கினார்? மார் கூறிலோஸ்
78. ஆயர் மார் கூறிலோஸ் யாக்கோபாய திருச்சபையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் எங்கே வாழ்ந்து வந்தார்? திருச்சூருக்கு அருகிலுள்ள தொழியூர் என்ற இடத்தில்
79. ஆயர் மார் கூறிலோஸ் நிறுவிய திருச்சபை எது? மலபார் சுதந்திர சுறியானி திருச்சபை
80. மலபார் சுதந்திர சுறியானி திருச்சபை எந்த ஆராதனை முறையை பின்பற்றி வருகிறது? அந்தியோக்கியன் ஆராதனை முறை
81. 1861 மற்றும் 1874-ல் மறைப்பணியாளர்களின் நெருக்குதலால் வெளியேறிய சுறியானி ஆயர்கள் யாவர்? மார் றோக்கோஸ் மற்றும் ஆயர் மேலூஸ்
82. மார் றோக்கோஸ் மற்றும் ஆயர் மேலூஸ் அவர்களை பின்பற்றி திருச்சூர் பகுதியில் வாழ்ந்த குடும்பங்கள் கத்தோலிக்க நட்புறவிலிருந்து மாறிய பின்னர் பெற்றுக்கொண்ட பெயர் என்ன? கல்தேய சுறியானி திருச்சபையினர்
83. கல்தேய சுறியானி திருச்சபையினர் கத்தோலிக்க நட்புறவிலிருந்து மாறிய பின்னர் எத்திருச்சபையுடன் தொடர்பு கொண்டனர்? பாரசீக நெஸ்தோறியன்
84. கல்தேய சுறியானி திருச்சபையினருக்கு மறுபெயர் என்ன? சூறாயிகள்
85. கல்தேய சுறியானி திருச்சபையினரின் ஆராதனை முறை எது? கல்தேய சுறியானி ஆராதனைமுறை
86. கல்தேய சுறியானி திருச்சபையினரின் இப்போதைய தலைவர் யார்? ஆயர் மார் எப்ரேம்
87. கல்தேய சுறியானி திருச்சபையினர் மொத்தம் எத்தனை? 30,000
88. ஆங்கிளிக்கன் திருச்சபையின் நற்செய்திப் பணியாளர்கள் எப்போது இந்தியாவுக்கு வந்தனர்? 1795-க்குப் பின்னர்
89. சி.எம்.எஸ், நற்செய்திப் பணியாளர்கள் (Church of Missionary Society) எப்போது ஆலப்புழையை மையப்படுத்தி செயல்படத் தொடங்கினர்? 1816-ல்
90. ஆங்கில மறைப்பணியாளர்கள் யாக்கோபாய உறவை முறித்துக்கொண்ட போது யாக்கோபாயர்களில் எத்தனை குடும்பங்கள் புராட்டஸ்டன்ட் விசுவாசத்திற்கு மாற்றினர்? சுமார் 6000 குடும்பங்கள்
91. புரஸ்பிட்டேரியன், கான்கிரிகேஷனல், ஆங்கிலிளிக்கன், மெதடிஸ்ட் ஆகிய நான்கு புராட்டஸ்டன்ட் திருச்சபைகள் ஒன்றிணைந்து 1947 செப்டம்பர் 27-ல் உருவான திருச்சபை எது? தென்னிந்திய திருச்சபை (Church of South India)
92. சி.எஸ்.ஐ. திருச்சபையிலிருந்து பிரிந்து 1964-ல் உருவான திருச்சபை எது? சி.எம்.எஸ் என்னும் ஆங்கிளிக்கன் திருச்சபை
93. யாக்கோபாய திருச்சபைக்குள் நவீன புராட்டஸ்டன்ட் சிந்தனைகளுக்கு தலைமை தாங்கியவர் யார்? ஆபிரகாம் மல்பான்

www.malankaralibrary.com

94. 1842ல் திருத்தொண்டர் மாத்தன் எப்பெயரில் ஆயரானார்? ஆயர் மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ்
95. மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் ஆயரான போது மலங்கரை யாக்கோபாய பேராயர் யார்? பேராயர் சேப்பாட்டு மார் திவன்னாசியோஸ்
96. 1868-ல் ஆயரான ஆபிரகாம் மல்பான்ன் மகன் யார்? ஆயர் தோமஸ் மார் அத்தனாசியோஸ்
97. ஆயர் மாத்யூஸ் மார் அத்தனாசியோஸ் ஆயரையும் அவரை ஏற்றுக்கொண்டவர்களையும் திருச்சபையிலிருந்து தடைசெய்தவர் யார்? பிதாப்பிதா மூன்றாம் பத்றோஸ்
98. நீதிமன்ற வழக்கில் தோல்வியடைந்த ஆயர் தோமஸ் மார் அத்தனாசியோசும் அவரைப் பின்பற்றியவர்களும் எங்கே புதிய திருச்சபையை நிறுவினர்? 1889-ல் மாராமண்
99. ஆயர் தோமஸ் மார் அத்தனாசியோஸ் மாராமண் என்ற இடத்தில் துவங்கிய திருச்சபை எப்பெயரை பெற்றது? மார்தோமா திருச்சபை
100. மார்தோமா திருச்சபையின் தலைமை இடம் எது? திருவல்லா
101. மார்தோமா திருச்சபையினர் பின்பற்றும் ஆராதனை முறை எது? அந்தியோக்கியன் ஆராதனை முறையும் புராட்டஸ்டன்ட் விசுவாசமும்
102. மார்தோமா திருச்சபையினரின் தலைவர் யார்? ஆயர் பிலிப்போஸ் மார் கிறிஸோஸ்டம்
103. மார்தோமா திருச்சபையினர் எத்தனை பேர் உள்ளனர்? சுமார் 8 இலட்சம்
104. ஜெர்மனி நாட்டில் 16-ம் நூற்றாண்டில் யார் தலைமையில் புரட்சி ஏற்பட்டது? மார்ட்டின் லூதர்
105. மார்ட்டின். லூதரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்கள் எப்பெயரை பெற்றனர்? லுத்தரன் திருச்சபையினர்
106. லுத்தரன் திருச்சபையினர் எவ்வாண்டு முதல் இந்தியாவில் செயல்படுகின்றனர்? 1706 முதல்
107. பாப்டிஸ்ட் திருச்சபை என்பது எது? ஆங்கிளிக்கன் திருச்சபையில் உருவான மற்றொரு புராட்டஸ்டன்ட் பிரிவு
108. 1865-ல் இரட்சணிய சேனை என்னும் கிறிஸ்தவ சமூகத்தை தொடங்கிய மெதடிஸ்ட் குருவானவர் யார்? வில்லியம் பூத்
109. இரட்சணிய சேனை என்னும் கிறிஸ்தவ சமூகத்தின் குறிக்கோள் என்ன? பிறரன்புப் பணிகள்
110. வில்லியம் பூத் தனது இரட்சணிய சேனை திருச்சபைக்கு எத்தகைய ஆட்சி அமைப்பை உருவாக்கினார்? படைகளின் அடிப்படையில்
111. இரட்சணிய சேனைப் பணியாளர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? ஜெனரல், கேர்ணல், கேப்டன், வீரர்கள்
112. இரட்சணிய சேனை எப்போது முதல் தமிழ்நாட்டில் செயல்படத் தொடங்கியது? 1892
113. இங்கிலாந்தில் புராட்டஸ்டன்ட் திருச்சபையிலிருந்து விலகி 19-ம் நூற்றாண்டில் உருவான திருச்சபையின் பெயர் என்ன? பிரதரன் சமூகம்.
114. பிரதரன் சமூகத்தினர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? பிரிக்கப்பட்டவர்கள்
115. பிரதரன் சமூகத்தினர் தென்னிந்தியாவில் எப்போது முதல் செயல்பட்டு வருகின்றனர்? 1895
116. பெந்தெக்கோஸ்தலிசத்திற்கு முன்னோடியாக உணர்வுக் கூட்டங்களின் பெயரால் தோன்றியவர்கள் யாவர்? பிரதரன் சமூகம்.
117. பிரதரன் சமூகத்திலிருந்து பிற்காலத்தில் தோன்றியவர்கள் யாவர்? பெந்தெக்கோஸ்து சமூகங்கள்.
118. 20-ம் நூற்றாண்டில் உருவான சுதந்திரக் கிறிஸ்தவ சமூகங்களுக்கு பெயர் என்ன? பெந்தெக்கோஸ்து சமூகங்கள்

www.malankaralibrary.com

119. “நாம் **ஒன்றாய்** இருப்பது போல் அவர்களும் **ஒன்றாய்** இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சிமையை நான் அவர்களுக்கு அளித்தேன்” (யோவான் 17: 22)

## பாடம் 10

## மறுஒன்றிப்பும் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கமும்

## (Re-union & Ecumenism)

பயிற்சி வினாக்கள்

1. “மறுஒன்றிப்பு” என அழைப்பதன் காரணம் என்ன?

மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் 1930 செப்டம்பர் 20-ம் தேதி கேரளாவில் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் ஒரு பகுதியினர் கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச அன்புறவில் இணைந்து கொண்டனர். இதன் விளைவாகவே இன்று நாம் காணும் மலங்கரை கத்தோலிக்க திருச்சபை. இந்த ஒன்றிப்பு முயற்சி மறுஒன்றிப்பு இயக்கம் என அறியப்படுகிறது.

'எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக' (யோவான் 17 : 21-23) என்ற தந்தைக் கடவுளோடு இயேசு கிறிஸ்து வேண்டிக் கொண்ட மன்றாட்டு தான் மறுஒன்றிப்பு சிந்தனையின் அடிச்சுவடு. திருச்சபைகள் ஒன்றிப்படைவதன் வாயிலாக மட்டுமே நற்செய்திப் பறைசாற்றுவதனால் பலன் விளைவிக்க இயலும் என மார் இவானியோஸ் ஆண்டகை உணர்ந்து கொண்டார். அவர் மறுலன்றிப்பு இயக்கத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்றதும் அதனாலேயே ஆகும். மேலும், 16-ஆம் நூற்றாண்டிற்கு பின் பல பிரிவினராகப் பிளவுப்பட்ட மார்தோமா கிறிஸ்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற சிந்தனையும் மறுஒன்றிப்பு முயற்சிகளுக்கு ஊக்கமளித்தது.

2. மறுஒன்றிப்பினால் அடைந்த சாதனைகள் யாவை?

மறுஒன்றிப்பு இயக்கம் வாயிலாக கத்தோலிக்க திருச்சபையுடன் ஏற்பட்ட நட்புறவில் மலங்கரை திருச்சபை இணைந்து கொண்டதுநல்லெண்ணம் . உடையவர்க்கெல்லாம் கத்தோலிக்க திருச்சபையின் நல்லுறவில் சென்றவடைவதற்கான பாதை திறக்கப்பட்டதுஇவ்வாறு ஆர்த்தடாக்ஸ் ., யாக்கோபாயா, மார்தோமா, சிதொழியூர்திருச்சபை ஆகிய .ஐ.எஸ். திருச்சபைகளிலிருந்தெல்லாம் எண்ணற்ற மக்கள் மலங்கரை திருச்சபையில் .இணைந்து கத்தோலிக்க திருச்சபையின் இறைமக்களாயினர் அருளடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட ஜெப வாழ்க்கையால் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுமனமாற்றமும் அமைதியும் நிலவுகின்ற . கலகங்கள் மிகுந்திருந்த .சமூகம் அமைவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது புத்தன்கூற்று சமுதாயத்தில் புதுமையான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை முறையை கடமைகளைப் பற்றிய விழிப்புணர்வும் மேலோங்கி வளர்ந்ததுநாட்டின் வளர்ச்சிக்கு . உதவக்கூடிய சமூகசேவை, கல்வி மற்றும் வளர்ச்சி செயல்பாடுகளிலும் திருச்சபை கவனம் செலுத்தத் தொடங்கியதுஇன்று வாழும் மக்களுக்கு வெளிச்சமும் ., ஆன்மீக ஆற்றலும், உலகியலான அனைத்து வளர்ச்சிகளும் அடைவதற்கு உதவக்கூடிய எல்லா செயல்பாடுகளிலும் மறு ஒன்றிப்படைந்த மலங்கரை திருச்சபை தீவிரமுயற்சியுடன் ஈடுபடுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

3. கத்தோலிக்க திருச்சபையின் கிறிஸ்தவ ஒன்றிப்பு கண்ணோட்டத்தை விளக்குக.

கிறிஸ்தவர்களுக்கிடையேயான பிரிவினைகள் கடவுளின் திருவிருப்பத்திற்கு எதிரானதும், பாவமானதும் ஆகும் என கத்தோலிக்க திருச்சபை கருதுகின்றது. பிறதிருச்சபைகளுடனான அணுகுமுறையிலும், திருச்சபைகளின் ஒற்றுமை குறித்த கண்ணோட்டங்களிலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் கத்தோலிக்க திருச்சபையில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிறிஸ்தவ திருச்சபைகள் எல்லாவற்றிலும் உண்மையின் கூறுகளும், மீட்புக்குத் தேவையான அடிப்படை கூறுகளும் உண்டு எனவும், ஆனால் கத்தோலிக்க திருச்சபையில் தான் அவற்றின்

www.malankaralibrary.com

நிறைவு உள்ளது எனவும் திருச்சபை கற்பிக்கின்றது. பழமை வாய்ந்த கிழக்கு திருச்சபைகளுடன் கத்தோலிக்க திருச்சபைக்கு இப்போது நட்புறவு உள்ளது. அடிப்படை நம்பிக்கை சார்பாக இத்திருச்சபைகளுடன் கத்தோலிக்க திருச்சபைக்கு ஒத்த கருத்துக்களே உள்ளன. ஆனால் அதை வெளிப்படுத்தும் முறைகளிலேயே வேறுபாடு காணப்படுகிறது. திருச்சபைகளுக்கிடையேயான கருத்து வேறுபாடுகள் பலவும் திருச்சபை இயல் சார்ந்ததே ஆகும். திருச்சபைகளுக்கிடையேயான இவ்வகை கருத்து வேறுபாடுகளை உரையாடல்களின் வாயிலாக தீர்வுகாண முடியும்.

கடவுள் விரும்புகின்ற முறையிலும், நேரத்திலும் தூய ஆவியின் செயலாற்றலால் கட்புலனாகும் முறையில் இயேசுகிறிஸ்துவில் நிறைவு பெறும் அன்புறவிற்கு சென்றடைவது என்பதே கத்தோலிக்க திருச்சபையின் கிறிஸ்தவ ஒன்றிப்பின் குறிக்கோள். திருச்சபைகள் ஒன்றையொன்று ஏற்றுக்கொள்வதற்கும், இறைவிருப்பத்திற்கேற்ப ஒன்றிப்பு என்படுத்துவதற்குமே கத்தோலிக்க திருச்சபை முயன்று வருகிறது. கத்தோலிக்கர் அல்லாத கிழக்கு திருச்சபைகளின் அருளடையாளங்களுக்கு கத்தோலிக்க திருச்சபை அளிக்கவம். அச்திருச்சபைகளின் சுயாட்சி முறையை ஒத்துக்கொள்ளவும், அச்திருச்சபைகளை சகோதரி திருச்சபைகளாக ஏற்றுக்கொள்ளவும் செய்கிறது.

எவ்வகையான தடைகள் ஏற்படினும் திருச்சபைகளின் ஒன்றிப்புக்காக செயல்படுவதற்கு கத்தோலிக்க திருச்சபை கடமைப்பட்டுள்ளது. திருச்சபையின் பலசெயல்பாடுகள் பணி என்ற முறையில் அல்ல, திருச்சபைகளின் ஒன்றிப்புப் பணியை மிகவும் முக்கியமான பணியாகவே கத்தோலிக்க திருச்சபை கருதுகின்றது.

**குறு வினா விடைகள்**

1. மலங்கரை கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் எதன் வாயிலாக கத்தோலிக்க திருச்சபையின் அன்புறவில் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறோம்? மறு ஒன்றிப்பு இயக்கம்
2. மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் 1930 செப்டம்பர் 20-ம் தேதி எத்திருச்சபையின் ஒரு பகுதியினர் கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச அன்புறவில் இணைந்து கொண்டனர்? ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் ஒரு பகுதியினர்
3. மறுஒன்றிப்பு சிந்தனையின் அடிச்சுவடு எனப்படுவது எது? 'எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக' (யோவான் 17 : 21-23)
4. ஒன்றாய் இருந்த மலங்கரை திருச்சபையானது 1653 ஆம் ஆண்டிற்கு பின் எவ்வாறு பிளவுற்றது? புத்தன் கூற்றினர், பழைய கூற்றினர்
5. புத்தன்கூற்றினரிடையே தோன்றிய உட்பிரிவுகள் யாவை? தொழியூர் திருச்சபை (1772), மார்தோமா திருச்சபை (1889), யாக்கோபாய திருச்சபை, ஆர்த்தடாக்ஸ் திருச்சபை (1912), மலங்கரை கத்தோலிக்க திருச்சபை (1930), சி.எம்.எஸ் (சி.எஸ்.ஐ) (1836).
6. பழையகூற்றினரிடையே தோன்றிய உட்பிரிவுகள் யாவை? சீறோ மலபார் திருச்சபை, திருச்சூர் கல்தேய திருச்சபை
7. புத்தன்கூற்று சமூகத்தில் ஆன்மீக மறுமலர்ச்சிக்காக மார் இவானியோஸ் ஆண்டகை எப்போது எங்கே பெதனி துறவற இயக்கத்திற்கு தொடக்கமிட்டார்? 1919 ல் பெருநாடு
8. தொடக்கத்தில் எத்தனை நூற்றாண்டு காலம் மலங்கரை கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் அன்புறவில் இணைக்கப்பட்டிருந்தனர்? பதினாறு நூற்றாண்டு காலம்
9. மலங்கரை திருச்சபையினரின் முழுமையான கத்தோலிக்கத் தன்மையில் இழப்பு ஏற்படக் காரணமானவர்கள் யாவர்? மேற்காசியாவிலிருந்து வந்த யாக்கோபாய திருச்சபையினரோடும், ஐரோப்பிய புராட்டஸ்டன்ட் திருச்சபையினர்

www.malankaralibrary.com

10. புத்தன்கூற்றினரை மீண்டும் முழுமையான காதோலிக்கத் தன்மைக்குள் கொண்டுவர மார் இவானியோஸ் ஆண்டகையின் முயற்சிக்கு என்ன பெயர்? மறுஒன்றிப்பு இயக்கம்
11. வெவ்வேறாகப் பிரிந்து நிற்கும் மலங்கரை திருச்சபை மக்கள் எல்லோரும் மீண்டும் ஒன்றிப்படைந்து ஒரு திருச்சபையாக உருவெடுக்க வேண்டும் என மார் இவானியோஸ் ஆண்டகை எப்போது முதல் அறைகூவல் விடுத்தார்? 1925-ஆம் ஆண்டில் நிரணம் ஆலயத்தில் நிகழ்த்திய நீண்ட உரையில்
12. 1926 முதல் திருத்தந்தைக்கு அனுப்பிக் கொண்டிருந்த விண்ணப்பக் கடிதங்களிலிருந்தே மார் இவானியோஸ் ஆண்டகை கொண்டிருந்த மறுஒன்றிப்புக்கான சிந்தனைகள் எவை? 1. ஆர்த்தடாக்ஸ் திருச்சபை முற்றிலுமாக கத்தோலிக்க திருச்சபையின் அன்புறவுக்குள் வந்து சேரவேண்டுமென்பதும் 2. தொன்றுதொட்டு வழக்கத்திலிருக்கும் ஆராதனை முறைகளையும், வழிபாட்டுமுறைகளையும் மாற்றங்கள் இன்றித் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும் 3. மலங்கரை திருச்சபையின் சுயாட்சியும் தனியான உரிமைகளையும் காதோலிகேட், திருச்சங்கம் ஆகிய அமைப்புகள் வாயிலாக நிலைநிறுத்திட வேண்டும், 4. மலங்கரை திருச்சபை ஒரு தனித்திருச்சபையாக இருந்து கொண்டே அனைத்துலகத் திருச்சபையின் அன்புறவில் இணைந்து விட வேண்டுமென்பதும், 5. மறு ஒன்றிப்படையும் ஆயர்களுக்கு அவர்களின் ஆட்சிக்குட்பட்ட இறைமக்கள் மீது ஆன்மீக அதிகாரம் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதும் 6. புனித பேதுருவின் வழிவந்தவரும், அனைத்துலகத் திருச்சபையின் தலைவருமான உரோமை பாப்பரசருடனான அன்புறவை அடைவது
13. மறுஒன்றிப்பு இயக்கம் வாயிலாக மலங்கரை கத்தோலிக்க திருச்சபையுடன் மறுஒன்றிப்படைந்து கத்தோலிக்க திருச்சபையின் நல்லுறவில் வந்தோர் யாவர்? ஆர்த்தடாக்ஸ், யாக்கோபாயா, மார்தோமா, சி.எஸ்.ஐ. தொழியூர்திருச்சபை
14. மலங்கரை கத்தோலிக்க திருச்சபை எப்போது மறைத்தூதுப்பணிகளிலும் தீவிரக் கவனம் செலுத்தத் தொடங்கியது? 1930 முதற்கொண்டே
15. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் மறைத்தூதுப்பணிகள் முதலில் எந்தெந்த மாவட்டங்களில் வியப்புக்குரிய வளர்ச்சியடைந்தது? கன்னியாகுமரி மற்றும் திருவனந்தபுரம்
16. 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்பதன் ஆங்கிலச் சொல் என்ன? Ecumenism
17. நிறைவான அன்புறவில் நிலவியிருந்த திருச்சபையின் செயல்பாடுகளைக் குறிப்பதற்கே தொடக்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த சொல் எது? 'கிறிஸ்தவ ஒன்றிப்பு'
18. திருச்சபையின் தொடக்கக் காலங்களில் எக்யுமெனிக்கல் கவுன்சில் என்றால் என்ன? திருச்சபையில் விசுவாச ஒன்றிணைப்பும், நிறைவான அன்புறவும் கொண்ட ஆயர்கள் ஒன்று கூடி திருச்சபை சார்பான கருத்துகளை ஆராய்தல்
19. 'கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் அல்லது Ecumenism என்பதன் தற்கால பொருள் என்ன? வெவ்வேறான பிரிவினை திருச்சபைகளை மறுபடியும் ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள்
20. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய தீர்மானத் தொகுப்பு எது? "கிறிஸ்தவ ஒன்றிப்பு"
21. கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்தவ ஒன்றிப்புச் செய்தித் தொகுப்பு ஒன்றை எப்போது வெளியிட்டது? 1993-ல்
22. கிறிஸ்தவ ஒன்றிப்பினுடைய கண்ணோட்டத்தில் „அனைவரும் ஒன்றாயிருக்க" என்னும் சுற்றுமடல் எப்போது வெளியிடப்பட்டது? 1995

www.malankaralibrary.com

23. கிறிஸ்தவர்களுக்கிடையேயான பிரிவினைகள் கடவுளின் திருவிருப்பத்திற்கு எதிரானதும், பாவமானதும் ஆகும் எனக் கருதுகின்ற திருச்சபை எது? கத்தோலிக்க திருச்சபை
24. கத்தோலிக்க திருச்சபையின் கிறிஸ்தவ ஒன்றிப்பின் குறிக்கோள் என்ன? கடவுள் விரும்புகின்ற முறையிலும், நேரத்திலும் தூய ஆவியின் செயலாற்றலால் கட்புலனாகும் முறையில் இயேசுகிறிஸ்துவில் நிறைவு பெறும் அன்புறவிற்கு சென்றடைவது
25. கத்தோலிக்க திருச்சபை கத்தோலிக்கர் அல்லாத கிழக்குத் திருச்சபைகளை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறது? கிழக்கு திருச்சபைகளின் அருளடையாளங்களுக்கு கத்தோலிக்க திருச்சபை ஒப்புதல் அளிக்கவம். அச்திருச்சபைகளின் சுயாட்சி முறையை ஒத்துக்கொள்ளவும், அச்திருச்சபைகளை சகோதரி திருச்சபைகளாக ஏற்றுக்கொள்ளவும் செய்கிறது.
26. கத்தோலிக்க திருச்சபை திருச்சபைகளின் ஒன்றிப்புக்காக செயல்படுவதை எத்தகைய பணியாக கருதுகிறது? திருச்சபையின் பலசெயல்பாடுகளுள் ஒரு பணி என்ற முறையில் அல்ல, திருச்சபைகளின் ஒன்றிப்புப் பணியை மிகவும் முக்கியமான பணியாகவே கத்தோலிக்க திருச்சபை கருதுகின்றது.
27. கத்தோலிக்க திருச்சபை எந்நெந்த திருச்சபைகளோடு ஒன்றிப்புக்கான உரையாடல்களில் ஈடுபடுகிறது? பைசன்டைன் மரபுடைய கிழக்கு ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகள், யாக்கோபாய மரபை உடைய கிழக்கு ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகள், நெஸ்தோரியன் திருச்சபை என்று அழைக்கப்பட்டிருந்த அசீரியன் திருச்சபை, மேற்கத்திய புராட்டஸ்டன்ட் திருச்சபைகளுடனும் அனைத்துலக திருச்சபைகளின் பொதுச்சங்கத்துடனும் (World Christian Council) கத்தோலிக்க திருச்சபை உரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.
28. கத்தோலிக்க திருச்சபை கிழக்கு ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகளுடன் கொண்டுள்ள ஒருமித்த கருத்து என்ன? கிறிஸ்தியல்
29. கத்தோலிக்க திருச்சபை சிறியன் ஆர்த்தடாக்ஸ் மற்றும் யாக்கோபாய் திருச்சபையுடன் கொண்டுள்ள புரிந்துணர்வு என்ன? தேவைப்படும் வேளைகளில் அருளடையாள உறவும் திருமணம் நடத்துவதற்கான புரிந்துணர்வும்
30. கத்தோலிக்க திருச்சபை அசீரியன் திருச்சபையுடன் கொண்டுள்ள கருத்தொற்றுமை என்ன? கிறிஸ்தியல் அருளடையாளங்கள் குறித்து கருத்தொற்றுமை
31. கத்தோலிக்க திருச்சபை லுத்தரன் திருச்சபையுடன் எக்கருத்தைக் குறித்து ஒன்றிணைந்த அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளனர்? “ஏற்புடைமை” (Justification)
32. தற்கால கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் கருப்பொருளை மிகவும் முன் கூட்டியே உணர்ந்து கொண்ட மாமேதை யார்? மார் இவானியோஸ் ஆண்டகை.
33. இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரும் வெற்றியடைந்த கிறிஸ்தவ ஒன்றிப்புச்செயல்பாடு என்பது எது? மலங்கரையின் மறுஒன்றிப்பு
34. திருச்சபையினர் ஒன்றித்திருக்க துணை புரிகின்ற இரு வழிமுறைகள் யாவை? மறுஒன்றிப்பும், கிறிஸ்தவ ஒன்றிப்பும்.
35. “இக்கொட்டிலைச் சேராத வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது **குரலுக்குச்** செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்” (யோவான் 10: 16).

## பாடம் 11

## மலங்கரை கத்தோலிக்கத்திருச்சபையின் உயர்பேராயர் காதோலிக்கோஸ்

பயிற்சி வினாக்கள்

www.malankaralibrary.com

1. பிதாப்பிதா, காதோலிக்கோஸ் என்னும் பெயர்களை விளக்குக?

**பிதாப்பிதா என்னும் சொல் (Patriarch)**

பிதாப்பிதா என்ற சொல்லிற்கு பிதாக்களின் பிதா என்பது பொருள். கிரேக்க மொழியில் பாத்திரியார்க்கெஸ் என்று அழைக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தினுடையவோ,

குலத்தினுடையோ தந்தையைக் குறிப்பதற்காகவே இச்சொல் பயன்படுத்தப்பட்டது. ஆபிரகாம் (எபி. 7:4), யாக்கோபின் 12 புதல்வர்கள் (திப. 7:8), தாவீது (திப. 2:29) போன்றவர்களை அழைப்பதற்காக இச்சொல் பயன்படுத்தப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டு வரை யூதர்களின் தொழுகைக்கூடத் தலைமைக்குருவை பிதாப்பிதா என்று அழைத்தனர்.

சுமார் ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஒரு தேசத் திருச்சபையின் முழு அதிகாரமும், அதன் ஆயர்களின் மேல் அதிகாரமும் உடைய பேராயர்களை பாத்திரியார்க்கிஸ் (பிதாப்பிதா) என்று அழைக்கத் தொடங்கினர். அதற்கு முன் இவர்கள் எப்பிஸ்கோப்பா, ஆயர்கள், பேராயர்கள் என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஐந்தாம் நூற்றாண்டு முதல் உரோமைப் பேரரசில் ஐந்து பாத்திரியார்க்கேற்றும் (பிதாப்பிதா ஆட்சி நிலையம்) ஐந்து பிதாப்பிதாக்களும் இருந்தனர். இவர்களில் உரோமை பிதாப்பிதாவுக்கு முதன்மை இடம் இருப்பதாய் அனைவரும் அங்கீகரித்தனர். திருத்தூதர் தலைவரான பேதுருவின் வழிவந்தவர் என்ற முறையிலும் உரோமைப் பேரரசின் தலைநகரின் ஆயர் என்ற முறையிலும் அவருக்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டது.

**காதோலிக்கோஸ்**

உரோமைப் பேரரசின் வெளியே செயல்பட்டு வந்த ஒரு தேசத் திருச்சபையின் தலைவர் காதோலிக்கோஸ் என்று அழைக்கப்பட்டார். ஆனால் எத்தியோப்பியா மற்றும் மலங்கரை திருச்சபைகளின் தலைவர்களுக்கு தொடக்கத்தில் இப்பெயர் அளிக்கப்படவில்லை. 'காதோலிக்கோஸ்' என்னும் வார்த்தையின் பொருள் திருச்சபையின் தலைவர் என்பதாகும். இவர்கள் பிதாப்பிதாக்களின் கீழ் அதிகாரமுடைய ஆயர்களே ஆவர்.

உரோமைப் பேரரசில் காதோலிக்கோஸ் என்னும் பெயரில் அரச அலுவலர்கள் இருந்தனர். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் மீது அதிகாரமுடையவர் என்னும் பொருளிலேயே அவர்கள் அவ்வாறு அழைக்கப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டு முதல் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஆனால் ஐந்தாம் நூற்றாண்டின் முதற்பகுதி முதல் இவ்வார்த்தை 'திருச்சபைத் தலைவர்' என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டது.

பாரசீகத் திருச்சபையில் கி.பி. 410 -ஆம் ஆண்டின் திருச்சங்கம் முதல் இவ்வார்த்தையை பயன்படுத்தத் தொடங்கினர். அர்மேனியன் திருச்சபையும் இக்காலத்தில் காதோலிக்கோஸ் என்னும் சிறப்புப் பெயரை ஏற்றுக் கொண்டது. ஜார்ஜியா திருச்சபைத் தலைவரும் கி.பி. 609 முதல் இச்சிறப்புப் பெயரை பயன்படுத்தத் தொடங்கினார். பிற்காலத்தில் இவர்களனைவரும் காதோலிக்கோஸ் என்பதோடு பிதாப்பிதா என்னும் பெயரையும் இணைத்து கொண்டனர்.

காதோலிக்கோசுக்கு பிதாப்பிதாவிற்கு இருந்த எல்லா அதிகாரங்களும் உரிமைகளும் இருந்தன. சுருங்கக் கூறின், பிதாப்பிதாவிற்கு பிதாப்பிதா அமைப்பில் பாத்திரியார்கேட்டில் உள்ள எல்லா அதிகாரங்களும் காதோலிக்கோசுக்கு காதோலிக்கேட்டில் உள்ளன.

அதி உயர்பேராயரின் அதிகாரத்தைப் பற்றி அரபி சட்டநூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது : "அதிஉயர்பேராயர் அனைத்திற்கும் தலைவராவார். அவரது கீழ் செயல்படுபவர்களனைவரும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். பாரசீகத்தில் உள்ள அனைத்து பேராயர்கள் மீதும் ஆயர்கள் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு.

www.malankaralibrary.com

அவரைத் தண்டிக்க யாருக்கும் உரிமை இல்லை. அவர் அதிகார பூர்வமாக மக்களை வழிநடத்தும் ஆயராவார். நம்பிக்கை மற்றும் ஆராதனை முறை தொடர்பான இறுதிமுடிவுகளை எடுப்பவர் அவரே ஆவார். திருநாட்களை ஏற்படுத்தவும், நீக்கவும் அவருக்கு உரிமை உண்டு. ஆராதனை முறையில் நாம் அதிஉயர்பேராயரை நினைவுகூர வேண்டும். அவருடைய முடிவுகள் இறுதியானதாக இருக்கும்.

ஆயர்மாமன்றங்களைக் கூட்டவும், பேராயர்களை தேர்ந்தெடுக்கவும் ஆயர்களைத் திருநிலைப்படுத்தவும், மறைமாவட்டங்களை உருவாக்கவும், எல்லைகளை மாற்றியமைக்கவும், ஆயர்களுக்கு இடமாற்றம் அளிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. துறவற இல்லத்தின் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு. இவர் விசுவாசத்தின் பாதுகாவலராவார்."

2. மலங்கரை திருச்சபையின் காதோலிக்க அமைப்பு நிறுவுதலை விளக்குக?

இந்தியாவிலுள்ள மார்தோமா கிறிஸ்தவர்கள் தொன்றுதொட்டே பாரசீகத் திருச்சபையுடன் நட்புறவு கொண்டிருந்தனர். அவ்வாறு பாரசீகத்திலுள்ள கல்தேய சுறியானி ஆராதனை முறை இங்கு பயன்படுத்தப்படவும் பாரசீக கல்தேய சுறியானி ஆயர்கள் இந்தியத் திருச்சபைக்குத் தேவையான ஆன்மீகத் தலைமை வழங்கவும் செய்தனர். ஆனால் இந்தியத் திருச்சபையின் சொத்துக்களை 'சாதிக்கு காரியக்காரன் என்னும் முறையில் தலைமைத் திருத்தொண்டர் (Arch deacon) என்னும் குருவானவரே ஆட்சி செய்து வந்தார்.

17 -ஆம் நூற்றாண்டில் மார்தோமா கிறிஸ்தவர்கள் புத்தன்கூர் சமூகத்தினர் என்றும் பழையகூர் சமூகத்தினர் என்றும் இரண்டாகப் பிரிந்தனர். இந்த புத்தன்கூர் சமூகத்தினர் கத்தோலிக்க நட்புறவை விட்டுவிட்டு அந்தியோக்கியா யாக்கோபாயா திருச்சபையுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டனர். படிப்படியாக புத்தன் கூர் சமூகத்தினர் அந்தியோக்கியன் ஆராதனை முறையைப் பயன்படுத்தி யாக்கோபாயர்கள் என்ற பெயரில் பிரிந்து நின்றனர்.

கேரளாவிலுள்ள புத்தன்கூர் மக்களான யாக்கோபாயர்களை அந்தியோக்கிய பிதாப்பிதாவின் முழு அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் அந்தியோக்கிய திருச்சபையின் நட்புறவில் சுய ஆட்சிமுறையுடைய திருச்சபையாகச் செயல்பட எண்ணிய வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையை அந்தியோக்கியன் பிதாப்பிதா மார் அப்துல்லா தடை செய்தார்.

இத்தருணத்தில் சுய ஆட்சி அதிகாரமும், ஆயர்மன்ற அமைப்பும் உடைய ஒரு திருச்சபை அமைப்பு இங்கு தேவை என்பதை உணர்ந்த வட்டசேரில் மார் திவன்னாசியோஸ், தந்தை பி.டி. கீவர்க்கீஸ் (பின்னர் பெதனி ஆயர் மார் இவானியோஸ்) ஆகியோர் இணைந்து அந்தியோக்கியாவின் முன்னாள் மறைமுதுவரான அப்தேத் மிசிகாவை இங்கு அழைத்து வரவும், இங்குள்ள திருச்சபைத் தேவைகளை எடுத்துரைக்கவும் செய்தனர்.

அவ்வாறு 1912 ஆம் ஆண்டு பிதாப்பிதா அப்தேத் மிசிகா கேரளாவுக்கு வருகை புரிந்து வட்டசேரில் ஆண்டகையின் தடையை நீக்கினார். அவ்வாறு 1912 -ஆம் ஆண்டு அவர் நிரணத்தில் வைத்து சுய ஆட்சி அதிகாரமும், ஆயர்மன்ற அமைப்பும் உடைய காதோலிக்கோஸ் அதிகாரமும் அளித்து அதன் முதல் காதோலிக்கோஸ் ஆண்டகையாக முறிமற்றத்தில் மார் இவானியோஸ் ஆண்டகையை அருள் பொழிவு செய்யவும் செய்தார்.

அவ்வாறு கேரளாவில் அந்தியோக்கியன் வழிமரபையுடைய காதோலிக்கேற்றும் காதோலிக்கோஸ் ஆட்சி அமைப்பும் புத்தன்கூர் யாக்கோபாய மக்களிடையே இடம்பிடித்தது. வட்டசேரில் மார் திவன்னாசியோசையும், காதோலிக்கோஸையும் ஏற்றுக்கொண்டவர் ஆயர் கட்சியினர் என்றும் பிற்காலத்தில் ஆர்த்தடோக்ஸ் சமூகத்தினர் என்றும் அழைக்கப்பட்டனர்.

www.malankaralibrary.com

3. மலங்கரை கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் உயர்பேராயரும், காதோலிக்கோஸ் ஆண்டகையும் ஆவார். குறிப்பு எழுதுக?

1653 -ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையுடன் கொண்டிருந்த நட்புறவை விட்டகன்றவர்களே மலங்கரையின் புத்தன்கூர் சமூகத்தினரான யாக்கோபாயர்கள். கத்தோலிக்க திருச்சபையுடனான ஒற்றுமையை இழந்த நாள் முதல் மீண்டும் ஒன்றிணைவதற்கான முயற்சிகள் நடைபெற்றன.

1930 செப்டம்பர் 20 -ஆம் நாள் கீவர்க்கீஸ் மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் யாக்கோபாயர்களில் ஒரு பிரிவினர் கத்தோலிக்க திருச்சபையுடன் மறுஒன்றிப்பு அடைந்து இழந்த கத்தோலிக்க நட்புறவைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக அந்தியோக்கியன் வழிமரபையுடைய மலங்கரை யாக்கோபாயர்களிடமிருந்து கத்தோலிக்க நட்புறவில் ஒன்றிணைந்தவர்களே மலங்கரை கத்தோலிக்கர் என்று அழைக்கப்படுகின்றனர்.

மறு ஒன்றிப்புக்கு முன் மார் இவானியோஸ் ஆண்டகை அவர்கள் மறுஒன்றிப்பிற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரோமுக்கு பல கடிதங்களை அனுப்பினார். மலங்கரை யாக்கோபாயர்களின் எல்லா மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் நழுவவிடாமல் கத்தோலிக்க நட்புறவில் இணைவதையே மார் இவானியோஸ் ஆண்டகை விரும்பினார். அதாவது ஆராதனை முறை, அருள் நெறி வாழ்வு, இறையியல் போன்றவற்றின் தனித்தன்மையை பாதுகாத்தவாறே கத்தோலிக்க நட்புறவை பெற்றுக் கொள்ள முடியுமா என்று அவர் திருத்தந்தைக்கு விண்ணப்பித்தார்.

அவருடைய அதிகமான கோரிக்கைகளையும் உரோமை ஏற்றுக்கொண்டது. ஆனால் சுய ஆட்சி அதிகாரமுடைய ஆயர்மன்ற அமைப்பைக் குறித்தும் காதோலிக்கோஸ் பதவியைக் குறித்தும் அவருக்கு ஏற்புடைய பதில் கிடைக்கவில்லை. இத்தகைய தேவைகளை பின்னர் நிறைவேற்றுவதாக உரோமை உறுதியளித்தது. அவ்வாறு மறுஒன்றிப்படைந்த மார் இவானியோஸ் ஆண்டகையை பேராயராகவும் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையை ஆயர் ஆட்சி அமைப்புடைய திருச்சபையாகவும் உரோமை ஏற்றுக்கொண்டது. ஆயர் ஆட்சி அமைப்புடைய ஒரு திருச்சபைக்கு சுய ஆட்சி அதிகாரமோ, ஆயர்மன்ற அமைப்பு முறையோ, பேராயருக்கு பிற ஆயர்களின் மேல் அதிகாரமோ இருப்பதில்லை.

**மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபை = உயர்பேராயத் திருச்சபை**

2005 பிப்ருவரி 10 -ஆம் நாள் கிழக்குத் திருச்சபைகளின் சட்டத்தொகுப்பின்படி மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையை பேராயத்திருச்சபை நிலையிலிருந்து உயர்பேராயத் திருச்சபையாக இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை உயர்த்தினார். அதன் முதல் அதி உயர்பேராயராக சிறில் மார் பசேலியோஸ் ஆண்டகையை நியமித்தார். கிழக்குத்திருச்சபைகளின் சட்டத்தொகுப்பிற்கு ஏற்ப பிதாப்பிதாவுக்கு உரிய அனைத்து அதிகாரங்களும் உரிமைகளும் உயர் பேராயருக்கும் உண்டு (கிழக்குத் திருச்சபைச் சட்டம் 151).

அடிப்படைச் சட்டத்தில் பிதாப்பிதாவுக்கும் அவருடைய திருச்சபைகளுக்கும் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளனைத்தும் உயர் பேராயருக்கும் அவருடைய கீழ் செயல்பட்டு வரும் திருச்சபைகளுக்கும் பொருந்தும் (கிழக்குத் திருச்சபைச் சட்டம் 152). சுருங்கக் கூறின், ஒரு தேசத்து திருத்தூது திருச்சபையின் மேல் முழுமையான அதிகாரமுடைய பிதாப்பிதா பதவியும் ஆட்சியும் வளர்ந்து வருகின்ற திருச்சபைகளுக்கும் புதிதாக அளிப்பதற்கு பதிலாக அதற்கு சரிநிகரான அமைப்பும் பதவியுமே உயர்பேராயர் அமைப்பும் உயர்பேராயர் பதவியுமாகும்.

1992 -ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கிழக்குத்திருச்சபைகளின் சட்டப்படி (C.C.E.O.) தேசத்திலிருந்து திருச்சபைகள் நான்கு அதிகார முறைகளைக் கொண்டுள்ளன. (1) பிதாப்பிதா திருச்சபைகள் (2) உயர் பேராயர் திருச்சபைகள் (3) பேராயர் திருச்சபைகள் (4) ஒரே ஆயரை மட்டுமே கொண்டுள்ள மறைமாவட்ட திருச்சபைகள்.

www.malankaralibrary.com

இதில் பிதாப்பிதா திருச்சபைகளும், உயர்பேராயர் திருச்சபைகளும் ஒன்றே என்று கூறலாம். இத்தகைய உயர்பேராயர் திருச்சபையாகவே மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபை உயர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய உயர் பதவியை உடைய நான்கு திருச்சபைகளே இன்று கத்தோலிக்க திருச்சபையில் உள்ளன. அவை, உக்ரேனியன் திருச்சபை, சீறோ மலபார் திருச்சபை, சீறோ மலங்கரை திருச்சபை, ருமேனியன் திருச்சபை. இத்திருச்சபைகளின் தலைவர்களை உயர்பேராயர் என்று அழைக்கின்றனர்.

**உயர்பேராயரும் காதோலிக்காப் பதவியும்**

1992-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கிழக்குத்திருச்சபைகளின் சட்டப்படி 2005 பிப்ருவரி 10 -ஆம் நாள் மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் உயர் பேராயராக உயர்த்தப்பட்டார். மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபை அந்தியோக்கியன் திருச்சபையின் ஆராதனை முறையையும், மரபையும் பின்பற்றி வருகின்றது. அதனால் சட்டங்களின் படி மலங்கரை கத்தோலிக்க திருச்சபை உயர்பேராயத் திருச்சபையாகவும் அதன் தலைவர் உயர்பேராயராகவும் உயர்த்தப்பட்டார் என கூறும் போது மலங்கரை திருச்சபையின் மரபுப்படி இத்திருச்சபை காதோலிக்கேட் அமைப்புக்கும் இதன் தலைவர் காதோலிக்கோஸ் பதவிக்கும் உயர்த்தப்பட்டார் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்தியோக்கியன் மரபை பின்பற்றுகின்ற ஆர்த்தடோக்ஸ் மற்றும் யாக்கோபாய தலைவர்கள் காதோலிக்க பாவா என்றே அழைக்கப்படுகிறார்கள். பாவா' என்பதற்கு தந்தை என்பது பொருள்.

23 கிழக்குத் திருச்சபைகளுக்கும் பொதுவான சட்டப்படி உயர்பேராயர் என்னும் சொல்லே அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேசத் திருச்சபையும் அவர்களின் திருச்சபைத் தலைவர் எப்பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்பதை அவர்களின் தனிப்பட்ட சட்டநூல் கூறுகின்றது. அதனால் கிழக்குத்திருச்சபைச் சட்டத்தின் உயர்பேராயர். மலங்கரை மரபுப்படி காதோலிக்க பாவா என்று அழைக்கப்படுவார். சுருங்கக் கூறின், காதோலிக்க பாவாவின் அனைத்து அதிகாரங்களும் உரிமைகளும் பதவியும் உயர்பேராயரின் நியமனத்தில் உட்பட்டிருக்கின்றன. அதனால் மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபைக் தலைவர் கிழக்குத் திருச்சபை மரபுப்படி உயர்பேராயர் என்றும் மலங்கரை மரபுப்படி காதோலிக்க பாவா என்றும் அழைக்கப்படுகிறார். இதனால் இவர் உயர்பேராயர் - காதோலிக்கோஸ் என்று அழைக்கப்படுகிறார். இவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளையேக் கொண்டுள்ளன.

சுய ஆட்சி அதிகாரமுடைய ஆயர்மன்ற அமைப்பும் காதோலிக்கப் பதவியும் பின்னர் அளிப்பதாக 1930 -ல் உரோமை அளித்த வாக்குறுதி 2005 பிப்ருவரி 10-ஆம் நாள் நிறைவேறியது.

4. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் கடமைகளை விவரி?

மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபை சுய ஆட்சி அமைப்புடைய ஒரு திருச்சபையாக உயர்த்தப் பட்டவுடன் திருச்சபைக்கு ஒரு பதவி கிடைத்தது மட்டுமன்று அதற்கு பல கடமைகளும் வந்துள்ளன. உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களிடம் கூறியதாவது, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16 : 15). நற்செய்தியை பறைசாற்றுங்கள்' என்னும் ஒரே பொறுப்பையே இயேசு திருச்சபைக்குக் கொடுத்துள்ளார். இயேசுவில் முழுமையடைந்த இறைவெளிப்பாட்டின் வரலாற்றை உலகம் முழுவதும், உலக முடிவுவரை பறைசாற்ற வேண்டும் என்பதே திருச்சபையின் கடமை.

நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்னும் கூற்றுக்கு மூன்று வகையில் பொருள் கொள்ளலாம். நற்செய்தியை கற்பித்தல், கொண்டாடுதல், வாழ்வாக்குதல். திருச்சபையின் எல்லா செயல்பாடுகளும் இம்மூன்று நிலைகளிலும் உட்பட்டிருக்கின்றன. சுய ஆட்சி முறை கிடைத்ததன் வழியாக இம்மூன்று

www.malankaralibrary.com

நிலைகளிலும் மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபைக்கு மிகப் பெரிய கடமைகள் உள்ளன.

முதலாவதாக, நற்செய்தியை கற்பித்தல் என்பதன் வழியாக நற்செய்தி அறிவிப்புப் பணி, மறைக்கல்வி, இறையியலை உருவாக்குதல் போன்ற பணிகளில் அதிகம் செயல்பட வேண்டும். இந்தியாவில் 2 சதவீதம் மட்டுமே கிறிஸ்தவர்கள் உள்ளனர். ஏராளம் இளைஞர்கள் மறைத்தூதுப் பணியாற்ற முன்வர வேண்டும். அவ்வாறு ஒன்றுசேர்ந்த மறைத்தூதுப் பணியாற்ற மலங்கரைக் கத்தோலிக்கர் முன்நின்று செயல்பட வேண்டும். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையிலான அனைவருக்கும் நம்பிக்கை சார்ந்த விழிப்புணர்வு வழங்க திருச்சபை முன்வர வேண்டும். மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் முன்னோர்களையும், மரபையும் உணர்ந்து மலங்கரைத் திருச்சபையின் இறையியலை வளர்த்துவர திருச்சபை முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இரண்டாவதாக, நற்செய்தியை கொண்டாடுதல். திருச்சபையின் ஆராதனையும், அருளடையாளங்களுமே இங்கே பொருள் கொள்ளப்படுகிறது. நம்பிக்கைக் கொண்டாட்டமே ஆராதனை. அதனை பொருள்மிக்கதாகக் கொண்டாடத் திருச்சபைக் கடமைப்பட்டிருக்கிறது. மலங்கரை ஆராதனைமுறையின் முழுமையான அனுபவத்தை இறைமக்களுக்கு அளிக்க திருச்சபைக் கடமைப்பட்டுள்ளது. முழுமையானதும், தகுதிவாய்ந்ததும், உணர்வு பூர்வமுமான ஆராதனைகளை நடத்த விசுவாசிகளுக்குக் கற்பித்து அவர்களை ஆயத்தம் செய்ய வேண்டும். மலங்கரை ஆராதனை முறையை அதன் தனித்துவம் குறையாமல் கொண்டாட நாம் முன்வர வேண்டும். அவ்வாறு இறைமக்களை உண்மையான இறை அனுபவத்தில் வழிநடத்த திருச்சபை கடமைப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, நற்செய்தியை வாழ்வாக்குதல் என்பது இயேசுவின் நற்செய்திக்கு சான்றுபகர்தல் என்பதாகும். இயேசுவின் நற்செய்திக்கு தனிப்பட்ட முறையில் சான்றுபகர மலங்கரைத் திருச்சபை முன்வர வேண்டும். ஏழைகளுடன் நட்புகொள்ளவும்,

புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு புத்துயிரளிக்கவும், கல்வி, சேவை செய்தல் போன்றவைகளின் வழியாக உண்மையான சேவை செய்யவும் திருச்சபைக்கு கடமை உண்டு.

சுருங்கக் கூறின் மலங்கரை திருச்சபைக்கு புதுப்பதவி கிடைத்ததன் வழியாக இம்மூன்று நிலைகளிலுமாக மாபெரும் கடமையை ஆற்ற வேண்டியிருக்கிறது. திருச்சபை மக்களனைவரும் இக்கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**குறு வினா விடைகள்**

1. பேராய திருச்சபையாக இருந்த மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையை உயர் பேராயத் திருச்சபையாக உயர்த்தப்பட்டது எப்போது? 2005 -ஆம் ஆண்டு பிப்ருவரி 10-ஆம் நாள்
2. மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரை உயர் பேராயராகவும், காதோலிக்க பாவாயாகவும் உயர்த்தியவர் யார்? திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்
3. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சி அமைப்பின் தனித்தன்மை என்ன? சுய ஆட்சிமுறை உடையதும், ஆயர்மன்ற அமைப்பு முறை உடையதும்
4. கி.பி. 313 ல் மிலான் சாசனத்தின் வழியாக கிறிஸ்தவ மதத்தை உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான மதமாக உயர்த்தியவர் யார்? கான்ஸ்டன்டைன் மன்னர்
5. அரசியலின் அடிப்படையில் உரோமைப் பேரரசை எவ்வாறு இரண்டாகப் பிரித்தனர்? மேற்குநாடுகள், கிழக்குநாடுகள்

www.malankaralibrary.com

6. தொடக்கக் காலத்தில் உரோமை பேரரசின் மாகாணங்களை எவ்வாறு இரண்டாகப் பிரித்தனர்? மாவட்டம், உயர் மாவட்டம்
7. உரோமைப் பேரரசின் மாகாணங்களிலுள்ள முக்கிய நகரங்களின் ஆயர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்? மெத்றாபோலித்தன் (Metropolitan)
8. உரோமைப் பேரரசின் மாகாணத்திலுள்ள அனைத்து ஆயர்கள் மீது அதிகாரம் கொண்ட திருச்சபைத் தலைவர் யார்? மெத்றாபோலித்தன் (Metropolitan)
9. உரோமைப் பேரரசில் திருச்சபை மையங்களான ஐந்து நகரங்கள் எவை? உரோமை, அலெக்சாந்தரியா, அந்தியோக்கியா, கான்ஸ்டான்டிநோபிளை எருசலேம்
10. உரோமைப் பேரரசில் உரோமை நகரை மையமாகக் கொண்ட ஆராதனை முறை எது? இலத்தீன் ஆராதனை முறை
11. உரோமைப் பேரரசில் அலெக்சாந்தரியா நகரை மையமாகக் கொண்ட ஆராதனை முறை எது? கோப்டிக் ஆராதனை முறை
12. உரோமைப் பேரரசில் அந்தியோக்கியா நகரை மையமாகக் கொண்ட ஆராதனை முறை எது? அந்தியோக்கியன் ஆராதனை முறை
13. உரோமைப் பேரரசில் கான்ஸ்டான்டிநோபிள் நகரை மையமாகக் கொண்ட ஆராதனை முறை எது? பைசன்டைன் ஆராதனை முறை
14. உரோமைப் பேரரசில் எருசலேமை நகரை மையமாகக் கொண்ட திருச்சபையை எவ்வாறு அழைத்தனர்? மையத்திருச்சபை
15. உரோமைப் பேரரசில் உரோமை, அலெக்சாந்தரியா, அந்தியோக்கியா, கான்ஸ்டான்டிநோபிள், எருசலேம் போன்ற இடங்களின் ஆயர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பிதாப்பிதா (Patriarch)
16. பிதாப்பிதா என்ற சொல்லிற்கு என்ன பொருள்? பிதாக்களின் பிதா
17. பிதாப்பிதா என்பதற்கு இணையான தமிழ்ச் சொற்கள் எவை? மறைமுதுவர், முதுபெரும் தலைவர்
18. பிதாப்பிதா என்பதன் கிரேக்க மொழிச் சொல் என்ன? பாத்திரியார்க்கெஸ்
19. திருவிவிலியத்தில் குலமுதுவர்களான ஆபிரகாம் மற்றும் யாக்கோபின் 12 புதல்வர்கள் மற்றும் தாவீது போன்றவர்களை அழைக்க பயன்படுத்திய சொல் எது? பாத்திரியார்க்கெஸ்
20. ஐந்தாம் நூற்றாண்டு வரை யூதர்களின் தொழுகைக்கூடத் தலைமைக்குருவை எவ்வாறு அழைத்தனர்? பிதாப்பிதா
21. சுமார் ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஒரு தேசத் திருச்சபையின் முழு அதிகாரமும், அதன் ஆயர்களின் மேல் அதிகாரமும் உடைய பேராயர்களை எவ்வாறு அழைக்கத் தொடங்கினர்? பாத்திரியார்க்கிஸ் (பிதாப்பிதா)
22. ஐந்தாம் நூற்றாண்டு வரை திருச்சபையின் தலைமைப் பதவிகள் யாவை? எப்பிஸ்கோப்பா, ஆயர்கள், பேராயர்கள்
23. ஐந்தாம் நூற்றாண்டு முதல் உரோமைப் பேரரசில் எத்தனை பாத்திரியார்க்கேற்று (பிதாப்பிதா ஆட்சி நிலையம்) இருந்தன? ஐந்து
24. ஐந்தாம் நூற்றாண்டு முதல் உரோமைப் பேரரசில் எத்தனை? பிதாப்பிதாக்கள் இருந்தனர் ஐந்து
25. உரோமைப் பேரரசின் ஐந்து பிதாப்பிதாக்களுள் முதன்மை இடம் பெற்றிருந்தவர் யார்? உரோமை பிதாப்பிதா

www.malankaralibrary.com

26. உரோமைப் பேரரசின் ஐந்து பிதாப்பிதாக்களுள் உரோமை பிதாப்பிதா முதன்மை இடம் பெற்றிருந்தது ஏன்? திருத்தூதர் தலைவரான பேதுருவின் வழிவந்தவர் என்ற முறையிலும் உரோமைப் பேரரசின் தலைநகரின் ஆயர் என்ற முறையிலும்
27. பாரசீகத் திருச்சபை எப்போது வளர்ச்சியின் பாதையை அடைந்தது? நான்காம் நூற்றாண்டின் இறுதியில்
28. பாரசீகத் திருச்சபையின் தலைவரை ஐந்தாம் நூற்றாண்டு முதல் எவ்வாறு அழைத்தனர்? (அதி)உயர்பேராயர்.
29. தொடக்க காலத்தில் அர்மேனியா மற்றும் ஜார்ஜியா திருச்சபைத் தலைவர்களை எவ்வாறு அழைத்தனர்? (அதி)உயர்பேராயர்
30. உரோமைப் பேரரசின் வெளியே ஒரு தேசத்தின் திருச்சபையின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்? காதோலிக்கோஸ்.
31. 'காதோலிக்கோஸ்' என்னும் வார்த்தையின் பொருள் என்ன? திருச்சபையின் தலைவர்
32. பிதாப்பிதாக்களின் கீழ் அதிகாரமுடைய திருச்சபையின் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? 'காதோலிக்கோஸ்'
33. மூன்றாம் நூற்றாண்டு முதல் உரோமைப் பேரரசில் காதோலிக்கோஸ் என்னும் பெயரைக் கொண்ட அரச அலுவலர்கள் யார்? ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் மீது அதிகாரமுடையவர்
34. ஐந்தாம் நூற்றாண்டின் முதற்பகுதி முதல் 'திருச்சபைத் தலைவர்' எவ்வாறு அழைக்கப்பட்டார்? காதோலிக்கோஸ்
35. ஜார்ஜியா திருச்சபைத் தலைவரை எவ்வாண்டு முதல் காதோலிக்கோஸ் என்னும் பெயரால் அழைத்தனர்? கி.பி. 609 முதல்
36. (அதி)உயர்பேராயரின் அதிகாரத்தைப் பற்றி அரபி சட்டநூலில் கூறப்பட்டுள்ளவை என்ன? (அதி)உயர்பேராயர் அனைத்திற்கும் தலைவராவார். அவரது கீழ் செயல்படுபவர்களனைவரும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். பாரசீகத்தில் உள்ள அனைத்து பேராயர்கள் மீதும் ஆயர்கள் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு. அவரைத் தண்டிக்க யாருக்கும் உரிமை இல்லை. அவர் அதிகார பூர்வமாக மக்களை வழிநடத்தும் ஆயராவார். நம்பிக்கை மற்றும் ஆராதனை முறை தொடர்பான இறுதிமுடிவுகளை எடுப்பவர் அவரே ஆவார். திருநாட்களை ஏற்படுத்தவும், நீக்கவும் அவருக்கு உரிமை உண்டு. ஆராதனை முறையில் நாம் அதிஉயர்பேராயரை நினைவுகூர வேண்டும். அவருடைய முடிவுகள் இறுதியானதாக இருக்கும். ஆயர்மாமன்றங்களைக் கூட்டவும், பேராயர்களை தேர்ந்தெடுக்கவும் ஆயர்களைத் திருநிலைப்படுத்தவும், மறைமாவட்டங்களை உருவாக்கவும், எல்லைகளை மாற்றியமைக்கவும், ஆயர்களுக்கு இடமாற்றம் அளிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. துறவற இல்லத்தின் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு. இவர் விசுவாசத்தின் பாதுகாவலராவார்."
37. கி.பி. 451 -ஆம் ஆண்டு நடைபெற்ற கால்செதோன் (கல்க்கதானியா) திருச்சங்கத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் யார்? ஒரே இயல்புக்கொள்கை பரப்பாளர்கள்
38. ஒரே இயல்புக்கொள்கை பரப்பாளர்கள் பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? யாக்கோபாயர்கள் மற்றும் சிறியன் ஆர்த்தடோக்ஸ் திருச்சபையினர்
39. கால்செதோனுக்கு எதிரான யாக்கோபாயர்கள் எவ்விடத்தை மையமாகக் கொண்டு மறைப்பணியாற்றினர்? அந்தியோக்கியா
40. யாக்கோபாயர்களின் ஆராதனை முறை எது? அந்தியோக்கியன் ஆராதனைமுறை

www.malankaralibrary.com

41. பைசன்டைன் மன்னர்களின் மதக்கலவரத்துக்கு பயந்து எவ்விடம் நோக்கி யாக்கோபாயர்கள் குடிபெயர்ந்தனர்? பாரசீகம்
42. பாரசீகத்தில் தக்கிரீதுக்கு கி.பி. 559-ஆம் ஆண்டு யாக்கோபாயர்களின் ஆன்மீக செயல்களை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட யாக்கோபாய ஆயர் யார்? ஆயர் ஆகுதேன்மே
43. கி.பி. 629-ஆம் ஆண்டு பாரசீக யாக்கோபாய திருச்சபைகளின் ஆன்மீக தலைவராக நியமிக்கப்பட்ட அந்தியோக்கிய உயர் பேராயர் யார்? மார் மாறுதா
44. அந்தியோக்கிய பிதாப்பிதா மார் மாறுதாவை எப்பதவியோடு நியமித்தார்? தக்கிரீதின் உயர் பேராயரும் மப்ரியானுமாக
45. பாரசீகத்தில் தக்கிரீத் அந்தியோக்கியன் யாக்கோபாய திருச்சபையின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயரின் பதவி என்ன? மப்ரியான் அதிகாரமுடைய ஓர் உயர்பேராயர்
46. மப்ரியான் என்னும் வார்த்தையின் பொருள் என்ன? 'பிறப்பிப்பவர்'
47. மப்ரியானின் அதிகாரங்கள் யாவை? ஆயர்களையும் பேராயர்களையும் திருநிலைப்படுத்தும் அதிகாரமுடையவர், ஏராளமான ஆன்மீக பலன்களை வெளிக்கொணரும் திறன் படைத்தவர், கிழக்குத்திருச்சபைகளின் தலைமைக்குருவானவர், பாரசீக திருச்சபைத் தலைவர்
48. அந்தியோக்கிய யாக்கோபாய பிதாப்பிதாவின் பிரதிநிதி எனப்படும் உயர் பேராயர் யார்? மப்ரியான்
49. மார் எப்ராயா என்னும் மப்ரியான் (1264 - 1286) தமது பெயருடன் சேர்ந்து எப்பதவிப் பெயரை பயன்படுத்தத் தொடங்கினார்? காதோலிக்கோஸ்.
50. தக்கிரீதிலுள்ள யாக்கோபாயா திருச்சபையின் மப்ரியான் அதாவது காதோலிக்கோஸ் அதிகாரத்தை பிதாப்பிதா எப்போது தடை செய்தார்? 1860 - 1863 காலத்தில்
51. இந்தியாவிலுள்ள மார்தோமா கிறிஸ்தவர்கள் தொன்றுதொட்டே எத்திருச்சபையுடன் நட்புறவு கொண்டிருந்தனர்? பாரசீகத் திருச்சபை
52. இந்தியாவிலுள்ள மார்தோமா கிறிஸ்தவர்கள் தொன்றுதொட்டே எந்த ஆராதனைமுறை கடைபிடித்தனர்? கல்தேய சுறியானி ஆராதனை முறை
53. இந்தியத் திருச்சபையின் சொத்துக்களை 'சாதிக்கு காரியக்காரன் என்னும் முறையில் ஆட்சி செய்து வந்தவர் யார்? தலைமைத் திருத்தொண்டர் (Arch deacon)
54. 17 -ஆம் நூற்றாண்டில் பிளவுற்ற என்றும் பழையகூர் சமூகத்தினர் எந்த ஆராதனைமுறை கடைபிடித்தனர்? கல்தேய சுறியானி ஆராதனை முறை
55. புத்தன்கூர் சமூகத்தினர் எந்த ஆராதனைமுறை கடைபிடித்தனர்? அந்தியோக்கியன் ஆராதனை முறை
56. ஆயர் வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையை தடை செய்த அந்தியோக்கியன் பிதாப்பிதா யார்? மார் அப்துல்லா.
57. அந்தியோக்கியாவின் முன்னாள் மறைமுதுவரான அப்தேத் மிசிகாவை மலங்கரைக்கு வரவழைத்தவர்கள் யாவர்? வட்டசேரில் மார் திவன்னாசியோஸ், தந்தை பி.டி. கீவர்க்கீஸ்
58. ஆயர் வட்டசேரில் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையின் தடையை நீக்கியவர் யார்? பிதாப்பிதா அப்தேத் மிசிகா
59. ஆர்த்தடோக்ஸ் சமூகத்தினரின் முதல் காதோலிக்கோஸ் ஆண்டகை யார்? முறிமற்றத்தில் மார் இவானியோஸ் ஆண்டகை

www.malankaralibrary.com

60. வட்டசேரில் மார் திவன்னாசியோசையும், புதிய காதோலிக்கோஸையும் ஏற்றுக்கொண்ட ஆயர் கட்சியினர் பிற்காலத்தில் எப்பெயரை பெற்றன?ர் ஆர்த்தடோக்ஸ் திருச்சபை
61. மலங்கரையின் புத்தன்கூர் சமூகத்தினரான யாக்கோபாயர்கள் எப்போது கத்தோலிக்க திருச்சபையுடன் கொண்டிருந்த நட்புறவை விட்டகன்றனர்? 1653 - ஆம் ஆண்டு
62. 1930 செப்டம்பர் 20 ல் கீவர்க்கீஸ் மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் யாக்கோபாயர்களில் ஒரு பிரிவினர் மறுஒன்றிப்படைந்த பின்னர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? மலங்கரை கத்தோலிக்கர்
63. கீவர்க்கீஸ் மார் இவானியோஸ் ஆண்டகையின் எந்நெந்த கோரிக்கைகளை உரோமை பின்னர் நிறைவேற்றுவதாக உறுதியளித்திருந்தது? சுய ஆட்சி அதிகாரமுடைய ஆயர்மன்ற அமைப்பு மற்றும் காதோலிக்கோஸ் பதவி
64. மறுஒன்றிப்படைந்த மார் இவானியோஸ் ஆண்டகையையும் திருச்சபையையும் உரோமை எவ்வாறு ஏற்றுக்கொண்டது? பேராயராகவும் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையை ஆயர் ஆட்சி அமைப்புடைய திருச்சபையாகவும்.
65. மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையை பேராயத் திருச்சபையிலிருந்து உயர்பேராயத் திருச்சபையாக இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை எப்போது உயர்த்தினார்? 2005 பிப்ருவரி 10 -ஆம் நாள்
66. மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையின் முதல் உயர்பேராயர் யார்? மோறான் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ்
67. கிழக்குத்திருச்சபைகளின் எந்த சட்டத்தொகுப்பிற்கு ஏற்ப பிதாப்பிதாவுக்கு உரிய அனைத்து அதிகாரங்களும் உரிமைகளும் உயர் பேராயருக்கும் உண்டு? கிழக்குத் திருச்சபைச் சட்டம் 151 மற்றும் 152
68. கிழக்குத்திருச்சபைகளின் சட்டப்படி (C.C.E.O.) தேசத் திருச்சபைகள் எந்நெந்த அதிகார நிலைகளைக் கொண்டுள்ளன? (1) பிதாப்பிதா திருச்சபை (2) உயர் பேராயர் திருச்சபை (3) பேராயர் திருச்சபை (4) ஒரே ஆயரை மட்டுமே கொண்டுள்ள மறைமாவட்ட திருச்சபை
**69.** கத்தோலிக்க ஒன்றிப்பில் உயர்பேராயர் திருச்சபைகள் யாவை? உக்ரேனியன் திருச்சபை, சீறோ மலபார் திருச்சபை, சீறோ மலங்கரை திருச்சபை, ருமேனியன் திருச்சபை.
70. மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் உயர் பேராயராக உயர்த்தப்பட்டார் என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்? காதோலிக்கோஸ் பதவி
71. அந்தியோக்கியன் மரபை பின்பற்றுகின்ற ஆர்த்தடோக்ஸ் மற்றும் யாக்கோபாய திருச்சபைகளின் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்? காதோலிக்க பாவா
72. பாவா' என்பதன் பொருள் என்ன? தந்தை.
73. கிழக்குத் திருச்சபைகளுக்கு பொதுவான உயர்பேராயர் என்னும் சொல் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் தனிச்சட்டநூலின் படி எவ்வாறு அழைக்கப்படுவார்? உயர்பேராயர் - காதோலிக்கோஸ்
74. “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் **<u>நற்செய்தியை</u>** பறைசாற்றுங்கள்” (மாற்கு 16 : 15).
75. நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்னும் கூற்றுக்கு மூன்று வகையிலான அர்த்தங்கள் என்ன? நற்செய்தியை கற்பித்தல், கொண்டாடுதல், வாழ்வாக்குதல்.
76. நற்செய்தியை கற்பித்தல் என்பதன் தளங்கள் யாவை? நற்செய்தி அறிவிப்புப் பணி, மறைக்கல்வி, இறையியலை உருவாக்குதல்

www.malankaralibrary.com

77. நற்செய்தியை கொண்டாடுதல் என்பதன் தளங்கள் யாவை? திருச்சபையின் ஆராதனையும், அருளடையாளங்களும்
78. நற்செய்தியை வாழ்வாக்குதல் என்பதன் அர்த்தம் என்ன? இயேசுவின் நற்செய்திக்கு சான்றுபகர்தல்
79. "ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திருங்கள்; ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப்பொறுப்புகளை **கடவுளே** ஏற்படுத்தினார். ஆகையால் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர்" (உரோமையர் 13:1- 2).

## பாடம் 12

## மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் துறவற சமூகங்கள்

பயிற்சி வினாக்கள்

1. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் நிறுவப்பட்ட துறவற சமூகங்களை குறித்து சிறுகுறிப்பு எழுதுக?

பெதனி துறவற சமூகம் (O.I.C)

மலங்கரைத் திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்த துறவற சமூகமே மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தினர். (The Order of the Imitation of Christ) சாதாரணமாக இச்சமூகம் பெதனி என்னும் பெயரில் அறியப்படுகிறது.

பிரிவினைகளாலும் பிரச்சனைகளாலும் சிதைவுற்ற யாக்கோபாய சபையை புதுப்பிக்கும் ஆவலால் தூண்டப்பட்ட தந்தை பி.டி. கீவர்க்கீஸ் - பிற்கால மார் இவானியோஸ் ஆண்டகை, தம் சபையின் புதுப்பித்தலுக்காக செபிக்கவும் சிந்திக்கவும் செய்து வந்தார்.

அதன் பலனாக திருச்சபையைப் புதுப்பிக்கும் நோக்குடன் ஓர் ஆய்வாக செராம்பூரில் தொடங்கிய பெதனி துறவற இல்லம் 1919 ஆகஸ்டு 15-ஆம் நாள் பத்தனம்திட்டை மாவட்டத்திலுள்ள றாந்நி பெருநாட்டில் உள்ள முண்டன் மலையில் நிறுவப்பட்டது.

அவ்வாறு முண்டன்மலை மலங்கரை சபையின் ஆன்மீக மையமாக மாறியது. திருச்சபையைப் புதுப்பித்தலின் ஒரு பகுதியாக 1930 செப்டம்பர் 20-ஆம் நாள் மார் இவானியோஸ் ஆண்டகையும் துறவற சமூகத்தினரும் உலகத்திருச்சபையின் முழுமையான கூட்டு அன்புறவில் பங்கு கொண்டனர்.

இதன் பலனாக மலங்கரைத் திருச்சபையினுடையவும், மறு ஒன்றிப்பு இயக்கத்தினுடையவும் தொட்டிலாக பெதனி உயர்ந்து நிற்கின்றது.

<u>அழைப்பும், பணிக்கடமையும்</u>

'பெதனி' என்பதற்கு பொருள் அமைதியின் இல்லம்' என்று பொருள். நற்செய்தியில் வரும் பெதனி (பெத்தானியா) இயேசுவை அதிகமாக அன்பு செய்தது, இயேசு அதிகமாக அன்பு செலுத்திய இடமும் இதுவே. லாசர் இயேசுவின் நண்பரும், அவரது உயிர்ப்பின் சான்றாளருமாவார்.

மரியா செபவாழ்வின் அடையாளமாகத் திகழ்ந்தார். மார்த்தா சேவை மனப்பான்மையினுடையவும், மறைபரப்பு பணியினுடையவும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். செபம், அமைதி, எளிமை, கடின உழைப்பு போன்றவற்றின் வழியாக இறை அனுபவத்திற்காக தம்மையே அர்ப்பணித்து செயல்பட்டு வருகின்ற ஒரு துறவியின் வசிப்பிடமே துறவற இல்லம்.

பெதனி சமூக நிறுவனரான மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்க்கையும், எண்ணங்களும் இச்சமூக வாழ்வின் முன்மாதிரியும் தூண்டுதலும்

www.malankaralibrary.com

ஆகும். 1966 ஏப்ரல் 14 -ஆம் நாள் பெதனி துறவற சமூகம் பாப்பரசரின் கீழ் செயல்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டது.

2000 ஏப்ரல் 24 -ஆம் நாள் பெதனி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. பெதனி துறவற சமூகத்தின் தலைமையிடம் கோட்டயத்திலுள்ள களத்திப்படியிலும், பெதனி நவஜீவன், பெதனி நவஜோதி போன்ற மாகாணங்களின் தலைமையிடம் முறையே நாலாஞ்சிறை மற்றும் ஆலுவா என்ற இடங்களிலாகும்.

நற்செய்தியில் எடுத்துரைக்கும் கீழ்ப்படிதல், கற்புநெறி வாழ்வு, ஏழ்மை போன்றவற்றை முறையாக கடைபிடிப்பதன் வழியாக இயேசுவை பின்பற்றுதல் என்பது தான் கிறிஸ்தவ துறவறத்தின் நோக்கம். ஒரு துறவி தன்னை முழுவதுமாக, கடவுளுக்கும் தம்மை ஒத்த படைப்புகளுக்குமாக ஒப்புக் கொடுக்கிறார்.

மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தின் தனிவரம் (Charism) கீழைத் திருச்சபையின் துறவற மரபிலும், இந்திய துறவற மரபிலும் வேரூன்றியதாகும். இந்தியக் கலாச்சாரத்தின் அடையாளமான காவிநிற ஆடையையே பெதனி துறவறத்தார்கள் அணிகின்றனர்.

மலங்கரைத் திருச்சபையின் ஆன்மீகப் புதுப்பித்தல் வழியாக இந்தியா முழுவதும் நற்செய்தி அறிவித்தல், இயேசுவை அவருடைய செபவாழ்வு மற்றும் சமூக வாழ்வின் அடிப்படையில் பின்பற்றுதல், போன்றவையே பெதனி துறவற சமூகத்தின் பணிக்கடமைகளாகும்.

பெதனி கன்னியர் சமூகம் (S.I.C)

மறுஒன்றிப்பின் சிற்பியான கீவர்க்கீஸ் மார் இவானியோஸ் ஆண்டகையால் நிறுவப்பட்டதே பெதனி கன்னியர் சமூகம். ஆண்களுக்காக பெதனி துறவற சமூகத்தை தொடங்கிய அவருக்கு, கல்வி, சமூகம், கலாச்சாரம் மற்றும் ஆன்மீக செயல்பாடுகளில் பணிவிடை புரிய ஒரு கன்னியர் சமூகத்தை மலங்கரைத் திருச்சபையில் ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது.

குடும்பங்களில் சென்று பெண்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பெண்களால் மட்டுமே முடியும் என்று அவர் எண்ணினார். அவ்வாறு 1920 முதல் பெண்களுக்கு துறவற பயிற்சி அளிப்பதற்காக திருமூலபுரத்தில் துறவற பயிற்சி அளிக்கத் தொடங்கினார்.

1925 மே 1-ஆம் நாள் தந்தை பி.டி. கீவர்க்கீஸ் பெதனி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1925 -ஆம் ஆண்டு இறையன்னையின் பிறப்புத் திருநாளான செப்டம்பர் 8-ஆம் நாள் பெதனி கன்னியர் சமூகத்தின் முதல் உறுப்பினர்களான அருட்சகோதரி. சைனோ, அருட்சகோதரி ஹபா, அருட்சகோதரி தனகா போன்றோர் ஏழ்மை, பிரம்மசாரியம், கீழ்ப்படிதல் போன்றவற்றை வாழ்க்கைத் தத்துவமாக ஏற்று மார் இவானியோஸ் ஆண்டகையின் முன்னிலையில் துறவற வாழ்வை ஏற்றுக்கொண்டனர்.

திருச்சபைத் தந்தையான புனித பசேலியோசின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பெதனி கன்னியர் சமூகத்துக்கு ஒரு சட்ட ஒழுங்குமுறையை மார் இவானியோஸ் ஆண்டகை தயாரித்தார். அவ்வாறு பெதனி கன்னியர் சமூகம் உருவானது.

கன்னியர் சமூக அழைப்பும், பணிக்கடமையும்

இயேசுவிற்கு ஆறுதலை அளிக்கவும் அவருடைய அருளாசீரைப் பெற்றுக்கொள்ளவும் செய்த விவிலியத்தில் இலாசரின் பெத்தானியா இல்லத்தின் நினைவு கூருதலாகவே இக்கன்னியர் சமூகத்துக்கு பெதனி என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தனர்.

மலை உச்சிக்குச் சென்று செபித்து வலுவடைந்தவராய் மலையை விட்டிறங்கி செப அனுபவத்தை பகிர்ந்துகொண்ட இயேசுவின் மறைவாழ்வையும், சிறந்த செயல்பாடுகளைக் கொண்ட சமூகவாழ்வை பின்பற்றி, இயேசுவுக்கு சான்று பகர

www.malankaralibrary.com

வேண்டும் என்னும் பொருளிலேயே 'கிறிஸ்துவை பின்தொடருதல்' என்ற சிந்தனையை துறவற சமுகத்தில் வாழ்வாக்குகின்றனர்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்கும், இந்தியாவில் நற்செய்தி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், மனித இனத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும் பெதனி கன்னியர் சமூகம் பாடுபடுகின்றது.

1930 முதல் 1936 வரை திருவல்லாவிலேயே அருட்சகோதரிகள் வாழ்ந்தனர். 1936 முதல் 1956 வரை திருவனந்தபுரம் மற்றும் திருவல்லா மறைமாவட்டங்களின் துறவற சமூகங்களாக இரண்டு சகோதரிகளின் தலைமையில் வளர்ந்து வந்தது. 1956 ஆகஸ்ட் 21 -ஆம் நாள் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் இரண்டு சமூகங்களையும் இணைத்து ஓர் அருட்சகோதரியின் தலைமையில் கொண்டு வந்து பாப்பரசரின் கீழ் செயல்படும் பதவியை அளித்தார்.

இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட சமூகத்தின் தலைவராக செயல்பட்டவர், முதல் பத்து உறுப்பினர்களின் ஒருவரான அருட்சகோதரி மாக்சா ஆவார். 1975 -ஆம் ஆண்டு கோட்டயத்தில் தலைமையிடம் நிறுவப்படுவது வரையிலும் திருவல்லாவிலுள்ள திருமூலபுரத்தின் முதல் இல்லமே தலைமையிடமாக செயல்பட்டு வந்தது.

பெதனி கன்னியர் சமூகத்துக்கு இன்று திருவனந்தபுரம், திருவல்லா, பெத்தேரி, பத்தனம்திட்டை, மூவாற்றுபுழா என்னும் 5 மாகாணங்கள் உள்ளன.

மேரிமக்கள் கன்னியர் சமூகம் (Daughters of Mary)

தூய உள்ளத்தோருக்கு கடவுளைக் காணும் பேற்றை வாக்களித்து ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்து, தூயவரும், ஏழையும், எளியவருமான இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி கிறிஸ்தவர்களல்லாதவர்களிடையே நற்செய்தி அறிவிக்கவும் கத்தோலிக்கர் அல்லாதவர்களை கத்தோலிக்க திருச்சபையின் கூட்டு அன்புறவில் ஒன்றிணைப்பதற்காக திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்தில் உருவான ஒரு துறவற சமூகமே மேரி மக்கள் கன்னியர் சமூகம்.

பாலாவிலுள்ள பிரவித்தானம் பங்கின் உறுப்பினரான மதிப்பிற்குரிய தந்தை ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்கள் மார் இவானியோஸ் ஆண்டகையின் அழைப்புக்கேற்ப 1934 -ஆம் ஆண்டு மார்த்தாண்டத்தில் மறைபரப்புப் பணியாற்ற வந்தார்.

இறையரசை விரிவாக்குவதற்கான தமது செயல்பாடுகளில் துணைபுரிய ஒரு துறவற கன்னியர் சமூகத்தை உருவாக்க விரும்பினார். 1938 மே 8-ஆம் நாள் மறுஒன்றிப்பின் சிற்பியான மார் இவானியோஸ் ஆண்டகையின் அருளாசீருடன் தந்தை மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டம் என்னும் இடத்தில் மேரி மக்கள் கன்னியர் சமூகத்தை நிறுவினார்.

திருத்தந்தை 11 -ஆம் பத்திநாதர் இச்சமூகத்துக்கு அங்கீகாரம் அளித்து ஆசீர்வதித்தார். இதன் முதல் உறுப்பினர்களான அருள் சகோதரிகள் மேரி கல்லறய்க்கல், ஆக்னஸ் வடக்கன், தெரேஸ் கொச்சுகாலாயில் போன்றோர் முழுமையான அர்ப்பண வாழ்வை ஏற்று ஏழைகளும், கல்வியறிவு அற்றவர்களுமான அன்றைய மக்களுக்கு இயேசுவின் பிரசன்னத்தையும், அன்பையும், பராமரிப்பையும் பகிர்ந்தளிக்க கடினமாக முயற்சி செய்தனர்.

அழைப்பும், பணிக்கடமையும்

தூயவர்களும் ஏழைகளுமாக வாழ்ந்து இயேசுவைப் பின்பற்றுதல், செபம், செயல்பாடு. வாழ்வு போன்றவற்றின் வழியாக இறையரசை விரிவடையச் செய்தல், அதன் வழியாக இறைமக்கள் உண்மையான சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடைய வழிவகை செய்தல், ஏழைகளுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் எல்லா இடங்களிலும் முன்னுரிமை அளித்தல், அவர்களின் உடல் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக எல்லா நிலைகளிலம் தனிக்கவனம் செலுத்துதல், இவையே இச்சமூகத்தின் முக்கிய பணிக் கடமைகளாகும்

www.malankaralibrary.com

மேரி மக்களின் முன்மாதிரியும் பரிந்துரையாளருமாக இருப்பவர் தூய கன்னிமரியா. புனித பிரான்சிஸ் அசிசி இவர்களின் முக்கிய பரிந்துரையாளராவார். தூய மரியன்னையின் மாசற்ற தூய வாழ்வும், தாழ்ச்சியும், இறைபராமரிப்பிலுள்ள நம்பிக்கையையும் இவர்கள் தங்கள் வாழ்வில் பிரதிபலித்துக் காட்ட முயற்சிக்கின்றனர்.

1988-ஆம் ஆண்டு இச்சமூகம் பாப்பரசரின் கீழ் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டது. இவர்கள் சீறோ மலங்கரை, சீறோ மலபார், இலத்தீன், மெல்க்கெய்ட் போன்ற நான்கு சபைகளிலுமாக இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பணிவிடை புரிகின்றனர்.

புனித சூசையப்பர் (மார்த்தாண்டம் - தமிழ்நாடு), புனித மரியன்னை (போங்கமூடு - திருவனந்தபுரம்), நிர்மலா (வெண்ணியூர் - திருவனந்தபுரம்), கிறிஸ்து அரசர் (கப்பூர்த்தலா - பஞ்சாப்) போன்ற நான்கு மாகாணங்களும், மரியன்னை (பெத்தேரி), அமலா (சாந்தா - மகாராஷ்டிரா) போன்ற இரண்டு துணை மாகாணங்களையும் பெற்று இச்சமூகம் வளர்ச்சி அடைந்து கொண்டேயிருக்கிறது.

2. பிற சபைகளில் உருவாகி மலங்கரைத் திருச்சபையில் பணிபுரியும் துறவற சமூகங்கள் யாவை? அவர்களின் பணிக்கடமை என்ன?

பிரான்சிஸ்கன் துறவற சமூகம்

1901 -ஆம் ஆண்டு பவுல் மோரிற்றஸ் என்னும் ஜெர்மானியர் இந்தியாவில் நிறுவிய துறவற சகோதரர்களின் சமூகமே பிரான்சிஸ்கன் துறவற சமூகம். புனித பிரான்சிஸ் அசிசியின் எளிமையையும், மறைபரப்புப் பணியையும் உள்வாங்கி கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புதல் என்பதே இதன் முக்கிய பணிக்கடமை.

பங்கு செயல்பாடுகள், அனாதை இல்லம், கல்வி போன்ற துறைகளில் இவர்கள் கவனம் செலுத்துகின்றனர். 1936 முதல் இவர்கள் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் செயல்பட்டு வருகின்றனர்.

குரிசுமலை ஆசிரமம் (கிறிஸ்தவ துறவற சமாஜம்) (K.S.S.)

பெல்ஜியம் நாட்டை சேர்ந்த பிரான்சிஸ் ஆச்சாரியா, இங்கிலாந்து நாட்டை சார்ந்த பீட் கிரிபித்ஸ் போன்ற துறவிகள் ஒன்று சேர்ந்து 1957-ஆம் ஆண்டு கோட்டயம் மாவட்டத்திலுள்ள வாகமண்ணில் குரிசுமலை என்னும் இடத்தில் இந்த ஆசிரமத்தை நிறுவினர்.

திருவல்லா மறைமாவட்ட ஆயர் சக்கரியாஸ் மார் அத்தனாசியாரின் அனுமதியுடனேயே இந்த ஆசிரமம் நிறுவப்பட்டது. எளிய வாழ்வு, இடைவிடா செபம், அந்தியோக்கியன் ஆராதனை முறையின் பயன்பாடு, மௌனம், தனிமை, கற்றல் போன்ற வாழ்க்கை முறைகளை இவர்கள் கடைபிடிக்கின்றனர்.

கிறிஸ்து துறவற சமாஜம் (சாயல்படி ஆசிரமம்)

குரிசுமலை ஆசிரமத்தின் உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய தந்தை பிலிப்போஸ் நடமலையில் அவர்களால் 1972 -ஆம் ஆண்டு பத்தனம்திட்டை மாவட்டத்திலுள்ள ஆங்ஙமூழி என்னும் இடத்தை மையமாகக் கொண்டு இந்த ஆசிரமம் நிறுவப்பட்டது.

குரிசுமலை ஆசிரம வாழ்வின் விதிமுறைகளுள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு அதிகமாக மக்களுக்கு தொண்டாற்றும் பணியினையே இவர்கள் செய்து வருகின்றனர்.

தியான ஆசிரமம்

பெத்தேரி மறைமாவட்டத்திலுள்ள நம்பியார்க்குன்று என்னும் இடத்தை மையமாகக் கொண்டு 1879 மே 15 -ஆம் நாள் குரிசுமலை ஆசிரமத்தின் உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய தந்தை சில்வெஸ்டர் கோழிமண்ணில் அவர்களால் உருவாக்கப்பட்டதே தியான ஆசிரமம்.

www.malankaralibrary.com

மலங்கரை சுறியானி ஆராதனை முறையை அடிப்படையாகக் கொண்ட செப வாழ்வு, தனிமை, மௌனம், தியானம், உடற்பயிற்சி போன்ற செயல்களுக்கெல்லாம் இங்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கிறிஸ்து துறவற சமாஜம் (சாந்தி ஆசிரமம்)

1987 -ஆம் ஆண்டு குரிசுமலை ஆசிரமத்தின் உறுப்பினராக இருந்த தந்தை கிறிஸ்பின் அவர்களால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முக்கடல் என்னும் இடத்தில் சாந்தி ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது. குரிசுமலையில் உள்ள ஆசிரம தியானவாழ்வு இங்கே கடைபிடிக்கப்படுகிறது.

கப்பூச்சின் துறவற சமூகம்

1525 -ஆம் ஆண்டு தந்தை மத்தேயோ தெபாபி என்பவரால் இத்தாலியில் நிறுவப்பட்டதே இத்துறவற சமூகம். இவர்கள் புனித பிரான்சிசின் எளிமையும், தவ வாழ்க்கையும் பெற்றுக்கொண்டு மறைபரப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். மலங்கரை சபையின் பல பகுதிகளிலும் இவர்கள் மறைபரப்புப் பணியாற்றுகின்றனர்.

சலேசியன் சமூகம் (S.D.B.)

இச்சமூகம் புனித தொன் போஸ்கோவால் 1859 -ஆம் ஆண்டு இத்தாலியில் நிறுவப்பட்டது. இச்சமூகம் இளைஞர்களை மையப்படுத்திய மறைபரப்புப் பணிகளுக்கும், அவர்களின் விசுவாச வாழ்க்கை பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது. மலங்கரைக் கத்தோலிக்க திருச்சபையில் இவர்கள் திருப்பணியாற்றுகின்றனர்.

தூய ஆவியின் கன்னியர் சமூகம் (O.S.S.)

தூய ஆவியின் கன்னியர் சமூகத்தை 1950-ஆம் ஆண்டு ஜெர்மனியில் லிம்புர்க் மறைமாவட்டத்திலுள்ள தந்தை பெர்னார்து பென்டல் என்பவரால் நிறுவப்பட்டது. சாதாரண மக்களின் வாழ்க்கை முறைக்கு சரிநிகராக இவர்களும் இந்தியக் கலாச்சார உடையான சேலையை அணிகின்றனர்.

இவர்கள் தூய ஆவிக்காக தங்களையே ஒப்புக்கொடுத்தவர்களாவர். ஒரு புதிய பெந்தக்கோஸ்து நாளுக்காக மன்றாடுதல் என்பதே அவர்களின் நோக்கம். தூய மரியன்னையோடு தனிப்பட்ட பற்றை வெளிப்படுத்துவதற்காக மங்கள வார்த்தையின் அடையாளமுடைய சின்னத்தை அணிகின்றனர்.

1969 -ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் இல்லம் திருவல்லாவில் தொடங்கப்பட்டது. செபத்தையும், செயல்பாடுகளையும் சரிநிகராகக் கொண்டு கல்வி, கைவிடப்பட்டவர்களைப் பாதுகாத்தல், முதியவர்களைப் பராமரித்தல், விசுவாசம் போதித்தல், பங்குகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு இவர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

திரு இருதய கன்னியர் சபை (S.H.)

1911 -ஆம் ஆண்டு தந்தை மத்தாயி கதளிக்காட்டில் அவர்களால் பாலாவில் இக்கன்னியர் சமூகம் உருவாக்கப்பட்டது. இயேசுவின் திருஇருதய பக்தியிலிருந்து தூண்டுதல் பெற்று இவர்கள் திருப்பணியாற்றுகின்றனர். மலங்கரைத் திருச்சபையின் பல பகுதிகளிலும் இவர்கள் திருப்பணியாற்றுகின்றனர்.

கருணையின் வின்சென்ட் தே பவுல் கன்னியர் சமூகம் (V.S.C.)

கர்தினால் அரமான் டி றோகன் என்பவரால் ஜெர்மனியில் உள்ள ஸ்டிராப் பர்க் என்னும் இடத்தில் 1734 -ஆம் ஆண்டு இச்சமூகம் நிறுவப்பட்டது. வின்சென்ட் தே பவுலின் இரக்கச் செயல்களினால் இச்சமூகத்தினர் தூண்டப்பட்டு செயல்படுகின்றனர். திருவனந்தபுரம் உயர் பேராயத்தின் துவயூர் மற்றும் பத்தனம்திட்டை ஆகிய இடங்களில் இச்சகோதரிகள் சேவை செய்கின்றனர்.

மௌண்ட் தாபோர் கன்னியர் சமூகம் (S.M.T.)

www.malankaralibrary.com

1979 மார்ச் 19 -ஆம் நாள் சகோதரி மேரி வேரோணிக்கா மற்றும் சகோதரி றோஸ்லின் என்பவர்களால் திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்திலுள்ள நெடுமங்காடு பருத்திக்குழியில் இச்சமூகம் தொடங்கப்பட்டது. தற்போது இதன் தலைமையிடம் சிரட்டக்கோணம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. செபவாழ்வின் வழியாக உலகிற்கு பணிவிடை புரிவதே இவர்களின் முக்கிய நோக்கம்.

ஸ்னேககிரி கன்னியர் சமூகம் (S.M.S.)

1969 -ல் தந்தை ஆபிரகாம் கைப்பனப்பிலாக்கல் என்பவர் பாலாவின் அருகில் உள்ள கரூரில் இச்சமூகத்தை நிறுவினார். சமூகத்தில் வாழும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும், துணையின்றி வாடுபவர்களுக்கும் பணிவிடை புரிவதே இவர்களின் முக்கிய நோக்கம். இவர்கள் திருவனந்தபுரத்தில் தோட்டப்பள்ளி, கண்ணங்கோடு போன்ற இடங்களில் பணியாற்றுகின்றனர்.

தின சேவன சபை (D.S.S.)

ஊர்சுலைன் சபையின் உறுப்பினராக இருந்த ஜெர்மன் நாட்டைச் சார்ந்த சகோதரி பேத்றா என்பவரால் 1969 ஜூன் 1 -ஆம் நாள் கண்ணூர் மாவட்டத்திலுள்ள பட்டுவம் என்னும் இடத்தில் இச்சமூகம் ஆரம்பிக்கப்பட்டது. ஏழைகளுக்குச் செய்வது கடவுளுக்குச் செய்யும் தொண்டு என்னும் கருத்தை வலியுறுத்தி இவர்கள் பணியாற்றுகின்றனர். பெத்தேரி, திருவல்லா, திருவனந்தபுரம் போன்ற மறைமாவட்டங்களில் இவர்கள் மறைப் பணியாற்றுகின்றனர்.

கெத்சமேன் அர்ப்பண சத்சங்கம்

மங்களூர் அப்போஸ்தலிக்க கார்மலைட்டின் உறுப்பினராக இருந்த சகோதரி காதரின் லீனா என்பவரால் 1984 -ஆம் ஆண்டு இச்சமூகம் நிறுவப்பட்டது. இவர்கள் செபம், ஒறுத்தல், எளிமை, சேவை போன்றவற்றின் வழியாகக் கடவுளைக் கண்டு அர்ப்பண வாழ்வை வாழ்கின்றனர். பத்தனம்திட்டையில் உள்ள தெக்கேமலயில் இவர்கள் பணிபுரிகின்றனர்.

இறைபராமரிப்பின் சிறுபணிப் பெண்கள் சமூகம் (L.S.D.P.)

கோத்தமங்கலத்தில் உள்ள புனித யோசேப்பு மருத்துவ சகோதரிகளில் உறுப்பினராக இருந்த டாக்டர் சகோதரி மேரி லிற்றி என்பவரால் இச்சமூகம் நிறுவப்பட்டது. 1978 -ஆம் ஆண்டு சங்ஙனாசேரி மறைமாவட்டத்திலுள்ள குந்நந்தானம் என்னும் இடத்தில் முதலில் இச்சமூகம் உருவானது.

இப்போது மூவாற்றுபுழை மறைமாவட்டத்திலுள்ள எர்ணாகுளம் என்னும் இடத்தில் இச்சமூகம் பணிபுரிந்து வருகின்றது. சமூகத்தில் வாழும் புறக்கணிக்கப் பட்டவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும், மனநிலை குன்றியவர்களுக்கும் பணிவிடை புரிவதே இவர்களின் முக்கிய நோக்கமாகும்.

பசீலியன் சகோதரிகள்

1921-ல் இத்தாலியிலுள்ள பாலேர்மோ என்னும் இடத்தில் இச்சமூகம் நிறுவப்பட்டது. தந்தை நிலே போர்ஜியாயும், சகோதரி மக்ரீனா ரெஜரியுமே இதன் நிறுவனர்கள். இயேசுவின் தொண்டர்களாக அன்பு மற்றும் சேவையின் வழியாக விண்ணரசை பறை சாற்றுதல் என்பதே இவர்களின் கடமை. இவர்கள் 1992 -ஆம் ஆண்டு திருவல்லாவில் ஓர் இல்லம் நிறுவி பணிபுரிந்து வருகின்றனர்.

சலேசியன் சகோதரிகள் (S.M.A.)

புனித தொன் போஸ்கோ மற்றும் புனித மேரி மசறேல்லோ என்பவர்களால் 1872 ஆகஸ்ட் 5 -ஆம் நாள் உரோமில் இச்சமூகம் நிறுவப்பட்டது. இச்சமூகத்தினர் புனித தொன் போஸ்கோவின் ஆன்மீக சிந்தனைகளை உட்கொண்டு இளைஞர்களிடையே மறைபரப்புப் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் திருவல்லா மறைமாவட்டத்திலுள்ள கட்டப்பனையிலும் புதுப்பள்ளியிலும் இல்லங்களை நிறுவியுள்ளனர்.

புனித திருமுழுக்கு யோவானின் கன்னியர் சமூகம் (S.J.B.)

www.malankaralibrary.com

1878 செப்டம்பர் 16- நாள் இத்தாலியில் உள்ள ஆன்க்ரி என்னும் இடத்தில் தந்தை அல்போன்சோ மரியோ புஸ்கோ என்பவரால் இச்சமூகம் நிறுவப்பட்டது. சமூகத்தில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாட்டிற்காக உழைத்தலே இவர்களின் நோக்கமாகும் தற்போது இவர்கள் பெத்தேரி மறைமாவட்டத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

புனித ஜாண் ஆன்றிடாவின் பிறரன்பின் சகோதரிகள்

1799-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 -ஆம் நாள் பிரான்சு நாட்டைச் சார்ந்த புனித ஜான் ஆன்றிட் என்பவரால் துவங்கப்பட்ட கன்னியர் சபையே பிறரன்பு சகோதரிகள் சமூகம்.' இயேசுவையும் ஏழைகளையும் அன்பு செய்து பணிவிடை புரிவதும் தந்தைக் கடவுளின் அன்பை அவர்களிடம் எடுத்தியம்புவதுமே இவர்கள் தங்களது பணிக்கடமையாகக் கொண்டுள்ளனர்.

இன்று சுமார் 27 நாடுகளில் இவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றனர். இந்தியாவில் இச்சமூகம் 1999 -ஆம் ஆண்டு மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் நடைக்காவு என்ற இடத்தில் தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றது. இவர்கள் ஏழை மக்களுக்கு இயேசுவின் அன்பைப் பறைசாற்றி மறைப்போதனைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒற்றுமையின் சிறார்கள் என்ற அமைப்பை வழிநடத்துகிறார்கள்.

மலங்கரை கத்தோலிக்க சபையில் தொடங்கியதும் இங்கு மறைபணியாற்றி வருகின்ற பல துறவற சமூகங்களைக் குறித்து நாம் கற்றறிந்துள்ளோம். இவ்வாறு வேறுபட்ட பணிகளின் வழியாக இறைமக்களுக்கு பணிவிடை புரிய ஏராளமானோர் முன்வருதல் என்பது திருச்சபைக்கு பெருமைசேர்ப்பதாகும். இன்னும் அதிகமானோர் இயேசுவின் அருளைப் பெற்று இப்பணி புரிய முன் வருவது சபைக்கு மிகுந்த பயனை விளைவிக்கும்.

குறு வினா விடைகள்

1. மனித வாழ்வின் மிக முக்கியமான நோக்கம் என்பது என்ன? அன்பின் நிறைவான கடவுளை அடைவது
2. கடவுள் மனிதனை எந்நெந்த வாழ்க்கைமுறைக்கு அழைக்கின்றார்? குடும்ப வாழ்க்கைக்கும், குருத்துவ வாழ்வுக்கும், துறவற வாழ்வுக்கும்
3. “நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்” (மத்தேயு 19:21)
4. யாருடைய தலைமையில் துறவிகள் சமூக வாழ்வை ஆரம்பித்தனர்? புனித பசேலியோஸ்
5. தொடக்க காலத்தில் திருச்சபையின் உண்மையான இயல்பு யார் வழியாக வெளிப்படுத்தப்பட்டது? துறவிகள்
6. திருச்சபை ஆன்மீகத்தில் வலுவிழந்த போது மூலிகை மருந்துகளாக திருச்சபை என்னும் மறையுடலை வலுப்படுத்தியவர் யாவர்? துறவற சமூகம்
7. மலங்கரைத் திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்த துறவற சமூகம் எது? மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தினர். (The Order of the Imitation of Christ)
8. மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தினர். (The Order of the Imitation of Christ) எப்பெயரில் அறியப்படுகிறது? பெதனி துறவற சமூகம்
9. பிரிவினைகளாலும் பிரச்சனைகளாலும் சிதைவுற்ற யாக்கோபாய திருச்சபையைப் புதுப்பிக்கும் நோக்குடன் ஓர் ஆய்வின் அடிப்படையில் பெதனி துறவற இல்லத்தை எங்கே தொடங்கினார்? செராம்பூரில்

www.malankaralibrary.com

10. பத்தனம்திட்டை மாவட்டத்திலுள்ள றாந்நி பெருநாட்டில் உள்ள முண்டன் மலையில் பெதனி துறவற இல்லம் எப்போது நிறுவப்பட்டது? 1919 ஆகஸ்டு 15-ஆம் நாள்
11. பெதனி துறவற இல்லம் மூலம் மலங்கரை சபையின் ஆன்மீக மையமான இடம் எது? முண்டன்மலை.
12. மலங்கரைத் திருச்சபை மற்றும் மறு ஒன்றிப்பு இயக்கத்தின் தொட்டிலான துரவற சமூகம் எது? மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தினர்
13. 'பெதனி' என்பதன் பொருள் என்ன? அமைதியின் இல்லம்
14. இயேசுவை அதிகமாக அன்பு செய்தோர் வாழ்ந்த நற்செய்தியில் குறிப்பிடப்படும் இடம் எது? பெதனி (பெத்தானியா)
15. இயேசுவின் நண்பரும், அவரது உயிர்ப்பின் சான்றாளருமானவர் யார்? லாசர்
16. பெத்தானியாவின் மரியா எதற்கு அடையாளமாகத் திகழ்ந்தார்? செபவாழ்வின்
17. பெத்தானியாவின் மார்த்தா எதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்? சேவை மனப்பான்மை மற்றும் மறைபரப்பு பணி
18. செபம், அமைதி, எளிமை, கடின உழைப்பு போன்றவற்றின் வழியாக இறை அனுபவத்திற்காக தம்மையே அர்ப்பணித்து செயல்பட்டு வருகின்ற ஒரு துறவியின் வசிப்பிடம் எது? துறவற இல்லம்
19. பெதனி சமூக நிறுவனர் யார்? மார் இவானியோஸ் ஆண்டகை
20. பெதனி துறவற சமூகம் பாப்பரசரின் கீழ் செயல்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டது எப்போது? 1966 ஏப்ரல் 14 -ஆம் நாள்
21. பெதனி துறவற சமூகம் எப்போது இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது? 2000 ஏப்ரல் 24 -ஆம் நாள்
22. பெதனி பெதனி துறவற சமூகத்தின் தலைமையிடம் எங்கே? கோட்டயத்தின் களத்திப்படி
23. பெதனி பெதனி துறவற சமூகத்தின் இரண்டு மாகாணங்கள் எவை? பெதனி நவஜீவன், பெதனி நவஜோதி
24. பெதனி நவஜீவன் மாகாணத்தின் தலைமையிடம் எது? நாலாஞ்சிறை
25. பெதனி நவஜோதி மாகாணத்தின் தலைமையிடம் எது? ஆலுவா
26. கிறிஸ்தவ துறவறத்தின் நோக்கம் என்பது என்ன? நற்செய்தியில் எடுத்துரைக்கும் கீழ்ப்படிதல், கற்புநெறி வாழ்வு, ஏழ்மை போன்றவற்றை கடைபிடிப்பதன் வழியாக இயேசுவை பின்பற்றுதல்
27. மெசியாவை பின்பற்றும் துறவற சமூகத்தின் தனிவரம் (Charism) எந்தெந்த மரபுகளில் வேரூன்றியுள்ளன? கீழைத் திருச்சபையின் துறவற மரபிலும், இந்திய துறவற மரபிலும்
28. பெதனி துறவறத்தார்கள் இந்தியக் கலாச்சாரத்தின் அடையாளமான எந்நிற ஆடையை அணிகின்றனர்? காவி நிறம்
29. பெதனி துறவற சமூகத்தின் பணிக்கடமைகள் எவை? மலங்கரைத் திருச்சபையின் ஆன்மீகப் புதுப்பித்தல் வழியாக இந்தியா முழுவதும் நற்செய்தி அறிவித்தல், இயேசுவை அவருடைய செபவாழ்வு மற்றும் சமூக வாழ்வின் அடிப்படையில் பின்பற்றுதல்
30. பெதனி கன்னியர் சமூகத்தை நிறுவியவர் யார்? ஆயர் மார் இவானியோஸ் ஆண்டகை
31. 1920 முதல் பெண்களுக்கு துறவற பயிற்சி அளிப்பதற்காக எவ்விடத்தில் துறவற பயிற்சி அளிக்கத் தொடங்கப்பட்டது? திருமூலபுரத்தில்

www.malankaralibrary.com

32. தந்தை பி.டி. கீவர்க்கீஸ் பெதனி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டது எப்போது? 1925 மே 1-ஆம் நாள்
33. பெதனி கன்னியர் சமூகத்தின் முதல் ஐந்து உறுப்பினர்கள் ஏழ்மை, பிரம்மசாரியம், கீழ்ப்படிதல் போன்றவற்றை வாழ்க்கைத் தத்துவமாக ஏற்று மார் இவானியோஸ் ஆண்டகையின் முன்னிலையில் துறவற வாழ்வை ஏற்றுக்கொண்டனர்? 1925 -ஆம் ஆண்டு இறையன்னையின் பிறப்புத் திருநாளான செப்டம்பர் 8-ஆம் நாள்
34. பெதனி கன்னியர் சமூகத்துக்கு ஒரு சட்ட ஒழுங்குமுறையை மார் இவானியோஸ் ஆண்டகை யாருடைய சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரித்தார்? திருச்சபைத் தந்தையான புனித பசேலியோஸ்
35. பெதனி கன்னியர் சமூகத்தினர் பெதனி என்ற பெயரைத் தேர்ந்தெடுக்க காரணம் என்ன? இயேசுவிற்கு ஆறுதலை அளிக்கவும் அவருடைய அருளாசீரைப் பெற்றுக்கொள்ளவும் செய்த இலாசரின் பெத்தானியா இல்லத்தின் நினைவாக
36. பெதனி கன்னியர் சமூகத்தினர் எந்த சிந்தனையை துறவற சமுகத்தில் வாழ்வாக்குகின்றனர்? 'கிறிஸ்துவை பின்தொடருதல்'
37. பெதனி கன்னியர் சமூகத்தினர் பாப்பரசரின் கீழ் செயல்படும் பதவியை எப்போது பெற்றுக் கொண்டனர்? 1956 ஆகஸ்ட் 21 -ஆம் நாள் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர்
38. பெதனி கன்னியர் சமூகத்தினரின் முதல் தலைவியாக செயல்பட்டவர் யார்? அருட்சகோதரி மாக்சா
39. பெதனி கன்னியர் சமூகத்தினரின் முதல் இல்லமும் தலைமையிடமும் எங்கே செயல்பட்டு வந்தது? திருவல்லாவின் திருமூலபுரம்
40. பெதனி கன்னியர் சமூகத்தினரின் தலைமையிடம் கோட்டயத்தில் எப்போது நிறுவப்பட்டது? 1975 -ல்
41. பெதனி கன்னியர் சமூகத்தினரின் 5 மாகாணங்கள் எவை? திருவனந்தபுரம், திருவல்லா, பெத்தேரி, பத்தனம்திட்டை, மூவாற்றுபுழா
42. தந்தை ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்கள் மார் இவானியோஸ் ஆண்டகையின் அழைப்புக்கேற்ப எவ்வாண்டு மார்த்தாண்டத்தில் மறைபரப்புப் பணியாற்ற வந்தார்? 1934 -ஆம் ஆண்டு
43. மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் மார்த்தாண்டத்தில் எப்போது மேரிமக்கள் கன்னியர் சமூகத்தை நிறுவினார்? 1938 மே 8-ஆம் நாள்
44. மேரிமக்கள் கன்னியர் சமூகத்திற்கு அங்கீகாரம் அளித்து ஆசீர்வதித்த திருத்தந்தை யார்? திருத்தந்தை 11 -ஆம் பத்திநாதர்
45. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினரின் முதல் உறுப்பினர்கள் யாவர்? அருள் சகோதரிகள் மேரி கல்லறய்க்கல், ஆக்னஸ் வடக்கன், தெரேஸ் கொச்சுகாலாயில்
46. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினரின் முன்மாதிரியாக பரிந்துரையாளருமாக இருப்பவர் யார்? தூய கன்னிமரியா.
47. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினரின் முக்கிய பரிந்துரையாளர் யார்? புனித பிரான்சிஸ் அசிசி
48. மேரிமக்கள் கன்னியர் சமூகம் பாப்பரசரின் கீழ் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டது எப்போது? 1988-ஆம் ஆண்டு
49. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினர் எந்தெந்த தனித்திருச்சபைகளில் பணிவிடை புரிகின்றனர்? சீறோ மலங்கரை, சீறோ மலபார், இலத்தீன், மெல்க்கெய்ட்

www.malankaralibrary.com

50. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினர் நான்கு மாகாணங்கள் எவை? புனித சூசையப்பர் (மார்த்தாண்டம்), புனித மரியன்னை (போங்கமூடு - திருவனந்தபுரம்), நிர்மலா (வெண்ணியூர் - திருவனந்தபுரம்), கிறிஸ்து அரசர் (பஞ்சாப்)
51. மேரிமக்கள் கன்னியர் சமூகத்தினர் இரு துணை மாகாணங்கள் எவை? மரியன்னை (பெத்தேரி), அமலா (சாந்தா - மகாராஷ்டிரா)
52. 1901 -ஆம் ஆண்டு பவுல் மோரிற்றஸ் என்னும் ஜெர்மானியர் இந்தியாவில் நிறுவிய துறவற சகோதரர்களின் சமூகத்தின் பெயர் என்ன? பிரான்சிஸ்கன் துறவற சமூகம்
53. குரிசுமலை ஆசிரமத்தை நிறுவியவர்கள் யாவர்? பெல்ஜியம் நாட்டின் பிரான்சிஸ் ஆச்சாரியா, இங்கிலாந்து நாட்டின் பீட் கிரிபித்ஸ்
54. குரிசுமலை ஆசிரமம் எங்குள்ளது? கோட்டயம் மாவட்ட வாகமண்ணில் குரிசுமலை
55. குரிசுமலை ஆசிரமம் எப்போது துவங்கப்பட்டது? 1957-ஆம் ஆண்டு
56. சாயல்படி ஆசிரமத்தை நிறுவியவர் யார்? அருட்தந்தை பிலிப்போஸ் நடமலையில்
57. சாயல்படி ஆசிரமம் எப்போது துவங்கப்பட்டது? 1972 -ஆம் ஆண்டு
58. சாயல்படி ஆசிரமம் எங்குள்ளது? பத்தனம்திட்டை மாவட்டத்தின் ஆங்ஙமூழி
59. தியான ஆசிரமம் எப்போது துவங்கப்பட்டது? 1979 மே 15 -ஆம்
60. தியான ஆசிரமம் எங்குள்ளது? பெத்தேரி மறைமாவட்டத்தின் நம்பியார்க்குன்று
61. தியான ஆசிரமத்தை நிறுவியவர் யார்? தந்தை சில்வெஸ்டர் கோழிமண்ணில்
62. சாந்தி ஆசிரமம் எங்குள்ளது? கன்னியாகுமரி மாவட்ட முக்கடல்
63. சாந்தி ஆசிரமத்தை நிறுவியவர் யார்? தந்தை கிறிஸ்பின்
64. சாந்தி ஆசிரமம் எப்போது துவங்கப்பட்டது? 1987 -ஆம் ஆண்டு
65. கப்பூச்சின் துறவற சமூகத்தை நிறுவியவர் யார்? தந்தை மத்தேயோ தெபாபி
66. சலேசியன் சமூகத்தை நிறுவியவர் யார்? புனித தொன் போஸ்கோ
67. தூய ஆவியின் கன்னியர் சமூகத்தை நிறுவியவர் யார்? ஜெர்மனியில் லிம்புர்க் மறைமாவட்டத்திலுள்ள தந்தை பெர்னார்து பென்டல்
68. தூய ஆவியின் கன்னியர் சமூகம் எப்போது துவங்கப்பட்டது? 1950-ஆம் ஆண்டு
69. புதிய பெந்தக்கோஸ்து நாளுக்காக மன்றாடுதல் என்பதை நோக்கமாக கொண்ட துறவற சமூகம் எதுv தூய ஆவியின் கன்னியர் சமூகம்
70. தூய மரியன்னையோடு தனிப்பட்ட பற்றை வெளிப்படுத்துவதற்காக மங்கள வார்த்தையின் அடையாளமுடைய சின்னத்தை அணிகின்ற துறவற சமூகம் எது? தூய ஆவியின் கன்னியர் சமூகம்
71. தூய ஆவியின் கன்னியர் சமூகம் எப்போது திருவல்லாவில் துவங்கப்பட்டது? 1969 -ஆம் ஆண்டு
72. திரு இருதய கன்னியர் சபையை நிறுவியவர் யார்? தந்தை மத்தாயி கதளிக்காட்டில்
73. கருணையின் வின்சென்ட் தே பவுல் கன்னியர் சமூகத்தை நிறுவியவர் யார்? கர்தினால் அரமான் டி றோகன் என்பவரால் ஜெர்மனியில் உள்ள ஸ்டிராப் பர்க் என்னும் இடத்தில் 1734 -ஆம் ஆண்டு
74. மௌண்ட் தாபோர் கன்னியர் சமூகத்தை நிறுவியவர்கள் யாவர்? சகோதரி மேரி வேரோணிக்கா மற்றும் சகோதரி றோஸ்லின்

www.malankaralibrary.com

75. ஸ்னேககிரி கன்னியர் சமூகத்தை நிறுவியவர் யார்? தந்தை ஆபிரகாம் கைப்பனப்பிலாக்கல்
76. தின சேவன சபை சமூகத்தை நிறுவியவர் யார்? ஜெர்மன் நாட்டைச் சார்ந்த சகோதரி பேத்றா
77. கெத்சமேன் அர்ப்பண சத்சங்கம் சமூகத்தை நிறுவியவர் யார்? அருட்சகோதரி காதரின் லீனா
78. இறைபராமரிப்பின் சிறுபணிப் பெண்கள் சமூகத்தை நிறுவியவர் யார்? டாக்டர் அருட்சகோதரி மேரி லிற்றி
79. பசீலியன் சகோதரிகள் சமூகத்தை நிறுவியவர்கள் யாவர்? இத்தாலியிலுள்ள தந்தை நிலே போர்ஜியாயும், சகோதரி மக்ரீனா ரெஜரியுமே
80. சலேசியன் சகோதரிகள் சமூகத்தை நிறுவியவர்கள் யாவர்? புனித தொன் போஸ்கோ மற்றும் புனித மேரி மசறேல்லோ
81. புனித திருமுழுக்கு யோவானின் கன்னியர் சமூகத்தை நிறுவியவர் யார்? இத்தாலியின் தந்தை அல்போன்சோ மரியோ புஸ்கோ
82. புனித ஜாண் ஆன்றிடாவின் பிறரன்பின் சகோதரிகள் சமூகத்தை நிறுவியவர் யார்? பிரான்சின் புனித ஜான் ஆன்றிட்
83. புனித ஜாண் ஆன்றிடாவின் பிறரன்பின் சகோதரிகள் சமூகம் மார்த்தாண்டத்தில் எங்கே தொடங்கப்பட்டது? நடைக்காவு
84. “நீங்கள் அழைக்கப்பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள். மனிதக் கணிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்? வலியோர் எத்தனை பேர்? உயர் குடிமக்கள் எத்தனை பேர்? ஆனால் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார்” (1 கொரிந்தியர் 1: 26 - 27).

## பாடம் 13

## பெந்தெகோஸ்து சமூகங்களின் தவறான போதனைகள்

பயிற்சி வினாக்கள்

1. பெந்தக்கோஸ்து சமூகங்களின் தோற்றத்தை விளக்குக?

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிவினை சபைகளில் உருவான விழிப்பு எழுச்சிக் கூட்டங்களின் வழியாக சிறு குழுக்கள் சபையிலிருந்து பின்வாங்கினர். இவர்கள் தனிச்சமூகமாக மாறினர். இவர்கள் விசுவாசம் அறிக்கையிட்டு தண்ணீரில் மூழ்கி எழும் திருமுழுக்கு முறையைப் பின்பற்றினர்.

இத்திருமுழுக்கின் வழியாக மொழி வரமும் நோயிலிருந்து விடுதலையும் கிடைப்பதாக இவர்கள் நம்புகின்றனர். இவ்வாறாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் 1900-ஆண்டிற்கு பின் பல எழுச்சிக் கூட்டங்கள் நடைபெற்று அனேக மக்கள் பிரிவினை சபைகளை விட்டு தனித்த கிறிஸ்தவ சமூகங்களில் சேர்ந்தனர். இத்தகைய தனி கிறிஸ்தவ சமூகங்கள் பெந்தக்கோஸ்து சமூகங்கள் என அழைக்கப்பட்டன.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. சி.எம்.எஸ் மற்றும் மார்தோமா சபைகளில் இவை நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பிரதரன் சமூகத்திலும் நடைபெற்றது. இவை இந்தியாவில் பெந்தக்கோஸ்து சமூகங்கள் உருவாக வழிவகுத்தன.

தொடக்கத்தில் பிரதரன் சமூகத்தை சார்ந்தவர்களே பெந்தகோஸ்தில் சேர்ந்தனர். 20 -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல வெளிநாட்டு பெந்தக்கோஸ்து மறைபரப்பாளர்கள் கேரளாவுக்கு வருகை தரவும் பெந்தக்கோஸ்து படிப்பினைகளைப் பறைசாற்றவும் செய்தனர். அவ்வாறு பல பெந்தெக்கோஸ்து சமூகங்கள் இங்கு வளரத் தொடங்கின.

www.malankaralibrary.com

இன்று நூற்றுக்கணக்கான தனித்த பெந்தக்கோஸ்து சமூகங்கள் இந்தியாவில் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை அசம்பிளீஸ் ஆப் காட், சர்ச் ஆப் காட், இந்தியன் பெந்தெகோஸ்து தேவ சபை (I.P.C.), தி பெந்தெக்கோஸ்து மிஷன் போன்றவை ஆகும்.

20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெந்தெக்கோஸ்து சமூக கூட்டாண்மையிலிருந்து விடுபட்ட பல தனித்த செபக்கூட்டங்கள் உருவாயின. தூய ஆவியின் தனிப்பட்ட அருளைப் பெற்றவர்களாக தங்களை அறிமுகப்படுத்தும் பல மறைபரப்பாளர்கள் இச்சமூகத்தில் உள்ளனர்.

ஒவ்வொரு மறைபரப்பாளர்களின் பெயரிலும் சமூகங்கள் உருவாகத் தொடங்கின. பல பெயர்களிலுமாக ஏராளம் தனி சமூகங்கள் பெந்தெக்கோஸ்து படிப்பினைகளை உள்வாங்கி செயல்பட்டு வருகின்றன. பெரிய அரங்குகளில் கருத்தரங்குகளை நடத்தி மக்களின் கவனத்தை ஈர்க்கவும், நோயிலிருந்து விடுவித்தல், சாபத்திலிருந்து விடுவித்தல், பேயை ஒட்டுதல் போன்ற சடங்குகளையும் இவர்கள் செய்கின்றனர்.

இவ்வாறாக எந்த சபையுடனும் தொடர்பின்றி தனித்த மறைபரப்பாளர்கள் தாங்கள் விரும்பும் முறையிலும், கேட்பவர்களின் விருப்பத்திற்கேற்ற முறையிலும் திருநூலை பறைசாற்றுகின்றனர். இதுவே பெந்தெக்கோஸ்து சமூகத்தினரின் இன்றைய அமைப்பு.

2 திருமரபுகளை கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு காண்கின்றது?

இயேசுவிடமிருந்து கண்டு, கேட்டு, தொட்டு உணர்ந்ததை சீடர்கள் தங்கள் இதயத்தில் பாதுகாத்து வைத்தனர் (1 யோவான் 1: 1). தொடக்கத்தில் அவர்கள் இதனை வாய்மொழியாக அறிவித்து வந்தனர்.

பின்னர் தூய ஆவியின் தூண்டுதலால் அவர்களுடைய கிறிஸ்து அனுபவத்தை நூல்வடிவமாக மாற்றினர். வாய்மொழியாக பறைசாற்றப்பட்ட இயேசுவின் நற்செய்தியை கி.பி. 50 -ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்கள் எழுதிவைக்கக் தொடங்கினர். ஆனால் இந்நற்செய்தியை முழுவதுமாக எழுத அவர்களால் இயலவில்லை.

அதாவது இயேசுகிறிஸ்துவின் எல்லாப் போதனைகளும், செயல்களும் எழுத்து வடிவம் பெறவில்லை. எழுதப்படாத இயேசுவின் போதனைகளும் செயல்களும் விசுவாசிகளின் வாழ்க்கை முறையிலும், ஆராதனைகளிலும், வாழ்க்கைச் சான்றுகளிலும், போதனைகளிலும் நிறைந்திருந்தன.

புனித யோவான் தமது நற்செய்தியின் இறுதியில் பின்வருமாறு கூறுகின்றார் : “இந்தச் சீடரே இவற்றிற்குச் சாட்சி. இவரே இவற்றை எழுதி வைத்தவர்... இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன்" (யோவான் 20:30, 21:24 - 25). இதிலிருந்து ஒன்று புலனாகிறது.

அதாவது இயேசு என்னும் நபரைக் குறித்தோ அவருடைய போதனைகளைக் குறித்தோ, செயல்களைக் குறித்தோ ஒன்றும் முழுமையாக எழுதப்படவில்லை. எழுதப்பட்டவை அனைத்தும் இன்று நமக்குக் கிடைக்கவுமில்லை.

எடுத்துக்காட்டாக கொலோசையர் 4:16 -ல் லவோதிக்கேயா திருமுகத்தைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இதுபோன்று பல இடங்களிலும் காணப்படுகின்றன. எழுதப்படாதவையனைத்தும் வாய்மொழியாக வாழ்க்கை முறைகளிலும், பழக்க வழக்கங்களிலும், போதனைகளிலும் ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் நிறைந்திருந்தன.

அது தலைமுறைகளாக இன்றும் திருச்சபையில் நிலைகொள்கின்றது. இவ்வாறாக இயேசுவைக் குறித்து எழுதப்பட்டவற்றை மறை நூல் அதாவது திருவிவிலியம் என்றும் எழுதப்படாதவற்றை தூயமரபு என்றும் திருச்சபை அழைக்கின்றது.

www.malankaralibrary.com

3. பெந்தக்கோஸ்தியர்கள் புறக்கணித்த திருமரபுகளும் அதன் விளைவுகளையும் விவரி?

திருமரபையும், திருவிவிலியத்தையும் திருத்தூதர்களின் காலம் முதல் இன்று வரையிலும் கத்தோலிக்க திருச்சபை புனிதமாகக் கருதிவருகிறது. ஆனால் கி.பி. 1600-க்கு பின்னர் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகிச் சென்ற பிரிவினையாளர்களும், அவர்களிடமிருந்து இருபதாம் நூற்றாண்டில் உருவான பெந்தக்கோஸ்தியர்களும், கத்தோலிக்க திருச்சபை தொன்றுதொட்டே பின்பற்றி வரும் திருமரபுகளை முழுமையாக புறக்கணித்தனர்.

அவர்கள் இயேசுவை முழுமையற்றவராகவும், நிறையற்ற கிறிஸ்தவ மறையைப் போதிக்கவும் செய்கின்றனர். அவர்கள் புறக்கணித்த சில மரபுகளும், புதிதாக உருவாக்கப்பட்ட சில அமைப்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஆதித்திருச்சபை முதல் இன்று வரையிலும் திருவிவிலியத்திலுள்ள 73 நூல்களையும் கத்தோலிக்க திருச்சபை புனிதமாகக் கருதுகிறது. பிரிவினையாளர்கள் கி.பி. 1600-க்குப் பின் திருவிவிலியத்திலுள்ள 7 நூல்களை விலக்கிவிட்டு 66 நூல்களையுடைய சிறு விவிலியத்தை பயன்படுத்தத் தொடங்கினர். இச்சிறிய விவிலியத்தையே பெந்தக்கோஸ்தியர்கள் பயன்படுத்துகின்றனர்.

2 2000 ஆண்டுகால திருச்சபையின் திருமரபுகளையெல்லாம் விலக்கிவிட்டு கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் எழுதப்பட்ட இறைவார்த்தையான விவிலியம் மட்டுமாக மாற்றினர். அவ்வாறு இயேசுவைக் குறைவுள்ளவராக மாற்றினர்.

3. திருச்சபையில் கடவுளால் நிறுவப்பட்ட திருத்தூதுவ அதிகாரம், அருளடையாளங்கள், திருமரபுகள், ஆராதனை முறை போன்றவற்றைப் புறக்கணித்தனர். கூட்டாண்மைக்கும் நட்புறவுக்கும் பதிலாக தனிமையையும் வேறுபாட்டையும் விரும்புகின்றனர்.

4. திருத்தூதர்களிடமிருந்தும், ஆதித்திருச்சபையிலிருந்தும் பின்பற்றப்பட்ட அனைத்து செயல்களையும், ஆராதனை முறைகளையும் இகழ்ந்து கூறினர். பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, அருள் நிறைந்த மரியே போன்ற திருவிவிலியத்தில் உள்ள செபங்களையும் புறக்கணித்தனர். மாறாக செபம் என்னும் பெயரில் ஒவ்வொருவருடையவும் விருப்பத்திற்கேற்ப பிதற்றுகின்றனர் (மத்தேயு 6 : 7).

5. மீட்பின் அடையாளமான இயேசுவின் சிலுவையைப் புறக்கணித்தனர். சிலுவையை அணியவோ, மதிக்கவோ செய்யாமல் இயேசுவை சிலுவையிலிருந்து விலக்கி அவரை முற்றுப் பெறாதவராக மாற்றினர். பலரும் சிலுவையின் எதிரிகளாக வாழ்கின்றனர் என்று புனித பவுல் கூறுகிறார் (பிலிப்பியர் 3 : 18).

6. திருவிவிலியத்தின் விளக்கமுரைப்பதற்கான திருச்சபையின் அதிகாரத்தை எதிர் ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி விவிலியத்தைப் போதிக்கத் தொடங்கினர் - பலனாக ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் முறையில் இயேசுவைப் பறைசாற்றத் தொடங்கினர். அவ்வாறு ஆயிரக்கணக்கான பெந்தக்கோஸ்து சமூகங்கள் உருவாயின்

7. ஆதித்திருச்சபை முதல் பின்பற்றப்பட்ட இறந்தவர்களை நினைவுகூர்ந்து மன்றாடும் முறையை அவர்கள் புறக்கணித்தனர். இறந்துபோனவர்களுடனான நட்புறவையம் அவர்கள் வெறுக்கின்றனர்.

8. 2000 ஆண்டு பழக்கமுடைய கிறிஸ்தவ கலைகளையும், சிற்பங்களையும், ஓவியங்களையும் புறக்கணித்து, அவர்கள் கடவுளை கலைகளை வெறுக்கின்றவராகச் சித்தரிக்கின்றனர்.

9. பெந்தெகோஸ்தவர்களல்லாதவர்கள் அனைவரும் கடவுளின் மக்கள் அல்ல என்னும் சிந்தனையைக் கொண்டிருக்கும் அவர்கள் மக்களைப் பிடிப்பவர்களாகவும் பிரிப்பவர்களாகவும் செயல்படுகின்றனர்.

www.malankaralibrary.com

10. ஆதித்திருச்சபை முதல் இன்றுவரை தொடர்ந்து வரும் குழந்தைத் திருமுழுக்கைப் புறக்கணித்து குழந்தைகளை தூய ஆவியின் பிரசன்னம் இல்லாத ஊனுடலாக வளர்த்து வருகின்றனர்.

11. தூய வாழ்க்கை வாழ்ந்தவர்களை ஏற்றுக்கொள்வதையும், மதிப்பதையும் அவர்கள் வெறுக்கின்றனர். சாதாரண மக்களுடன் கூட பரிந்துரை வேண்டும் போது புனிதர்களுடன் பரிந்துரை வேண்டுவதை அவர்கள் தவறாகக் கருதுகின்றனர்.

12. தம் தாய்க்குக் கொடுக்கும் மதிப்பைக் கூட இயேசுவின் தாய்க்குக் கொடுக்காமல் தூய மரியன்னையை இழிவுபடுத்துகின்றனர்.

13. திருமுழுக்கின் வழியாக தூய ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள் மீண்டும் திருமுழுக்கு பெற்று உண்மையான தூய ஆவியைப் புறக்கணிக்கவும் தூய ஆவிக்கு எதிராகப் பாவம் செய்யவும் செய்கின்றனர்.

அதனால் முழுமையற்ற இயேசுவையும் அவருடைய வார்த்தையையும் கொண்டு வருபவர்களிடம் கவனமாய் இருங்கள். உண்மையான இயேசுவைக் குறைவுப்படுத்தியே அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர்.

இத்தகையோர்களை புனித பவுல் கண்டிக்கிறார் : “கிறிஸ்துவின் பொருட்டு அருள்கூர்ந்து உங்களை அழைத்த அவரை விட்டுவிட்டு இவ்வாறு குறுகிய காலத்தில் வேறு ஒரு நற்செய்தியை ஏற்றுக்கொண்டு விட்டீர்களே. எனக்கே வியப்பாய் இருக்கிறது. வேறு ஒரு நற்செய்தி இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை.

மாறாகச் சிலர் உங்கள் மனத்தைக் குழப்பிக் கிறிஸ்துவின் நற்செய்தியை திரித்துக் கூற விரும்புகின்றனர் என்பது தான் உண்மை . நாங்கள் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை நாங்களோ விண்ணிலிருந்து வந்த தூதரோ யார் அறிவித்தாலும் அவர்கள் சபிக்கப்படுக.

ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இப்பொழுது மீண்டும் சொல்கிறேன். நீங்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை யாராவது உங்களுக்கு அறிவித்தால் அவர்கள் சபிக்கப்பப்படுக” (கலா. 1:6 - 9).

**குறு வினா விடைகள்**

1. பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் உரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றவர்கள் யாவர்? சீர்திருத்த பிரிவினைப் திருச்சபையினர்
2. ஜெர்மனியில் சீர்திருத்த சிந்தனைகளுக்கு தலைமை தாங்கியவர் யார்? துறவற குரு மார்ட்டின் லூதர்
3. சுவிட்சர்லாந்தில் சீர்திருத்த சிந்தனைகளுக்கு ஊக்கமூட்டியவர்கள் யாவர்? ஜாண் கால்வின், வில்லியம் பாரல், உள்றிக் சிங்லி
4. இங்கிலாந்தில் சீர்திருத்த சிந்தனைகளுக்கு ஊக்கமூட்டிய மன்னர் யார்? எட்டாம் ஹென்றி
5. சீர்திருத்த சிந்தனைகளின் அடிப்படையில் 20-ஆம் நூற்றாண்டில் உருவான சபை சமூகங்களை எவ்வாறு அழைக்கின்றோம்? பெந்தக்கோஸ்து சமூகம்
6. மார்ட்டின் லூதரும் உரோமை கத்தோலிக்க திருச்சபைக்கு உட்பட்ட எத்துறவற சமூகத்தின் உறுப்பினராயிருந்தார்? அகஸ்தீனியன் துறவற சமூகம்
7. மார்ட்டின் லூதர் எப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக பணிபுரிந்தார்? விட்டன்பர்க் பல்கலைக்கழகம்
8. ஆன்மீக மீட்பைக் குறித்தும் கடவுளின் தீர்ப்பைக் குறித்தும் மார்ட்டின் லூதர் கொண்ட சிந்தனைகளுக்கு விவிலிய அடிப்படை என்ன? "நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்" (உரோமையர் 1:17)

www.malankaralibrary.com

9. மார்ட்டின் லூதரின் அடிப்படை சிந்தனையிந் மையக்கருத்து என்ன? கடவுள் கொடூரமான ஒரு நடுவர் அன்று மாறாக நம்பிக்கை மட்டுமே மீட்புக்கு அடிப்படை
10. மீட்பைப் பெற நம்பிக்கை மட்டும் கொண்டிருந்தால் போதும் என்றவர் யார்? மார்ட்டின் லூதர்
11. நம்பிக்கை மட்டுமே மீட்பின் அடிப்படை. நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைவது திருவிவிலியம் மட்டுமே என்றவர் யார்? மார்ட்டின் லூதர்
12. லூதரின் முயற்சியால் தோன்றிய தனிசபைகள் எவை? லூதரன் சபை, பிரஸ்பிட்டேரியன் சபை, பிரதரன் சபை, மென்னோணித்தர், ஆங்கிலிக்கன் சபை, பாப்திஸ்ட் சபை, மெதடிஸ்ட் சபைகள், சால்வேஷன் ஆர்மி, சாபத்து மிஷன்
13. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிவினை சபைகளில் உருவான விழிப்பு எழுச்சிக் கூட்டங்களின் வழியாக சிறு குழுக்கள் சபையிலிருந்து பிரிந்தவர்கள் விசுவாசம் அறிக்கையிட்டு எத்தகைய திருமுழுக்கு முறையைப் பின்பற்றினர்? தண்ணீரில் மூழ்கி எழும் திருமுழுக்கு
14. தண்ணீரில் மூழ்கி எழும் திருமுழுக்கு வழியாக பிரிவினை சபையினர் எவை கிடைப்பதாக நம்புகின்றனர்? மொழி வரமும் நோயிலிருந்து விடுதலையும்.
15. பிரிவினை சபைகளை விட்டு தனி கிறிஸ்தவ சமூகங்களானவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பெந்தக்கோஸ்து சமூகங்கள்
16. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் எழுச்சிக் கூட்டங்கள் எத்திருச்சபைகளில் நடைபெற்றன சி.எம்.எஸ் மற்றும் மார்தோமா, பிரதரன்
17. இந்தியாவில் இன்றைய நூற்றுக்கணக்கான தனித்த பெந்தக்கோஸ்து சமூகங்களுள் முக்கியமானவை எவை? அசம்பிளீஸ் ஆப் காட், சர்ச் ஆப் காட், இந்தியன் பெந்தெகோஸ்து தேவ சபை (I.P.C.), தி பெந்தெக்கோஸ்து மிஷன்
18. பெந்தெக்கோஸ்து சமூகங்கள் செய்கின்ற சடங்குகள் எவை? பெரிய அரங்குகளில் கருத்தரங்குகள், நோயிலிருந்து விடுவித்தல், சாபத்திலிருந்து விடுவித்தல், பேயை ஒட்டுதல்
19. பெந்தெக்கோஸ்து சமூகங்கள் திருவிவிலியத்தை எவ்வாறு பறைசாற்றினர்? தனித்த மறைபரப்பாளர்கள் தாங்கள் விரும்பும் முறையிலும், கேட்பவர்களின் விருப்பத்திற்கேற்ற முறையிலும்
20. இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்து வந்த எழுச்சிக் கூட்டங்களின் ஆன்மீக உணர்வுக்கு ஏற்ப கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட இயக்கம் எது? கரிஸ்மாட்டிக் இயக்கம்.
21. கத்தோலிக்க திருச்சபையின் கரிஸ்மாட்டிக் இயக்கம் எவற்றை ஊக்குவிக்கின்றன? கத்தோலிக்க திருச்சபை மரபின் விசுவாசத்தையும், அருள்நெறி வாழ்வையும்
22. கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளாத முக்கிய பெந்தக்கோஸ்து சிந்தனைகள் எவை? 'விவிலியம் மட்டும் போதும்', விவிலியம் போதிப்பதன் வழியாக கிடைக்கின்ற ஆன்மீக உணர்வே உண்மையான கிறிஸ்து அனுபவம்
23. இயேசுவிடமிருந்து கண்டு, கேட்டு, தொட்டு உணர்ந்ததை சீடர்கள் தங்கள் இதயத்தில் பாதுகாத்து தொடக்கத்தில் அவர்கள் இதனை எவ்வடிவில் அறிவித்து வந்தனர்? வாய்மொழியாக
24. தூய ஆவியின் தூண்டுதலால் வாய்மொழியாக பறைசாற்றப்பட்ட இயேசுவின் நற்செய்தி எப்போது முதல் நூல்வடிவம் பெற்றது? கி.பி. 50 -ஆம் ஆண்டு முதல்
25. இயேசு என்னும் நபரைக் குறித்தும் போதனைகளைக் குறித்தும் செயல்களைக் குறித்தும் முழுமையாக எழுதப்படவில்லை, எழுதப்பட்டவை அனைத்தும் இன்று நமக்குக் கிடைக்கவுமில்லை. என்பதற்கு சான்று எது? கொலோ 4:16 -ல் லவோதிக்கேயா திருமுகம்

www.malankaralibrary.com

26. வெளிப்படுத்தப்பட்ட எல்லாவற்றையும் பற்றிய உறுதியைத் திருச்சபை விவிலியத்திலிருந்து மட்டுமே பெறாததால் வேறு எதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்? திருமரபு
27. எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான நற்செய்தியை சீடர்கள் தங்கள் வழிவந்தவர்களான யாரிடம் ஒப்படைத்தனர்? ஆயர்களிடம் (Episcopoi-presbyteroi)
28. திருச்சபையில் திருத்தூதர்களின் காலம் முதல் கடைபிடிக்கப்பட்ட விசுவாசம், திருச்சடங்கு முறைகள் ஆராதனை முறைகள், கொள்கைகள் போன்றவற்றை எச்சொல்லால் குறிக்கின்றோம்? திருமரபு
29. மரபு (Tradition) என்ற வார்த்தையின் பொருள் என்ன? தலைமுறை தலைமுறையாக கைமாறப்பட்டது
30. இயேசுவின் நற்செய்தியை கடந்த 2000 ஆண்டுகளாக திருச்சபை முழுமையாகவும், கலப்பற்ற முறையிலும் தங்கள் தலைமுறையினருக்கு எதன் மூலம் கைமாறி வருகின்றது? திருமரபு மற்றும் திருவிவிலியம்
31. எழுதப்பட்ட இறைவார்த்தையை முழுமையாகப் பறைசாற்றப்படவும், அறிந்து கொள்ளவும் எது தேவை? திருமரபு
32. முதன் முதலில் தோன்றியது இயேசுவை விசுவசிக்கின்ற திருச்சபையா திருவிவிலியமா? திருச்சபை
33. திருவிவிலியம் யாருக்காக எழுதப்பட்டது? திருச்சபைக்காக
34. "எங்கள் வாய்மொழி வழியாகவோ, திருமுகம் வழியாகவோ அறிவிக்கப்பட்ட முறைமைகளைப் பற்றிக் கொண்டு அவற்றில் **<u>நிலையாயிருங்கள்</u>**" (2 தெச. 2:15).
35. எங்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட முறைமையின்படி ஒழுகாமல் **<u>சோம்பித்திரியும்</u>** எல்லா சகோதரர் சகோதரிகளிடமிருந்தும் விலகி நில்லுங்கள் என, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்' (2தெச.3:6)
36. 'உன்னிடம் **<u>ஒப்படைக்கப்பட்டதை</u>** பாதுகாப்பாயாக' (1 திமொ.6 : 20)
37. "சான்றாளர் பலர் முன்னிலையில் நீ என்னிடம் கேட்டவற்றை மற்றவர்களுக்குக் கற்பிக்கும், திறமையுள்ளவர்களும் **<u>நம்பிக்கைக்கு</u>** உரியவர்களுமாகிய மனிதரிடம் ஒப்படை" (2 திமொ. 2 : 2)
38. "நீங்கள் எப்போதும் என்னை நினைவு கூருகிறீர்கள். நான் உங்களிடம் ஒப்படைத்த மரபுகளை நான் ஒப்படைத்தவாறே கடைபிடிக்கிறீர்கள். எனவே உங்களைப் பாராட்டுகிறேன்" (1 கொரி. 11 : 2) யார் கூறியது? புனித பவுல்
39. திருவிவிலியத்தையும், திருமரபையும் ஒன்றுபோல் மதித்துப் போற்றுகின்ற திருத்தூதுவ அடிப்படையிலான இயேசுவை முழுமையாகப் பறைசாற்றுகின்ற திருச்சபை எது? கத்தோலிக்க திருச்சபை
40. ஆதித்திருச்சபை முதல் இன்று வரையிலும் திருவிவிலியத்திலுள்ள எத்தனை நூல்களை கத்தோலிக்க திருச்சபை புனிதமாகக் கருதுகிறது? 73.
41. பிரிவினையாளர்கள் கி.பி. 1600-க்குப் பின் திருவிவிலியத்திலுள்ள எத்தனை நூல்களை விவிலியத்தில் பயன்படுத்தினர்? 66
42. மீட்பின் அடையாளமான இயேசுவின் சிலுவையைப் புறக்கணித்தவர் பற்றிய விவிலியச் சான்று என்ன? பிலிப்பியர் 3 : 18
43. 2000 ஆண்டு பழக்கமுடைய கிறிஸ்தவ கலைகளையும், சிற்பங்களையும், ஓவியங்களையும் புறக்கணித்து, அவர்கள் கடவுளை கலைகளை வெறுக்கின்றவராகச் சித்தரிப்பவர்கள் யாவர்? பெந்தக்கோஸ்து திருச்சபையினர்
44. ஆதித்திருச்சபை முதல் இன்றுவரை தொடர்ந்து வரும் குழந்தைத் திருமுழுக்கைப் புறக்கணிப்பவர்கள் யாவர்? பெந்தக்கோஸ்து திருச்சபையினர்

www.malankaralibrary.com

45. தம் தாய்க்குக் கொடுக்கும் மதிப்பைக் கூட இயேசுவின் தாய்க்குக் கொடுக்காமல் தூய மரியன்னையை இழிவுபடுத்துபவர்கள் யாவர்? பெந்தக்கோஸ்து திருச்சபையினர்

## பாடம் 14

## சமயங்களும் சமய ஒற்றுமையும்

பயிற்சி வினாக்கள்

1. பிற சமயங்களைக் குறித்த கத்தோலிக்க திருச்சபையின் அணுகுமுறை யாது?

எல்லா சமயங்களிலும் உண்மையும் கடவுளின் பிரசன்னமும் செயல்பாடுகளும் இருப்பதாக. கத்தோலிக்க திருச்சபை விசுவசிக்கின்றது. இவ்வாறாக உண்மைக் கூறுகளும், இறை பிரசன்னமும் எல்லா சமயங்களிலும் இருப்பதால் அந்தந்த சமயங்களில் நம்பிக்கை கொள்பவர்களுக்கு அது மீட்பின் அடையாளமாக மாறுகிறது.

எல்லா சமயங்களிலும் உண்மை குடிகொண்டிருப்பதால் எல்லா சமயங்களின் ஆன்மீக மற்றும் இவ்வுலக நன்மைகளையும் சமூகக் கலாச்சாரக் கூறுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் வழியாக திருச்சபை நினைவூட்டுகின்றது.

"எல்லா சமயங்களிலும் காணக் கிடக்கின்ற உண்மையானதும் தூயதுமான எதையுமே கத்தோலிக்க திருச்சபை வெறுத்து ஒதுக்கவில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்தும் போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும் எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும் மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல் முறைப்பாணிகள், வாழ்க்கை முறைகள், கோட்பாடுகள், ஆகியவற்றை கத்தோலிக்க திருச்சபை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றது" (கிறிஸ்தவமல்லா சபைகளோடு உறவு. 2).

பிற சமயங்களை திருச்சபை முழுமையாக ஏற்று மதிப்பு அளிப்பினும் அச்சமயங்களை கிறிஸ்தவ சமயத்துக்கு நிகராகக் கருதவில்லை. உண்மையின் நிறைவும், வெளிப்படுத்துதலின் முழுமையும் கிறிஸ்துவிலும் அவருடைய திருச்சபையிலும் மட்டுமே உள்ளது என்று திருச்சபை கற்பிக்கின்றது.

அதனால் பிற சமயங்களை, உண்மைக் கடவுளைக் கண்டடைவதற்கான கருவியாகவோ நற்செய்தியை ஏற்றுக்கொள்வதற்கான ஆயத்தமாகவோ, காணுதல் வேண்டும் என்பதே திருச்சபையின் படிப்பினை.

எல்லா மக்களுடையவும் தந்தை கடவுளே ஆவார். தமது மீட்புத்திட்டத்திலிருந்து கடவுள் எவரையும் விலக்கிவிடவில்லை. அனைவரையும் ஏற்றுக்கொள்வதே கடவுளின் அன்பு. இந்த அன்பை உலகிற்கு அளிக்கவே இயேசு மனிதராகப் பிறந்து திருச்சபையை நிறுவினார்.

2. சமய ஒற்றுமையின் தேவை யாது?

எல்லா சமயத்தினரும் சாதி, சமயம், இனம், மொழி, நிறம் போன்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒருவருக்கொருவர் அன்போடும் ஒற்றுமையோடும் வாழ வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை கற்பிக்கின்றது. ஒருவரின் சமய சுதந்திரத்தை மதிக்கவும் பிற சமயங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் வழியாகக் கற்பிக்கின்றது.

நமது நாட்டில் இந்துக்களும், இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்கின்றனர். இந்த மூன்று சமயங்களுடைய தொழுகையிடங்களும் ஒரே இடத்தில் உள்ளன. நம்மைச் சுற்றி வாழும் பிற சமயத்தினரையும் அவர்களுடைய தொழுகையிடங்களையும், பழக்கவழக்கங்களையும் நாம் மதிக்க வேண்டும்.

பிற சமயத்தினரின் சமய உணர்வுகளுக்கு தீங்கு விளைவிக்குமாறு பேசவோ செயல்படுதலோ கூடாது. சமய அடிப்படையிலான வாக்குவாதங்களும், தீவிரவாதச்

www.malankaralibrary.com

செயல்களும் மிகுந்து காணப்படும் இக்கால அளவில் சமய ஒற்றுமையையும், அன்புறவையும் ஏற்படுத்த வேண்டியது மிகத் தேவையான ஒன்றாகும்.

சமய அடிப்படையில் நிகழும் போராட்டங்கள், தீமைகள், சுரண்டல்கள், துன்புறுத்தல்கள் ஆகியவையனைத்தும் எல்லா சமயங்களுக்கும் எதிரான செயல்களாகும். கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதரையும் அவருடைய உணர்வுகளையும் மதிக்காமல் இருப்பது மிகப்பெரிய பாவமாகும். எனவே பிற சமயங்களைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ளவும், பிற சமயத்தினருடன் கலந்துரையாடவும் அவர்களுடன் ஒன்றித்து செயல்படவும் முயல்வோம்.

**குறு வினா விடைகள்**

1. எப்போது முதல் மனிதனில் கடவுளைக் கண்டடைவதற்கான ஆர்வம் மிகுந்து காணப்பட்டது? மானிட வரலாற்றின் ஆரம்பம்
2. இறை மனித உறவின் வரலாற்றையும் இயல்பையும் வெளிப்படுத்துகின்ற அமைப்புகளாக எவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்? சமயங்களை
3. 'றிலீஜியோ' (Religio) என்ற இலத்தீன் சொல்லின் பொருள் என்ன? உறவு
4. Religion (சமயம்) என்ற ஆங்கில வார்த்தை எச்சொல்லிலிருந்து உருவானது? றிலீஜியோ
5. மானிட வரலாற்றின் தொடக்கத்தில் உள்ள சமயங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்? இயற்கை சமயங்கள் மற்றும் வரலாற்று சமயங்கள்
6. இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட சமயங்கள் எவை? புத்த சமயம், இந்து சமயம், சீக்கிய சமயம், ஜைன சமயம்
7. ஓர் நிறுவனரையோ சமய நூலையோ அடிப்படையாக இல்லாமல் உருவான சமயம் எது? இந்து சமயம்
8. இந்தியாவில் இந்து சமயம் எப்போது உருவானது எனக் கருதப்படுகிறது? கி.மு. 18 முதல் 15 வரையிலான நூற்றாண்டுகளில்
9. இந்தியாவில் இந்து சமயம் யார் வழியாக உருவானது எனக் கருதப்படுகிறது? ஆரியர்கள்
10. இந்தியாவில் உருவானதும் இந்தியக் கலாச்சாரத்துடன் மிகுந்த தொடர்பு உடையதுமான நம்பிக்கைகளின் தொகுப்பு எனப்படுவது எது? இந்து சமயம்.
11. இந்த சமயம் எப்பெயர்களால் அறியப்படுகிறது? சனாதன தர்மம், வைதீக தர்மம்
12. இந்துசமயத்தின் முக்கியமான சமய நூல்கள் யாவை? வேதங்கள், உபநிடகங்கள், பகவத்கீதை
13. இந்துசமயத்தின் முக்கியமான இதிகாசங்களும் புராணங்களும் யாவை? இராமாயணம், மகாபாரதம்
14. இந்து சமயத்தின் முக்கியமான சட்ட நூல் எது? வேதங்கள்
15. இந்து சமயத்தின் தனி சிறப்பு என்பன எவை? பல்வேறு நம்பிக்கைகள், முறைகள் மற்றும் பழக்க வழக்கங்கள்
16. ஒரே கடவுள் நம்பிக்கையும், பல கடவுள் நம்பிக்கையும் கொண்ட சமயம் எது? இந்து சமயம்
17. இந்து சமயத்தினர் அதிக முக்கியத்துவம் அளிக்கின்ற கடவுளின் முத்தொழில்கள் எவை? படைத்தல், பாதுகாத்தல், அழித்தல்
18. இந்து சமயத்தினரின் முக்கிய தேவர்கள் யாவர்? பிரம்மன், விஷ்ணு, சிவன்
19. இந்து சமயத்தினரின் மொத்த எண்ணிக்கை என்ன? ஏறக்குறைய 80 கோடிக்கு மேல்

www.malankaralibrary.com

20. இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் அதிகமானவர்கள் எச்சமயத்தினர்? இந்து சமயத்தினர்
21. இந்தியாவில் புத்த சமயம் தோன்றியது? கி.மு. 6-ஆம் நூற்றாண்டில்
22. கோசல மன்னனின் மைந்தனான கௌதம சித்தார்த்தனின் நல்லுரைகளும் போதனைகளுமே எச்சமயத்தின் மையமாகும்? புத்த சமயத்தின்
23. உலகின் கவலைகள் மற்றும் துன்பங்களின் காரணத்தை ஆராய அரண்மனையை விட்டு புறப்பட்ட இளவரசரின் முயற்சிகள் எந்த சமயத்தின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தன? புத்த சமயத்தின்
24. இளவரசர் கௌதம சித்தார்த்தன் போதி மரத்தின் அடியின் தவம் மேற்கொண்ட இடம் எது? புத்தகயா
25. கௌதம சித்தார்த்தன் எவ்வாறு அழைக்கப்பட்டார்? ஸ்ரீ புத்தர்.
26. புத்தசமயப் படிப்பினைகளின் மையக்கருத்துகள் எவை? கவலையைக் கண்டறிதல், இவ்வுலக வாழ்விலிருந்து வீடுபேறு அடைவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்
27. 'ஆர்ய சத்ய சதுஷ்டய' என்றால் என்ன? துன்பத்திற்கான காரணம், துன்பத்திலிருந்து விடுதலை, துன்பத்திலிருந்து விடுதலைக்கான வழி
28. புத்த சமயக் கொள்கைகளைத் தன் வாழ்க்கையில் செயல்முறைப்படுத்தும் ஒருவருக்கு மட்டுமே எதனை அடைய முடியும் என்று புத்த சமயம் கற்பிக்கின்றது? நிர்வாணா அல்லது மோட்சம்
29. புத்த சமயம் இன்று எந்தெந்த நாடுகளில் மிக வலுவாகக் காணப்படுகின்றது? ஜப்பான், இலங்கை, சீனா, பர்மா, தாய்லாந்து, திபெத்
30. புத்த மத நம்பிக்கையாளர்கள் மொத்தம் எத்தனை பேர்? ஏறக்குறைய 32 கோடி
31. புத்த மத நம்பிக்கையாளர்களின் பிரிவினர்கள் யாவர்? மஹாயானர்களும், ஹீனயானர்களுமே
32. புத்த சமயத்தின் புனித நூல் எது? ‘தர்ம பாதம்
33. புத்த சமயத்தினரின் புனித நகரம் எது? புத்தகயா'
34. பல காலங்களில் வாழ்ந்த 24 திருத்தங்கர்களின் ஆராய்ச்சிகளின் பலனாக உருவான மதம் எது? ஜைன மதம்
35. ஜைன சமயத்தின் நிறுவனரான இறுதி திருத்தங்கர் யார்? மகாவீரர்
36. ஒரே காலத்தில் இந்தியாவில் தோன்றிய இரு மதங்கள் எவை? ஜைன மதமும் புத்த மதம்
37. ஜைனர்' என்னும் சொல் எச்சொல்லிலிருந்து உருவானது? 'ஜின்'
38. 'ஜின்' என்ற சொல்லின் பொருள் என்ன? 'வென்றவர்'
39. ஜைன மதத்தில் உலக மாயைகளின் மேல் வெற்றி கொண்டு மோட்சம் அடைபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? ஜினர்கள்.
40. ஜைன மதத்தை பின்பற்றுபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்? ஜைனர்கள்
41. கடவுள் நம்பிக்கை இல்லாமலிருப்பினும் மதநிறுவனரான திருத்தங்கரை வணங்குபவர்கள் எச்சமயத்தினர்? ஜைன சமயத்தினர்.
42. திருத்தங்கர்களைப் போன்று அவரவர் முயற்சியினால் வீடுபேறு அடைய வேண்டும் என்பதே எச்சமயக் கொள்கையாகும்? ஜைன சமய
43. வீடுபேறு அடைய ஜைன மதம் கூறும் முக்கியமாக மூன்று வழிமுறைகள் எவை? உண்மையான நம்பிக்கை, உண்மையான அறிவு, இடைவிடா முயற்சி

www.malankaralibrary.com

44. ஜைன மதத்தினரின் திரிஇரத்தினங்கள் எனப்படுபவை எவை? உண்மையான நம்பிக்கை, உண்மையான அறிவு, இடைவிடா முயற்சி
45. ஜைன சமயத்தின் இரு பிரிவினர்கள் யாவர்? திகம்பரர்கள், சுவேதம்பரர்கள்
46. ஜைன சமயத்தினரின் மறைநூல் எது? 'ஜைன சூத்திரங்கள்'
47. சீக்கிய மதம் யார் தலைமையில் உருவானது? குருநானக்
48. சீக்கிய மதம் எப்போது எங்கே உருவானது? கி.பி. 15 -ஆம் நூற்றாண்டில் பஞ்சாபில்
49. சீக்கிய என்னும் சொல் உருவான சமஸ்கிருத மூலச் சொல் எது? சிஷ்ய (சீடன்)
50. சீக்கிய சமயத்தின் திருநூல் எது? குருகிரந்த்சாகிப்
51. சீக்கிய சமயத்தினரின் திருநகரம் எது? அமிர்தசரஸ்
52. சீக்கிய மதத்தில் எத்தனை விசுவாசிகள் உள்ளனர்? ஏறக்குறைய 112 கோடி.
53. சீக்கிய சமயத்தின் இன்றைய தலைமை இடம் எது? பஞ்சாபின் ஜலந்தர் மாவட்டத்திலுள்ள பொற்கோவில்
54. சீக்கியர்களின் வெளிப்படையான தோற்றம் என்ன? தாடியும் தலைப்பாகையும்
55. சமயம் என்பதற்கும் மேலாக சீக்கிய சமயம் வாக்களிப்பது என்ன? ஒழுக்க வாழ்வு முறை
56. சீக்கிய சமயத்தின் நோக்கம் என்ன? கடவுளைச் சென்றடைதல்
57. யூத சமயம் எத்தனை ஆண்டுகள் பழமையானது? ஏறக்குறைய 4,000 ஆண்டுகள்
58. ஆபிரகாமின் வழிமரபினரான இஸ்ரயேல் மக்களின் சமயம் எப்பெயரில் அறியப்படுகின்றது? யூத சமயம்
59. இஸ்ரயேல் குலங்களில் பெருமை வாய்ந்தவர்களான எக்குலத்தை சார்ந்தவர்களின் பெயரில் யூத சமயம் பெயர் பெற்றது? யூத குலம்
60. இஸ்ரயேல் நாட்டின் பொதுவான சமயம் எது? யூத சமயம்
61. யூதசமயத்தின் மையமாக மாறிய எருசலேம் தேவாலயத்தை கட்டியவர் யார்? சாலமோன்
62. யூதர்களிடையே நிலவி வந்த மறுஒன்றிப்பு இயக்கங்கள் மூலம் மீண்டும் ஒன்றிணையச் செய்த காலம் எது? கி.பி. 19, 20 -ஆம் நூற்றாண்டுகள்
63. யூத சமயத்தினர் ஒன்றிணைந்த இஸ்ரயேல் நாடு எப்போது புத்துயிர் பெற்றது? 1948 -ஆம் ஆண்டில்.
64. யூத விசுவாசிகள் உலகில் எத்தனை பேர்? ஏறக்குறைய ஒன்றரை கோடி
65. யூதர்களின் தூய நகரம் எது? எருசலேம்
66. யூதர்களின் மறைநூல் எது? திருவிவிலிய பழைய ஏற்பாட்டு நூல்கள்
67. யூதர்களின் ஆராதனை நாள் எது? ஓய்வுநாளான சனிக்கிழமை
68. எருசலேம் தேவாலயத்தின் வீழ்ச்சி வரையிலும் யூதர்களிடையே குருத்துவப் பணி செய்தவர்கள் யாவர்? லேவி குலத்தினராவர்.
69. தற்போது யூதர்களிடையே குருத்துவப் பணி செய்பவர்கள் யாவர்? யூத போதகர்கள்
70. இஸ்லாமிய சமயத்தின் முகம்மது நபிக்கு எப்போது இறைவெளிப்பாடு கிடைத்தது? கி.பி. 610 -க்கும் 632 -க்கும் இடைப்பட்ட காலத்தில்
71. இஸ்லாமிய சமயத்தின் முகம்மது நபிக்கு எங்கே வைத்து இறைவெளிப்பாடு கிடைத்தது? சவுதி அரேபியாவின் மெக்கா என்ற பட்டணத்து ஹீரா மலையில் செபிக்கும் போது

www.malankaralibrary.com

72. முகம்மது நபிக்குக் கிடைத்த இறைவெளிப்பாடு எச்சமயத்தின் அடிப்படையாக நிலைகொள்கின்றது? இஸ்லாமியம்
73. முகம்மது நபிக்குக் கிடைத்த இறைவெளிப்பாடுகள் எழுதப்பட்டுள்ள திருநூல் எது? குர்ரான்
74. இஸ்லாமியர்களின் புனித இடம் எது? மெக்கா
75. இஸ்லாமியர்கள் கடவுளை எவ்வாறு அழைக்கின்றனர்? அல்லா
76. ஒரே கடவுள் நம்பிக்கையைக் கொண்டுள்ள மதங்கள் எவை? யூதம், கிறிஸ்தவம் இஸ்லாமியம்.
77. இஸ்லாமியர்களின் விசுவாச அறிக்கையின் அடிப்படைக் கொள்கை என்ன? 'அல்லாவேயன்றி பிறிதொரு கடவுள் இல்லை முகம்மது அவருடைய தூதரேயாவார்'
78. இஸ்லாம் என்னும் சொல் எச்சொல்லிலிருந்து உருவானது? 'சலாம்' என்ற அரபுச் சொல்
79. சலாம் என்பதன் பொருள் என்ன? சமாதானம், மீட்பு
80. 'இஸ்லாம்' என்ற சொல் எந்த பொருளில் பயன்படுத்தப்படுகிறது? 'கடவுளுக்குப் பணிதல்'
81. யூத மத இறைவாக்கினர்களையும், இயேசு கிறிஸ்துவையும் இஸ்லாமிய சமயம் யாராகக் காண்கின்றது? தூதர்களாக
82. இஸ்லாமிய சமயத்தில் செபத்தை முன்னின்று நடத்துபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? இமாம்.
83. இமாம் என்ற சொல்லின் பொருள் என்ன? முன்மாதிரி
84. இஸ்லாமியர்கள் எந்நாளை ஆராதனை நாளாகக் கடைபிடிக்கின்றனர்? வெள்ளிக்கிழமை
85. இஸ்லாமியர்களிடையே உள்ள இருபெரும் சமயப் பிரிவுகள் எவை? சுன்னி, ஷியா
86. இஸ்லாமிய விசுவாசிகளின் எண்ணிக்கை என்ன? ஏறக்குறைய 100 கோடி
87. யூதச் சமயத்தில் மனிதனைத் தேடி வந்து தம்மை வெளிப்படுத்தியவர் யார்? கடவுள்
88. “தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் **கடவுள்** உலகின் மேல் அன்பு கூர்ந்தார்” (யோவான் 3:16).
89. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்றுக் கொண்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? கிறிஸ்தவர்கள்
90. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை என்ன? 200 கோடி
91. கிறிஸ்தவர்களின் பிரிவுகள் எவை? கத்தோலிக்கர், ஆர்த்தடோக்ஸ், புரொட்டஸ்டன்டு
92. உலகின் மிகப் பெரிய சமயம் எது? கிறிஸ்தவ சமயம்
93. கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர்? ஒரே மீட்பரும் உலக மீட்பரும்
94. எல்லா சமயங்களிலும் உண்மையும் கடவுளின் பிரசன்னமும் செயல்பாடுகளும் இருப்பதாக நம்பும் திருச்சபை எது? கத்தோலிக்க திருச்சபை
95. எல்லா சமயங்களிலும் உண்மை குடிகொண்டிருப்பது பற்றி இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுவது என்ன? "எல்லா சமயங்களிலும் காணக் கிடக்கின்ற உண்மையானதும் தூயதுமான எதையுமே கத்தோலிக்க திருச்சபை வெறுத்து ஒதுக்கவில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்தும் போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும் எல்லா மனிதரையும்

www.malankaralibrary.com

ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும் மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல் முறைப்பாணிகள், வாழ்க்கை முறைகள், கோட்பாடுகள், ஆகியவற்றை கத்தோலிக்க திருச்சபை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றது" (கிறிஸ்தவமல்லா சபைகளோடு உறவு. 2).

96. ஒருவரின் சமய சுதந்திரத்தை மதிக்கவும் பிற சமயங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை எதன் வழியாகக் கற்பித்தது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்

97. அனைத்து சமயங்களுக்கும் எதிரான செயல்கள் எவை? சமய அடிப்படையில் நிகழும் போராட்டங்கள், தீமைகள், சுரண்டல்கள், துன்புறுத்தல்கள்

98. "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் **அன்பிலிருந்து** நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" (யோவான் 13:34 - 35).

## பாடம் 15

## வளர் இளம் பருவக் கலக்கங்களும் கவலைகளும்

பயிற்சி வினாக்கள்

1. வளர் இளம் பருவத்தில் எதிர்கொள்ள வேண்டிய அடிப்படைப் பிரச்சினைகள் யாவை?

**இளமைப்பருவத்தின் சிறப்பியல்புகள்**

குடும்பத்தில் அடங்கி ஒதுங்கி வாழ்ந்திருந்த சிறார்கள் வளர்இளம் பருவம் அடைவதுடன் அவர்களது வாழும் வட்டம் விரிவடைகிறதுநண்பர்களுடன் சேர்ந்து . நான்கும் .வீட்டிற்கு வெளியே அதிக நேரம் செலவிடுகின்றனர், ஐந்தும் வளர் இளம் பருவத்தினர் சேர்ந்த நண்பர்குழு இப்பருவத்தின் தனிச்சிறப்பாகும்இத்தகைய . குழுவின் உறுப்பினர்களோடு கண்மூடித்தனமான கீழ்ப்படிதலும், கட்டுப்பாடும் காட்டிக் கொள்வது இக்கால கட்டத்தின் இயல்பே, இவ்வாறு ஒத்த வயதினரோடு அவர்கள் சேர்ந்து கொள்வது தங்களது உள்ளத்தில் அமுங்கிக் கிடக்கும் தனிமை உணர்விலிருந்து விடுதலை பெறுவதற்காகவே ஆகும்நண்பர்களுடன் இருக்கும் . போது வேறு எங்குமே கிடைத்திராத ஒரு பாதுகாப்பு உணர்வை அவர்கள் வளர் இளம் பருவத்தின் வாழ்வில் .அனுபவிக்கின்றனர்'நண்பர் குழுக்கள் முக்கிய பங்காற்றுகின்றனநண்பர்களின் செல்வாக்கின் காரணமாக தங்களுக்கு . வ◌ிருப்பமில்லாத செயல்கள் பலவற்றைச் செய்வதற்கான கட்டாயத்துக்கு ஆளாகின்றனர் .அதன் மூலம் பிரச்சினைகள் பலவற்றிலும் அகப்பட வாய்ப்புண்டு . எனவே வளர் இளம் பருவத்தில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் சொந்த நிலைப்பாடுகளுக்கு ஏற்ப சிந்தித்து செயல்படுவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும்.

வளர் இளம் பருவம் தீவிரமான உணர்ச்சிகளின் காலமாகும்உணர்ச்சிகளை . அது .சாதனைகளால் கட்டுப்படுத்த சில நேரங்களில் இயலாமல் போகலாம் வரையிலும் அதிக அளவில் வலிமை அடையாதிருந்த பாலுணர்வை ஒட்டிய ஆசைகள் தீவிரமான ஆசைகளால் தூ .இப்பருவத்தில் தீவிரமடைகிறதுண்டப்படவும் கட்டாய விலக்குகளால் துயரம் அடையவும் செய்வதன் மூலம் அவர்களது மனம் கலக்கமடைகிறதுதிடீர் கோபம் ., புரட்சி மனநிலை, குற்ற உணர்வு, ஏமாற்றமடைந்த மனநிலை ஆகியவைதான் இதனால் ஏற்படும் விளைவுகள்இத்தகைய . .உணர்ச்சிகளைக் கையாளுவதில் மிகக் கவனமாயிருக்க வேண்டும்

உறுதியற்ற நிலையும் சஞ்சல மனமும் வளர் இளம் பருவத்தின் தனிச் சிறப்பாகும்பல பாடங்கள் .கல்வி கற்பதில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படலாம் . .சில பாடங்கள் படிப்பதற்கு எளிதாக இருப்பதில்லை .படிக்க வேண்டியுள்ளன நல்ல மதிப்பெண் பெற்று வ .தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும்ெ◌ற்றி பெறாவிட்டால் மேற்படிப்பிற்கும், வேலைவாய்ப்பிற்கும் வாய்ப்புகள் குறைந்து விடும்

www.malankaralibrary.com

என்பவை ஒருபுறமிருக்க பெற்றோரின் எதிர்பார்ப்புகளையும்கவலைகளையும் . இவ்வாறான பற்பல மனக்குழப்பங்கள் வளர் .எண்ணி கலக்கம் கொள்வது மறுபுறம் இளம் பருவத்தில் ஏற்பட வாய்ப்புகள் உள்ளனகடவுளின் பராமரிப்பில் உள்ள . மனக்குழப்பங்களை மேற்கொள்வதற்குத் துணை புரிகின்றனஅத்துடன் தங்கள் சுய . திறமைகளையும், இயல்பான ஆர்வங்களையும் குறித்து தெளிவான உணர்வுடையவராகவும் இருக்க வேண்டும்சுய மதிப்பீட்ட .ின் தெளிவில் பெற்றோருடன் தன் விருப்பங்களையும், தீர்மானங்களையும் கூறுவதே நலமானதாகும்அது தவிர ஒவ்வொரு நாளும் கற்பிக்கும் பாடங்களை அன்றே . கற்றுக்கொள்ளுதல், கற்றவற்றை விடுமுறை நாட்களில் மீண்டும் படித்தல், தேர்வு நெருங்கும் போது மட்டும் படிக்காமல் தெளிவான முன்கருதலுடன் அவ்வப்போது படித்தல் போன்ற முயற்சிகளால் படிப்பு பற்றிய தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்த்து விட இயலும் .

**வளர் இளம் பருவமும் உணர்ச்சிகளின் முதிர்ச்சியும்**

மனிதனின் ஆளுமை உருவாக்கத்தில் )Personality Development) வளர் இளம் பருவத்திற்கு மிக முக்கியமான பங்கு உள்ளதுஆளுமை வளர்ச்சிக்கு உணர்ச்சிகளின் . முதிர்ச்சி, ஒரு முக்கிய காரணியாகும்ஆதலால் தங்களுடைய உணர்ச்சிகளைத் . தகுந்த முறையில் கையாளுவதற்கு வளர் இளம் பருவத்தினர் பயிற்சி பெற்றுக் அன்ப ு, பகைமை, மகிழ்ச்சி, துக்கம், அச்சம், ஆகியவை நமது வாழ்க்கையில் மிகவும் அதிகமாக தாக்கம் செலுத்துகின்ற உணர்ச்சிகளாகும்உணர்ச்சிகள் . அவைகளிலேயே நன்மையானதோ, தீமையானதோ அல்ல; ஆனால் அவற்றை வெளிப்படுத்துகின்ற முறையில் நன்மையும், தீமையும் ஏற்படலாம் எடுத்துக்காட்டாக தான் செய்யாத தவறுக்காக நண்பர் ஒருவர் தன்னை குற்றம் கூறுவாரானால் அவரோடுத் தனக்குக் கோபம் உண்டாவது இயல்பானதேதனக்கு நியாயமாக . உண்டான கோபத்தை வெளிப்படுத்துவதற்காக அவரை தகாத சொற்களால் திட்டிப் பேசவோ, தொந்தரவுக்கு உட்படுத்தவோ செய்வாரானால் அது தனது கோபத்தைத் தவறான முறையில் வெளிப்படுத்துவதேயாகும்வளர் இளம் பருவத்தில் சில . நேரங்களில் தங்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுக்காத பெற்றோருடனும் அவர்களது .கண்டிப்புடன் நடத்துகின்ற ஆசிரியர்களுடனும் கோபம் ஏற்படலாம் தீர்மானங்கள் தங்கள் நன்மைக்கே என்ற எண்ணத்துடன் ஏற்றுக்கொள ்வதற்கு வளர் இளம் பருவத்தினர் முன்வரவேண்டும்தங்களை யாருமே புரிந்து கொள்வதில்லை ., அன்பு செய்வதில்லை, அங்கீகரிப்பதில்லை போன்ற சிந்தனைகள் வளர் இளம் பருவத்தில் தோன்றலாம்அன்பு செய்யப்படவும் ., அங்கீகரிக்கப்படவும் வேண்டியது மனித மனத்தின் வலுவான தேவைகளில் ஒன்றாகும் .

பிள்ளைகளின் மனவளர்ச்சிக்கு மட்டுமன்றி உடல்வளர்ச்சிக்கும் பிறரிடமிருந்து அன்பு கிடைக்க வேண்டியது மிகவும் அவசியமே என உளவியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்தன்னை நேசிக்கவும் ., தனது முறையான தேவைகளை நிறைவேற்றித் தரவும் செய்கின்ற பெற்றோரும் சமூகமும் உள்ளன என்ற வலுவான நம்பிக்கை உணர்வு தான் வளர்ச்சிக்கு மிகவும் தேவைசில நேரங்களில் . அவசர வேலைகள் காரணமாகவோ, வாழ்க்கைப் பிரச்சினைகள் காரணமாகவோ பெற்றோருக்கு அவர்களது பிள்ளைகள் விரும்புகின்ற அளவில் அன்பும், அங்கீகாரமும் கொடுப்பதற்கு இயலாமல் போகலாம்பெற்றோர்களில் . சிலர் தங்களது அன்பை வெளிப்படையாக தெரிவிப்பவர்களாயிருக்க மாட்டார்கள்இப்படிப்பட்ட நேரங்களில் . தான் புறக்கணிக்கப்படுவது போன்ற எண்ணம் வளர் இளம் பருவத்தினருக்கு கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் கடவுள் அன்பாயிருக்கிறார் .இருக்கக்கூடாது; அவர் அனைவரையும் அன்பு செய்கின்ற தந்தையாவார்கடவுள் அன்பு செய்வது . மட்டுமல்லாமல் நமது எல்லா தேவைகளையும் நிறைவு செய்து தருகின்ற அன்பு செய்கின்ற கடவுள் மீது வைத்துள்ள நம்பிக்கை வளர் .பரிபாலகரும் ஆவார் .இளம் பருவப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஆன்ம திடனைத் தருகின்றது

www.malankaralibrary.com

மகிழ்ச்சியும், துக்கமும், வெற்றிகளும், தோல்விகளும் வாழ்க்கைக்குத் தேவையான காரணிகளாகும்வளர் இளம் பருவத்தில் இத்தகைய அனுபவங்கள் பல . பள்ளித் தேர்வில் தோல்வி ஏற்பட்டுவிட்டது .ஏற்படுகின்றன, விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகள் கிடைக்கவில்லை; கலைப்போட்டிகளில் முதலிடம் பெற இயலவில்லை போன்ற அனுபவங்கள் ஏற்படலாம்அறிவிலும் ., அனுபவத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள் வெற்றிகளில் அதிக மகிழ்ச்சியடையவோ, தோல்விகளில் துவண்டுவிடவோ மாட்டார்கள்தங்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற . தோல்விகளையும், துயரங்களையும் ஒரே சீரான மனநிலையோடு எதிர்கொள்வதற்கு வளர் இளம் பருவத்தினர் கற்றுக் கொள்ள வேண்டும், தோல்விகளிலும், தடுமாற்றங்களிலும் நமது வாழ்க்கைப் பயணத்தின் போது மிகுதியான ஆற்றல் பெறுவதற்கு இது உறுதுணையாக அமைகின்றனதோல்விகள் நமக்கு ஏற்பட்டால் . உதவி செய்கின்றன .

2. வளர் இளம் பருவத்தின் அடிப்படையான தேவைகள் என்ன?

உளவியல் அறிஞர்களின் சிந்தனைகளின்படி வளர் இளம் பருவத்தினரின் பிரச்சினைகள் பலவற்றிற்கும், காரணமாய் சுட்டிக் காட்டப்படுவது அவர்களது அடிப்படைத் தேவைகள் சில நிறைவேற்றப்படுவதில்லை என்பதேயாகும்அதன .ால் அவர்கள், தங்கள் மனம் சார்ந்த தேவைகளைக் குறித்தும் அவை எவ்வாறு நிறைவேற்றப்படலாம் என்பதைக் குறித்தும் அறிந்திருக்க வேண்டும் .

1. பாதுகாப்பு உணர்வு

மனக்கலக்கங்களின் காலகட்டமே வளர் இளம் பருவம்எதிர்காலத்தைப் பற்றி . சற்றுமிகுதியான கவலைகள் உடையவர்கள் பெற்றோரருடனும், நண்பர்களுடனும் நல்லுறவு கொண்டிருப்பதன் வழியாக பாதுகாப்பு உணர்வை அடையலாம்தங்கள் . வருத்தங்களையும், சிக்கல்களையும் திறந்த மனத்துடன் அவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு முன்வரவேண்டும்மேலும் ., இறைநம்பிக்கையும், இறை வேண்டுதலும் அவர்களது வருங்கால வளமைக்கான தன்னம்பிக்கையை வளர்த்துவிடவும் செய்யும்.

2. சுதந்திர உணர்வு

“நான் இது நாள்வரையிலும் பெற்றோரின் சிறு பிள்ளையாயிருந்தேன் . இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் .இப்போது நான் வளர்ந்து விட்டேன்”. இதுதான் வளர் இளம் பருவத்தினரின் சிந்தனைபருவத்திற்கேற்ற சுதந்திரத .்தை பெற்றோரும், சமூகமும் அவர்களுக்கு வழங்க வேண்டும்ஆனால் அறிவும் ., அனுபவ ஞானமும் உள்ள பெற்றோருடையவும், ஆசிரியர்களுடையவும், அறிவுரைகளும், வழிகாட்டுதல்களையும் ஏற்றுக்கொள்வதற்கு வளர் இளம் பருவத்தினர் முன்வரவேண்டும் .

3. அனுபவ உணர்வு

வளர் இளம் பருவத்தினர் எப்போதுமே புதுப்புது அனுபவங்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள் .பழையனவற்றோடு விரைவில் அவர்களுக்குச் சலிப்பு ஏற்படும் . திரைப்படங்களில் கண்டதும், நாவல்களில் படித்ததுமான கருத்துகளை சோதித்தறிய வேண்டும் என்ற மனநிலை அவர்களுக்கு ஏற்படுகின்றதுவீட்டை விட்டு ஓடிப் . போகும் பிள்ளைகளின் மனப்போக்கு இதுவேயாகும்திரைப்படத்தில் காணப்பட்ட . தலைவனுக்கு அல்லது தலைவிக்குச் சரிநிகராக அவர்களுக்கு உண்டான .அனுபவத்தை சுவைத்தறிய முயன்று பார்க்கும் இளைஞர்கள் பலர் உள்ளனர் திரைப்படத்தில் காணப்பட்டது போன்றதோ, அல்லது நாவலில் வாசிக்கப்பட்டது போன்றதோ அல்ல மனித வாழ்க்கைஅவற்றைப் பின்பற்றுவதற்கு முயன்றால் . நண்பர்களின் மத்தியில் சிறந்தவர் என .ஆபத்துகளில் அகப்பட்டு விடுவர் காட்டுவதற்காக இளைஞர்கள் திரைப்படத்தின் நடிகர்களை பின்பற்ற பால் உணர்வு குறித்தும் .முயற்சிக்கின்றனர், போதையைக் குறித்தும் நண்பர்கள்

www.malankaralibrary.com

கூறும் அனுபவங்களை மனத்தில் இருத்திக் கொண்டு அவற்றை சோதித்துப் பார்க்க முயல்வதும் ஆபத்தை விளைவிக்கும் .

4. அங்கீகார உணர்வு

சமூகம் குறிப்பாக தங்களுக்கு ஒப்பான பருவத்தினர்தங்களைக் குறித்து . என்ன நினைக்கின்றனர், என்ன கூறுகின்றனர் என்பதை அறிய வளர் இளம் பருவத்தினர் மிகவும் ஆர்வமாயிருப்பர்ஆகையால் நண்பர்களிடமிருந்து . கலை .அங்கீகாரம் கிடைப்பதற்காக அவர்கள் எப்போதும் முனைப்பாக இருப்பர் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டும், கல்வி கற்றலில் திறமைகளை வெளிப்படுத்தியும் இத்தகைய அங்கீகாரம் அடைந்து கொள்ள முடியும் . தீய பழக்கவழக்கங்களிலும், பேச்சுகளிலும் பிறருடைய கவனத்தைக் கவர்வதற்கு முயற்சிப்பது ஆபத்தை விளைவிக்கும் .

5. ஆரோக்கியமான ஆளுமையை உருவாக்குதல்

ஆளுமை வளர்ச்சியில் வளர் இளம் பருவத்திற்கு மிக முக்கியமான பங்கு உள்ளதுஆளுமை வளர்ச்சியில் ஒரு தனி மனிதனின் பல . கூறுகள் இடம் பெறுகின்றன .

(i) முதலாவது நமது உடலமைப்புமரபு வழியாக பெற்றவையும் ., உடலின் அமைப்பும் இதில் அடங்கும்எடுத்துக்காட்டாக ஒருவரது பெற்றோர் உயரம் . குறைந்தவரும் கறுப்பு நிறம் உடையவருமாக உள்ளனர் என நினைத்துக் அப்பெற்றோரின் மகன் அல்லது மகள் உ .கொள்வோம்யரம் குறைந்ததும், கறுப்பு நிறமுள்ளதுமான உடலமைப்பு மரபின் அடிப்படையில் அமையப் பெறுவதற்கும் வாய்ப்பு உள்ளதுஇவை அவரது சிந்தனைகளிலும் ., செயல்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்யலாம்இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு . முக்கியமான உண்மை என்னவென்றால் நமதூ ஆளுமைத் திறனின் சில கூறுகள் நமக்குப் பிறவிலேயே அமையப் பெற்றவை என்பதேயாகும்வளர் இளம் பருவத்தினர் . தங்கள் உயரம், பருமன், நிறம், ஆகியவற்றை குறித்து அடிக்கடி மிதமிஞ்சிய ஆவல் காட்டுவதுண்டுபிறப்பிலேயே பெற்ற உயரத்திலும் ., நிறத்திலும் மிகுதியான மாற்றம் செய்வதற்கு நமக்கு இயலாது அல்லவா? இத்தகைய இயல்பான காரியங்களை நாம் சுயமாக அங்கீகரித்தேயாக வேண்டும்நமது உயரமும் ., நிறமும் குறைவதற்கு நாம் காரணம் அல்ல.

(ii) ஆளுமைத் திறனின் இரண்டாவது கூறு திறமைகள் ஆகும்அறிவுத்திறன் ., கலைத்திறன், இசைத்திறன் போன்ற பலவிதத் திறன்கள் தனிநபர் ஒருவருக்கு இருக்கலாம்சில .இத்திறன்களில் சில பிறவியிலேயே அமைந்தவையாகும் . சிறு வயதில் .திறமைகளை நமது முயற்சியினால் வளப்படுத்திக் கொள்ளவும் இயலும் திக்கிப்பேசும் குறைபாடு உடையவர்கள் சுய முயற்சியினால் சிறந்த சொற்பொழிவாளர்களாக திகழ்ந்தது நமக்குத் தெரியுமல்லவா? சொந்த திறமைகளைக் குறித்துள்ள உணர்வும், அவற்றை வளப்படுத்திக் கொள்வதற்கான மிகுந்த விருப்பமும் வளர் இளம் பருவத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும் . .எல்லோருக்கும் எல்லா திறமைகளும் அமைந்திருக்க வாய்ப்பு குறைவு தான் ஒருவருக்கு சொற்பொழிவாற்றும் திறமைஉண்டாகலாம், வேறொருவருக்கு பாடுவதற்கான திறமை இருக்கலாம்நண்பனுக்கான திறமை தனக்கில்லையே எனச் . தனக்கு அமைந்துள்ள திறமை அந்த நண்பனுக்கு .சிந்தித்து கவலைப்படக் கூடாது பிறருக்கு வாய்த்திருக்கும் திறமைகளைக் குறித்து சிந்தித்து .இல்லாமல் போகலாம் கவலை அடைவதும், பொறாமை கொள்வதும் சிறந்த ஆளுமை வளர்ச்சிக்கு பொருத்தமானதாக அமையாது .'

(iii) ஆளுமைத் திறனின் மூன்றாவது கூறு ஆசைகளும், குறிக்கோள்களும் ஆகும்படிப்பில் முதல் தர மாணவனாகத் திகழ வேண்டும் ., நன்றாகப் படித்து சிறப்பானதொரு வேலை வாய்ப்புப் பெற வேண்டும், குறிப்பிட்ட ஒரு துறையில் திறமையை உயர்த்திக் கொள்ள வேண்டும் ஆகியன போன்ற குறிக்கோள்கள்

www.malankaralibrary.com

ஒருவருக்கிருப்பது ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையானதாகும்விக்டர் பிராங்கிள் . என்னும் புகழ்பெற்ற உளவியல் அறிஞரின் கருத்தின்படி மனிதமனத்தின் வலுவான தேவை தனது வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்க வேண ்டும் என்பதேயாகும். ஜெர்மனியில் நாசிக் பயிற்சி முகாமில் அவர் ஆறு ஆண்டுகள் வாழ்ந்திருக்க அந்தப் பயிற்சியின் போது அவருக்கு ஏற்பட்ட .வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார் இம்சைகளையும், கொடுமைகளையும் எதிர்கொள்வதற்கான ஆற்றல் பெற்றதோ அவரது வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உண்டு என்ற உணர்வினால் தான். “வாழ்க்கையின் உன்னதக் குறிக்கோள் இறைவனை அடைவதே” என்னும் நம்பிக்கையுள்ள மனிதனுக்கு வாழ்க்கைப் பிரச்சனைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் இருக்காது.

(iv) ஆளுமைத் திறனின் நான்காவது கூறு தான் மதிப்பீடுகள் )Values). அன்பு, இரக்கம் பொறுப்புணர்வு, உண்மை, நேர்மை போன்றவை இயல்பான மதிப்பீடுகள் ஆகும்தனி மனிதனுடையவும் ., சமூகத்தினுடையவும் வளமைக்கு இவ்வகையான மதிப்பீடுகள் வளர்ந்தோங்க வேண்டும்தனிமனிதரிடத்தில் அறம் சார்ந்த . மதிப்பீடுகளுக்குத் தோய்வ ஏற்படும் போது அவை சமூகத்தில் பாதிப்பை .ஏற்படுத்தும்நமது நாட்டில் தற்கொலைகளும், குற்றங்களும் பெருகி வருவதற்குக் காரணம் கிறிஸ்தவ மதிப்பீடுகளை மக்கள் கடைப்பிடிக்காததேயாகும்.

இயல்பான மதிப்பீடுகளுக்கு ஏற்ப தனிப்பட்ட முறையில் நற்குணங்களையும் உருவாக்கி வளர்த்துக் கொள்ள வேண்டும்காலம் தவறாமை ., எளிமை, தூய்மை போன்ற தனி மனித பண்புகளும் நமது ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும்நமது நாட்டின் பிரச்சினைகள் பலவற்றிற்கும் . மிகவும் .அடிப்படைக் காரணங்கள் கவர்ச்சியும் ஆடம்பர வாழ்க்கையுமேயாகும் இன்றியமையாத அவசியங்களுக்கு மட்டுமே பணம் செலவிடுவதற்கும், ஆடம்பரப்பொருள்களை இயன்ற அளவு தவிர்த்துவிடுவதற்கும் வளர் இளம் பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும்இளமையின் வயதிற்கேற்றதும் நம் . .நாட்டின் காலநிலைக்கேற்றதுமான ஆடைகளை அணிவதே சிறப்பானதாகும்

6. சுயமதிப்பு உணர்வு )Self Esteem)

வளர் இளம் பருவத்திலிருந்தே ஒவ்வொரு தனி நபருக்கும் தனது திறமைகளையும், குறைபாடுகளையும் குறித்து உண்மையான அறிவு தேவைநமக்கு ., நம்மைக் குறித்தே சுய மதிப்பு இருப்பது நமது மனவளர்ச்சிக்கும், மனவலிமைக்கும் மிகவும் தேவையானதாகும்பல நேரங்களில் வளர் இளம் பருவத்தினரின் ஆளுமை . வளர்ச்சிக்குத் தடையாக நிற்பது அவர்களது தாழ்வு மனப்பான்மையே ஆகும்தான் . அற்பமானவன், தனக்குத் திறமைகள் எதுவும் இல்லை , பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தான் தரத்தில் குறைந்தவன் போன்ற அவநம்பிக்கையே தாழ்வுமனப்பான்மையாகும்பல விதமான மனநோய்களுடையவும் பின்னணியாக . .செயல்படுவது இந்தத் தாழ்வு மனப்பான்மையே ஆகும்

குடும்ப பின்னணி, உடல் அமைப்பு, சாதி வேற்றுமை ஆகியவற்றைக் குறித்து ஏற்படுகின்ற தாழ்வுணர்ச்சிகளும், சிந்தனைகளும் தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாகலாம்ஒவ்வொரு .இவற்றிற்கெல்லாம் நாம் பொறுப்பாளிகள் அல்ல . மனிதருக்கும் அவருக்கே உரித்தான திறமைகளும், பலவீனங்களும், குறைபாடுகளும் அமைந்திருப்பது இயல்பானதேதிறமைகள் அதிக அளவில் பெற்றுள்ள ஒருவர் . அத்திறமை கடவுளின் அருள்கொடையே எனவும், அத்திறமைகளை சமூகத்தின் பொதுவான நன்மைகளுக்காக பயன்படுத்துவதே சிறப்பானது எனவும் புரிந்துகொள்ள வேண்டும்திறமைகள் குறைவாக பெற்றுக்கொண்ட ஒருவர் . அதற்காக தாழ்வு மனப்பான்மை அடைய வேண்டிய அவசியமில்லைஏனெனில் . வளர் இளம் .ஏதாவது ஒரு திறமையாகிலும் பெற்றிராத ஒருவருமில்லை தாழ்வு .பருவத்திலேயே தாழ்வு மனப்பான்மையை அகற்றி விட வேண்டும் மனப்பான்மை ஏற்பட்டதற்கான காரணம் கண்டடைவதுடன் கடவுள் தம்மை அன்பு

www.malankaralibrary.com

நம்பிக்கை சிறப்பான பயன்களை விளைவிக்கும்.

3. வளர் இளம் பருவத்தில் தாழ்வுமனப்பான்மை ஒருவருக்கு என்னென்ன எதிர்மறை பாதிப்புகளை ஏற்படுத்துகிறது? அதைச் சீர்படுத்துவது எவ்வாறு?

வளர் இளம் பருவத்திலிருந்தே ஒவ்வொரு தனி நபருக்கும் தனது திறமைகளையும், குறைபாடுகளையும் குறித்து உண்மையான அறிவு தேவைநமக்கு ., நம்மைக் குறித்தே சுய மதிப்பு இருப்பது நமது மனவளர்ச்சிக்கும், மனவலிமைக்கும் மிகவும் தேவையானதாகும்பல நேரங்களில் வளர் இளம் பருவத்தினரின் ஆளுமை . வளர்ச்சிக்குத் தடையாக நிற்பது அவர்களது தாழ்வு மனப்பான்மையே ஆகும்தான் . அற்பமானவன், தனக்குத் திறமைகள் எதுவும் இல்லை , பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தான் தரத்தில் குறைந்தவன் போன்ற அவநம்பிக்கையே தாழ்வுமனப்பான்மையாகும்பல விதமான மனநோய்களுடையவும் பின்னணியாக . செயல்படுவதுஇந்தத் தாழ்வு மனப்பான்மையே ஆகும் .

குடும்ப பின்னணி, உடல் அமைப்பு, சாதி வேற்றுமை ஆகியவற்றைக் குறித்து ஏற்படுகின்ற தாழ்வுணர்ச்சிகளும், சிந்தனைகளும் தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாகலாம்ஒவ்வொரு .இவற்றிற்கெல்லாம் நாம் பொறுப்பாளிகள் அல்ல . மனிதருக்கும் அவருக்கே உரித்தான திறமைகளும், பலவீனங்களும், குறைபாடுகளும் அமைந்திருப்பது இயல்பானதேதிறமைகள் அதிக அளவில் பெற்றுள்ள ஒருவர் . அத்திறமை கடவுளின் அருள்கொடையே எனவும், அத்திறமைகளை சமூகத்தின் பொதுவான நன்மைகளுக்காக பயன்படுத்துவதே சிறப்பானது எனவும் புரிந்துகொள்ள வேண்டும்திறம .ைகள் குறைவாக பெற்றுக்கொண்ட ஒருவர் அதற்காக தாழ்வு மனப்பான்மை அடைய வேண்டிய அவசியமில்லைஏனெனில் . வளர் இளம் .ஏதாவது ஒரு திறமையாகிலும் பெற்றிராத ஒருவருமில்லை தாழ்வு .பருவத்திலேயே தாழ்வு மனப்பான்மையை அகற்றி விட வேண்டும் மனப்பான்மை ஏற்பட்டதற்கான காரணம் கண்டடைவதுடன் கடவுள் தம்மை அன்பு செய்கிறார் எனவும் தமக்குத் திறமைகள் பல கடவுள் தந்திருக்கிறார் எனவும் உள்ள நம்பிக்கை சிறப்பான பயன்களை விளைவிக்கும்.

குறு வினா விடைகள்

1. பிரச்சனைகளுடையவும், மனப் போராட்டங்களுடையவும், சவால்களுடையவும் காலகட்டமான மனிதனின் பருவம் எது? வளர் இளம் பருவம்.
2. வளர் இளம் பருவத்தின் வாழ்வில் எத்தகைய குழுக்கள் முக்கிய பங்காற்றுகின்றன? 'நண்பர் குழுக்கள்
3. வளர் இளம் பருவத்தின் தீவிரமான உணர்ச்சிகளின் விளைவுகள் எவை? திடீர் கோபம், புரட்சி மனநிலை, குற்ற உணர்வு, ஏமாற்றமடைந்த மனநிலை
4. மனிதனின் ஆளுமை உருவாக்கத்தில் (Personality Development) மனிதனின் எப்பருவம் மிக முக்கிய பங்காற்றுகிறது? வளர் இளம் பருவம்
5. ஆளுமை வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைவது எது? உணர்ச்சிகளின் முதிர்ச்சி
6. வளர் இளம் பருவத்தின் தேவைகள் எவை? பாதுகாப்பு உணர்வு, சுதந்திர உணர்வு, அனுபவ உணர்வு, அங்கீகார உணர்வு, ஆரோக்கியமான ஆளுமையை உருவாக்குதல், சுயமதிப்பு உணர்வு (Self Esteem), பாதுகாப்பு உணர்வு
7. “நான் இது நாள்வரையிலும் பெற்றோரின் சிறு பிள்ளையாயிருந்தேன். இப்போது நான் வளர்ந்து விட்டேன். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்”. இஃது எத்தகையோரின் சிந்தனை? வளர் இளம் பருவத்தினரின்.
8. ஆளுமை வளர்ச்சியில் வளர் இளம் பருவத்தினருக்குத் தேவையான கூறுகள் எவை? நமது உடலமைப்பு, திறமைகள், ஆசைகளும், குறிக்கோள்களும், மதிப்பீடுகள் (Values).
9. “நெருக்கடியான வேளையில் நான் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன். ஆண்டவரும் எனக்கு செவி கொடுத்து என்னை விடுவித்தார். **ஆண்டவர்** என்

www.malankaralibrary.com

பக்கம் இருக்க நான் ஏன் அஞ்ச வேண்டும். மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்?" (திருப்பாடல்கள் 118:5-6)

## பாடம் 16

## **பாலுணர்வு - கடவுளின் கொடை**

பயிற்சி வினாக்கள்

1. பாலுணர்வு கடவுளின் கொடை எனப்படுவது ஏன்?

கடவுள் மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்ததன் வாயிலாக இருவருக்கும் பாலுணர்வு என்னும் திறனை அளித்துள்ளார். கடவுள் இந்த திறனை மனிதரைக்க அளித்ததன் நோக்கம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதற்கும், புது மனித உயிரை அளிப்பதற்கும் அவ்வாறு கடவுளின் படைப்புச் செயலில் பங்குபெறுவதற்கும் ஆகும். பெண்ணுக்கு ஆணுடனும், ஆணுக்கு பெண்ணுடனும் ஏற்படும் அன்பு பாலுணர்வுடன் கலந்திருக்கிறது.

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கவர்ச்சியால் விருப்பம் கொள்வதற்கும், அன்பு செலுத்துவதற்கும் புது மனித உயிரை கொடையாக அளிப்பதற்கும் தான் படைப்பின் போது கடவுள் மனிதனுக்கு பாலுணர்வு என்னும் இத்தகைய ஆற்றலை அளித்தார். பாலுணர்வு கடவுள் அளித்த கொடையாகும். இறைத்திட்டத்தின் இன்றியமையாத ஒரு கூறு என்ற நிலையில் பாலுணர்வு தூய்மையானதும், தெய்வீகத் தன்மை வாய்ந்துமாகும். படைப்பிற்குப் பின் “கடவுள் தான் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன” (தொடக்கநூல் 1 : 31). கடவுளின் படைப்பின் ஒரு பகுதி ஆனதால் பால் உணர்வும் நல்லதே.

2. மனித பாலுணர்வின் குறிக்கோளை விளக்குக?

மனிதனின் பால் உணர்வின் இயல்பான நோக்கம் அன்பின் பகிர்தலும், அதன் வழியாக குழந்தைப் பேறு அடைவதும் ஆகும். திருமணம் என்னும் அருளடையாளம் வழியாக ஒன்றித்திருக்கும் தம்பதிகளை அன்பின் பகிர்தலுக்கு திறமையாளர்களாக்குவது அவர்களது பாலுணர்வேயாகும். "கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" என்னும் தொடக்கநூலில் கூறப்பட்டுள்ள இறைவார்த்தை நிறைவு பெறுவது இந்த அன்பின் பகிர்தலின் மூலமே ஆகும்.

மண வாழ்க்கையில் பாலுணர்வுக்கு மிகப்பெரும் பங்குள்ளது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதற்கும், அன்பின் வழியில் ஒன்றாய் இணைந்திருப்பதற்கும் தம்பதிகள் அழைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் இவ்வாறு நிறைவு பெறுகிறது. புதிய ஏற்பாட்டில் இறை இயேசுவும் இக்கருத்தை வலியுறுத்திக் கற்பித்துள்ளார். "படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள், மனிதரை ஆணும் பெண்ணுமாக படைத்தார். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர், இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல்” (மாற்கு 10 : 6-8). மணவாழ்வின் இந்த ஒன்றிப்புதான் மணமக்களின் அன்புறவின் நிறைவு.

மணவாழ்வின் அன்புறவு குழந்தை பேற்றினைக் குறிக்கோளாக கொண்டுள்ளது. தமது படைப்புச் செயலில் பங்கு பெறுவதற்காக ஆணையும், பெண்ணையும் மண வாழ்க்கையின் வாயிலாக கடவுள் அழைக்கிறார். கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற தம்பதிகள் ஒருவருக்கொருவரின் அன்புறவின் நிறைவில், ஒன்றிணைந்து புது மனித உயிரைக் கொடையாக அளிக்கின்றனர். பாலுணர்வின் திறனில் உள்ளடங்கியுள்ள உயிரளிக்கும் சக்தியினால் தான் இந்தக் குறிக்கோளை அடைய முடிகிறது. இனவிருத்தியும், குழந்தைகளின் பராமரிப்பும் இந்தக் குறிக்கோளில் உள்ளடங்கியுள்ளன.

www.malankaralibrary.com

இதனை வேறு விதமாக கூறுவோமானால் முழுமையான சமர்ப்பணத்தின் வாயிலாக புதியதொரு மனிதக் தமந்தைக்கு பிறப்பைக் கொடுத்து நற்பயனை வெளிக்கொணர்வதற்காக மணமகளையும், மணமகனையும் அவர்களது அன்புறவு தூண்டிவிடுகிறது என்பதே; மற்றுமொரு மனித உயிருக்கும் பிறப்பளிக்கும் மனிதனின் மேன்மை பொருந்திய திறன் கடவுளின் படைப்புச் செயலில் அவருக்குத் துணையாளர்களாயிருப்பதற்கான அழைப்பேயாகும்.

**குறு வினா விடைகள்**

1. 'செக்காரே' என்ற இலத்தீன் சொல்லின் பொருள் என்ன? 'வெட்டி முறிக்க'
2. 'பால் உணர்வு' (Sex) என்ற பதம் எந்த இலத்தீன் சொல்லிலிருந்து உருவானது? 'செக்காரே'
3. ஆணிலிருந்து பிரிக்கப்பட்டு பெண் உருவானதைக் குறிப்பிடும் விவிலியப்பகுதி எது? தொடக்கநூல் 2 : 21, 22 -ல்
4. ஒன்றாயிருந்த மனிதன் தெய்வீக ஆற்றலால் இரண்டாக்கப்பட்டார் என்ற அர்த்தத்தில் உருவான சொல் எது? பால் உணர்வு (Sex)
5. திருவிவிலியத்தின் பார்வையில் பால் உணர்வு எத்தகையது? தெய்வீகமும், புனிதமுமானது.
6. “பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் **<u>ஆற்றலுக்கு</u>** உட்படுத்துங்கள்” (தொடக்க நூல் 1:28).
7. மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று என்று கண்ட கடவுள் அவனுக்குத் தகுந்த துணையை அளித்தார் என்ற விவிலியப்பகுதி எது? தொடக்க நூல் 2 : 18
8. “இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள். ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்". (தொடக்க நூல் 2 : 23) யார் யாரிடம் கூறியது? மனிதன் பெண்ணிடம்
9. “இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.” என்ற பழைய ஏற்பாட்டு திருவிவிலியப்பகுதி எது? தொ.நூல் 2 : 24
10. ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யவும், அன்பின் நிறைவில் புதிய மனித உயிரை பரிசாக வழங்கவும் கடவுள் மனிதனுக்கு வழங்கிய ஆற்றலுக்குப் பெயர் என்ன? பால் உணர்வு.
11. பழைய ஏற்பாட்டில் தம்பதிகளுக்கு இடையேயான அன்பின் புனிதத்தையும், மாட்சிமையையும், வசீகரத்தன்மையையும் விளக்குகின்ற நூல் எது? “இனிமைமிகு பாடல்"
12. திருமண வாழ்வின் அன்புறவையும், புனிதத் தன்மையையும் குறித்த நற்செய்திப் பகுதி எது? மத்தேயு 19: 1-12),
13. மனித உடல் கடவுளின் கோவிலாக இருப்பதால் மனிதன் தனது உடலை மாசுபடுத்தக் கூடாது என்றவர் யார்? புனித பவுலடியார் எடுத்துரைக்கின்றார்
14. கடவுள் மனிதனுக்கு பாலுணர்வு என்னும் திறனை அளித்ததன் நோக்கம் என்ன? ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதற்கும், புது மனித உயிரை அளிப்பதற்கும்
15. கடவுளின் படைப்பின் ஒரு பகுதி ஆனதால் பால் உணர்வு நல்லதா? தீயதா? நல்லது
16. "படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள், மனிதரை ஆணும் பெண்ணுமாக படைத்தார். இதனால் **<u>கணவன்</u>** தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர், இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல்” என்ற நற்செய்திப்பகுதி எங்குள்ளது மாற்கு 10 : 6-8
17. மணவாழ்வின் இந்த ஒன்றிப்புதான் **<u>மணமக்களின்</u>** அன்புறவின் நிறைவு.

www.malankaralibrary.com

18. மணவாழ்வின் அன்புறவு எதனைக் குறிக்கோளாக கொண்டுள்ளது? குழந்தை பேறு
19. மனித உயிருக்கு பிறப்பளிக்கும் மனிதனின் மேன்மை பொருந்திய திறன் எவ்வாறு கடவுளுக்கு துணையாளர்களாயிருப்பதற்கான அழைப்பேயாகும்? கடவுளின் படைப்புச் செயலில்
20. ஆண்களுக்கு திருமண வயது என்ன? 21
21. பெண்களுக்கு திருமண வயது என்ன? 18
22. பாலுணர்வின் உணர்ச்சிநிலையைத் தூண்டி விடக்கூடிய தீய வழிகள் எவை? ஆபாச புத்தகங்கள், ஆபாச படங்கள், ஆபாச திரைப்படங்கள், ஆபாச பேச்சுகள், தீய நண்பர்கள்
23. பாலுணர்வு என்னும் கடவுளின் அருட்கொடையை உலக நன்மைக்காக அர்ப்பணம் செய்யும் திருச்சபையின் வாழ்வு நிலைகள் எவை? குருத்துவ வாழ்வும், துறவற வாழ்வும்.
24. "உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட **தூய ஆவி** தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலில் கடவுளுக்கு பெருமை சேருங்கள்" (1 கொரிந்தியர் 6:19-20).

## பாடம் 17

## கிறிஸ்தவ வாழ்வில் துன்பம்

பயிற்சி வினாக்கள்

1. துன்பத்தின் மீட்பு அர்த்தத்தை விவரி?

தனிநபர்களும், குடும்பங்களும் சமூகங்களும் பெறும் துயரத்தில் கலங்கித் தவிப்பதை நாம் கண்டிருக்கிறோம். துன்பங்களை விசுவாசத்தின் ஒளியில் பார்ப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் கிறிஸ்தவர்களுக்கு இயல வேண்டும். தனது துயரங்களை அகற்றி விடுவதற்கு ஆண்டவரிடம் வேண்டிக் கொண்ட புனித பவுலுக்கு ஆண்டவர் அளித்த பதிலுரை கவனிக்கத்தக்கதாகும். "என் அருள் உனக்குப் போதும், வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" (2 கொரிந்தியர் 12 : 9). ஆண்டவர் அளித்த வெளிப்பாட்டில் திருத்தூதுவரான பவுலுக்குக் கிடைக்கப் பெற்ற விசுவாச ஒளி வேதனையின் வேளைகளில் கிறிஸ்தவனுக்கு வல்லமை அளிக்க வேண்டும். “ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித் தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன்.

அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும். ஆகவே என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும் போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" (2 கொரிந்தியர் 12: 9-10). கிறிஸ்துவின் பிற சீடர்களை விட தான் சிறந்த சீடனே என பவுல் வாதிடுவது அவர் கிறிஸ்துவுக்காகத் தாங்கிக் கொண்ட துன்பங்களின் பட்டியலை வெளிப்படுத்திக் கொண்டேயாகும் (2 கொரிந்தியர் 11 : 23-28). வாழ்க்கையின் துயர நேரங்களில் கிறிஸ்து நம்முடனே இருக்கிறார். பலவீனங்களையும், தடைகளையும் தகர்த்து விட்டு முன்னேறுவது தான் கடவுளின் அருள். துன்பங்களை சீரான மனநிலையுடன் எதிர்கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் அருள்கொடை நமக்கு ஆற்றலை அளிக்கும்.

கிறிஸ்துவின் துன்பங்களில் நாமும் மிகுதியாக பங்குபெற வேண்டுமென்ற புனித பவுலடியாரின் அறிவுரை (2 கொரிந்தியர் 1: 5) துன்பத்தைப் பற்றிய மற்றுமொரு சிறப்புக் கருத்தையும் நமக்கு காட்டித் தருகின்றது. புனித பவுல் இங்கே குறிப்பிட விரும்புவது இயேசு கிறிஸ்துவின் துன்பப்பாடுகளிலும், சிலுவை மரணத்திலும் குறைபாடுகள் உள்ளன என்பதையல்ல. மாறாக, கடவுளின் மீட்புத் திட்டம்

www.malankaralibrary.com

இறைமக்களின் வாழ்க்கையின் வாயிலாகவும், திருச்சபையின் கூட்டு அன்புறவின் வாயிலாகவும் தான் இன்று நிறைவேற்றப்படுகின்றது. இறைமக்களின் துன்பப்பாடுகள் நிச்சயமாகவே தனி நபர்களை சார்ந்தது அல்ல; அதனை அவன் தாங்கிக் கொள்வது கிறிஸ்துவின் மறை உடலிலேயே ஆகும். திருச்சபையுடன் சேர்ந்திருந்து கொண்டு துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் போது அது இயேசுவின் சிலுவைப் பாடுகளில் ஒரு பகுதியாக மாற்றப்படுகிறது. அது மீட்பின் நிறைவுக்கே இட்டுச்செல்லும்.

2. துன்பதுயரங்களைத் தாங்கிக் கொள்வது குறித்து திருவிவிலியம் வழிநின்று விளக்குக?

**அ. துன்பம் பழைய ஏற்பாட்டில்**

மனிதனின் துன்ப துயரங்களுக்கு பழைய ஏற்பாடு சுட்டிக் காட்டும் அடிப்படையான காரணம் ஆதிமனிதனின் பாவம் ஆகும் (தொடக்கநூல் 2 : 14-19). ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தின் இன்பங்களையும், கடவுளோடுள்ள நட்புறவையும் இழந்து விடுவதற்கு ஏதுவாக அமைந்ததும் பாவமேயாகும். பாவம் காரணமாக துன்பமும், மரணமும் உலகில் நுழைந்தன. மனிதனின் பாவம் பெருகியது தான் துன்பம் மிகுவதற்குக் காரணமெனவும், பாவத்திற்குத் தண்டனை இன்றியமையாததே எனவும் நோவாவின் காலத்து வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பேரழிவு தெளிவுபடுத்துகின்றது (தொ.நூ. 6:1-8).

கடவுளின் கட்டளைகளை மீறுவதனால் தனிநபர்களையும், சமூகத்தையும், பகைவர்களுக்கும், மாறா நோய்களுக்கும், பிறதுன்பங்களுக்கும் இரையாக்கிவிடும் என இஸ்ரயேல் மக்கள் நம்பியிருந்தனர் (இணைசட்டம்.30 : 15-20). இஸ்ரயேலரின் சாதாரணமான சிந்தனையிலிருந்து மாறுபட்டதாக பாவத்தினுடையவும், துன்பத்தினுடையவும், பொறுப்பக் கனிநபருக்குத் தான் என்பதை இறைவாக்கினர்களின் உரைகளில் நாம் பார்க்கிறோம். ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது.

புளித்த திராட்சைப் பழங்களைப் பெற்றோர் தின்ன. பிள்ளைகளின் பல் கூசிற்றாம்" என்னும் பழமொழியை இஸ்ரயேல் நாட்டைக் கறித்து நீங்கள் வழங்குவதன் பொருள் என்ன? உயிர் அனைத்தும் எனக்கே சொந்தம். நவோரின் உயிர் என்னுடையது; பிள்ளைகளின் உயிரும் என்னுடையதே. பாவம் செய்யம் உயிரே சாகும்..... தந்தையின் குற்றத்தை மகன் ஏன் சுமக்கக் கூடாது' என்று நீங்கள் கேட்கலாம். மகன், நீதியையும், நேர்மையையும் கடைபிடித்து, என் நியமங்களையெல்லாம் கைக்கொண்டு ஒழுகினால், அவன் வாழ்வது உறுதி. பாவம் செய்பவரே சாவர்.

பிள்ளைகள் பெற்றோரின் குற்றத்தைச் சுமக்க மாட்டார்கள். அவ்வாறே பெற்றோரும் பிள்ளைகளின் குற்றத்தைச் சுமக்கமாட்டார்கள். நீதிமானின் நீதி அவன் மேல் இருக்கும். பொல்லானின் பொல்லாங்கு அவன் மீது இருக்கும் என எசேக்கியேல் இறைவாக்கினர் கற்பித்தார் (எசேக்கியேல் 18:1-4, 18:19-20). பாவ வழிகளை விட்டு மனம்மாறி நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிப்பவர் எவரும் தண்டனைக்குள்ளாக மாட்டார் எனவும் வாழ்வு பெறுவார் எனவும் இறைவாக்கினர்கள் நினைவூட்டியுள்ளனர் (எசேக்கியேல் 18 : 21- 32).

மனிதன் அனுபவிக்கின்ற வேதனைகளுக்கும் அவற்றை சகித்துக் கொள்வதற்கும் ஆழ்ந்த அர்த்தமுள்ளது என்ற சிந்தனையும் பழைய ஏற்பாட்டு நூல்களில் கண்டுகொள்ளலாம். துன்பங்களுக்கு மீட்புக்கான மதிப்பு சார்ந்த அர்த்தமுள்ளது என துன்புறும் இறை ஊழியரின் (மெசியா) சாயலைக் குறிப்பிட்டவாறே எசாயா இறைவாக்கினர் தெளிவுபடுத்துகின்றார் (எசாயா 42 முதல் 53 வரை அதிகாரங்கள்). வேதனைக்கும், சகித்தலுக்கும் மீட்புக்கான மதிப்பு உள்ளது என்ற உணர்வை ஞானநூல்களும் (Wisdom Books) தருகின்றன. தனது உயிர் வாழும்

www.malankaralibrary.com

காலத்தில் முடிந்த அளவு எல்லா துன்பதுயரங்களையும் சகித்துக் கொண்ட யோபு துன்புறுவோர் அனைவருடையவும் பிரதிநிதியும், அடையாளமும் ஆவார். துன்பப்பாடுகளின் இறுதியில் யோபு ஆண்டவரைத் தரிசிக்கின்றார். ஆண்டவரின் அருகே இருப்பதாக உணர்ந்த யோபு குறைபாடுகளைப் பகுத்தறிந்து, மனித அறிவுக்கு எட்டாத இறைபராமரிப்பின் மீது வைத்துள்ள தனது நம்பிக்கையை அறிக்கையிடவும் செய்தார் (யோபு 38 முதல் 42 வரை அதிகாரங்கள்).

துன்பத்திற்கும், மரணத்திற்கும் அப்பால் உயிர்ப்பின் மகிமையும் உள்ளது என்ற உண்மையை பழைய ஏற்பாடு நமக்குத் தருகின்றது. “கடவுள் மீண்டும் உயிர்த்தெழச் செய்வார் என்னும் நம்பிக்கை எனக்கு இருப்பதால் மனிதர் கையால் இறக்க விரும்புகிறேன்.” (2 மக்கபேயர் 7 : 14) “நாங்கள் இறந்தபின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்; ஏனெனில் நாங்கள் இறப்பது அவருடைய கட்டளையின் பொருட்டே” (2 மக்கபேயர் 7 : 9) என்று துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டபின் மரண நேரத்தில் அறிக்கையிடுகின்ற விசுவாசிகளைத் திருவிவிலியத்தில் நாம் பார்க்கிறோம். சுருங்கக் கூறின் துன்பங்களை சகித்துக்கொள்வது பொருளற்றது அல்ல வாழ்க்கைக்கு மேன்மையையும், நிறைவையும் தருகிறது என பழைய ஏற்பாடு அறிவுறுத்துகின்றது.

**ஆ. துன்பம் - புதிய ஏற்பாட்டில்**

மனித மீட்புக்கான துன்புறுதலே புதிய ஏற்பாட்டில் மிஞ்சி நிற்கிறது. இயேசு கிறிஸ்துவின் துன்பப்பாடுகளும், அவை மனித சமூகத்திற்குத் தருகின்ற எதிர்நோக்குதலும் தான் புதிய ஏற்பாட்டின் முக்கியமான கருப்பொருள்.

**நற்செய்திகளில் இயேசுவின் துன்பப்பாடுகள்**

இறைமகனும் நிறைவான மனிதனுமாகிய இயேசுகிறிஸ்து அனுபவிக்காத துன்பங்கள் வேறு உள்ளனவோ? கடவுளாகிய கிறிஸ்து, கடவுளுக்கு இணையான நிலையைத் தியாகம் செய்து விட்டு, "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலிப்பியர் 2: 6-7). மனிதனாவதற்கான அவருடைய தீர்மானமே துன்பங்களை சகிப்பதற்காகத் தான். பூவுலகில் பிறப்பதற்கு முன்னரே இயேசுவின் துயர் தொடங்கிவிட்டது என நாம் பார்க்கின்றோம். இயேசுவையும் உதரத்தில் தாங்கிக்கொண்டு மரியா யோசேப்புடன் சேர்ந்து தலைசாய்ப்பதற்கு இடம் தேடி அலைந்தார். குழந்தையான இயேசுவையும் எடுத்துக் கொண்டு யோசேப்பும் மரியாவும் தஞ்சம் தேடி எகிப்துக்குச் சென்றனர். ஏரோது அரசரின் இறப்புக்குப்பின்னும் அவர்கள் சொந்த நாட்டிற்குச் செல்ல இயலாமல் பிற நாட்டில் குடியேறி வசிப்பவர்களாக கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் வாழ்ந்தனர்.

பசி, தாகம், தமது சீடர்கள் சொந்த ஊர்மக்கள் ஆகியோரின் புறக்கணிப்பு, அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் அதனால் ஏற்பட்ட மனவேதனைகள் இவற்றை இயேசு தாங்கி கொண்டார். (தமது பணிவாழ்வின் போது இயேசு கவனம் செலுத்தினார்) துன்பத்தால் வருந்துவோரிடத்தும் உதவி தேவைப்படுவோரிடத்துமே பல்வேறு நோய்களால் துயரம் அடைந்தவர்களை அவர் குணப்படுத்தினார். உள்ளம் உடைந்து போனவர்களுக்கு ஆறுதல் அளித்தார். பசித்தவர்களுக்கு உணவளித்து மனநிறைவடையச் செய்தார். பேய்களின் கட்டுகளிலிருந்து மக்களுக்கு விடுதலை அளித்தார். இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்தார். இவ்வாறு உடல், உள்ளம் சமூகம் சார்ந்ததுமான ஆன்மீக விடுதலையின் பாதையை மக்கள் முன் திறந்து வைத்தார். -

துன்பங்களைத் தாங்கிக் கொள்வதன் மதிப்பீடு இயேசுவின் போதனைகளின் முக்கியமான ஒரு கருத்தாகும். ஏழையர், வருத்தமுடையோர், நீதிக்கான வேட்கை கொண்டோர், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர், இயேசுவின் பொருட்டு இகழ்ச்சியும், நிந்தனையும், அவமதிப்பும், துன்புறுத்தலும் தாங்கி கொள்வோர் ஆகியோருக்கு இயேசு கைமாறாக அளிக்கும் வாக்குறுதி எதுவெனில் விண்ணரசும் அதன் நிறைவான பேரானந்தமுமே ஆகும் (மத்தேயு 5:1-12). “என்னைப் பின்பற்ற

www.malankaralibrary.com

விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக்கா 9:23). என்னும் இயேசுவின் அறைகூவல் துன்பத்தைத் தாங்கிக் கொள்வதால் ஏற்படுகின்ற வேதனையையும் துயரத்தையும் அகற்றிவிடுவதற்கு இயலாது என்பதையும், அவற்றிற்கு இயேசுவின் சிலுவையோடு இணைபிரியா பிணைப்பு உள்ளது என்பதையும் நமக்குத் தெளிவுப்படுத்துகிறது.

இயேசு துன்பங்களைக் குறித்து மக்களுக்குக் கற்பித்தது மட்டுமல்லாமல், அவர் தமது வாழ்வில் கடினமான துன்பங்களை ஏற்றுக்கொள்ளவும் செய்தார். அவர் பாவமற்றவரும், தாயவருமாய் இருந்த போதிலும், சுயவிருப்பத்தாலேயே (Voluntarily) துன்பங்களை ஏற்றுக்கொண்டார். இயேசு பாஸ்கா விழாவிற்காக எருசலேமுக்கு சென்றது துன்பப்பாடுகளையும், சிலுவை மரணத்தையும் முன்கூட்டியே உணர்ந்து கொண்டதாலே ஆகும் (லூக்கா 18 : 31-33). மனித குலத்தின் மீட்புக்காக தந்தைக் கடவுள் தீட்டி வைத்திருந்த மீட்புத் திட்டத்தில் இயேசுவும் பங்கேற்றுக் கொண்டார். வேறுவிதமாக கூறுவோமானால் இயேசு தாம் ஏற்றுக்கொண்ட துன்பப்பாடுகள் வாயிலாக தந்தைக் கடவுளுக்கு மனிதரோடு உள்ள அன்புறவுக்கு நிறைவான சாட்சியம் அளித்துள்ளார் என்பதேயாகும்.

அடுத்து வரப்போகும் துன்பப்பாடுகளும், சிலுவை மரணமும் ஆழ்துயரத்தைத் தருவதாக இருக்கும் என அவருக்குத் தெரியும். எனவே, "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று கெத்சமனி தோட்டத்தில் தந்தைக் கடவுளிடம் வேண்டிக் கொள்ளும் அளவுக்கு இயேசு கடுமையான வேதனை அனுபவித்தார் (மத்தேயு 26 : 39).

எனினும் தந்தைக் கடவுளின் மீட்புத் திட்டத்திற்கு அவர் கீழ்ப்படிந்தார். கசையடிகளால் உடல் காயமடைந்தும், முள் முடியைத் தாங்கிக் கொண்டும், சிலுவையையும் சுமந்தவாறு வேதனை நிரம்பிய பயணத்திற்குப் பிறகும் இயேசு சிலுவையில் மரணம் அடைந்தார். "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று உரத்தக் குரலில் கூறிக்கொண்டு இயேசு முழுமையாக தம்மைத் தந்தைக் கடவுளுக்கு சமர்ப்பித்தார் (லூக்கா 23: 46). கொடுந்துயரத்தின் நெருப்புச் சூளையில் திணறிக் கொண்டிருப்பவர்களுக்குச் சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்து ஆறுதலையும், எதிர்நோக்கையையும் அளிக்கின்றார்.

மானிடரைத் தீமையிலிருந்து விடுவிக்க இறைமகன் மனிதனானார். தமது ஒரே மகனின் துன்பப்பாடுகள் வாயிலாக மனிதகுலத்திற்கு விடுதலையளித்தார். மனிதரோடுள்ள கடவுளின் எல்லையற்ற அன்புறவை நாம் இயேசுவின் வழியாக கண்டு கொண்டோம். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3 : 16). கடவுளின் மீட்பளிக்கும் அன்பை நாம் அறிந்து கொள்வது இயேசு கிறிஸ்துவின் துன்பப்பாடுகளின் சிலுவை, மரணம் ஆகியவற்றின் வாயிலாகவே.

இறப்பிற்கும், கல்லறை அடக்கத்திற்கும் பின்னர் இயேசுவின் உயிர்த்தெழுதல் மக்கள் அனைவருக்கும் துயரங்களுக்கிடையேயும் நிலைவாழ்வை எதிர்நோக்கும் நம்பிக்கையைத் தருகின்றது. இயேசுவின் உயிர்ப்பு மனித வாழ்விலிருந்து துன்பங்களை முழுமையாக அகற்றி விட்டது என்று பொருளில்லை. வாழ்க்கையிலுள்ள எண்ணற்ற துன்பங்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு மீட்பின் ஒளியைத் தந்துள்ளது மனிதனின் இவ்வுலக வாழ்க்கையோடு இணைந்துள்ள அனைத்துத் துயரங்களிலும் இயேசுவும் பங்கேற்றார். தீமையின் துயரங்களை அவர் மீட்பின் அனுபவங்களாக மாற்றினார். அவர் வேதனையின் அனுபவம் வாயிலாக மனிதனுக்கு மீட்பின் வழியைப் பெற்றுத்தந்தார்.

3. "மனிதனின் உண்மையான குணமும், மேன்மையும் அறிந்து கொள்ள உதவும் தருணம் அவனது துன்ப வேளையிலாகும்" தெளிவுப்படுத்துக?

www.malankaralibrary.com

மானிட உயிர்வாழ்வுக்கான அளவற்ற வாய்ப்புகளையும் அத்துடன் அந்த வாய்ப்புகளின் எல்லைகளையும் மெய்யான உணர்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனநிலை மனிதனுக்குத் தேவை. மனிதனின் சாதகமான வாய்ப்புகள், அவனுக்கு ஏற்படும் தடைகளைத் தகர்த்துவிட்டு அதற்கும் மேலாக வளரும் திறமையாளனாக அவனை மாற்றி விடுகின்றன. இயல்பான தடைகளும் குறைபாடுகளும் வாழ்க்கையில் சவால்களை ஏற்படுத்தி விடலாம். மேலும், மனிதனின் உடல் சார்ந்ததும், மனம் சார்ந்ததுமான நோய்களும், சோர்வுகளும் பலவிதமான துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் கவலைகளுக்கும் காரணமாய் அமைந்து விடுவதும் உண்டு.

எனினும் மனிதனுக்குத் தனது நிலைமைக்கும் மேலாக வளர்ச்சி அடைவதற்கும், சாதனைகள் புரிவதற்கும் சாத்தியமாவது தனக்கு எதிராக வரும் தடைகளைத் தகர்த்துவிட்டு வெற்றிகொள்ளும் போது தான். ஒருவரை உற்சாகப்படுத்துவதாலும், ஊக்கமூட்டுவதாலும் மட்டும் அவரது திறமைகளையும், வாய்ப்புகளையும் முழுமையாக வெளிக்கொணர முடியாமல் போகலாம். மாறுபட்ட சூழ்நிலைகள் தான் ஒரு நபருக்கு தனது உடல் சார்ந்த, அறிவு சார்ந்த திறமைகளையும், வாய்ப்புகளையும் முழுமையாக வெளிக்கொணர்வதற்கு உதவுகின்றன. துன்பங்களுக்கும், துயரங்களுக்கும், மன உளைச்சல்களுக்கும் இடையே திறமையால், முயற்சியால் மேன்மை அடைந்தவர்களே உண்மையான மகான்கள். மனிதர்களின் உண்மையான குணமும், மேன்மையும், வெளிப்படுவது அவர்கள் துன்பங்கள் அனுபவிக்கும் போதுதான்.

அன்றாட வாழ்வில் உண்டாகும் துன்பங்களையும், அதனால் ஏற்படும் உளைச்சல்களையும் பகுத்தறிவதற்கான பக்குவம் கிறிஸ்தவன் பெற்றுக்கொள்வது வாழ்க்கையைப் பற்றிய முழுமையான அவனது மனப்பாங்கிலிருந்தேயாகும். வாழ்க்கையை ஒவ்வொரு பகுதிகளாகப் பகுத்துப் பார்க்காமல் முழுமையாகவும் அத்துடன் இறந்தகால, நிகழ்கால, எதிர்கால நிலைகளையும் நிகழ்வுகளையும் பார்க்க இயல வேண்டும். கடவுளோடுள்ள ஆழ்ந்த நம்பிக்கை, கடவுளுடனும், பிற மனிதருடனுமான அன்புறவு, எதிர்நோக்கு ஆகியவையே வாழ்க்கையின் பகுப்பாய்வுக்கு அடிப்படையாக வேண்டும்.

மன்றாட்டுக்களின் வாயிலாக திடப்படுத்தப்பட்ட மனநிலையுடன் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதற்கு இறைமக்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். திருப்பாடலாசிரியரின் நம்பிக்கையும், அன்பம். எதிர்நோக்கும் உள்ளடங்கும் மன்றாட்டை நாமும் நமதாக்கிக் கொள்வோம். “நான் உமது பேரன்பில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்." நீர் அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூரும். நான் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்; ஏனெனில் அவர் எனக்கு நன்மை பல செய்துள்ளார்” (திருப்பாடல்கள் 13 : 5-6).

### குறு வினா விடைகள்

1. மனித மனத்தை கலக்கமடையச் செய்பவை எவை? துன்பமும் அதன் விளைவான துயரமும்
2. மனிதன் என்றும் துன்பத்திற்கான காரணத்தை தேடிச் செய்பவை என்ன? துன்பத்தைப் பற்றி தியானம் செய்யவும், செபம் செய்யவும், வேதனையிலிருந்து விடுதலை பெற பலிகள் செலுத்தவும்
3. வாழ்வு, மரணம் இவற்றின் அர்த்தம் தேடிச் சென்ற பாபிலோனிய காப்பியத்தின் கதாபாத்திரம் யார்? கில்கமேஷ்
4. மனித ஆற்றலுக்கும் மேலான அசாதாரண ஆற்றலை அடைய முயன்ற கிரேக்க காப்பியத்தின் கதாபாத்திரம் யார்? புரோமித்யூசு
5. மரணம் ஏற்படுவதற்கான காரணத்தையும் மரணமில்லாத நிலையை அடைவதற்கான வழிமுறையையும் தேடிச் சென்ற கடோபநிஷத்தில் கதாபாத்திரம் யார்? நசிகேதசு

www.malankaralibrary.com

6. மனிதனின் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் அவனது அளவற்ற ஆசையே என்றவர் யார்? புத்தபெருமான்
7. இலக்கியங்களும், கலைகளும் எவற்றைக் கருப்பொருளாகக் கொண்டே படைக்கப்பட்டன? மனிதத்துன்பங்களையும், சகிப்புத்தன்மையையும்.
8. மனிதத்துயரங்களை அடிப்படையாகக் கொண்ட இயலுக்குப் பெயர் என்ன? துன்பியல்
9. துன்பங்களை எதிர்கொண்டு இன்பத்தை எதிர்நோக்கும் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தியவர்கள் யாவர்? டால்ஸ்டாய், டாஸ்டோவிஸ்கி
10. மனிதனின் துன்ப துயரங்களுக்கு பழைய ஏற்பாடு சுட்டிக் காட்டும் அடிப்படையான காரணம் எது? ? ஆதிமனிதனின் பாவம்
11. கடவுளின் கட்டளைகளை மீறுவதனால் தனிநபர்களையும், சமூகத்தையும், பகைவர்களுக்கும், மாறா நோய்களுக்கும், பிற துன்பங்களுக்கும் இரையாக்கிவிடும் என நம்பியிருந்தவர்கள் யாவர்? இஸ்ரயேல் மக்கள்
12. புளித்த திராட்சைப் பழங்களைப் **<u>பெற்றோர்</u>** தின்ன பிள்ளைகளின் பல் கூசிற்றாம்"
13. **<u>உயிர்</u>** அனைத்தும் எனக்கே சொந்தம். பெற்றோரின் **<u>உயிர்</u>** என்னுடையது; பிள்ளைகளின் உயிரும் என்னுடையதே. பாவம் செய்யும் **<u>உயிரே</u>** சாகும்.....
14. பிள்ளைகள் பெற்றோரின் குற்றத்தைச் சுமக்க மாட்டார்கள். அவ்வாறே பெற்றோரும் பிள்ளைகளின் குற்றத்தைச் சுமக்கமாட்டார்கள். நீதிமானின் நீதி அவன் மேல் இருக்கும். பொல்லானின் பொல்லாங்கு அவன் மீது இருக்கும் எனக் கற்பித்தவர் யார்? எசேக்கியேல் இறைவாக்கினர் (எசேக்கியேல் 18:1-4, 18:19-20).
15. துன்பங்களுக்கு மீட்புக்கான மதிப்பு சார்ந்த அர்த்தமுள்ளது என யாருடைய சாயலைக் குறிப்பிட்டு எசாயா இறைவாக்கினர் தெளிவுபடுத்துகின்றார்? துன்புறும் இறை ஊழியர் (மெசியா)
16. வேதனைக்கும், சகித்தலுக்கும் மீட்புக்கான மதிப்பு உள்ளது என்னும் நூல்கள் எவை? ஞானநூல்கள் (Wisdom Books)
17. துன்புறுவோர் அனைவருடையவும் பிரதிநிதியும், அடையாளமுமாக கூறப்படுபவர் யார்? யோபு.
18. “கடவுள் மீண்டும் உயிர்த்தெழச் செய்வார் என்னும் நம்பிக்கை எனக்கு இருப்பதால் மனிதர் கையால் இறக்க விரும்புகிறேன்.” விவிலியப்பகுதி எது? 2 மக்கபேயர் 7 : 14
19. “நாங்கள் இறந்தபின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்; ஏனெனில் நாங்கள் இறப்பது அவருடைய கட்டளையின் பொருட்டே” விவிலியப்பகுதி எது? 2 மக்கபேயர் 7 : 9
20. பழைய ஏற்பாடு துன்பம் பற்றி அறிவுறுத்துவது என்ன? துன்பங்களை சகித்துக்கொள்வது பொருளற்றது அல்ல வாழ்க்கைக்கு மேன்மையையும், நிறைவையும் தருகிறது
21. “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” விவிலியப்பகுதி எது? லூக்கா 9:23
22. பாவமற்றவரும், தூயவருமாய் இருந்த போதிலும், சுயவிருப்பத்தாலேயே (Voluntarily) துன்பங்களை ஏற்றுக்கொண்டவர் யார்? இயேசு
23. "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்” என்று இயேசு எங்கே வைத்து கூறினார்? கெத்சமனி தோட்டத்தில்

www.malankaralibrary.com

24. "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் **நிலைவாழ்வு** பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3 : 16).
25. தனது துயரங்களை அகற்றி விடுவதற்கு ஆண்டவரிடம் வேண்டிக் கொண்ட புனித பவுலுக்கு ஆண்டவர் அளித்த பதிலுரை என்ன? "என் அருள் உனக்குப் போதும், வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" (2 கொரிந்தியர் 12 : 9).
26. "ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித் தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும். யார் கூறியது? திருத்தூதர் பவுல்
27. ஆகவே என் வலுவின்மையிலும் இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். யார் கூறியது? திருத்தூதர் பவுல்
28. ஏனெனில் நான் வலுவற்றிருக்கும் போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" யார் கூறியது? திருத்தூதர் பவுல்
29. கிறிஸ்துவுக்காகத் தாங்கிக் கொண்ட துன்பங்களின் பட்டியலை வெளிப்படுத்தி கிறிஸ்துவின் பிற சீடர்களை விட தான் சிறந்த சீடனே என வாதிடுவர் யார் திருத்தூதர் பவுல்
30. இறைமக்களின் துன்பங்கள் தனி நபர் சார்ந்தது அல்ல; கிறிஸ்துவின் மறை உடலாம் திருச்சபையுடன் சேர்ந்து துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் போது அது இயேசுவின் சிலுவைப் பாடுகளில் ஒரு பகுதியாக மாற்றப்படுகிறது. அது மீட்பின் நிறைவுக்கே இட்டுச்செல்லும். யார் கூறியது? திருத்தூதர் பவுல்
31. "ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு, **கிறிஸ்துவின்** சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்" (கலாத்தியர். 2).
32. "நான் உமது பேரன்பில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்." நீர் அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூரும். நான் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்; ஏனெனில் அவர் எனக்கு நன்மை பல செய்துள்ளார்" என்னும் விவிலியப் பகுதி எங்குள்ளது? திருப்பாடல்கள் 13 : 5-6
33. "அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற வீழ்ந்து, என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல. உம் **விருப்பப்படியே** நிகழட்டும் " (மத்தேயு 26:39).

## பாடம் 18

## வாழ்க்கை நிலைகள்

பயிற்சி வினாக்கள்

1. கத்தோலிக்க திருச்சபையில் அழைக்கப்பட்ட வெவ்வேறு வாழ்க்கை நிலைகள் யாவை

திருமுழுக்கு வாயிலாக இறைமக்கள் ஆவதற்கான பொதுவான அழைப்புக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் பதில் அளிப்பது சிறப்பான இறை அழைப்புகளைப் பெற்றுக்கொண்டே ஆகும். திருமணம், குருத்துவம், துறவுநிலை, தனி வாழ்வுநிலை ஆகியவை வெவ்வேறான வாழ்க்கை நிலைகளாகும்.

எல்லா வாழ்க்கை நிலைகளினுடையவும் குறிக்கோள் தூய்மை நிலை அடைதல் என்பதே. அதற்கான ஒரே வழி புனிதம் மட்டுமேயான கிறிஸ்துவைப் பின்பற்றுவதேயாகும். ஒவ்வொரு வாழ்க்கை நிலையும் அதனிலேயே அது மேன்மையானதாகும். ஒரு வாழ்க்கை நிலை மற்றொன்றைவிட மேன்மை கூடுதலானது என்றோ மேன்மை குறைவானது என்றோ சொல்வதற்கில்லை.

www.malankaralibrary.com

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் 'திருச்சபை என்னும் கொள்கை விளக்கத்தில் இதைத் தெளிவுபடுத்தியுள்ளது. கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் யாவற்றையும் நம்பிக்கையுடன் விண்ணகத்தந்தையின் கையிலிருந்து ஏற்று, கடவுளின் திருவுளத்தோடு ஒத்துழைத்து, கடவுள் உலகுக்குக் காட்டிய அதே அன்பை இவ்வுலகுக்குப் புரியும் சேவையிலேயே எடுத்துக்காட்டி வாழ்வார்களேயாயின், தங்கள் நிலைமைகள், கடமைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றிலும், அவையனைத்தின் வழியாகவும், நாளுக்கு நாள் அதிகமாகத் தூய்மையடைவார்கள் (திருச்சபை எண் 41).

இப்போதனையின் படி கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை நிலைகளுக்குத் தகுந்த செயல்பாடுகளை நம்பத்தகுந்தவாறு செயல்படுத்திக் கொண்டு தூய்மை நிலையில் வளர்ச்சி அடைய வேண்டும்.

2. “கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சமர்ப்பிக்கப்படும் இறையழைத்தல் தான் திருமணம்” தெளிவுபடுத்துக?

திருச்சபையின் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப திருமணமாகும் மணமகனும் மணமகளும் கடவுளின் அன்பிலும், படைப்புச் செயலிலும் பங்கேற்பதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றனர். திருமணம் வாயிலாக ஆணும், பெண்ணும் இணைந்து கொள்வது மானிடப் பார்வையில் எதிர்பாராத ஒன்றாகக் கருதலாம்.

ஆனால் கடவுளின் பார்வையில் அது உலக படைப்புக்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட இறை திட்டத்தின் நிறைவடைதலே ஆகும். குருத்துவத்தையும், துறவறத்தையும் போன்று இல்லறவாழ்வும் இறை அழைத்தலே ஆகும்.

3. குருத்துவப்பணியின் வாயிலாக குருக்கள் ஆற்றி வருகின்ற முப்பணிகள் யாவை?

கிறிஸ்துவோடு இணைந்து நின்று கொண்டு தம்மையும், உலகத்தையும் தூய்மைநிலைக்குக் கொணருவதற்கான பணிக்கடமையை குருத்துவப் பணியின் வாயிலாக குருக்கள் நிறைவேற்றுகின்றனர். இப்பணிக்கடமைகளை முப்பெரும் பணிகளால் நிறைவேற்றுகின்றனர்.

**குருக்கள் நற்செய்திப் பணியாளர்கள்**

இறைவார்த்தையின் பணியாளர்களே குருக்கள். திருப்பணியாளர்கள் கடவுளின் நற்செய்தியை எல்லோருக்கும் போதிப்பதை தங்கள் முதற்கடமையாக கொண்டுள்ளார்கள். இங்ஙனம் (இரண்டாம் வத்திக்கான் திருப்பணியாளர்கள் 4) “நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மாற்கு 16: 15) என்ற இயேசுவின் கட்டளையைக் குருத்துவப் பணியின் வாயிலாக திருப்பணியாளர்கள் நிறைவேற்றுகின்றனர்.

**குருக்கள் அருளடையாளங்களை நிறைவேற்றுபவர்கள்**

அடையாளங்களை நிறைவேற்றுவதன் மூலம் இறைமக்களைப் புனிதப்படுத்துவது குருக்களின் மிக முக்கியமான திருப்பணியாகும். புனிதத்தின் உறைவிடமாகவும், ஊற்றாகவும் கடவுள் உள்ளார். புனிதப்படுத்துவதும் அவரே. அருளடையாளங்களை நிறைவேற்றுவதன் வாயிலாக இறைமக்களைப் புனிதப்படுத்துகின்ற திருப்பணியில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக குருக்கள் செயலாற்றுகின்றனர்.

"திருப்பணியாளர்கள் திருமுழுக்கினால் மனிதர்களைக் கடவுளின் மக்கள் கூட்டத்தில் சேர்க்கிறார்கள். ஒப்புரவு அருளடையாளத்தினால் பாவிகளைக் கடவுளோடும் திருச்சபையோடும் ஒப்புரவாக்குகிறார்கள். நோயில் பூசுவதால் நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கின்றார்கள். முக்கியமாகத் திருப்பலி நிறைவேற்றிக் கிறிஸ்துவின் பலியை அருளடையாள முறையில் ஒப்புக்கொடுக்கிறார்கள்” (திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் எண் 5)

www.malankaralibrary.com

**குருக்கள் - ஆன்மீக வழிகாட்டிகள்**

நிலைவாழ்வை நோக்கி திருப்பயணம் செய்யும் திருச்சபை சமூகத்திற்குத் தலைமையேற்பதற்காக அழைக்கப்பட்டவர்களே திருப்பணியாளர்கள். ஆயருடன் இணைந்து நின்று இறைமக்களின் கூட்டமாகிய இறை குடும்பத்தை சகோதர அன்புறவில் ஒன்றிணைக்க வேண்டியவர்களே திருப்பணியாளர்கள். சமூகத்தில் கிறிஸ்தவச் சான்று பகரவேண்டியது எவ்வாறு எனக் கிறிஸ்தவர்களுக்கு அறிவூட்ட வேண்டியவர்களும் குருக்களேயாவார்கள்.

நல்ல ஆயனாகிய இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்தொடர்ந்து குருக்கள் இறைமக்களுக்குத் தெய்வீக உணர்வை ஊட்டி வளர்க்க வேண்டும். "இது அனைவருக்கும் அனைத்துமாக அமைகின்ற ஒரு வாழ்க்கையேயாகும்" குறிப்பாக சமூகத்தில் ஏழை, ஒதுக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்குத் தனியான கவனம் செலுத்துவதற்குக் குருக்கள் கடமைப்பட்டவர்கள்.

4. சமர்ப்பண வாழ்வை உண்மையானதும், முழுமையானதுமாக அமைத்துக்கொள்வதற்கான வழிமுறைகள் யாவை?

சமர்ப்பண வாழ்வு உண்மையானதாகவும் நிறைவானதாகவும் அமைவதற்கான வழிமுறைகள் தான் மூன்று வாக்குறுதிகள். இயேசு கிறிஸ்துவை சொந்தமாக்கி கொள்வதற்கும், இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமாவதற்கும் வாக்குறுதிகளை மையப்படுத்திய வாழ்வு தூண்டுதலளிக்கிறது.

**1. ஏழ்மை**

கடவுள் படைத்தவை அனைத்தும் மனித நன்மைக்காகவே. படைக்கப்பட்டவையெல்லாம் படைத்தவராகிய கடவுளை நோக்கி மனிதனை வழிநடத்த வேண்டும். படைத்தவராகிய கடவுளையும், சமூகத்திலுள்ள பிற மனிதர்களையும் அன்பு செய்வதற்காக படைப்புப் பொருள்களால் ஏற்படக்கூடிய உறவுகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து அகன்று நிற்பதற்கு துறவிகள் முயல்கின்றனர். ஏழ்மை விரதம் இதற்கு உதவி செய்கின்றது.

தனக்கென்று எதுவுமே சொந்தமென வைத்துக்கொள்ளாமல் துறவிகளின் சமூகத்திற்கென்று பொதுவாக உள்ளவைகளிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். இந்த நிலைப்பாடு உலகப்பொருள்களைப் பற்றியோ, அவைகளைச் சம்பாதித்துக்கொள்வதைப் பற்றியோ கவலை கொள்ளாமல் தனது நேரத்தையும் வசதியையும் முழுமையாக கடவுளுக்கும், சகோதரர்களுக்குமாக செலவிடுவதற்காக துறவிகளுக்கு உதவியாக அமைகிறது. அனைத்தும் இருந்தும் ஒன்றுமே இல்லாதவராக வாழ்ந்த இயேசு கிறிஸ்துவையே சொத்தாக இவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

**2. மணத்துறவு**

அன்பு செய்வதற்கும் அன்பு செய்யப்படுவதற்குமான திறமையை வளர்த்துக்கொண்டு முழு மனத்துடனும், முழு ஆற்றலுடனும் கடவுளை அன்பு செய்வதற்கும், இறை அன்பினால் தூண்டப்பட்டு மனித குலத்தை அன்பு செய்வதும், அவர்களுக்குப் பணிவிடை செய்வதுமான வாழ்க்கை நடத்துவதற்கும் பிரம்மச்சரிய வாழ்வு உதவுகின்றது.

திருமண வாழ்வு தூய்மையற்றதோ, விலக்கப்பட்டதோ என்பதால் அல்ல. மாறாக உலகின் அனைத்து உறவுகளிலிருந்தும், கட்டுகளிலிருந்தும் அகன்று நின்று இறையரசுக்காக தங்களைச் சமர்ப்பிப்பது என்பதே பிரம்மச்சரிய விரதத்தின் குறிக்கோள். இந்த விரதத்தின் வாயிலாக தனது உடலையும், மனத்தையும் நற்செய்திப்பணிக்காகவும், இறைமக்களின் நன்மைக்காகவும் துறவிகள் தங்களை முழுமையாக சமர்ப்பணம் செய்கின்றனர்.

**3. கீழ்ப்படிதல்**

www.malankaralibrary.com

துறவிகள் கீழ்ப்படிதல் வாயிலாக தங்களது உள்ளத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி பலிப்பொருள் போன்று கடவுளுக்கு சமர்ப்பணம் செய்கின்றனர். தந்தைக் கடவுளின் விருப்பத்திற்கிணங்க தானாகவே சரணடைந்த கிறிஸ்து தான் கீழ்ப்படிதலைக் குறித்த துறவிகளின் முன் மாதிரி. “என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்பதே அனைத்திலும் இயேசு கிறிஸ்துவின் மன நிலையாக இருந்தது. இந்த மனநிலையை உட்கொள்வதற்கு துறவிகள் முயற்சி மேற்கொள்கின்றனர்.

துறவியர் ஒரு சமூகமாக செயல்படும்போது தனிப்பட்ட விருப்பங்களையும். ஆசைகளையும் விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்படும். அவர்கள் அவ்வாறு செய்வது சுயமான தீர்மானத்துடனும், பொறுப்புணர்வுடனுமேயாகும். அதன் வழியாக தனிப்பட்ட முறையில் தூய்மை நிலை அடைவதற்கும் ஒன்றிணைந்து இறைப்பணியாற்றுவதற்கும் துறவியருக்கு இயலும்.

**4. தனிநிலை வாழ்வு**

திருமணமோ, குருத்துவமோ, துறவுநிலையோ ஏற்காமல் தனிமையான வாழ்க்கை நடத்துபவர்களையும் இறை அழைத்தல் பெற்றவர்களாக கருதவேண்டும். ஒவ்வொருவரும் அவர்களது வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும், வாழ்க்கை முறையிலும், கிறிஸ்துவுக்கும், சமூகத்திற்கும் சான்று பகர முயற்சி மேற்கொள்கின்றனர்.

அழைக்கப்பட்ட இறை அழைப்புக்கு ஏற்ற முறையில் நாம் வாழவேண்டும் என்பதே இறைவிருப்பம். அதனால் ஒவ்வொரு இறை அழைத்தலும் மற்றொன்றை விட மேலானதோ, தாழ்ந்ததோ அல்ல என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**குறு வினா விடைகள்**

1. "கடவுள் நம்மை **ஒழுக்கக்கேட்டிற்கு** அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்” (1 தெச. 4:7).
2. "உங்கள் விண்ணகத் தந்தை **நிறைவுள்ளவராய்** இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்” (மத். 5:48).
3. “மனித வாழ்வின் நிறைவினில் தான் கடவுளின் மாட்சிமை குடிகொண்டிருக்கிறது.” என்றவர் யார்? புனித இரேனியூஸ்
4. “கடவுள் மனிதப் பிறவியெடுத்தது, **மனிதனை** கடவுள் தன்மைக்கு உயர்த்துவதற்கே”.
5. மனிதனில் **தெய்வீகமயமாதல்** (Divinisation) நடைபெற வேண்டும்.
6. “ஒவ்வொருவரும் ஆண்டவர் அவரவருக்குப் பகிர்ந்தளித்த கொடையின் படியும் அவர் விடுத்த **அழைப்பின்** படியும் வாழட்டும்” (1 கொரிந்தியர் 7 : 17).
7. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றவும், அவரது அரசின் அடையாளங்களாகவும், சாட்சிகளாகவும் வாழ அழைக்கப்பட்டவர்கள் யாவர்? திருமுழுக்கு பெற்ற அனைவரும்
8. "நீங்கள் பெற்றுக்கொண்ட **அழைப்புக்கு** ஏற்ப வாழுங்கள்” (எபேசியர் 4:1)
9. வெவ்வேறான வாழ்க்கை நிலைகள் எவை? திருமணம், குருத்துவம், துறவுநிலை, தனி வாழ்வுநிலை
10. எல்லா வாழ்க்கை நிலைகளினுடையவும் குறிக்கோள் என்பது என்ன? தூய்மை நிலையை அடைதல்
11. எல்லா வாழ்க்கை நிலைகளிலும் தூய்மை நிலையை அடைய ஒரே வழி என்ன? கிறிஸ்துவைப் பின்பற்றுதல்
12. பல்வேறு வாழ்க்கை நிலைகள் பற்றிய இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினை என்ன? கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் யாவற்றையும் நம்பிக்கையுடன் விண்ணகத்தந்தையின் கையிலிருந்து ஏற்று,

www.malankaralibrary.com

கடவுளின் திருவுளத்தோடு ஒத்துழைத்து, கடவுள் உலகுக்குக் காட்டிய அதே அன்பை இவ்வுலகுக்குப் புரியும் சேவையிலேயே எடுத்துக்காட்டி வாழ்வார்களேயாயின், தங்கள் நிலைமைகள், கடமைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றிலும், அவையனைத்தின் வழியாகவும், நாளுக்கு நாள் அதிகமாகத் தூய்மையடைவார்கள் (திருச்சபை எண் 41).

13. “மனிதன் **தனிமையாக** இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்” (தொடக்க நூல் 2 : 18).
14. குடும்பத்தின் குறிக்கோள் என்ன? 1. அன்பு செலுத்தல், 2. இனவிருத்திக்காக உயிரளித்தல், 3. பிள்ளைகளுக்குக் கல்வி அளித்தல், 4. பிள்ளைகளை இறை மக்களாக வளர்த்தல்
15. அனைத்து இறை அழைத்தல்களின் அடிப்படையாகவும், விளைநிலமாகவும் விளங்குவது எது? குடும்பம்.
16. திருச்சபையினுடையவும், சமூகத்தினுடையவும் ஆதாரமாக விளங்குவது எது? குடும்பமே.
17. திருமணத்தின் அடிப்படை என்ன? கணவனும் மனைவியும் வாழ்வின் இறுதிவரை உள்ள உண்மையான உறவும், நம்பகத் தன்மையும்
18. திருமணம் வாயிலாக ஆணும், பெண்ணும் இணைந்து கொள்வது எதன் நிறைவடைதல் ஆகும்? இறைத் திட்டத்தின் நிறைவடைதல்
19. "கிறிஸ்தவத் தம்பதிகளும், பெற்றோர்களும் தங்களுக்குரிய பாதையில் வழிநடந்து, உண்மையான அன்பினால் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவரையொருவர் அருளிலே ஆதரிக்க வேண்டும்” என விளக்கியது எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் - திருச்சபை எண் 41).
20. கிறிஸ்தவ பார்வையில் திருமணம் என்பது என்ன? தூய்மைப்படுத்தும் ஓர் உறவு வாழ்க்கை முறை
21. இயேசுவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவின் உண்மையான சாயல் என்பது என்ன? திருமணம்
22. திருமண அருளடையாளத்தை ஆசீர்வதிக்கும் குருவானவர் என்பவர் யார்? கிறிஸ்து மற்றும் திருச்சபையின் சான்றளிப்பவரும் பிரதிநிதியும்
23. திருமணம் என்னும் அருள் அடையாளத்தின் போது குருக்களாக நின்று பலி அர்ப்பணம் செய்பவர்கள் யாவர்? மணமக்கள்
24. மணவாழ்வின் கற்பு நெறிக்கு அடிப்படையாக விளங்குவது எது? கணவன் மனைவிக்கு இடையேயான நம்பகத்தன்மை
25. மணவாழ்க்கையின் மையப்பொருளாக விளங்குவது எது? அன்புறவு
26. கற்புநெறியின் உள்பொருள் என்ன? ? மணவாழ்வின் தூய்மைநிலை பாதுகாத்தல்
27. கடவுளுக்கும், மனிதர்களுக்கும் இடையே நிற்கும் இடைநிலையாளர் அல்லது இணைப்பாளர் என்பவர் யார்? குருக்கள்.
28. கிறிஸ்தவ மதத்தில் மறுகிறிஸ்துவாக மாறுவதற்கான ஒரு சிறப்பான இறை அழைத்தல் என்பது என்ன? குருத்துவம்.
29. உலக மக்களின் மீட்புக்காக தம் உயிரை கையளித்த இயேசு கிறிஸ்துவைப் போன்று சுயமாக தியாகம் செய்வதற்கும் அன்பை அளிப்பதற்கான ஓர் இறை அழைத்தல் எது? குருத்துவம்.
30. புதிய ஏற்பாட்டில் குருத்துவத்திற்கு தொடக்கமிட்டவர் யார்? இயேசு கிறிஸ்து
31. இயேசுவின் சுய பலியினுடைய குறிக்கோள் என்பது என்ன? மனித மீட்பு

www.malankaralibrary.com

32. குருத்துவத்தின் மூன்று பணிக்கடமைகள் எவை? குருக்கள், நற்செய்திப் பணியாளர்கள், அருளடையாளங்களை நிறைவேற்றுபவர்கள், ஆன்மீக வழிகாட்டிகள்
33. இறைவார்த்தையின் பணியாளர்கள் யாவர்? குருக்கள்.
34. இறைமக்களைப் புனிதப்படுத்துகின்ற திருப்பணியில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக செயலாற்றுபவர்கள் யாவர்? குருக்கள்
35. நிலைவாழ்வை நோக்கி திருப்பயணம் செய்யும் திருச்சபை சமூகத்திற்குத் தலைமையேற்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் யாவர்? திருப்பணியாளர்கள்.
36. துறவறத்தாரின் சிறப்பான நோக்கம் எவை? அன்பின் வழிநின்று கடவுளுக்கு சுயமாகவே தங்களை அர்ப்பணம் செய்து செபத்தின் வாயிலாகவும் சேவை நோக்குடனும் கிறிஸ்துவை மக்களுக்குக் கொடையாக அளித்தல்
37. இறையரசை வாழ்ந்து காட்டும் சின்னங்கள் எனப்படுவர்கள் யாவர்? துறவிகள்.
38. துறவிகளின் மூன்று வாக்குறுதிகள் எவை? ஏழ்மை, கீழ்ப்படிதல், மணத்துறவு வாழ்வு
39. தனது நேரத்தையும் வசதியையும் முழுமையாக கடவுளுக்கும், சகோதரர்களுக்கும் செலவிட துறவிகளுக்கு உதவும் வாக்குறுதி எது? ஏழ்மை
40. துறவியர்களின் மணத்துறவு அல்லது பிரம்மச்சரிய விரதத்தின் குறிக்கோள் என்ன? உலகின் அனைத்து உறவுகளிலிருந்தும், கட்டுகளிலிருந்தும் அகன்று நின்று இறையரசுக்காக தங்களைச் சமர்ப்பித்தல்
41. துறவிகளின் கீழ்ப்படிதலுக்கு அடிப்படையான விவிலியப்பகுதி என்ன? “என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்"
42. திருமணம், குருத்துவம், துறவுநிலை போன்றே எவரையும் இறை அழைத்தல் பெற்றவர்களாகவே கருதவேண்டும்? தனிமையான வாழ்க்கை நடத்துபவோர்
43. “நாம் தூயோராகவும் **மாசற்றோராகவும்** தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்" (எபேசியர் 1:4).

## பாடம் 19

## இயற்கையை அன்பு செய்தல்

### பயிற்சி வினாக்கள்

1. நீர்ப்பாசனத்திற்கான இயற்கையின் வழிமுறைகள் மரங்கள் - எவ்வாறு என விளக்குக?

சூரியக் குடும்பத்தில் மூன்றாவது கோளான பூமியின் ஆயுட்காலம் 500 கோடி ஆண்டுகள் என கணக்கிடப்பட்டுள்ளது. இங்கே மனிதன் பிறவியெடுத்து சுமார் 1 லட்சம் ஆண்டுகள் மட்டுமே ஆகின்றன. அதற்கு முன் சுமார் 40 கோடி ஆண்டுகள் உயிரின் உறைவிடம் கடலாகத்தான் இருந்தது. உயிரின் துடிப்பு தண்ணீரில் தான்ன் முதன் முதலில் தோன்றியது. உயிரினங்கள் தோன்றுவதற்கு முன் இந்த பூமி தாதுப்பொருட்கள் மட்டுமே நிறைந்திருந்த ஓர் உலகமாக இருந்தது (Mineral Kingdom). தாதுப்பொருள்களின் உலகத்திலிருந்து தான் தாவர உலகம் படைக்கப்பட்டது. தாவரங்களின் உடல் பகுதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டிருப்பது தாது உப்புகளினாலேயாகும். தாதுப்பொருள்கள் தாவரங்களின் உணவாக மாற்றப்பட வேண்டுமெனில் அந்தத் தாதுப்பொருட்கள் உயிர்ச்சத்துள்ள உரமாக மாற்றப்பட வேண்டும். அந்த வேலையைச் செய்வது நுண்ணியிரிகள். கோடிக்கணக்கான ஒருசெல் உயிரிகள் தொடர்ச்சியாக வேலை செய்து தாது உலகத்தை உயிரணுக்கள் நிறைந்த மண்ணாக மாற்றுகின்றன. இத்தகைய மண்ணினை வளக்கூறுள்ள மண் எனச் சொல்லலாம். வளக்கூறுள்ள ஒரு கிராம் மண்ணில் பல லட்சக் கணக்கான

www.malankaralibrary.com

நுண்ணிய உயிரினங்கள் உள்ளன. தாது உலகத்தைத் தாவர உலகமாக்கி (Plant Kingdom) மாற்றி அமைப்பதற்கு நுண்ணுயிரினங்கள் ஆற்றும் பங்கினை வேறு வழிகளில் ஈடுகட்ட இயலாது. மண்ணிலிருந்து தாவர உலகத்தை உருவாக்குவதற்குக் கடவுள் கையாண்டுள்ள வழிமுறை இதுவேயாகும்.

தாவர உலகில் முதலில் படைக்கப்பட்ட சிறு கடற்பாசிகள் முதல் மாபெரும் மரங்கள் வரையிலான தாவரங்கள் கோடிக்கணக்கான ஆண்டுகள் வாயுமண்டலத்திலுள்ள கரியமிலவாயுவை (dioxide) இழுத்தெடுக்கவும், பிராண வாயுவை (Oxygen) தொடர்ந்து வெளியேற்றவும் செய்தன. அதன் விளைவாகத் தான் வாயு மண்டலத்தில் பிராணவாயுவின் விகிதாச்சாரம் பூமியிலுள்ள பிராணிகளுக்கு வாழ்வதற்கு ஏற்ப அமைந்துள்ளது. தொடர்ந்து கடவுள் விலங்குகளின் உலகிற்கு (Animal Kingdom) பிறப்பளித்தார். இறுதியில் விலங்கின படைப்பின் நிறைவான நிலையில் மனிதனும் படைக்கப்பட்டான். கடவுள் விலங்கினங்களைப் படைக்கும் முன் வாயுமண்டலத்திலுள்ள வாயுவின் அமைப்பு உட்பட்ட மிகவும் சிக்கலான எல்லா கூறுபாடுகளையும் இயற்கையில் மிகவும் பொருத்தமான இடங்களில் ஒழுங்கமைக்கப்பட்டு விட்டது என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

2. வாயு மண்டலம், தண்ணீர், மண், மரங்கள், காடுகள், பறவைகள் - இவைகளின் இயற்கையான முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக?

**1. வாயுமண்டலம்**

கோடிக்கணக்கான ஆண்டுகளாக ஆல்ககள் (கடற்பாசிகள்) முதல் பெரும் மரங்கள் வரையிலான தாவர உலகம் தொடர்ச்சியாக வாயு மண்டலத்தில் பிராண வாயுவை வெளியேற்றியதால் தான் இன்றைய விகிதாச்சாரத்திலுள்ள வாயுமண்டலம் உருவானது என்பதை நாம் அறிந்து கொண்டோம். வாயு மண்டலத்தில் பரப்பளவின் படி 21 சதவீதமும் கன அளவின் படி 46 சதவீதமும் பிராணவாயுவேயாகும். அதுவே உயிர் வாயு. கரியமில வாயுவில் (கார்பன்-டை-ஆக்ஸைடில்) உள்ள பிராணவாயுவை (ஆக்ஸிஜனை) தனிமைப்படுத்தி வாயு மண்டலத்திற்கு அனுப்பிவிடும் ஊடகம் பச்சையம் நிறைந்த இலைகளாகும். இந்த செயல்பாட்டுக்கு ஒளிச்சேர்க்கை என்று பெயர். உயிர்கள் பிறப்பதற்கும் அவை உயிர்வாழ்வதற்கும் மிகவும் தேவையான மற்றுமொரு கூறுபாடு நைட்ரஜன் ஆகும். வாயுமண்டலத்தின் 78 சதவீதமும் நைட்ரஜன் வாயுவே. இந்த நைட்ரஜன் தாவரங்களுக்கு உணவாகும் பருவத்தில் நைட்ரேட் ஆக மாற்றுவதில் நுண்ணுயிர்களுக்கு பெரும் பங்குள்ளது. ஓர் இடி முழக்கம் ஏற்படும் போது ஆயிரக்கணக்கிலான டன் நைட்ரஜன் பூமியில் கரைந்து சேர்ந்து விடுகின்றது. கடற்பாசி மற்றும் தாவரங்களும், தங்களுடைய உடலின் திசுக்கள் வாயிலாக இந்த நைட்ரஜனை இழுத்தெடுக்கின்றன. பின்பு இந்த தாவரங்களின் வளர்ச்சிக்கும் இது உதவுகின்றது.

உயிர் நிலைபெறுவதற்கும், உயிரினங்கள் அழியாமல் பாதுகாக்கப்படுவதற்கும், மிகவும் இன்றியமையாத வாயுவின் இந்த அமைப்பைத்தான் இயற்கையை மாசுபடுத்துவதன் மூலம் நாம் தகர்த்துவிடுகிறோம். முக்கியமாக நிலக்கரி போன்ற எரிபொருட்களை எரிப்பதன் மூலம் நமது வாயு மண்டலம் மாசுபடுகின்றது. மூன்றாம் உலக நாடுகள் மட்டுமே ஒவ்வொரு ஆண்டும், 7 லட்சம் மக்கள் இயற்கையின் நஞ்சு கலந்த வாயுவை சுவாசித்து ஆஸ்துமா போன்ற உயிர்கொல்லி நோய்கள் ஏற்பட்டு மரணமடைகின்றனர். தொழிற்சாலைகள் மிகுதியான நகரங்களில் புற்றுநோய், காசநோய் போன்ற நோய்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. இன்றைய கனரகத் தொழிற்சாலைகளிலிருந்தும் வாகனங்களிலிருந்தும், வெடிப்பொருட்களிலுருந்தும் வெளி வருகின்ற, 30000 லட்சம் டண் கார்பண் ஒவ்வொரு ஆண்டும் வாயுமண்டலத்தில் பரவி இயற்கையை மாசுப்படுத்துகிறது. கோடிக்கணக்கான ஆண்டுகளாக தாவர உலகம் வேலைசெய்து அமைத்தெடுத்த வாயு மண்டலத்தின் சமன்பாட்டை 200 ஆண்டு கால அளவில் மனிதர்கள் தகர்த்து விட்ட கதை எவ்வளவோ பரிதாபமானது! இதுவா அறிவியலின் முன்னேற்றம்?

www.malankaralibrary.com

**2. தண்ணீர்**

பூமியின் மூன்றில் இரண்டு பாகமும் கடல் ஆகும். உயிரினப் படைப்பிற்காக கடவுள் முதலில் தேர்ந்தெடுத்த ஊடகம் தான் தண்ணீர். பிற்காலங்களில் உயிர்கள் கரையிலும், வாயுமண்டலத்திலும் சென்று சேர்ந்தன. ஓரிடத்தில் பிறக்கும் உயிர் வேறு ஓரிடத்திலுள்ள உயிரின் தொடர்ச்சியே. கரையில் உருவெடுத்த உயிர்களின் அடிப்படை கடலிலுள்ள உயிர்களாகும். ஒளிச்சேர்க்கையைக் குறித்து சிறந்ததான அறிவுகளை உலகுக்கு அளித்த ரஷ்யாவின் அறிஞரான யூஜின் அ றபினோவிச் என்பவரின் ஆய்வின் படி கரைப்பகுதியிலுள்ள தாவரங்கள் 400 பில்லியன் டன் ஆக்ஸிஜனை வாயு மண்டலத்திற்கு வெளியேற்றுகின்றன. இது வாயு மண்டலத்திற்குக் கிடைக்கும் ஆக்ஸிஜனில் 10 சதவீதம் மட்டும்தான். மீதி 90 சதவீதம் ஆக்ஸிஜனும் கடலிலிருந்து வெளிவருவதாக அவர் கண்டறிந்துள்ளார். கடல்பாசிகள் போன்ற கடல் தாவரங்கள் தான் இந்த ஆக்ஸிஜனை வெளியேற்றுகின்றன.

நாம் இன்று குடிப்பதற்குப் பயன்படுத்தும் தண்ணீர் கோடிக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்களும், மிருகங்களும் உட்கொண்ட பின் வெளியேற்றியதேயாகும். இவையெல்லாம் பிராணிகளின் உடலின் வழியாக கடந்து சென்றபின் மிகவும் பாதுகாப்பானதும் சுத்தமானதுமான தண்ணீராகவும் மீண்டும் நம்மிடம் வந்து கிடைக்கின்றது. தண்ணீர் ஒருபோதும் புதியதாக உற்பத்தியாவதில்லை. தண்ணீர் ஒருமுறை நச்சுத்தன்மை உடையதாக மாறிவிட்டால் அது என்றென்றைக்கும் ஆபத்து உடையதாகவே இருக்கும். கனரகத் தொழில் வளர்ச்சியின் விளைவாக கடல் நீர் முழுவதும் நச்சுத்தன்மை ஆகிவிட்டது. நமது விவசாய நிலங்களில் பயன்படுத்தும் இரசாயன உரங்களும் பூச்சிகொல்லி மருந்துகளும் சென்றடைவதால் குளங்கள், ஆறுகள், ஏரிகள் ஆகிய நீர்நிலைகள் நச்சு நிறைந்ததாக மாறிவிட்டன. வாழ்வாதாரங்கள் அனைத்தும் மரணத்தை விளைவிக்கக்கூடிய மையங்களாக மாற்றப்படுகின்ற பெரும் விபத்துக்களை நாம் இன்று எதிர்கொண்டு வருகிறோம். நாம் உணவாகக் கொள்ளும் மீன்களில் பாதரசம், காட்மியம், காரீயம் போன்ற உயிரைப் பறிக்கும் உலோகங்கள் ஆபத்தான அளவில் கலந்திருக்கிறது என்று ஆய்ந்து அறிந்திருக்கிறார்கள். இவைத் தவிர நாம் விவசாயத்திற்கும் பயன்படுத்துகின்ற உயிர்கொல்லி மருந்துகள் சோப்பு ஆகியவைத் தண்ணீரை நச்சு நிறைந்ததாக மாற்றிவிடுகின்றன. நாம் குடிக்கும் தேனீர், காப்பி, ஸ்குவாஷ், ஜூஸ் ஆகியவை நிறத்திற்கும், சுவைக்குமாக வெவ்வேறு இரசாயனப் பொருள்களைத் தூய தண்ணீரில் கலந்து மாசுபடுத்தி பெறப்படுகின்றன.

**3. மண்**

பாறை உடைவதால் மட்டும் மண் உண்டாவதில்லை. தாது உலகத்திலுள்ள நுண்ணுயிர்களின் முயற்சியினால் தான் மண் உண்டாகிறது என நாம் ஏற்கெனவே அறிந்து கொண்டோம். இறந்துபோன தாவரங்களுடையவும், விலங்குகளுடையவும் உடல் பகுதிகளை சிதைவுப்படுத்தி மண்ணில் சேர்த்து விடுவதும் இந்த நூண்ணுயிர்களே ஆகும். இந்த செயல்கள் வழியாக உண்டாகும் உயிர்ச்சத்துக்கள் தாவரங்களின் உரமாக மாறுகின்றன. மண்ணின் வளமைதான் மக்களின் ஆரோக்கியம். உயிர்ச்சத்துக்கள் மிகுதியாக உள்ள மண்ணில் வெவ்வேறு உயிர் இனங்கள் உற்பத்தியாகின்றன. நமது உணவில் வெவ்வேறு உயிர்ச் சத்துக்கள் உள்ளடங்கியிருப்பதே நமது ஆரோக்கியத்தின் அடிப்படையாகும். மிதமிஞ்சிய அளவிலுள்ள செயற்கையான நீர்ப்பாசனமும் மெசபட்டோமியா, அசீரியா, பாபிலோனியா ஆகிய நாடுகளின் நாகரிகச் சிதைவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. நீர்ப்பாசனத்தின் விளைவாக தாது உப்புகளின் அளவு மண்ணில் மிகுந்து விட்டதால் மண் பாலை நிலமாக மாறிவிட்டது. எனவே உணவுப்பொருட்களின் உற்பத்தி குறைந்து விட்டது. நாட்டின் உணவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. அவ்வாறு பேரரசுகள் வீழ்ச்சியடைந்தன. நவீன நாகரிகத்தின் விளைவாக 36000 லட்சம் எக்டேர் நிலம் பாலைவனமாக மாறிவிட்டது. ஒவ்வொரு முப்பது ஆண்டுகள் கூடி வரும்போது சவுதி அரேபியா நாட்டுக்கு சமமான நிலப்பகுதிகள் பாலைநிலமாக

www.malankaralibrary.com

மாறிக்கொண்டிருக்கின்றன. அடுத்து வரப்போகும் கெடுதல் தமிழ்நாட்டிற்கும் கேரளத்திற்கும் தான். காரணம் மனிதனின் கொடுமையால் காடுகள் குறைந்து கொண்டே வருகின்றன. மண்ணிலுள்ள உயிர்ச்சத்துக்கூறும் தாவரச் செல்வங்களும் அழிந்து கொண்டிருக்கின்றன.

இப்போது உலகில் எல்லா நாடுகளிலுமாக பயிர்த்தொழிலுக்கென மண்ணில் பயன்படுத்துகின்ற செயற்கை உரங்கள் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வகையிலுள்ள இரசாயன பொருள்களேயாகும். ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று புதிய பூச்சிக்கொல்லி நச்சு மருந்துகள் உற்பத்தி செய்கின்றனர். ஓர் ஆண்டில் குறைந்தது 10,000 மனிதர்கள் உயிர்கொல்லி மருந்துகளின் தாக்குதலால் மரணமடைகின்றனர். இந்த பூச்சிக் கொல்லி மருந்துகளை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாலும் அவற்றை பயன்படுத்தி உற்பத்தி செய்யும் உணவுப்பொருள்களை உண்பதாலும் ஒவ்வொரு ஆண்டிலும் 3,75,000 விவசாயிகள் மரணத்திற்கு ஏதுவான மாறா நோய்களுக்கு அடிமையாகின்றனர். மேலும், லட்சக்கணக்கான ஆண்டுகள் மண்ணில் கிடந்தாலும் அழுகிப் போகாத பிளாஸ்டிக் பொருள்கள் மண்ணின் உயிர்நிலையைத் தகர்த்துவிடுகின்றன. 1972-ல் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட D.D.T என்னும் பூச்சிக் கொல்லி மருந்து இன்று இந்தியாவில் தான் அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். இந்த நச்சு மருந்தை மனிதரிடையே காணப்படும் பலவிதமான கொல்லும் நோய்களுக்கும் பற்பல உயிரினங்களின் அழிவிற்கும் காரணமாய் உள்ளது.

**4. மரங்கள்**

ஒரு மரத்தடி நிழலில் சென்று அமர்ந்தால் குளிர்ச்சியாக இருக்குமல்லவா? அதன் சுற்றுப்புறங்களில் கவனித்தால் அழகான காட்சிகளையும் காணலாம்.

ஒரு மரம் என்பது உயிரணுக்களின் மாபெரும் சமூகமாகும். அது ஒரு வசிப்பிட ஒழுங்கமைப்பாகும். ஒரு மரத்தினை சார்ந்து பலவகையான பிராணிகளின் சமூகம் வாழ்கின்றன. வெவ்வேறு வகையான கொடிகள், ஒட்டுண்ணிகள், பறவைகள், தரையிலும் தண்ணீரிலுமாக வாழும் தவளை போன்ற பிராணிகள், பாம்புகள், ஆறுகால் பூச்சிகள், சிலந்திகள், மண்புழுக்கள் போன்ற உயிரினங்களின் பெருங்கூட்டத்தையே காணமுடியும்.

மரத்தின் நிழலில் இருந்து படிப்பதும், இளைப்பாறுவதும் தூய காற்றை சுவாசிப்பதும் வெவ்வேறு பிராணிகள் வெளிப்படுத்துகின்ற இனிமையான ஒலிகளை கேட்டு ரசிப்பதும் எவ்வளவோ மகிழ்ச்சி தருபவை! இயற்கையின் சங்கீதம் எவ்வளவோ இனிமையானவை. ஒருமரத்தை வெட்டி முறித்தால் மேற்கூறியவை அனைத்தையும் நாம் இழந்து விடுகிறோம் என்று பொருள். முழுவளர்ச்சி அடைந்த ஓர் ஆலமரம் ஒரு மணி நேரத்தில் 900 கிலோகிராம் ஆக்ஸிஜன் வாயுவை வாயுமண்டலத்திற்கு வெளியேற்றுகின்றது. வாயு மண்டலத்திலுள்ள ஓசோன் படலத்தின் அளவுக்குத் தேவையான ஓசோன் வாயுவை வெளிவிடுகின்ற ஒரே செடிதான் துளசி. வாயுமண்டலத்திலுள்ள தூசிகளை இழுத்தெடுத்து வாயுவைத் தூய்மைப் படுத்துவதற்கான ஆற்றல் மாமரத்தின் இலைகளுக்கு உண்டு. இவ்வாறு மரங்களினால் ஏற்படும் நன்மைகள் எண்ணிலடங்காதவை.

**5. காடுகள்**

காடுகள் இல்லாவிட்டால் காற்று இல்லை, மழையில்லை, தண்ணீரும் இல்லை. ஓர் ஏக்கர் நிலத்திலுள்ள எல்லா வகையிலுமான தாவரங்களின் இலைகளையும் சேர்த்துப் பரப்பி வைத்தால் லட்சக் கணக்கான மடங்கு நிலத்தின் பரப்பளவில் நிறைந்து நிற்கும். இவ்வளவு பெருங்கூட்டமான இலைகளின் மேல் பரப்பிலிருந்து ஒரே நேரத்தில் நீர் ஆவியாகிச் செல்லும். இவ்விதத்தில் வாயுமண்டலம் குளிர்ச்சிடைகிறது. மேகங்களின் நீர்த்திவலைகள் கடலிலிருந்து வருகின்ற மேகங்களுடன் சேர்ந்துக் கொள்கிறது. இவற்றை இலைகளின் கூட்டம் அந்தந்த இடங்களில் தடுத்து விடுவதால் மழையாகப் பொழிகிறது. உண்மையாகவே மழை பொழிவது மேலிருந்து

www.malankaralibrary.com

கீழ்நோக்கியல்ல; மாறாகக் கீழிலிருந்து மேல் நோக்கியேயாகும். (கீழிருந்து நீராவி மேலே சென்று மழையாகிறது) பாலைநிலங்கள் உண்டாவதற்குக் காரணம் மழையில்லாததால் அல்ல; மழை உண்டாவதற்குக் காரணமான காடுகள் இல்லாததாலேயே ஆகும்.

காடுகளில் பெய்யும் மழைநீரின் 80 சதவீதமும் அவ்விடத்தின் மண்ணிலேயே கீழறங்கிச் செல்கின்றது. செல்லும் போது இந்தத் தண்ணீர் நீருற்றுகள் வழியாக ஆறுகளிலும், கிணறுகளிலும் சென்றடைகின்றது. காடுகள் இல்லாவிட்டால் மழைபெய்யும் நேரங்களில் வெள்ளப்பெருக்கும், மழை இல்லாத நேரங்களில் வறட்சியும் ஏற்படுவதே இயல்பு.

காடுகளின் வகைகளில் சதுப்பு நிலக்காடுகள் மிக முக்கியமானதேயாகும். கடலோரங்களிலும், ஆற்றுப்படுகைகளிலும் உருவாகும் சதுப்பு நிலங்களில் பலவகையான தாவரங்கள் நெருக்கமாக வளர்கின்றன. இதுவே சதுப்புநிலக்காடுகள். இக்காடுகள் மிகப்பெரும் கடல் அலைகளைத் தடுத்து, அலைகளின் வலுவைக் குறைத்துவிடுகிறது. இவ்வாறு கடற்கரை பாதுகாக்கப்படுகிறது. 2004 டிசம்பரில் இந்தியப் பெருங்கடலில் உருவெடுத்த பேராற்றல் மிகு சுனாமிப் பேரலைகள் இந்தியா உட்பட்ட பல நாடுகளின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி அழித்த போது சதுப்புநிலக்காடுகள் உள்ள பகுதிகளில் சுனாமியால் ஏற்பட்ட தாக்குதலும் அழிவும் குறைவாகவே இருந்தன.

நிலத்தடி நீரில் தாது உப்பக்கள் கலக்காமல் தூய நீராகப் பாதுகாப்பதிலும் சதுப்புநிலக்காடுகளுக்கு மிகப்பெரும் பங்குள்ளது. சதுப்பு நிலக்காடுகள் அழியுமானால் கடல்நீரின் உப்புத்தன்மை மண்ணினடியில் சென்று நமது கிணற்று நீரிலும் கலந்துவிடும், இயற்கையின் இயல்பான தன்மையும் மாறிவிடும். இவ்விதங்களில் பூமியில் உயிரினங்கள் வாழ இயலாதநிலையும் ஏற்படும்.

நீர்ப்பாசனத்திற்கான இயற்கையின் வழி முறை தான் மரங்கள். தண்ணீரை சேமித்து வைப்பதற்கான இயற்கையின் சேமிப்பிடம் தான் புல்வெளிகள். நிலத்தடி நீரின் முதல் உரிமையாளர்கள் ஆலமரம் போன்ற பெரும் மரங்கள் ஆகும். உண்மையான நீர்ப்பாசனம் நடைபெறுவது நிலத்தின் அடிப்பகுதியிலிருந்தே ஆகும் (தொடக்க நூல் 2 : 6). ஆற்றோரங்களிலுள்ள மரங்கள் ஆற்றிலிருந்து நீரை இழுத்தெடுத்து அடுத்துள்ள கூட்டமான மரங்களுக்கு அனுப்பிக் கொடுக்கின்றன. இவ்வாறாக வெவ்வேறு வகையான தாவரங்களின் வாயிலாக ஒரு தொடர் சங்கிலி போல தண்ணீர் மற்று மரங்களுக்கும் கொடுக்கப்பட்டு மலை மேல் உள்ள மரங்களுக்கும் பாதுகாப்பாக சென்றடைகிறது.

நிலத்தடி நீரை மித மிஞ்சிய அளவில் மேலே இழுத்தெடுக்கும் போது இரண்டு முக்கியமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. முதலாவது பெரிய மரங்கள் அப்பகுதிகளிலிருந்து அழிந்து போய் விடுகின்றன. படிப்படியாக அம்மரங்களைச் சார்ந்து வளரும் குறுங்காடுகளும் அழிந்து போகின்றன. இறுதியில் அப்பகுதிகள் பாலைநிலமாக மாறிவிடும். இரண்டாவது, நிலத்தடி நீரை மேலே இழுத்தெடுப்பதன் விளைவாக, அதன் வெற்றிடத்தில் வாயுமண்டலத்திலுள்ள ஆக்ஸிஜன் கடந்து சென்று அது தாது உப்புக்களுடன் கலந்து வேதிமாற்றம் அடைந்து, மீதமிருக்கும் நிலத்தடி நரை நச்சுமிக்கதாக மாற்றிவிடவும் செய்கிறது. இவை இரண்டினுடையவும் விளைவு உயிரிகளின் அழிவே ஆகும். இனி கூறுங்கள், காடுகள் நமக்குத் தருகின்ற விலைமதிப்பற்ற செல்வம் எது? காடுகளை அழித்து தொழிற்சாலைகள் அமைப்பதனால் உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி கிடைக்கும் வெளிநாட்டுச் சந்தையின் பணமா, அல்லது தண்ணீர், வாயு, மண் ஆகியவற்றின் வளமையைப் பாதுகாப்பதன் வாயிலாக செழிப்படைய செய்கின்ற உயிரினங்கள் மற்றும் மனித குலத்தின் ஆரோக்கியமான வாழ்க்கையா?

**6. பறவைகள்**

www.malankaralibrary.com

பறவை உலகம் அழகானதும் விசித்திரமானதும் ஆகும். வெவ்வேறான சங்கீத ஒலிகளும், அழகு வாய்ந்த நிறங்களும் பறவை உலகின் சிறப்பம்சங்களாகும். ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு குறுங்காட்டிலுள்ள இலைக்கூட்டங்களும் ஒவ்வொரு இனப் பறவைகளுடைய வாழும் இடங்களாகும். உலகெங்கும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வகை பறவைகள் உள்ளன. இந்தியாவில் மட்டும் சுமார் 1200 இனப் பறவைகள் உள்ளன. பூச்சிகளையும், புழுக்களையும், எலிகளையும் பறவைகள் உணவாக உள்கொள்ளும் போது நமது பயிர் நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஆந்தைகளின் விருப்பமான உணவு எலிகளாகும். பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்குப் பறவைகளும், வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும் மிகப் பெரும் பங்கு கொள்கின்றன. பூச்சிக்கொல்லி மருந்துகள் மேற்குறிப்பிட்ட பறவை மற்றும் பிராணிகளின் அழிவிற்குக் காரணமாகின்றன. இது ஒரு வேதனையான உண்மை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இப்பிராணிகளின் அழிவு காரணமாக நாம் உணவு பாதுகாப்பையும் இழந்து விடுகிறோம். பறவைகளின் அழிவினால் வாயுமண்டலம் வெறுமையடையவும், வசந்த காலங்கள் பறவைகளின் பாடலில்லாமல் அமைதியாகி விடவும் செய்தால் மனித வாழ்க்கையும் ஆபத்தின் நிலைக்கே சென்று விடும் என்பதை நாம் எப்போது தான் உணர்ந்து கொள்வோம்?

3. “இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்” எனக் கூறுவதன் காரணம் யாது என்பதைத் தெளிவுபடுத்துக?

உலகமெங்குமுள்ள சுற்றுச் சூழலின் தொடர்ச்சி தான் மனித வாழ்வின் சுற்றுச் சூழல் என்பதை நாம் அறிந்து கொண்டோம். பிரபஞ்சத்தைப் படைத்த கடவுள் எவ்வாறு தாது உலகத்தை தாவர உலகமாகவும், தொடர்ந்து விலங்கு உலகமாகவும் மாற்றினார் என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். எல்லா கூறுபாடுகளும் ஒருங்கிணைந்தால் மட்டும் மேற்குறிப்பிட்டவை அமைவதில்லை. கூறுபாடுகளை ஒருங்கிணைக்கும் ஆற்றல் கடவளின் ஜீவன் மட்டுமே ஆகும். கடவுளின் ஜீவனை கருத்தில் கொள்ளாத எந்த விஞ்ஞானமும் முழுமையானதல்ல. மனிதனின் உயிர் வாழ்விற்கு பிற அனைத்து கூறுபாடுகளையும் நாம் எவ்விதங்களில் சார்ந்திருக்கிறோம் எனக் கண்டறிவதற்கும் குறிப்பிட்ட அளவு வரையிலும் நமக்கு முடிந்தது. மனிதனின் வாழ்க்கைக்கு ஏற்ற நிலப்பகுதி தோட்டமாகும்; நகரமல்ல (தொடக்க நூல் 2:15). உயிரினங்கள் அனைத்திலும் அடங்கியிருப்பது கடவுளின் உயிராற்றலே ஆகும். எந்தக் காரணத்தினாலும் மனிதன் இயற்கையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டவன் அல்லன. இவற்றை இயக்குவதற்கான ஒவ்வொரு ஒழுங்கு விதிகளும் மனிதனுக்கும் பொருத்தமானதேயாகும்.

மனித உடலைக் கடவுள் படைத்திருக்கும் அமைப்பானது, உயிரற்ற பொருட்களையும், அழுகிப்போனவற்றையும் உண்பதற்கு ஏற்றுக்கொள்ளும் முறையில் அல்ல. ஒரு பழத்தைக் கண்டால் அதை எடுத்து உண்பதற்கு விரும்புவதும், இறந்து கிடக்கும் ஆடு, கோழி இவற்றைக் கண்டால் வெறுப்பு ஏற்படுவதும் கடவுள் மனிதனை அவ்விதத்தில் படைத்திருப்பதனாலே ஆகும். இயற்கையின் ஒவ்வொரு கூறுபாடுகளாலும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருப்பது போன்று மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டதேயாகும். ஒரு தச்சர் மேசை செய்யும் போது பாகங்களை வெவ்வேறாக செய்தபின் அவற்றை ஒன்றாக கூட்டிச்சேர்த்து விடுவார். கடவுள் மனிதனைப் படைத்தது மேற்கூறிய முறையில் அல்ல. இதற்கு மாறாக, ஓர் உயிரணுவிலிருந்து, அதனுள் கடவுள் உள்செலுத்தியிருக்கும் உயிரின் அசைவுக்கேற்ப உருவான ஒரே ஒழுங்கமைப்புதான் மனித உடல். இந்த உடலுக்குத் தேவையானவை எவை என்று அதற்குத் தெரியும். இந்த அறிந்து கொள்ளும் உணர்வும், ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருக்கும் உறுப்புகளின் தன்மையும் தகர்ந்து விடுவது இயற்கையின் ஒழுங்கு விதிகளை மீறும் போதே ஆகும். இயற்கையின் ஒழுங்கு விதிகளின் படி நமது உண்மையான உணவு எது? இயற்கையில் உள்ளவைகளுள் கருவிகள் எதனுடையவும் உதவியின்றி செயற்கையான எதுவுமே கையாளாமல், நேரடியாக காணும்போது உண்ண வேண்டுமென்று ஆவல் கொடுக்கும் பொருள் எதுவோ, அதுவே நமது உணவு. 10,000

www.malankaralibrary.com

ஆண்டுகளுக்கு முன் மனிதன் பயிர்த்தொழில் செய்ய அறிந்து கொள்ளும் வரை அவனது உணவு காய்களும், பழங்களும், கிழங்குகளும், இலைகளும் மட்டுமேயாகும். தொடர்ந்து மனிதன் தானியங்களை உணவாகக் கொண்டான் (தொடக்க நூல் 3 : 18) பின் இறைச்சியை உண்டான் (தொடக்கநூல் 9:3-4); மது அருந்தத் தொடங்கினான் (தொடக்க நூல் 9:21) இப்போது மனிதன் இரசாயனப் பொருள்களை உண்பவனாக மாறிவிட்டான்.

இவ்வுலகில் ஆண்டு ஒன்றுக்கு 150 இலட்சம் முதல் 200 இலட்சம் வரையிலான மக்கள் உணவின்றி பட்டினியால் மரணமடையும் போது அமெரிக்காவில் மட்டும் உற்பத்தியாகும் தானியங்களில் 70 சதவீதமும் மாட்டுத்தீவனமாக மாற்றப்படுகிறது. அமெரிக்காவில் ஒருவர் உண்ணும் இறைச்சிக்காக கால்நடைகளுக்குச் செலவாகும் தானியத்தைக் கொண்டு நாடுகளில் எட்டு மனிதர்களுக்கு உணவளிக்க இயலும். அமெரிக்காவில் மட்டும் விளையும் தானியத்தைக்கொண்டு உலக மக்கள் தொகையில் பாதி அளவு மக்களுக்கு உணவளிக்க போதுமானதாகும். இயற்கையை மிகவும் சார்ந்து வாழும் நிலையிலுள்ள மனித இனத்தின் உயிர் வாழ்விற்காக கடவுள் அளித்த இயல்பான உணவு, இயற்கையின் வளமைக்குச் சிறிதளவு கூட கேடு விளைவிக்காததேயாகும். ஆனால் உணவுப் பழக்கத்தில் மனிதனுக்குண்டான மாற்றம் அவனை நோயாளியாக மாற்றி, இயற்கையை ஊனப்படுத்தி, மனிதனின் ஆயுட்காலத்தை பல நாற்றாண்டுகளிலிருந்து சில பத்தாண்டுகளாக குறைக்கச் செய்தது (தொடக்க நூல் 5:5,6:3).

எல்லாவற்றையும் நல்லது எனக்கண்டு ஆசீர்வதித்த கடவுள் தான் அனைத்தையும் படைத்தார். ஆனால் அனைத்தையும் கட்டுப்படுத்துகின்ற உயிர் சக்தியும் ஒன்றே தான். அனைத்தும் ஒரே ஒழுங்குவிதிகளின் கீழ் இயங்குவன ஆகும். மனிதனும் அந்த ஒழுங்கமைப்பின் விதிகளுக்கு மேற்பட்டவன் அல்லன். இந்த ஒரே விதிமுறையை மீறினால் அதற்கான விலையை நாம் ஈடு செய்தே ஆக வேண்டும். நாம் நம்மை அன்பு செய்கிறோம் என்றால் நமது வசிப்பிடமாகிய இந்தப் பூமியையும் அன்பு செய்தே ஆக வேண்டும். நமது வாழிடமாகிய இந்த பூமியின் நலனே தான் நமது நலன். “உலோகா சமஸ்தா சுகினோ பவந்து" (உலகிலுள்ள அனைத்திற்கும் நலன் உண்டாகட்டும்) என்ற செபமும், “உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக” என்ற செபமும் ஒன்றே தான். உலகம் முழுவதிலும் நலன் (நன்மை - சுகம்) வந்து சேரும் போது, உலகின் ஒரு பாகமான எனக்கும் நலம் வந்து சேரும். கடவுளின் திருவிருப்பம் மண்ணுலகில் நிறைவேற்றப்படும் போது இறையாட்சி இங்கே நிறுவப்படும். யூதக் குருவான ஆல்பிரட் கோகன் என்பவரின் வார்த்தைகளில் கூறினால் “இரக்கமுள்ள தந்தை கடவுளின் இரக்கமுடைய மக்களாக நாமனைவரும் மாறுவோம். அதாவது இயற்கையிலுள்ள அனைத்துடனும் இரக்கமுடையவர்களாய் வாழ்வோம்”

**குறு வினா விடைகள்**

1. சூரியக் குடும்பத்தில் மூன்றாவது கோள் எது? பூமி
2. பூமியின் ஆயுட்காலம் என்ன? 500 கோடி ஆண்டுகள்
3. மனிதன் பிறவியெடுத்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? சுமார் 1 லட்சம்.
4. மனிதப் பிறவிக்கு முன் சுமார் 40 கோடி ஆண்டுகள் உயிரின் உறைவிடமாக இருந்தது என்ன? கடல்
5. உயிரின் துடிப்பு முதன் முதலில் எங்கே தோன்றின? தண்ணீரில்
6. உயிரினங்கள் தோன்றுவதற்கு முன் இந்த பூமியில் நிறைந்திருந்தது என்ன? தாதுப்பொருட்கள்
7. தாதுப்பொருள்களின் உலகத்திலிருந்து படைக்கப்பட்டது எது? தாவர உலகம்
8. தாவரங்களின் உடல் பகுதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டிருப்பது எதனால்? தாது உப்புகளால்

www.malankaralibrary.com

9. தாதுப்பொருட்களை உயிர்ச்சத்துள்ள உரமாக மாற்றுபவை எவை? நுண்ணியிரிகள்.
10. தாது உலகத்தைத் தாவர உலகமாக்குபவை எவை? நுண்ணுயிரினங்கள்
11. தாவர உலக மரங்கள் வாயுமண்டலத்திலுள்ள கரியமிலவாயுவை (dioxide) இழுத்தெடுத்து எதனை வெளியேற்றுகின்றன? பிராண வாயுவான ஆக்சிஜனை
12. தாவர உலகத்தைத் தொடர்ந்து கடவுள் எதற்கு பிறப்பளித்தார்? விலங்கின உலகிற்கு (Animal Kingdom)
13. விலங்கின படைப்பின் நிறைவான நிலையில் படைக்கப்பட்டவன் யார்? மனிதன்
14. மனிதனுக்கு, தனது உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துப்பொருட்கள் அனைத்தும் எங்கிருந்து கிடைக்கின்றன? மண்ணிலிருந்து
15. வாயு மண்டலத்தில் பிராண வாயுவை வெளியேற்றும் தாவர உலகம் எது? ஆல்ககள் (கடற்பாசிகள்) முதல் பெரும் மரங்கள் வரை
16. வாயு மண்டலத்தில் பிராண வாயுவின் சதவீதம் என்ன? பரப்பளவின் படி 21 சதவீதமும் கன அளவின் படி 46 சதவீதமும்.
17. கரியமில வாயுவில் (கார்பன்-டை-ஆக்ஸைடில்) உள்ள பிராணவாயுவை (ஆக்ஸிஜனை) தனிமைப்படுத்தி வாயு மண்டலத்திற்கு அனுப்பிவிடும் ஊடகம் எது? பச்சையம் நிறைந்த இலைகள்
18. மரங்கள் கார்பன்-டை-ஆக்ஸைடில் உள்ள ஆக்ஸிஜனை வாயு மண்டலத்திற்கு அனுப்பும் செயலுக்குப் பெயர் என்ன? ஒளிச்சேர்க்கை
19. வாயுமண்டலத்தின் 78 சதவீதம் நிறைந்திருக்கும் வாயு எது? நைட்ரஜன்
20. கனரகத் தொழிற்சாலைகளிலிருந்தும் வாகனங்களிலிருந்தும், வெடிப்பொருட்களிலுருந்தும் வெளி வருகின்ற நச்சுப்பொருள் என்ன? 30000 லட்சம் டண் கார்பண்
21. பூமியின் மூன்றில் இரண்டு பாகம் எதனாலானது? கடல்
22. ஒளிச்சேர்க்கையைக் குறித்த அறிவுகளை உலகுக்கு அளித்த ரஷ்யாவின் அறிஞர் யார்? யூஜின் அ றபினோவிச்
23. வாயு மண்டலத்திற்கு 90 சதவீதம் ஆக்ஸிஜன் எங்கிருந்து வருகின்றன? கடல்பாசிகள் போன்ற கடல் தாவரங்கள்
24. நாம் உணவாகக் கொள்ளும் மீன்களில் காணப்படும் நச்சு உலோகங்கள் எவை? பாதரசம், காட்மியம், காரீயம்
**25.** நாம் குடிக்கும் தேனீர், காப்பி, ஸ்குவாஷ், ஜுஸ் ஆகியவற்றில் நிறத்திற்கும், சுவைக்குமாக சேர்க்கப்படுபவை என்ன? இரசாயனப் பொருள்கள்
26. மெசபட்டோமியா, அசீரியா, பாபிலோனியா ஆகிய நாடுகளின் நாகரிகச் சிதைவுக்குக் காரணம் என்ன? மிதமிஞ்சிய செயற்கை நீர்ப்பாசனம்
27. ஒவ்வொரு முப்பது ஆண்டுகளிலும் எந்நாட்டுக்கு சமமான நிலப்பகுதிகள் பாலைநிலமாக மாறிக்கொண்டிருக்கின்றன? சவுதி அரேபியா
28. ஓராண்டில் உயிர்கொல்லி மருந்துகளின் தாக்குதலால் மரணமடைபவர்கள் எத்தனை பேர்? சுமார் 10,000 மனிதர்கள்.
**29.** 1972-ல் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து எது? D.D.T
30. ஒரு மரம் என்பது **உயிரணுக்களின்** மாபெரும் சமூகமாகும்.
31. முழுவளர்ச்சி அடைந்த ஓர் ஆலமரம் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு ஆக்ஸிஜன் வாயுவை வெளியேற்றுகின்றது? 900 கிலோகிராம்

www.malankaralibrary.com

32. வாயு மண்டலத்திலுள்ள ஓசோன் படலத்தின் அளவுக்குத் தேவையான ஓசோன் வாயுவை வெளிவிடுகின்ற செடி எது? துளசி.
33. மிகப்பெரும் கடல் அலைகளைத் தடுத்து, அலைகளின் வலுவைக் குறைத்துவிடும் காடு எது? சதுப்புநிலக்காடுகள்
34. நிலத்தடி நீரை மித மிஞ்சிய அளவில் மேலே இழுத்தெடுக்கும் போது உள்ள இரண்டு முக்கியமான பாதிப்புகள் எவை? 1. பெரிய மரங்களும் அவற்றைச் சார்ந்து வளரும் குறுங்காடுகளும் அழிந்து விடுகின்றன. 2. நிலத்தடி நீரை மேலே இழுத்தெடுப்பதன் வெற்றிடத்தில் ஆக்ஸிஜன் தாது உப்புக்களுடன் வேதிமாற்றம் அடைந்து, நிலத்தடி நீரை நச்சுமிக்கதாக்கும்
35. உலகெங்கும் எத்தனை வகை பறவைகள் உள்ளன? பத்தாயிரத்திற்கும் மேல்
36. பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்கு உதவுபவை என்ன? பறவைகளும், வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும்
37. உயிரினங்கள் அனைத்திலும் அடங்கியிருப்பது **கடவுளின்** உயிராற்றலே ஆகும்.
38. இவ்வுலகில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மக்கள் உணவின்றி பட்டினியால் மரணமடைகின்றனர்? சுமார் 150 இலட்சம் முதல் 200 இலட்சம் வரை
39. “உலோகா சமஸ்தா சுகினோ பவந்து" (உலகிலுள்ள அனைத்திற்கும் நலன் உண்டாகட்டும்) என்பதற்கு இணையான செபம் எது? “உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக”
40. “இரக்கமுள்ள தந்தை கடவுளின் இரக்கமுடைய மக்களாக நாம் மாறுவோம். அதாவது இயற்கையிலுள்ள அனைத்துடனும் இரக்கமுடையவர்களாய் வாழ்வோம்” என்றவர் யார்? யூதக் குருவான ஆல்பிரட் கோகன்
41. “ஆண்டவர் மண்ணுலகை நோக்கினார் அதைத் தம் நலன்களால் நிரப்பினார். நிலப்பரப்பை எல்லா வகை **உயிரினங்களாலும்** நிறைத்தார். அவை மண்ணுக்கே திரும்ப வேண்டும்” (சீராக் 6 : 29-30).

## பாடம் 20

## இறுதித் தீர்ப்பும் இறப்பிற்குப் பின் வாழ்வும்

### பயிற்சி வினாக்கள்

1. 'மரணம்' என்பதற்கு இயேசு தருகின்ற புதிய பொருள் யாது?

“மனிதன் ஒரு முறை இறக்கிறான். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகின்றது. இதுவே அவர்களுக்கென உள்ள நியதி (எபிரேயர் 9: 27). சாவைப் பற்றிய நினைவு மனிதர்களுக்குக் கசப்பாய் உள்ளது.” (சீராக் 41:1) தவிர்க்க முடியாத மரணம் என்னும் உண்மையை அனைவரும் அச்சத்துடன் பார்க்கின்றனர். இறப்பை எதிர் கொள்வதற்கான தயக்கம் அனைவரிடத்திலும் காணப்படுகிறது.

இவ்வுலக வாழ்வின் பொருளற்ற தன்மையிலிருந்தும், கவலைகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரே தீர்வு தான் மரணம் எனத் தகவல் தொடர்பு சாதனங்கள் தவறாக சித்தரிக்கின்றன. பெருகி வரும் தற்கொலைகளையும், கொலைகளையும், விபத்துச் சாவுகளையும் பார்க்கும் போது மரணத்தை அற்பமானதாகக் கருதும் நிலை ஏற்படுகிறது. மனித உயிரை மதிக்காத சமூகத்தில், மரணம், ஒரு தொலைக்காட்சி நிகழ்வாக சித்தரிக்கப்படுகிறது.

மரணம் வேதனைத் தருவதாயிருப்பினும் கிறிஸ்துவின் மரணம் நமக்கு ஆறுதல் அளிக்கின்றது. அன்பினால் தூண்டப்பட்டு, இறைவிருப்பத்திற்குப் பணிவதன் மூலமாக (மத்தேயு 26 : 39), மரணத்திற்கு இயேசு புதியதோர் அர்த்தத்தை அளிக்கின்றார். இறைவிருப்பத்திற்கு அடிபணிகின்ற இறை அனுபவமாகவும், தந்தையின் இல்லத்தை நோக்கிச் செல்லும் பயணமாகவும், ஒப்படைத்த பணிக்

www.malankaralibrary.com

கடமையை நிறைவு செய்த நிம்மதியின் நிமிடமாகவும் இறுதி நேரம் மாறும் போது மரணம் அர்த்தம் உள்ளதாக அமைகிறது.

திடீரென வரும் மரணங்களையும் அகால மரணங்களையும் கிறிஸ்துவின் மரணத்தின் ஒளியில் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் எவ்வளவு காலம் இந்த உலகில் வாழ்ந்தார் என்பதை விட எவ்வாறு வாழ்ந்தார் என்பதே முக்கியமானதாகும். ஒருவரிடம் ஒப்படைத்த பணியை நிறைவு செய்யும் போது அவரை இவ்வுலகிலிருந்து கடவுள் அழைக்கிறார்.

“என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11: 25). "எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார்” (யோவான் 6:54). கிறிஸ்தவர்கள் தங்கள் இறுதிப் பயணத்தைத் தொடங்குவதும் இத்தகைய உறுதியான நம்பிக்கையுடனேயே. கடைசி பகைவனான சாவையும் இயேசு தோற்கடித்தார் (1 கொரிந்தியர் 15 : 20).

தமது இறப்பின் வாயிலாக கிறிஸ்து இறந்தவர்களின் இடமான பாதாளத்தை இறைப் பிரசன்னத்தின் இடமாக மாற்றினார். இயேசுவின் வழியாகக் கடவுள் சாவைத் தோற்கடித்தார். உயிரின் உடமையாளரான கடவுளுக்கு ஏற்புடையவராக வாழ்வதன் மூலம் இறப்பில் வாழ்வைக் கண்டடைய இயலும். கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு இணைந்து இறக்கும் போது இறப்பின் கொடுக்கு அற்றுப் போகும்.

2. 'உத்தரிக்கும் இடம்' என்பதிலிருந்து பொருள் கொள்வது யாது?

இறப்புக்குப் பின்னர் நிகழும் தூய்மையடைதலைக் குறித்து திருவிவிலியம் தெளிவான வெளிப்பாடுகளைத் தருகின்றது. “கடைசிக்காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள்” மத்தேயு 5:26. கடைசிக் கடனையும் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்பை இவ்வசனம் வெளிப்படுத்துகிறது.

“நெருப்பில் அகப்பட்டுத் தப்பியவர் போல் அவர் மீட்கப்படுவார்” (1 கொரிந்தியர் 3 : 15) என்னும் புனித பவுலடியாரின் வார்த்தை இந்தத் தூய்மையடைதலையே குறிக்கின்றது. “தூய ஆவிக்கு எதிராகப் பேசுவோர் இம்மையிலும், மறுமையிலும் மன்னிப்புப் பெற மாட்டார்” (மத்தேயு 12:32). சில பாவங்கள் இவ்வுலகிலும், சில பாவங்கள் வரவிருக்கும் உலகிலும் மன்னிக்கப்படும் என்பதையும் இயேசுவின் மேற்கூறிய வாக்குகள் வெளிப்படுத்துகின்றன.

இறையருள் பெறுவதற்குத் தூய்மை தேவையானதே என்பது விவிலிய போதனைகளில் மிக முக்கியமான ஒன்றாகும். “தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத்தேயு 5:8) “தீட்டுப்பட்டது எதுவும் ஒரு போதும் விண்ணுலகில் நுழையாது. அது போல் அருவருப்பானதைச் செய்வோரும், பொய்யரும் அதில் நுழைய மாட்டார்கள்.” (வெளிப்பாடு 21: 27).

கடவுளைக் காண்பதற்கு உள்ளத் தூய்மை மிகவும் இன்றியமையாததாகும். உள்ளம் தூய்மையடையும் இச்செயலை கடவுளே செய்கிறார். திருமுழுக்கில் தொடங்கும் இத்தூய்மைப்படுத்தும் செய்கையின் ஒழுங்கை பாதி வழியில் விட்டு விடுபவரல்லர் கடவுள். நாம் உயிர் வாழ்கின்ற காலம் வரையிலும் கடவுளுக்கு இச்செயலைத் தொடரலாம்.

உடலின் இறப்புடன் முடிந்து விடுவதல்ல மனித வாழ்வு. „என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11 : 25). தாயின் வயிற்றிலும், இந்த உலகிலும், இவ்வுலகிற்கு அப்பாலும் வாழ்கின்ற ஒரு மனிதனை எங்கே இருந்தாலும் அவனைத் தூய்மைப் படுத்துவதற்குக் கடவுளால் இயலும்.

கடவுளின் அருள் வரத்திலும் அன்புறவிலும் மரணமடைபவர்கள் முழுமையாகத் தூய்மைப்படுத்தப்பட்டவரல்லாமல் இருப்பினும் அவர்கள் நிலைவாழ்வுக்கான உறுதி பெற்றவர்களாவர். அவர்கள் விண்ணக இன்பத்தை

www.malankaralibrary.com

அடைய வேண்டுமெனில் முழுமையாகத் தூய்மை அடைய வேண்டும். இதனையே உத்தரிக்கும் இடம் என பொருள் கொள்கிறோம்.

உத்தரித்தல் என்பது ஒரு இடம் என்பதற்கு மேலாக அது ஒரு செயல் ஆகும். இறைதரிசனம் பெறுவதற்குத் தடையாக இருப்பவற்றையெல்லாம் களைந்து விட்டு நம்மை தூயவர்களும், தகுதியுடையவர்களுமாக மாற்றுகின்ற ஒரு செய்கை தான் தூய்மை அடைதல்.

3. இறந்தவர்களுக்காக மன்றாட வேண்டியதன் தேவை குறித்து திருவிவிலியத்தையும் துய மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

இறந்தவர்களுக்காக மன்றாட வேண்டுமென மறைநூல் உணர்த்துகின்றது. 2 மக்கபேயர் 12 - 43-45-ல் இறந்தவர்களுக்காக காணிக்கைகளும், பலிகளும் ஒப்புக் கொடுப்பதற்கு பணம் திரட்டியதைக் குறித்தும், அதன் நற்பயன்களைக் குறித்தும் குறிப்பிட்டுள்ளது. திருத்தூதர் பணிகள் 9:36-43-ல் யோப்பா நகரில் வைத்து புனித பேதுரு தபித்தா என்னும் பெண்சீடரின் இறந்த உடலின் அருகில் மன்றாடுவதாகச் சான்று பகர்கின்றது.

திருப்பலியில் குக்கிலியோனுக்கு முன்னதாக இறந்தவர்களை நினைவு கூர்ந்து நாம் பின்வருமாறு மன்றாடுகிறோம். "நாம் இறைவனின் மக்களாகும் படி தங்கள் வாழ்நாளில் நம்மைப் பயிற்றுவித்த தமது மூதாதையரைத் திருப்பலிகளிலும் ஆராதனைகளிலும் நாம் நினைவுகூர வேண்டும். அழிவே இல்லாத விண்ணுலகில் நீதிமான்களோடும், புனிதர்களோடும் சேர்ந்து இறைமகன் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். ஆண்டவரே, எங்கள் மேல் இரக்கமாயிருந்து எங்களைக் காப்பாற்றியருளும்."

இங்கே, ஒரு கருத்தை முக்கியமாக நாம் கவனிக்க வேண்டும். விசுவாசிகளான இறந்தவர்களுக்காக மன்றாடுவதற்கே திருச்சபை அறிவுறுத்துகிறது. ஆனால் இறப்பிற்குப் பின் மனம் திரும்புதலுக்கான வாய்ப்பு இல்லை எனத் திருச்சபை கற்பிக்கின்றது.

திருப்பலி, மன்றாட்டு, தான தர்மம் ஆகியவற்றின் வழியாகக் கடவுளின் அருள்நிறைந்த அன்பைப் பெற ஒருவருக்கு இயலும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும், பிறருடைய உதவிக்காக மன்றாடுவதற்குமான ஆற்றலையும் கடமையையும் உத்தரிக்கும் இடம் நினைவூட்டுகின்றது.

### குறு வினா விடைகள்

1. “மனிதன் ஒரு முறை இறக்கிறான். பின்னர் **இறுதித்தீர்ப்பு** வருகின்றது. இதுவே அவர்களுக்கென உள்ள நியதி (எபிரேயர் 9: 27).
2. சாவைப் பற்றிய நினைவு **மனிதர்களுக்குக்** கசப்பாய் உள்ளது.” (சீராக் 41:1)
3. மரணம் எப்போது அர்த்தமுள்ளதாக அமைகிறது? இறைவிருப்பத்திற்கு அடிபணிகின்ற இறை அனுபவமாகவும், தந்தையின் இல்லத்தை நோக்கிச் செல்லும் பயணமாகவும், ஒப்படைத்த பணிக்கடமையை நிறைவு செய்த நிம்மதியின் நிமிடமாகவும் இறுதி நேரம் மாறும் போது
4. “என்னிடம் நம்பிக்கை கொள்பவர் **இறப்பினும்** வாழ்வார்” (யோவான் 11: 25).
5. "எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் **நிலைவாழ்வைக்** கொண்டுள்ளார்” (யோவான் 6:54).
6. கிறிஸ்தவர்கள் தங்கள் இறுதிப் பயணத்தைத் தொடங்குவதும் இத்தகைய உறுதியான நம்பிக்கையுடனேயே. கடைசி பகைவனான **சாவையும்** இயேசு தோற்கடித்தார் (1 கொரிந்தியர் 15 : 20).
7. யார் வழியாகக் கடவுள் சாவைத் தோற்கடித்தார்? இயேசு

www.malankaralibrary.com

8. “எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் **செம்மறியாடுகளையும்**, **வெள்ளாடுகளையும்** வெவ்வேறாகப் பிரித்து **செம்மறியாடுகளை** வலப்பக்கத்திலும், **வெள்ளாடுகளை** இடப்பக்கத்திலும் நிறுத்துவது போல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார்” (மத்தேயு 25:32-33).
9. எதனைப் பற்றிய சிந்தனை புனிதமான இறை அச்சத்தை ஏற்படுத்தவும், இறையரசின் நீதிக்காக நிலைகொள்ள கட்டாயப்படுத்தும் மனமாற்றத்திற்குத் துணை புரிகிறது? இறுதித் தீர்ப்பு
10. இருவிதமான தீர்ப்புகள் எவை? பொதுத்தீர்ப்பு, தனித்தீர்ப்பு
11. பொதுத்தீர்ப்பு எப்போது நடைபெறும்? கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது
12. தனித்தீர்ப்பு எப்போது நடைபெறும்? மரணம் அடைந்தவுடன்
13. “இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடி கொண்டிருந்தால், கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களுள் குடிகொண்டிருக்கும் தம் **ஆவியினாலே** சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர்பெறச் செய்வார்” (உரோமையர் 8: 11).
14. மக்கபேயர் நூலில் காணப்படுகின்ற ஏழு புதல்வர்களுக்கும் இரத்தசாட்சிகள் ஆவதற்கான வலிமையை அளித்தது என்ன? கடவுளால் தங்களை உயிர்த்தெழச் செய்ய இயலும் என்னும் எதிர்பார்ப்பு
15. தம்மிடம் நம்பிக்கை கொள்வோரையும் தமது சதையை உண்டு இரத்தத்தைப் பருகுவோரையும் உயிர்த்தெழச் செய்வதாக உறுதியளித்த இயேசுவின் சொற்கள் எவை? "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே” (யோவான் 11: 25)
16. “மனிதனின் கற்பனைகளுக்கும், புரிந்து கொள்ளும் திறமைக்கும் அப்பாற்பட்ட ஓர் **உண்மையே** உடலின் உயிர்ப்பு.
17. உயிர்ப்பிக்கப்படும் உடல் எவ்வாறு மாற்றமடைகிறது? மாட்சிமை அடைந்த மற்றும் மறுஉருவான உடலாக
18. “கடைசிக்காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள்” என்பதன் விவிலிய அடிப்படை என்ன? மத்தேயு 5:26.
19. இறப்பிற்குப் பின்னர் தூய்மையடைதலைக் குறிப்பிடும் புனித பவுலடியாரின் வார்த்தை என்ன? “நெருப்பில் அகப்பட்டுத் தப்பியவர் போல் அவர் மீட்கப்படுவார்” (1 கொரிந்தியர் 3 : 15)
20. “தூய ஆவிக்கு எதிராகப் பேசுவோர் இம்மையிலும், மறுமையிலும் **மன்னிப்புப்** பெற மாட்டார்” (மத்தேயு 12:32).
21. “தூய்மையான உள்ளத்தோர் **பேறுபெற்றோர்**. ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத்தேயு 5:8)
22. “தீட்டுப்பட்டது எதுவும் ஒரு போதும் **விண்ணுலகில்** நுழையாது. அது போல் அருவருப்பானதைச் செய்வோரும், பொய்யரும் அதில் நுழைய மாட்டார்கள்.” (வெளிப்பாடு 21: 27).
23. கடவுளைக் காண்பதற்கு தேவையான உள்ளத் தூய்மை நம்முள் எப்போது ஆரம்பமாகின்றது? திருமுழுக்கில்
24. உடலின் இறப்புடன் முடிந்து விடுவதல்ல மனித வாழ்வு என்பதன் விவிலியக் கோட்பாடு என்ன? „என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11 : 25).
25. மரணத்திற்குப் பின்னர் முழுமையாகத் தூய்மை அடைதலுக்குப் பெயர் என்ன? உத்தரிக்கும் இடம்

www.malankaralibrary.com

26. இறந்தவர்களுக்காக காணிக்கைகளும், பலிகளும் ஒப்புக்கொடுக்க பணம் திரட்டியதைக் குறித்தும், அதன் நற்பயன்களைக் குறித்தும் குறிப்பிட்டுள்ள திருவிவிலியப் பகுதி எது? 2 மக்கபேயர் 12 - 43-45
27. யோப்பா நகரில் வைத்து புனித பேதுரு தபித்தா என்னும் பெண்சீடரின் இறந்த உடலின் அருகில் மன்றாடுவதாகச் சான்று பகரும் திருவிவிலியப் பகுதி எது? திருத்தூதர் பணிகள் 9:36-43
28. "நாம் இறைவனின் மக்களாகும் படி தங்கள் வாழ்நாளில் நம்மைப் பயிற்றுவித்த தமது **மூதாதையரைத்** திருப்பலிகளிலும் ஆராதனைகளிலும் நாம் நினைவுகூர வேண்டும்.
29. அழிவே இல்லாத விண்ணுலகில் **நீதிமான்களோடும்**, புனிதர்களோடும் சேர்ந்து இறைமகன் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார்.
30. “தம்மிடம் அன்பு கொள்கிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை **கண்ணுக்குப்** புலப்படவில்லை; செவிக்கு எட்டவில்லை; மனித உள்ளமும் அதை அறியவில்லை.” (1 கொரி 2:9).
31. வாழ்க்கைப் பயணத்தின் குறிக்கோள் **விண்ணகமே** ஆகும்.
32. விண்ணகம் நிறைவடைவது எப்போது? உலக முடிவில்
33. கடவுளோடும், புனிதர்களோடும் உள்ள நட்புறவிலிருந்து முழுமையாகத் தம்மையே வேறுபடுத்தி நிறுத்துகின்ற நிலைக்குப் பெயர் என்ன? நரகம்.
34. “சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று, அலகைக்கும் அதன் தூதர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற **அணையாத** நெருப்புக்குள் செல்லுங்கள்” (மத்தேயு 25: 41).
35. “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் **நம்பிக்கை** கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம் **நம்பிக்கை** கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்”. (யோவான் 11: 25-26).